பல்கலைக்கழகத் தலைவர் பிறந்த நாளையொட்டி (30 ஜூன் 2022)

பன்முக நோக்கில்

திருக்குறள்

முனைவர் ப சிலம்பரசன்

ஆய்வேட்டின் நூல்வடிவு

தமிழ்த்துறை

டாக்டர்.எம்.ஜி.ஆர்.
கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)
(உலகத்தரச் சான்றிதழ் பெற்ற நிறுவனம்)
மதுரவாயல் (அடையாளம்பட்டு), சென்னை 600 095.

தமிழ்த்துறை

டாக்டர்.எம்.ஜி.ஆர்.
கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)
(உலகத்தரச் சான்றிதழ் பெற்ற நிறுவனம்)
மதுரவாயல் (அடையாளம்பட்டு), சென்னை - 600 095.

தமிழ்த்துறை வெளியீடு எண் : 6

பன்முக நோக்கில்

திருக்குறள்

(ஆய்வேட்டின் தூல்வடிவு)

பன்முக நோக்கில்

திருக்குறள்

முனைவர் ப சிலம்பரசன்

சென்னைப் பல்கலைக்கழக
முனைவர் பட்டத்திற்காக
அளிக்கப்பெற்ற ஆய்வேட்டின் நூல்வடிவு

தமிழ்த்துறை

டாக்டர்.எம்.ஜி.ஆர்.
கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)
(உலகத்தரச் சான்றிதழ் பெற்ற நிறுவனம்)
மதுரவாயல் (அடையாளம்பட்டு), சென்னை 600 095.

பன்முக நோக்கில்

திருக்குறள்

All rights are reserved. No part of the publication may be reproduced, stored in a retrieval system (including but not limited to computers, disks, external drives, electronic or digital devices, e-readers, websites), or transmitted in any form or by any means (including but not limited to cyclostyling, photocopying, docutech of other reprographic reproductions, mechanical, recording, electronic, digital versions) without the prior written permission of the publisher, not be otherwise circulated in any form of binding or cover other than that in which it is published and without a similar condition being imposed on the subsequent purchaser.

வெளியீடு:
தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
மதுரவாயில், சென்னை – 600 095

ஜூன் 2022

Funded by:
Na Subbu Reddiar 100 Educational Trust
AD-13, 5th Street, Anna Nagar West, Chennai—600 040

Printed at:
DJ Printers, Chennai – 600 095

பன்முக நோக்கில் திருக்குறள்

முனைவர் (பிஎச்.டி.,) பட்டப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

ப.சிலம்பரசன்

முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை

ஆய்வு நெறியாளர்

முனைவர் மு. சற்குணவதி

இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
தொலைதூரக் கல்வி நிறுவனம்

சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.

பிப்ரவரி - 2018

நன்றியுரை

சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்ட ஆய்வை மேற்கொள்வதற்கு நல்லதொரு வாய்ப்பினை அளித்த சென்னைப் பல்கலைக்கழக **மாண்பமை துணைவேந்தர்** அவர்களுக்கும் **பதிவாளர்** அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு நிலைகளில் எனக்கு உதவி செய்த சென்னைப் பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி நிறுவனத்தின் முன்னால் இயக்குநர் **பேராசிரியர் மு. இரவிச்சந்திரன்** அவர்களுக்கும், இயக்குநர் **பேராசிரியர் S. கருணாநிதி** (பொறுப்பு) அவர்களுக்கும் என் பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"பன்முக நோக்கில் திருக்குறள்" என்னும் தலைப்பினைத் தேர்வு செய்து இவ்வாய்வு செம்மையாக அமைவதற்கு பல நிலைகளில் எனக்கு, அன்போடு வழிகாட்டி நெறிபடுத்தி உதவிகள் பல செய்த எங்கள் சென்னைப் பல்கலைக்கழத் தொலைதூரக் கல்வி நிறுவனத்தின் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் **முனைவர் மு. சற்குணவதி** அவர்களுக்கு என்றும் நன்றி கடமைப் பட்டிருக்கின்றேன். அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

ஆய்வுத் தலைப்பைத் தேர்வு செய்து, அனுமதி அளித்த என் நெறியாளர் உட்பட மூன்றுபேர் கொண்ட வல்லுநர் குழுவில் உள்ள பேராசிரியர்கள் **முனைவர் கோ. பழனி, முனைவர் ஆ. ஏகாம்பரம்** அவர்களுக்கும் என் நன்றி உரியது.

என் ஆய்விற்கு உறுதுணையாய் நின்ற என் தந்தை **தே.பழனி,** என் தாயார் **ப. முனியம்மாள்**, என் சிறிய தந்தை **தே. முருகன்** சின்னம்மா **அஞ்சாலாட்சி** அவர்களுக்கும் மற்றும் சகோதரிகள் **ப. கங்கா சரவணன்,**

ப. பனுமதி அருள் ஆகியவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த ஆய்வின் தொடக்கக் காலத்தில் இருந்து எனக்கு ஆலோசனை வழங்கிய எனது மூத்த ஆய்வாளர்களான **வா. வினோத், சா. மகேந்திரன்** மற்றும் என் சக நண்பர்களான **இரா. சுஜி, மு. இராமஜெயம், ச. அஞ்சலை, ஏ. செல்வக்குமார், ஜெ. உஷா, கோ. புவனேஸ்வரி, கி. அருள் ஜோதி, நா. நாகேஷ்வரி, சி. இராஜமாணிக்கம், சி. ஜோஸ்பின், த. மலர்விழி, சின்னராஜா** அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள்.

இவ்வாய்வேட்டினை எனக்கு சிறந்த முறையில் வடிவமைத்துக் கொடுத்த டுடே கிராபிக்ஸ் **திரு. பாபு** அவர்களுக்கும் எனது நன்றி உரியது.

ஆய்வுப் பணியை மேற்கொள்வதற்கு அனைத்து வகையிலும் உதவிய தொலைதூரக் கல்வி நிறுவனத்தின் நூலகரான திருமதி **செ.சுகந்தி** அவர்களுக்கும் மற்றும் சென்னைப் பல்கலைக்கழக பரிதிமாற் கலைஞர் வளாக நூலகருக்கும் எனது நன்றிகள். ஆய்விற்குத் தேவையான நூல்களைத் தந்துதவிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலக திருக்குறள் ஆய்வு மைய அலுவலகப் பொறுப்பு வகிக்கும் **முனைவர் து. ஜானகி** அவர்களுக்கும், செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவன நூலகர் **கி. கண்ணன், கோ. சந்திரசேகர்** அவர்களுக்கும், கன்னிமாரா பொதுநூலகர் **குமார்** அவர்களுக்கும், ரோஜா முத்தையா நூலகம், மறைமலையடிகள் நூலகம், உ.வே.சா நூலகம், ஆகிய நூலகங்களுக்கு என் அன்பு நன்றிகள்.

என் ஆய்வு சிறக்க நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆய்விற்குத் தேவையான பல உதவிகளை செய்த அனைத்து நண்பர்களுக்கும் என் உள்ளார்ந்த நன்றிகள்.

சுருக்க குறியீடு

ப	-	பக்கம்
பக்	-	பக்கங்கள்
நூற்	-	நூற்பா
பா	-	பாடல்
மேலது	-	மேற்கூறியது
குறள்	-	திருக்குறள்
வள்ளுவர்	-	திருவள்ளுவர்
தொல்	-	தொல்காப்பியம்
நாலடி	-	நாலடியார்
புறம்	-	புறநானூறு
அகம்	-	அகநானூறு
சிலம்பு	-	சிலப்பதிகாரம்
சிறுபாண்	-	சிறுபாணாற்றுப்படை
சிறுப	-	சிறுபஞ்சமூலம்
ப.பாலை	-	பட்டினப்பாலை
தி. வெ. ரா	-	தி. வெ. ராசேந்திரன்

பொருளடக்கம்

இயல்	தலைப்பு	பக்கம்
	முன்னுரை	1-5
ஒன்று	திருக்குறளில் வாழ்வியல் அறங்கள்	6-84
இரண்டு	திருக்குறளில் சமுதாய அறங்கள்	85-169
மூன்று	திருக்குறளில் அரசியல் அறங்கள்	170-235
	நிறைவுரை	236-240
	துணைநூற் பட்டியல்	241-251
	பின்னிணைப்புகள்	1-57
	நிழற்படங்கள்	

முன்னுரை

முன்னுரை

"எல்லாப்பொருளும் இதன்பாற் உள இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையாம்" என்னும் திருவள்ளுவ மாலையில் இடம் பெற்றுள்ள மதுரைத் தமிழ்நாகனார் பாடலின்படி, திருக்குறளில் இடம்பெறாத கருத்துகளே இல்லை எனலாம். அதிலும் சிறப்பாக நம் தமிழர் பண்பாட்டுக் கூறுகள் இதில் மிகத்தெளிவாக இடம்பெற்றுள்ளன. உலக நாடுகள் பலவற்றில் பல்வேறு வகையான அறங்கள் பின்பற்றப்பட்டாலும் தமிழகத்தில் தமிழிலக்கியங்கள் கூறும் அறங்கள் தலைசிறந்து விளங்குகின்றன. உலகில் வாழும் மக்கள் அனைவருக்கும் பொதுவான அறத்தைக் கூறுவதால் இந்நூல் உலகப்பொதுமறை நூலாக அனைவராலும் ஏற்கப்பட்டு இன்றளவும் என்றளவும் போற்றக்கூடியதாய் திகழ்கிறது.

மனிதனின் வாழ்வியலை நல்வழிப்படுத்துவதே இதன் சிறப்பாகும். உலக மொழிகளில் அதிக மொழி பெயர்ப்புகளைக் கொண்ட அறநூலாகவும், இக்காலத்தில் காணப்படும் இனம், மொழி, சமய வேறுபாடுகளை அறவே நீக்கி மனித ஒற்றுமைக்கு வித்திடும் நூலாகவும் அமைந்துள்ளது. அறம் முதல் அறிவியல் வரை அனைத்தையும் உலக மக்களுக்கு எடுத்துரைப்பதே திருக்குறளின் தனிச்சிறப்பாகும்.

"அணுவைத் துளைத்து எழுகடலைப் புகட்டி குறுகத்தறித்த குறள்" என்று திருவள்ளுவ மாலையில் இந்நூலின் சிறப்பினை ஔவையார் கூறியுள்ளார். அணுவைத் துளைக்க முடியும் என்ற உண்மையை உலகிற்கு எடுத்துரைக்கும் அறநூலாக திருக்குறள் விளங்குகிறது. மனிதர்களின் உடல் நலம், உளநலம்

சார்ந்து வாழ்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகள் அனைத்தையும் தெளிவாக எடுத்தியம்பியுள்ளது.

அறம், பொருள், இன்பம் சார்ந்த வாழ்வியல் பண்பாடுகளை உலகளவில் அரங்கேறச் செய்த பெருமை திருவள்ளுவரையே சாரும். மனிதர்களின் வாழ்க்கை முறையினை எடுத்துரைப்பது இந்நூலின் பயனாகும். அறத்தோடு பொருள் ஈட்டி இன்பம் கண்டால் வீடுபேறடையலாம் என்பது திருவள்ளுவரின் கருத்தாகும்.

தனிமனித நிலை, குடும்ப நிலை, சமூக நிலை என்னும் தளங்களில் மனிதர்கள் பாதுகாக்க வேண்டிய பண்புகள், ஆற்றவேண்டிய பணிகள் எனப் பன்முகக் கூறுகளை ஒழுங்குற அமைத்து ஒரு முழுமையான வாழ்வியல் நெறியைத் திருக்குறள் தந்துள்ளது. தமிழ்ச் சமுதாயத்தில் காலங்காலமாய் இருந்து வந்த ஏற்றத்தாழ்வுகளை களைந்து மனத் தூய்மையை உருவாக்கும் வழிமுறைகளை திருவள்ளுவர் தன் குறட்பாக்களில் பதிவு செய்துள்ளார்.

ஆய்வு நோக்கம்

திருக்குறளில் அறம், பொருள், இன்பம், அரசியல், சமூகவியல் தொடர்பான செய்திகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதைக் கண்டறிவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

ஆய்வு எல்லை

நீதிநூல்களில் ஒன்றான திருக்குறளில் உள்ள ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களும் ஆய்வின் எல்லையாக அமைகின்றது.

ஆய்வு மூலங்கள்

திருக்குறளுக்கு வெளிவந்துள்ள பல உரைகளுள் பரிமேலழகர் உரை, மு.வரதராசனார் உரை, பேராசிரியர் பொற்கோவின் திருக்குறள்

உரைவிளக்கம் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டு திருக்குறளின் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களும் இந்த ஆய்வின் முதன்மைத் தரவுகளாகும்.

திருக்குறள் தொடர்பாக இதுவரை வெளிவந்துள்ள நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், ஆய்வேடுகள், இதழ்கள் ஆகியன இந்த ஆய்விற்குரிய துணைமைத்தரவுகளாகும்.

ஆய்வு அணுகுமுறை

திருக்குறளின் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களை அடிப்படையாகக் கொண்டு வாழ்வியல் அறங்களை பன்முக நோக்கில் கண்டறியும் இந்த ஆய்வு விளக்கமுறை, பகுப்பாய்வு முறை, ஆகிய ஆய்வு அணுகுமுறைகளைப் பின்பற்றியுள்ளது.

ஆய்வுப் பகுப்பு

"பன்முக நோக்கில் திருக்குறள்" என்னும் தலைப்பிலான இவ்வாய்வேடு முன்னுரை நிறைவுரை நீங்கலாக மூன்று இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

இயல் ஒன்று - திருக்குறளில் வாழ்வியல் அறங்கள்

இயல் இரண்டு - திருக்குறளில் சமுதாய அறங்கள்

இயல் மூன்று - திருக்குறளில் அரசியல் அறங்கள்

துணைநூற்பட்டியல்

பின்னிணைப்புகள்

முன்னுரை

முன்னுரையில் ஆய்வின் நோக்கம், ஆய்வின் எல்லை, ஆய்வின் மூலங்கள், ஆய்வு அணுகுமுறை, ஆய்வுப் பகுப்பு ஆகியன பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

இயல் ஒன்று

"திருக்குறளில் வாழ்வியல் அறங்கள்" என்னும் முதல் இயலில் மக்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய அறங்கள், பின்பற்ற வேண்டிய பண்பு நலன்கள், விலக்க வேண்டிய பண்புகள், குடும்பத்தில் இருக்க வேண்டிய அறங்கள் அவை சார்ந்த செயல்பாடுகள் முதலானவற்றைப் பற்றி விரிவாக ஆராயப்பெற்றுள்ளன.

இயல் இரண்டு

"திருக்குறளில் சமுதாய அறங்கள்" என்னும் இரண்டாம் இயலில் தனிமனிதன், குடும்பம் இவற்றை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தின் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், தொழில், பண்பாட்டுக்கூறுகள், சமுதாய மேம்பாட்டுப் பணிகள் போன்ற செய்திகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

இயல் மூன்று

"திருக்குறளில் அரசியல் அறங்கள்" என்னும் மூன்றாம் இயலில் ஒரு சமுதாயத்தைப் பாதுகாத்து வழி நடத்தும் தலைமைப் பொறுப்பில் உள்ளோரின் தகுதிகள், அவர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் அவருக்கு துணை செய்வோரின் கடமைகள், தலைமையின் கீழ் உள்ள செயல்பாடுகள் முதலானவை பற்றிய அனைத்து செய்திகளும் விரிவாக எடுத்துரைக்கப்பெற்றுள்ளன.

நிறைவுரை

மூன்று இயல்களிலும் கண்டறியப்பட்ட முடிவுகள் நிறைவுரைப் பகுதியில் தொகுத்துரைக்கப்பெற்றுள்ளன. மேலும் மேலாய்வுக்கான களங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ்வாய்வேட்டின் மூன்று இயல்களிலும் பயன்படுத்திய மேற்கோள் பகுதிகள் அடிக்குறிப்பில் தரப்பெற்றுள்ளன.

சுருக்கக்குறியீட்டு விளக்கப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள சுருக்கக் குறியீடுகள் ஆய்வு முழுவதும் ஆங்காங்கே தரப்பெற்றுள்ளன.

ஆய்விற்குதவிய நூல்கள், ஆய்வேடுகள், முதலியன துணைநூற்பட்டியலில் தரப்பெற்றுள்ளன.

ஆய்விற்குதவிய பிற தகவல்கள் பின்னிணைப்பில் தரப்பெற்றுள்ளன.

இயல் - 1

திருக்குறளில் வாழ்வியல் அறங்கள்

1.1.0 முன்னுரை

நம் முன்னோர்கள் இலக்கியத்தின் வழி தனிமனிதச் சமுகத்திற்கும், தனக்கும் செய்யவேண்டிய செயல்கள் அனைத்தையும் அறமாகவே கருதியிருந்தனர். இவ்வுலக வாழ்வில் ஒவ்வொரு தனிமனிதனும் சமுதாயத்தில் நலமாக வாழ்வதற்கும், முன்னேற்றம் அடைவதற்கும் அடிப்படைத் தத்துவம் அறம் என்பதால் அதனைப்போற்றிப் பாதுகாத்தனர். பண்டைய தமிழ் இலக்கியத்தின் வழி அறக்கருத்துகளை அதிக அளவில் பயன்படுத்தி பாதுகாத்து வந்தனர்.

இலக்கியங்கள் காலக்கண்ணாடி, மக்களின் எண்ணங்கள் காலத்திற்குக் காலம் மாறுபட்டு வருவதால் அதற்கேற்ப இலக்கியங்களைப் படைத்தனர். ஆகவே இலக்கியம் என்ற படைப்பு ஒரு மனிதனின் முயற்சி எனலாம். காலத்தை வெல்லும் படைப்புகளை மனிதன் இயற்றினால் அப்படைப்பு சிறந்த இலக்கியமாகிறது. இதற்குப் பல்வேறுபட்ட பரிசுகள் வழங்கப்படுவதை அன்று முதல் இன்று வரை நாம் கண்ணாரக் காண்கிறோம். இலக்கியம் என்பது தனிமனிதச் சாதனையாக இருந்தாலும் அந்த இலக்கியத்தின் பின்னணியில் தான் சமுதாயம் இருக்கிறது. இலக்கியம் மட்டுமன்றி மனிதனே இச்சமுகத்தில் இருந்து தான் உருவாக்கப்படுகிறான்.

இலக்கியம் நல்லதாகவும், மானுடச் சமுதாயத்தின் வளர்ச்சிகளை உள்ளடக்கியதாகவும் இருக்க வேண்டும். சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள், நன்மை தீமைகள் இருப்பதைப் போலவே இலக்கியத்திலும் நன்மை தீமைகள் இருக்கத்தான் செய்கிறது. நல்ல இலக்கியத்தினை இரசனை, வடிவம், மக்களின் எதிர்பார்ப்பு, மதிப்பீடு போன்றவைகள் மட்டும் தீர்மானிப்பதில்லை. அவ்விலக்கியம் சமுதாயத்தில் நல்லனவற்றை மக்களுக்கு அடையாளம் காட்டி தீயனவற்றை இனங்கண்டு துடைத்தெறிய வேண்டும்.

இவ்வாறான இலக்கியங்களைப் படைத்தால் மட்டுமே சமூதாயம் வளர்ந்து அச்சமூகத்திலுள்ள பண்பாடு வலுப்பெற்று மக்களின் வாழ்க்கை சிறக்கிறது. இலக்கியம் இல்லாச் சமூகம், 'கண்ணில்லாத மனிதனைப் போன்றது' இலக்கியங்களால் பண்பாட்டினை உருவாக்கமும் முடியும்,

உருக்குலைக்கவும் முடியும். ஆகவே இலக்கியம் வளர்ந்தால் சமூகம் மலரும், இலக்கியம் சாய்ந்தால் சமூகம் சரியும் என்பது அறிஞர் பெருமக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை என்பதனால், காலத்தைப் பாதுகாத்து வைக்கும் காலப் பெட்டகங்களாக இலக்கியங்களை நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டும்.

1.2.0 தமிழ் இலக்கியங்கள்

மனிதனை மாண்புறச் செய்வதில் தமிழிலக்கியங்களின் பங்கு அளவிடற்கரியது. ஓர் இலக்கியத்தை மேலோட்டமாகக் கற்பதென்பது வேறு, அதை அறிந்து வாழ்க்கையில் கடைப்பிடிப்பது என்பது வேறு, தமிழிலக்கியங்களைப் படித்து தெரிந்து கொள்கின்றனர். ஆனால் இதனைப் புரிந்துகொண்டு வாழ்க்கையில் கடைப்பிடிப்பதில்லை. தமிழிலக்கியத்தைப் புரிந்து கொள்ள இலக்கியங்களை மட்டும் கற்றால் போதாது, தமிழ்மரபுகளையும், சமூகத்தையும் புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது. தமிழர்களிடையே நிலவி வந்த பண்பாட்டு ஒழுக்கக் கூறுகளையும் மற்ற அனைத்துத் துறை சார்ந்த சாரம்சங்களையும் இலக்கியத்தின் வாயிலாக அறிந்து கொள்வதன் மூலம், தமிழ்ச் சமுதாயத்தைத் தலைநிமிரச் செய்யமுடியும்.

1.2.1 அற இலக்கியங்கள்

தமிழ் மொழியிலுள்ள இலக்கியங்களைச் சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், நீதி இலக்கியம், சிற்றிலக்கியம் , இக்கால இலக்கியம் என்று பல வகைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்திற்கு அடுத்தபடியாகப் போற்றப்படுவது நீதி இலக்கியமும் பக்தி இலக்கியமுமே. நீதி இலக்கியத்தினுடைய படைப்புக் காலத்தைக் கூர்ந்து நோக்கும் போது சங்க மருவிய காலத்தில் கி.பி இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கி ஐந்தாம் நூற்றாண்டு வரை எனக் கணக்கிடலாம். இக்காலக்கட்டத்தில் தோன்றிய இலக்கியங்களை அற இலக்கியம் என்று கூறுகின்றனர்.

1.2.2 அறம் – சொற்பொருள் விளக்கம்

'அறம்' என்னும் சொல்லின் பொருள் மிகவும் நெகிழ்ச்சியுடையது என்பதால் அதனைப் பகுத்துப் பொருள் காணுதல் எளிதன்று. அச்சொல்லின் பொருளை வரையறுத்து விளக்குகின்ற பொழுது பல சிக்கல்கள் தோன்றுகின்றன. அறம் என்னும் சொல் காலப்போக்கில் பல்வேறு பொருள்களை உணர்த்துகின்ற பொருள் செறிவு வாய்ந்த சொல்லாக விளங்குகின்றது. "அறு என்னும் வினைச்சொல் அடியாகப் பிறந்ததே அறம் என்னும் சொல்லாகும். அறு என்னும் அடிச்சொல்லிற்கு அறுத்துச்செல், வழியை உண்டாக்கு, உருவாக்கு, துண்டி, வேறுபடுத்து என்ற பலவகைப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. அம் என்னும் தொழிற்பெயர் விகுதி அறுத்தலாகிய தொழிலை உணர்த்துகிறது. இத்தகைய சொல்லமைப்பே ஆராய்ச்சியின் அடிப்படையில் 'அறம்' என்னும் சொல்லிற்குப் பின் வரும் விளக்கம் தரப்படுகிறது."[1]

அறம் என்பது நிலையான பொருளன்று. அது கொடை, அன்பு, ஈகை, இல்லறம், துறவறம் என அனைத்தையும் சேர்த்து ஒழுக வேண்டியதாகும். மேலும் இதனை மட்டுமே அறம் என அறுதியிட்டுக் கூற முடியாது. மேற்கண்டவையின்றி அறமும் இல்லை, அறங்கள் அல்லாமல் இவைகளும் இல்லை என உறுதிபடக் கூறலாம். மேலே கூறிய அனைத்தையும், இன்னும் பல உன்னதக் குறிக்கோள்களையும் இணைத்துப் பார்த்தால் அறத்தின் மூலத்தைக் கூற முடியுமா? என்றால் முடியாது. ஒன்றே முக்கால் அடியில் இந்த உலக உயிர்களுக்கு விளக்கம் சொன்ன வள்ளுவர், இவைதான் அறம் எனத் தெளிவாக எதையும் கூறவில்லை. ஆனால் பல இடங்களில் இவையெல்லாம் அறம் எனச் செப்பியுள்ளார். அவ்வாறு தீர்க்கமாகக் கூறாததற்குக் காரணம் அறம் என்பது காலத்திற்குக் காலம் மாறி வரும் மரபினைச் சார்ந்தது என்பதை வள்ளுவர் உணர்ந்திருந்தார். மனிதர்களைப் பக்குவப்படுத்தும் பண்பாட்டு கருவூலமாகவும் பல்லாயிரம் ஆண்டுகளாக உயிர்த்து வரும் தமிழ்ச் சமூகத்தின் கலசமாகவும் உயர்ந்த குறிக்கோள்களால் பின்னிப் பிணைந்துள்ளது. மேலும் மாந்தரினத்தின் உயர்நிலைச் சட்டமாகவும், அன்பும் பண்பும் நிறைந்த உலக நாகரீகத்தின் அமுதச் சுரப்பியாகவும் அறமானது விளங்குகிறது.

அறம் என்பது 'நல்வினை செய்தல்' என்றும் அறநெறி என்பது நல்லனவற்றைக் கடைப்பிடித்து ஒழுகும் முறையினைக் குறிப்பிடுகிறது. வடமொழியில் அறத்தைத் தர்மம் என்று அழைக்கின்றார்கள். ஆனால் தர்மம் என்பது வேறு, அறம் என்பது வேறு. தர்மம் என்பது அவரவர் சார்ந்த குல ஒழுக்கம் (வர்ணாசிரமம்) எனவும், இது மனிதருக்கு மனிதர் அவரவர் குலவழக்கம் சார்ந்து மாறுபடுகிறது. தமிழர்களின் அறமே மனித இனத்திற்குப் பொதுவான ஒழுக்கம் என்று கூறலாம். எவ்வுயிர்க்கும் தீமைகள் செய்யாமல் எல்லாக் காலத்திற்கும் பொதுவான வாழ்வியல் நன்னெறிகளின் சாரம்சமாக விளங்குவதே அறம் எனப்படும்.

தமிழ் சான்றோர்கள் அறத்தை வலியுறுத்தித் தமிழில் பல்வேறு நூல்களையும், அறக்கருத்துகளை மக்களுக்குத் தெளிவுபடுத்திக் கொண்டே வருகின்றனர். அவ்வாறு அறத்திலும், பொருளிலும், இன்பத்திலும் அறங்கள் இல்லாமல் போதல் ஆகாது. எந்த ஒரு செயலாக இருந்தாலும் அறமானது கட்டாயமாக இருக்க வேண்டும் என்பதால் தான் நூல்களையே அறநூல்கள் எனப்போற்றினர்.

1.2.3 அறம் பற்றிய அகராதிகள் விளக்கம்

- அறம்; தனிமனிதனின் வாழ்வும் பொது வாழ்வும் சீராக இயங்கத் தனிமனிதன், அரசு போன்றவர்கள் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கத்தின் அடிப்படையிலான நெறிமுறைகள் அல்லது கடமைகள்; ethies: morality.[2]
- கடமை, நோன்பு, தருமம், கற்பு, இல்லறம், துறவறம், நல்வினை, அறநூல், அறக்கடவுள், தருமத் தேவதை, பயனுண்டாக்குஞ் சொல்.[3]
- கையறம், தருமம், நீர்மை, நூற்பயன், நான்கினென்று, பெரியோரியல்பின்னென்று, புண்ணியம், தகுதி, சமயம், ஞானம், நோன்பு, அறச்சாலை, வசைகவி, யமன், புனிதம், கற்பு, அறநூல், அறக்கடவுள், ஒழுக்கம், இன்சொல், இல்வாழ்க்கை.[4]
- அறம், அறன்; sub. virtue: comp. தருமம் particularly, benefaction, charity. alms: see யோகம் note: thirty two acts of charity are particularized: viz.[5] என அகராதிகள் விளக்கம் தருகின்றது.

1.2.4 நீதி நூல்கள்

மக்களுடைய வாழ்க்கை முறையினை அகம் புறம் என்று பிரித்து அதனுடைய பல்வேறு உட்கூறுகளை நுட்பமாக ஆராய்வதே சங்க இலக்கியமாகும். வாழ்வியலில் வெளிப்படுத்தும் புறப்பொருள்களின் தன்மையையே அறம் என்பர், அதன் சிறப்புகளை எடுத்துரைக்கும் நூல்கள் பல இயற்றப்பட்டுப் பல்வேறு படிநிலைகளாக உருப்பெற்று விளங்குவதையே பிற்காலப் புலவர் பெருமக்கள் 'நீதி நூல்கள்' என்று அழைக்கின்றனர். தவறுகளைக் களைந்து ஒழுக்கங்களை அறிவுறுத்தும் நூல்களை நீதி நூல்கள் என்கிறோம். "நீதி நூல்கள் என்று குறிப்பிடும் வழக்கு தேவாரக் காலத்தில் தோன்றியதாகும். அதற்கு முற்பட்ட காலத்தில் அறம் என்ற சொல்லையே பண்டைய சான்றோர்கள் பயன்படுத்தினார்கள்."[6] நீதி என்னும் சொல் பழந்தமிழ் இலக்கியத்தில் பயன்படுத்தப்படவில்லை.

"நீதி என்னும் சொல் தமிழ்ச்சொல்லன்று, அது வடமொழிக்குரிய சொல்லாகும். கி.பி ஆறாம் நூற்றாண்டு அளவிலேயே இச்சொல் தமிழ் மொழியில் இடம் பெற்றிருக்கிறது. இச்சொல் 'நீ' என்னும் வினைச்சொல் அடியாகத் தோன்றியது. நீ என்னும் அவ்வேர்ச்சொல்லிற்கு அழைத்துச் செல் (LEAD), கொண்டு செல் (CONVEY), நடத்து (CONDUCT), வழிகாட்டு (GUIDE), ஆட்சிசெய் (GOVERN), இயக்கு (DIRECT) என்னும் பல்வேறு பொருள்கள் வடமொழியில் வழங்கி வருகின்றன. இவ்வாறான நீதி என்னும் வேர் பெயர்ச்சொல் பல்வேறு பரிணாமங்களில் வெளிப்பட்டு வருகிறது. அவை இயக்குதல், வழிகாட்டுதல், செயலாட்சி, நடத்தை, தகுதி, மரபொழுங்கு என்ற பல பொருள்களை உணர்த்துகின்றது. மேலும் செயலின் நிகர்நிலைக் கொள்கை முறை முன்னுணர்வு மதி, அரசியல் அறிவு திறன், அரசியல் சூழ்ச்சி திறன் என்னும் வேறுபல பொருள்களையும் இச்சொல் குறிக்கிறது."[7] இவ்வாறு பல்வேறு பொருள்களில் வழங்கப்பட்டு வருகிறது.

திருக்குறளில் நீதி என்ற சொல் இடம்பெறவில்லை, அப்பொருளை உணர்த்துவதற்கு 'நயன்' என்ற சொல்லைத் திருவள்ளுவர் வழங்கியுள்ளார். பழைய தமிழ் இலக்கியங்களில் நன்று, நன்றி, நன்மை என்ற பல சொற்கள்

அறம் என்ற பொருளிலேயே பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அறம் என்ற சொல்லும் நீதி என்ற சொல்லும் ஒரே பொருளைத் தான் குறிக்கிறது என்பது அனைவரும் அறிந்த உண்மை. அற இலக்கியங்கள் என்றென்றும் அழியாத தங்கப் பேழைகளாகவும், மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவதோடு மனிதர்களின் அகப்புற வாழ்வை இன்றளவும் மிளிர்ந்தோங்கச் செய்வது தமிழிலக்கியம் என்றால் அது மிகையாகாது. தமிழ் இலக்கியங்கள் உலக இலக்கியத்தின் முன்னோடியாகத் திகழ்கின்றது. அறத்தின் நுட்பத்தையும், மக்களின் அறிவுசார் செயல்களையும் நல்வழி படுத்துவதற்காகவே அற இலக்கியங்கள் தூண்டுகோலாய் அமைகின்றது. இவ்வாறான அற இலக்கியங்களில் பதினெண் கீழ்க்கணக்கு என்னும் தனிப்பாடலில் அமைந்த செய்யுள் மனிதர்களின் பண்பிற்கு மணிமகுடமாகத் திகழ்ந்தது எனலாம். அவை,

"நாலடி, நான்மணி, நானாற்று, ஐந்திணை, முப்
பால், கடுகம், கோவை, பழமொழி, மாமூலம்,
இன்னிலைய காஞ்சியுடன், ஏலாதி என்பவும்
கைந்நிலைய வாம் கீழ் கணக்கு"[8]

என்று பதினெட்டு நூல்களை உடையது. இவற்றில் பதினொரு நூல் நீதிநூலாகும்.

1.2.5 உலகப் பொதுமறை திருக்குறள்

இரண்டடியில் எழுதப்பட்ட இத்திருக்குறள் பார்ப்பதற்குச் சிறியதாயினும் மிக நுட்பமான பல அரியக் கருத்துகளைக் கொண்டது. திருக்குறளுக்கு நிகரான மற்ற நூல்களையும் ஒப்புமையாகக் கொண்டால், குறள் அனைத்துக் காலகட்டத்திற்கும் பொருந்தும் காலப்பெட்டகமாக விளங்குகிறது. இப்பெருநூல் எல்லா மனித இனத்தாருக்கும், சமயத்தாருக்கும் இன்றியமையாத அறநெறிகளை எடுத்துரைத்து மக்களின் அறியாமையால் வரும் அனைத்து நோய்களுக்கும் அருமருந்தாக விளங்குகிறது என்பதைச் சங்கப்புலவருள் ஒருவரான கல்லாடர்,

"ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தார் – நன்றென
எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி"[9]

என்று பாடியிருக்கிறார். இவ்வாறு அனைத்து உயிர்களுக்கும் பொதுவான ஒரு பொதுமறையை அமைத்துத் தந்துள்ளார் தெய்வப்புலவர். பல்வேறு வேற்றுமைகளான இனத்தாலும் மதத்தாலும் நிறத்தாலும் பணத்தாலும் பிரிந்து வாழ்ந்து வரும் இம்மானுடச் சமுதாயத்தில் அறங்கள் தழைத்தோங்கவும், உயர்வு தாழ்வு இன்றி வாழவும், குற்றங்கள் குறைய வேண்டும் என்பதற்காக எந்த ஒரு ஏற்றத்தாழ்வுகளையும் தம் நூலில் சிறிதும் இடம்தராமல் மானுடச் சமுதாயத்திற்காகப் படைக்கப்பட்ட உலகப் பொதுமறை நூலாகும்.

1.2.6 திருக்குறள் – பெயர் காரணம்

தமிழ் மொழியில் மிகச் சுருங்கிய வெண்பாவிற்குக் குறள் என்று பொருள். அது எழுசீரினைக் கொண்டு இரண்டு அடியில் முடிகிறது. எழு சீராய் வரும் குறள் வெண்பாவினைத் தொல்காப்பியார் 'குறுவெண்பாட்டு' என்கிறார். தமிழில் இதனினும் சிறிய யாப்பு காணப்படவில்லை. தெய்வப்புலவர் தம்முடைய கருத்தினை விளக்குவதற்கு மிகச்சிறிய வெண்பா யாப்பினைத் தேர்ந்தெடுத்து, மக்களுக்கு இன்றியமையாது வேண்டப்படும் முக்கியமான கருத்துகளைத் தம் அறிவினால் நன்கு ஆராய்ந்து, மனதில் பதியுமளவிற்கு சுருக்கமாகவும், ஆழமாகவும் படைத்துள்ளார். நுட்பமான ஒரு கருத்தை மற்றவருக்கு எடுத்துரைக்கும் போது கேட்பவர் சலித்துப்போனால் நுட்பமான கருத்தாக இருந்தாலும் கேட்பவர் இளைப்புற்று பொருளின் ஆழமானது பயன்படாமல் போகும். ஆகவே மக்களுக்கு மிக எளிமையான முறையில் தம் கருத்தினை மனதில் பதிய வைக்க குறள் வெண்பாவினால் திருக்குறளை இயற்றியுள்ளார் திருவள்ளுவர்.

"திரு என்னும் சொல்லிற்குச் செல்வம், சிறப்பு, அழகு, நற்பேறு, மங்கலநாண், தெய்வத்தன்மை முதலிய பல பொருள்கள் உண்டு. திருமகள் (இலக்குமி) என்னும் போது 'திரு' என்பது தனித்துப் பொருள் உணர்த்துகிறது. திருக்கோயில், திருத்தொண்டர் என்னும் போது அடைமொழியாக வருகிறது. திருமுருகன், திருப்பாதிரிப்புலியூர், திருவாதிரை, திருக்கைவேல், திருவருள், திருப்பணி என்னும் போது பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் ஆகியவற்றிற்கு அடைமொழியாக வருகிறது.

அவ்வடைமொழிக்குத் தெய்வத் தன்மை என்பது பொருளாகும். பெரும்பாலும் அடைமொழியாக வரும்போது தெய்வத்தன்மையைச் சுட்டியே வருகிறது. பொதுநிலையை நீக்கிச் சிறப்பு நிலை பொருளில் வருவதும் உண்டு. வள்ளுவர் என்பது ஒரு பிரிவின் பொதுப்பெயர். திருவள்ளுவர் என்னும் போது பொதுநிலை நீக்கி அப்பிரிவினராகிய குறளாசிரியரையேக் குறிக்கிறது. குறள் என்னும் சொல் குறள் வெண்பாவைப் பொதுவில் உணர்த்துமாயினும், திருக்குறள் என்னும் போது திருவள்ளுவரின் திருக்குறளையே உணர்த்தும். திரு என்பது தெய்வத்தன்மையைக் குறிக்கும். தெய்வத்தன்மை உடையவரைக் குறிக்கும்போது 'திரு' சேர்க்கப்படும். சான்றாகத் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், திருப்பாணாழ்வார், திருமூர்த்தி முதலியவர்களைக் கூறும்போது திரு என்ற அடைமொழியைப் பயன்படுத்துவதை அறிய முடிகிறது.''[10] அவ்வகையில் திருவள்ளுவர் செய்த குறள் திருக்குறள் என்றாயிற்று.

1.2.7 திருக்குறளின் வேறு பெயர்கள்

அறம், இரண்டு, உத்திர வேதம், எழுதுண்ட மறை (ஏர் எழுபது), குறள், தமிழ்மறை, தனிமறை, திருவள்ளுவர், திருவள்ளுவர்ப் பயன், தெய்வ நூல், தெய்வ மாமறை, நம்மறை, நவத்தமிழ் வேதம், பழமொழி, திருப்புகழ் பால் முறை, புகழ்ச்சி நூல், பொதுமறை, பொய்யாமொழி, பொருளுறை, முதுநெறி, முழுமொழி, முப்பால், முப்பொருள், மெய் வைய்த்த சொல், வள்ளுவம், வள்ளுவர், வள்ளுவத் தேவன் வசனம் (பெருந்தொகை), வள்ளுவமாலை, வள்ளுவன் வாய்ச்சொல், வள்ளுவன் வாய்மொழி, வள்ளுவனார் வைப்பு (பெருந்தொகை), வாயுறை வாழ்த்து, வாய்மை(திருப்புகழ்) என்று பல சிறப்புப் பெயர்கள் வழங்கப்படுகிறது.

1.2.8 ஆசிரியர் வரலாறு

திருக்குறள் எழுதிய ஆசிரியரின் பெயர் திருவள்ளுவர். இவர் குலத்தால் வள்ளுவர் என்பர் சிலர். ஆதி என்கிற புலைச்சிக்கும் பகவன் என்கிற பார்ப்பனருக்கும் பிறந்தார் என்று கபிலரகவல் என்ற நூல் கூறுகிறது. கபிலரகவல் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கட்டிவிட்டதொரு நூல் போலும் எனக் காலம் சென்ற பாம்பன் சுவாமிகள் கூறுகின்றார்.

யாளிதத்தன் என்ற பார்ப்பனருக்கும் ஒரு புலைச்சிக்கும் பிறந்ததாக ஞானாமிர்தம் என்கிற பழைய நூல் வள்ளுவரைச் சுட்டுகிறது. திருக்குறளையும் திருவள்ளுவரையும் புகழ்ந்து பாடும் திருவள்ளுவமாலை கீழ்வரும் பாட்டில் வள்ளுவர் குலத்தைத்தான் சுட்டுகிறதோ என்ற ஐயமும் எழுகிறது,

"அறம்பொருள் இன்பம் வீடென்னும் அந்நான்கின்
திறம்தெரிந்து செப்பிய தேவை – மறந்தேயும்
வள்ளுவன் என்பானோர் பேதை அவன் வாய்ச்சொல்
கொள்ளார் அறிவுடை யார்"[11]

என்கிற மாமூலனாரின் பாடல் அடிகள் உணர்த்துகிறது. இந்த மாலைத் திருவள்ளுவர் காலத்திலேயே எழுந்தது என நம்புவதற்கு இல்லை. ஆனாலும் நேமிநாத உரையிலும் கல்லாடத்திலும் இத்தனி பாடல் குறிக்கப் பெறுவதால் எண்ணூறு, தொள்ளாயிரம் ஆண்டுகளாக இந்நூல் வழக்கிலிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதைப்போலவே திருவள்ளுவர் வாழ்வை பற்றி பல்வேறு கருத்துகள் நிலவி வருகிறது. அவர் சோதிடம் பார்க்கும் வகுப்பினர் என்று ஒரு பிரிவினரும், நெசவுத்தொழில் செய்து வந்ததாகச் சிலரும், கப்பல் தரைதட்டிய போது வள்ளுவர் அதைத் தம் திறமையால் கையாண்டார் எனவும் பல்வேறு வகையில் திரித்துக்கூறி வருகின்றனர்.

"ஏலேலசிங்கர் என்ற தமிழ் அரசர் சிங்களத்தைக் கி.மு இரண்டாம் நூற்றாண்டில் ஆண்டதனை நாம் அறிவோம். ஏலாசாரியர் என்பது வந்தவாசிக்கு அடுத்த மலையில் கி.மு முதல் நூற்றாண்டில் தவம் செய்து வந்த குந்தாசிரியரின் பெயர் என்று சைனர் கூறுவர். இவர்தான் திருக்குறளைச் செய்தார் என்றும் இவருடைய மாணவராய் இல்லத்தில் வாழ்ந்த வள்ளுவர் இதனை உலகிற்கு அறிவித்தார்"[12] என்று திரு.சக்கரவர்த்தி நாயனார் கூறுகிறார். மேலும் வள்ளுவர் ஒரு சமணர் என்றும், கிறித்துவர் என்றும் பௌத்தர் என்றும் பல்வேறு விதமான கருத்துகள் திணிக்கப்படுகிறது. ஆனால் இவைகளுக்கு நிலையான ஆதாரங்கள் ஏதுமில்லை.

அனைத்துக் கருத்துகளையும் ஆராயும்போது திருவள்ளுவரின் காலத்தைக் கணிப்பதில் சிரமம் ஏற்படுகிறது. "சிலப்பதிகாரமும்

மணிமேகலையும் திருக்குறளில் இருந்து மேற்கோள்கள் (சிலப்பதிகாரம் 12; 34, மணிமேகலை; 22; 60-61)''[13] காட்டுகின்றன ஆகையால் திருவள்ளுவர் இந்தக் காவியங்களுக்கு முற்பட்டவராக இருக்க வேண்டும். திருக்குறளிலும் சங்கப்பாடல்களிலும் ஒத்த தன்மைகள் காணப்படுகின்றன. இன்னும் சிலர் திருவள்ளுவரிடமிருந்து சங்கப்பாடல்கள் கடன் வாங்கியிருக்க வேண்டுமென்று புறநானூற்றிலுள்ள "அறம் பாடிற்றே - தர்மம் இதனை இவ்வாறு பாடிற்றே. குறள் – 110, புறம் – 34''[14] என்று கூறுகின்றனர்.

வள்ளுவருடைய மனைவி வாசுகி எனவும் இவர் மைலாப்பூரில் வாழ்ந்தார் எனவும் தம் நூலை அரங்கேற்றம் செய்ய மதுரை சென்றார் எனவும் செய்திகள் கூறப்படுகின்றன. மேலும் வள்ளுவர் சங்க இலக்கியப் புலவர்களுக்கு முற்பட்டவரா அல்லது பிற்பட்டவரா என்ற ஐயம் ஏற்படத்தான் செய்கிறது. ஏனெனில் புலவர்கள் தற்பெருமையினை விரும்பாதவர்கள். நூல்களைப் படைப்பது அறக்கருத்துக்களைப் பரப்பவேயன்றி தம் புகழ் பரப்புவதற்கு அல்ல. ஆனால் சங்கப் பாடல் வரிகளும் திருக்குறள் வரிகளும் ஒன்று போலக் கையாண்டுள்ளதைக் கீழ்வரும் பாடல்களில் காணலாம்.

"உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு என்பது குறள். 'செய்தி கொன்றார்க்கு உய்தி இல்' என்பது புறம். 'நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின் வீடில்லை' என்பது குறள். 'பெரியோர் நாடி நட்பின் அல்லது நட்டு நாடார்' என்பது கபிலரகவல், 'நீரின்றி அமையாது உலகு' என்பது குறள். 'நீரின்றி அமையா உலகம்' என்பது கபிலரகவல். 'பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்' என்பது குறள். 'முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்' என்பது நற்றிணை. ''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்' என்பது குறள். 'ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே''[15] என்பர் நச்சள்ளையார். இவ்வாறு சங்க இலக்கியப்புலவர்கள் கையாண்ட செய்யுளும் திருவள்ளுவர் கையாண்ட செய்யுளின் வரிகளும் காலத்தால் ஒன்றுபட்டவை போலத் தோன்றினாலும் எவ்விதத் தெளிவானக் குறிப்புமில்லை.

''வள்ளுவர் வரலாறு என்று புலவர்கள் அனைவரும் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் மார்ச் 31 – 1939 அன்று உ.வே.சாமிநாத ஐயர் தலைமையில் 530 க்கும் மேற்பட்டவர்கள் கூடினர். அக்கூட்டத்தில் பசுமலைப் பேராசிரியர் சோமசுந்தரப் பாரதியார் கூறியதாவது 'வள்ளுவன் ஒரு சிறந்த தமிழ் மகன். அவன் நன் வேளாண்குடி மரபினன்' என்றும் அவர் பிறந்தது, வாழ்ந்தது, இறந்தது அனைத்தும் மதுரை. அவர் பாண்டிய மன்னனுக்கு உள்பாடு கருமத் தலைவராக (PRIVATE SECRETARY) இருந்தவர். அதாவது அரசனது கருத்தை மக்களுக்கு அறிவிக்கும் தொழிலைப் பெற்றிருந்தவர், இந்தத் தொழிலின் காரணமாகவே 'வள்ளுவர்' என்ற பட்டத்தைப் பாண்டியனால் பெற்றவர். நல்ல வேளாண் குடிமகளை மனைவியாகப் பெற்றவர்.''[16] என்று அவர் கூறுகையில் அவையிலிருந்த அனைவரும் அதைக் கேட்டு மனம் ஒப்பி அவரைப் பாராட்டினார்கள். எத்தகைய பிரிவினரானாலும் அவர் செய்த நூல் என்றும் நம்மைச் சார்ந்துள்ளது எனலாம். அவர் வாழ்ந்த காலத்தினைக் இயேசு கிறித்து பிறப்பதற்கு முன்பு 31 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்ததாக கணக்கிட்டு வருகிறார்கள்.

1.2.9 திருவள்ளுவரின் சிறப்பு பெயர்கள்

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்னும் பாரதியின் வாக்கிற்கிணங்க பல சிறப்புகளைப் பெற்றவர். குறளாசிரியர், செந்நாப் புலவர், செந்நாப் போதார், தமிழ் மணி, திருத்தகு தெய்வத் திருவள்ளுவர், தெய்வப் புலமை திருவள்ளுவர், தெய்வப்புலவர், தேவர், தேவர் திருவள்ளுவர், தேவிற்சிறந்த திருவள்ளுவர், நாயனார், நான்முகனார், புலவர், பெருநாவலர், பொய்யாமொழியர், பொய்யில் புலவர், மாதானுபங்கியர், முதற்பாவலர், வள்ளுவர், வள்ளுவத் தேவர், வான்மணி, தெய்வத்திருவள்ளுவர் எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகிறார்.

1.2.10.0 திருக்குறள் நூலின் பகுப்பு

திருக்குறள் பால், இயல், அதிகாரம் என்னும் மூன்று பகுப்புகளைக் கொண்டுள்ளது. பால் பகுப்பு வகையால் மூன்றாகவும், இயல் வகையால் பதிமூன்றாகவும், அதிகாரப்பிரிவில் நூற்றுமுப்பதாகவும், குறள் வெண்பாக்களாக ஆயிரத்து முந்நூற்று முப்பதாகவும் நிறைந்து மக்களின் மனங்களில் குடிகொண்டுள்ளது.

1.2.10.1 பால்பகுப்பு

'பால்' என்பது பகுப்பு அல்லது 'பிரிவு' என்னும் பொருள் தரும் ஒரு சொல் ஆகும். இந்நூலைப் பொருத்தவரை மூன்று பெரும் பகுப்புகளாகப் பகுத்துள்ளனர். அறம் பற்றிய செய்திகளை 'அறத்துப்பால்' என்றும் பொருள் பற்றிய பகுப்பை 'பொருட்பால்' என்றும். இன்பம் பற்றிய கருத்தைக் காமத்துப்பால் என்றும் முப்பெரும் பகுப்புகளைக் கொண்டுள்ளது.

1.2.10 2 அறத்துப் பாலின் இயல் பகுப்பு

'இயல்' என்பது 'பால்' என்பதனை விடவும் சிறியது, 'இயல்' என்னும் சொல்லுக்கு 'இலக்கணம்' என்பது பொருள். அறம் என்னும் பகுப்பைக் கொண்ட அறத்துப்பாலில் 'பாயிரவிலக்கணம்' கூறும்போது பாயிரவியல் என்றும், 'இல்லற இலக்கணம்' கூறும் போது இல்லறவியல் எனவும், துறவறச் செய்திகளை எடுத்துரைக்கும் துறவறவியலையும், 'ஊழின் இலக்கணம்' கூறும் ஊழ் இயல் என நான்கு இயல்களைக் கொண்டதாக விளங்குகிறது.

1.2.10.3 அறத்துப்பாலின் அதிகாரப் பகுப்பு

அதிகாரம் என்பது இயல் என்ற பகுப்பைக் காட்டிலும் சிறியது, அதற்குப் பொருளை விரித்துரைத்தல் என்பது பொருளாகும். திருக்குறள் என்னும் நூலைப் பொருத்தவரை 'அதிகாரம்' என்பது, ஒரு தலைப்பின் கீழ் அமையும் குறள்களின் விரிவுகளையும் அப்பொருளின் தன்மைகளையும் அதிகரித்தலையே குறிப்பிடும் ஒரு சொல்லாகவே விளங்குகிறது. அவ்வதிகாரத்தில் உள்ள பத்துக் குறள்களின் தொகுப்பாக அமைந்துள்ளது.

எனவே 'அறத்துப்பால்' பால் பகுப்பில் ஒன்றாகவும், இயல் பகுப்பில் நான்காகவும், அதிகாரப் பகுப்பில் முப்பத்து எட்டாகவும், குறள் வெண்பாக்கள் முந்நூற்றெண்பதாகவும் அமைந்துள்ளது.

1.2.10.3 பொருட்பாலின் பகுப்பு

பொருட்பால், பால் பகுப்பில் ஒன்றாகவும், இயல் பிரிவில் ஏழாகவும், அதிகார வகைமையில் எழுபதாகவும், குறள் வெண்பாக்களின் எண்ணிக்கையில் 'எழுநூறாகவும்' அமைந்து விளங்குகிறது.

1.2.10.4 காமத்துப்பால் பகுப்பு முறை

காமத்துப்பால் பால் பகுப்பில் ஒன்றாகவும், இயல் பகுப்பில் இரண்டாகவும், அதிகாரப் பகுப்பில் இருபத்தைந்தாகவும் குறள் வெண்பா எண்ணிக்கையில் இருநூற்று ஐம்பதாகவும் விளங்குகிறது.

1.2.11.0 பாயிரம்

திருக்குறள் தன்னிகரில்லாத தனிப்பெரும் நூலாகவும், உலகமே வியந்து பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளது. சங்ககாலத் தமிழ் நூல்கள் யாவும் பரந்துபட்ட செய்யுள்களால் வாழ்க்கை விழுமியங்களை எடுத்துரைத்த போதிலும் மிகச் சுருக்கமாக விளக்குவதே இதன் தனிப்பெரும் சிறப்பாக அமைகிறது. தொல்காப்பிய உரையாசிரியர்களுள் ஒருவரான பேராசிரியர், "மரபியலில் வடவேங்கடம் தென்குமரி என்னும் சிறப்பு பாயிரம் செய்தார் பனம்பாரனார். வலம்புரி முத்தின் என்னும் பொதுப்பாயிரம் செய்தார், ஆத்திரையன் பேராசிரியர்."[17] என்ற கூற்றின் மூலமாகப் பாயிரம் என்பது தொன்றுதொட்டு வழங்கிவருகிறது என்பது புலனாகிறது.

1.2.11.1 பதிகம்

சங்கமருவியக் காலத்தில் கதை தொடர்கள், காப்பியங்கள், உருவான போது "வாழ்த்தும் வணக்கமும் வருபொருள் உரைத்தலும் அவையடக்கமும் இணைந்து பதிகங்கள் தோன்றின. அப்போது தோன்றியப் பாயிர இலக்கணம் தான் பதிகக்கிளவி பல்வகைப் பொருளைத் தொகுதியாகச் சொல்லுதல் தானே"[18] இவ்வாறான பதிகங்கள் சிந்தாமணி, சிலப்பதிகாரம்,

மணிமேகலை போன்ற இலக்கியங்களில் பயின்று வந்துள்ளமை அறியமுடிகிறது.

1.2.11.2 திருக்குறளில் பாயிரம்

பாயிரம் என்பது நூன்முகம் என்று வழங்கப்பட்டது. திருவள்ளுவர் திருக்குறளில் கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்னும் நான்கு அதிகாரங்களும் பாயிரமாகக் காணப்படுகின்றன. ஆனால் 'கடவுள் வாழ்த்து' முதலிய மூன்று அதிகாரங்களும் 'உரைகோளான்' முதலியோர்களால் கூறப்பெற்றது சிறப்பு பாயிரம் என்ற கருத்தும் நிலவுகிறது.

"சென்னை அரசாங்கக் கீழ்நாட்டுப் (Oriental) புத்தகசாலையிலுள்ள மிகமிக பழைமையான பாயிரத்தின் மூலம் அதிகாரமாக நிற்பதும் பலரால் ஒப்புயர்வற்ற பாக்களையுடையதெனப் போற்றி பாடுவதுமான 'சிறப்புப் பாயிரம்' முற்றிற்று."[19] இவ்வாறான தம்முடைய கருத்துகளையும் அதனுள் சேர்த்துக் கொண்டனர். மேலும் உரையாசிரியர்களும் தங்களின் (ஆத்திக, நாத்திக) குணங்களைத் திருக்குறள் உரைகளில் பயன்படுத்தியுள்ளார்கள். முதல் அதிகாரமான 'கடவுள் வாழ்த்து' இன்றைய உரையாசிரியர்கள் பார்வையில்,

"பாவேந்தர் பாரதிதாசன்	:	உலகின் தோற்றம்
புலவர் குழந்தை	:	இறை நலம்
நாவலர் நெடுஞ்செழியன்	:	அறிவின் சிறப்பு
தேவநேயப்பாவாணார்	:	முதற் பகவன் வாழ்த்து
கலைஞர் கருணாநிதி	:	வழிபாடு
பேரா. சாலமன் பாப்பையா	:	திருவடி வணக்கம்
சமண உரை	:	கடவுள் வணக்கம்
அ.மா. சாமி	:	ஆதி பகவன் வாழ்த்து"[20]

இவ்வாறு உரையாசிரியர்கள் தம்முடைய எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

1.2 12 0 உரையாசிரியர்கள்

இலக்கண இலக்கியங்கள் தோன்றியக் காலத்தில் புகழுடன் விளங்கிக் காலப்போக்கில் ஏற்படும் அரசியல்சூழல், சமூகச் சிந்தனை மற்றும் சமயக்கோட்பாடுகளினால் செல்வாக்கை இழக்க நேரிட்டுள்ளது. ஆகவே 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்ற பெரியோர்களின் வாய்மொழி கேற்ப மொழிகளில் ஏற்பட்டு வந்த தடைகள், எதிர்ப்பு, புறக்கணிப்பு ஆகியவற்றை அகற்றி நூலின் செல்வாக்கை உயர்த்துவதே உரையாசிரியர்களின் பணியென்று கூறலாம். ஒரு நூலின் கருத்தானது காலம் கடந்து நின்று பண்பாடு, நாகரீகம், காலச்சூழ்நிலைக்கு தகுந்தார் போல் பொலிவடையச் செய்வதே அவர்களின் சிறப்பான பணியாகும். உரையின் பொது இலக்கணத்தை நன்னூலார் பொதுப்பாயிரத்தில்,

"பாடம் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை உதாரணம் வினாவிடை விசேடம்
விரிவு அதிகாரம் துணிவு பயனோடு
ஆசிரிய வசனம் என்று ஈரேழ் உரையே" [21]

எனும் நூற்பா இயம்பியுள்ளது. உரைகள் பல வகைகளில் காணப்படுகின்றன. அவை, காண்டிகை உரை, சூத்திரவுரை, விருத்தியுரை, பொழிப்புரை, விளக்கவுரை, பதவுரை, கருத்துரை, ஒருவரி உரை என இதுபோன்ற உரைகளின் மூலம் ஒரு நூலின் கருத்துகளை எடுத்தும், தொகுத்தும், விளக்கியும் பொருள் கொள்ளப்படுகின்றது. குறள்களின் உரைகளை ஒப்பிடும் போது மாறுபட்ட கருத்துகள் வெளிப்படுகின்றன. திருக்குறளுக்கு உரை செய்தவர்களை,

"தருமர் மணக்குடவர் தாமத்தார் நச்சர்
பரிமேலழகர் பரிதி- திருமலையர்
மல்லர் கலிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர் நூற்கு
எல்லை யுரையெழுதினோர்"[22]

இவர்களுள் மணக்குடவர், பரிமேலழகர், பரிதி, பரிபெருமாள், காளிங்கர் ஆகிய ஐவர் இயற்றிய உரைகள் கிடைக்கப்பெற்று வெளிவந்துள்ளது. ஏனையோர் உரைகள் கிடைக்கவில்லை.

1.2.12.1 மணக்குடவர் (10, 11 ம் நூற்றாண்டு)

நமக்குக் கிடைத்திருக்கும் திருக்குறள் உரைகளில் காலத்தால் முற்பட்டு தெள்ளத் தெளிந்த எளிய தமிழ் நடையில் குறளின் கருத்துகளை விளக்கியுள்ளர். வலிந்து வடநூற் கருத்துகளைத் தம் நூலில் புகுத்தாதவர். பரிமேலழகரின் உரையை ஏற்காதவர்களும், இவருடைய கருத்தை ஏற்பார்கள். மற்ற உரையாசிரியரான பரிப்பெருமாள் உரை பெரிதும் மணக்குடவர் சொல்லிய சொல்லும் பொருளும் தழுவிச் செல்கிறது. பரிதியார் உரை, பல இடங்களில் மூலத்தோடு தொடர்பில்லாமல் தனித்து நிற்கிறது. காளிங்கர் உரை நல்ல நடையழகோடு அமைந்திருக்கிறது.

1.2.12.2.0 பரிமேலழகர் (கி.பி 13 –ம் நூற்றாண்டு)

பழைய உரைகளில் காலத்தால் பிற்பட்டவர் பரிமேலழகர். இவர் தம் முன்னோர்கள் செய்த உரைகளைக் கற்கும் வாய்ப்பைப் பெற்றவர். இவருடைய உரையானது நல்ல கருத்துச் செறிவும் நுண்மையும், இலக்கணத் திட்பமும் உடையதாய் இருக்கின்றது. மற்றவரைவிட முதன்மை என்று கூறும் அளவிற்கு பரிமேலழகர் உரை போற்றப்படுகின்றது. திருவள்ளுவரின் வாய்மொழியாகவே குறளுக்கு விளக்கம் தருவது போலப் பரிமேலழகர் உரை அமைதுள்ளார். ஒவ்வொருவரிடமுள்ள நிறை, குறைகளை உணர்ந்து அதற்குத் தகுந்தார் போல் சிறப்பாக உரை கண்டவர். நூலின் நுட்பத்தைத் திறம்படச் செப்பியவர்.

1.2.12.2.1 பரிமேலழகரின் சிறப்பு

பரிமேலழகர் உரைக்கு முன்பே திருக்குறள் ஒன்பது உரைகளைப் பெற்றிருந்தது. ஆனால் அவற்றுக்கெல்லாம் இல்லாத பெருஞ்சிறப்புப் பரிமேலழகர் உரைக்கும் மட்டும் உண்டு. பரிமேலழகர் சிறந்த அறிஞர். வடமொழி நூல்கள் பல கற்றுத் தேர்ந்தவர். திருக்குறள் மட்டுமல்லாமல் தமிழ் இலக்கியங்கள் பலவற்றை ஆராய்ந்து கற்றவர். திருக்குறள் உரையின் சிறப்புப் பாயிரத்தில் உமாபதி சிவாச்சாரியார் பாடல் வழியும்,

“பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள

நூலெல்லாம் வள்ளவர்செய் நூலோமோ – நூற்கு

பரித்தவுரை யெல்லாம் பரிமேலழகர்
தெரிந்த வுரையாமோ தெளி”[23]

என்ற பாட்டின் மூலம் பரிமேலழகரின் உரைக்கு இருந்த மதிப்பை அறிய முடிகிறது. “திருக்குறளின் பெருமையை ஆராய்ந்து அதன் கருத்துகளை நுட்பமாக உணர்ந்து அதற்கு ஓர் அரிய உரை இயற்றி அதன் புகழை வளர்த்தவர் பரிமேலழகர் என்று சு. வையாபுரிப்பிள்ளையும், திருவள்ளுவர் ஏடும் அதற்குரிய பரிமேலழகர் உரை இரண்டுமே தத்தம் கட்டுக்கோப்புடையவனாய் அமைந்துள்ளன. இந்நாள் வரை திருவள்ளுவரின் கட்டுக்கோப்புடன் கட்டி எழுதப்பட்ட ஒரே உரை பரிமேலழகரின் உரை என்று தான் கூற வேண்டுமென்று கா. அப்பாதுரைப்பிள்ளையும், அறிஞர் பெருமக்களின் போற்றுதலைக் காலந்தோறும் பெற்று வரும் பரிமேலழகரின் ஆற்றலும் அறிவும் அளவிடற்கு அரியவையாகும். தனித்தமிழில் அமைந்த இலக்கிய நடை, திட்ப நுட்பம் வாய்ந்த கட்டுக்கோப்பு ஆகியவை பரிமேலழகரின் சிறப்பியல்புகளாகும். தம் காலத்தில் விளங்கிய தமிழ் இலக்கியம் அனைத்தையும் நுணுகி கற்று அவற்றின் கருத்துகளை வடித்தும் கலைப்பண்பு கெழுமத் திருக்குறளை உரை வடிவில் அளித்துள்ள பரிமேலழகரது அருஞ்செயலின் பெருமை அளவிடற்கரிது. வடமொழி தமிழ் ஆகிய இருமொழிகளிலும் அதன் தூய்மைக்கும் உயர்வுக்கும் ஏற்றவாறு தெள்ளிய தமிழில் நல்லுரை கண்டுள்ளார்.”[24] என்று மு.வை அரவிந்தனும் சிறப்பித்திருப்பதை அறிய முடிகிறது. இவ்வாறு பல தமிழ் அறிஞர்களாலும் சிறப்பாகக் போற்றப்படும் உரையாசிரியராகிய பரிமேலழகர் ஒரு சிலரால் மறுக்கப்படுகிறார்.

1.2.12.2..2 மறுப்புக்கான காரணங்கள்

பரிமேலழகர் உரையை மறுப்பதற்குப் பல காரணங்கள் கூறப்பட்டாலும் அவருடைய உரை வடமொழிச் சார்பாக அமைந்துள்ளது என்பது பரவலாக எல்லோராலும் கூறப்படும் குற்றச்சாட்டாகும். “போற்றுதலுக்குரிய உரையாசிரியரான பரிமேலழகர் பலவிடங்களில் திருவள்ளுவருடைய கருத்துக்குப் பொருந்தாத உரைகளையும் சில இடங்களில் திருவள்ளுவருடைய கருத்துக்கு முற்றிலும் விரோதமான உரைகளையும் செய்துவிட்டார்”[25] என்கிறார் நாமக்கல் கவிஞர். இதே கருத்தைத் தெ.பொ.மீ, ரா.பி. சேதுபிள்ளை, வ.உ. சிதம்பரனார், புலவர்.

குழந்தை, தேவநேயப்பாவாணர், மயிலைச் சிவமுத்து போன்றவர்களும் கூறியிருக்கின்றனர் என்பது நினைவில் கொள்ள வேண்டியது. பரிமேலழகர் வடமொழி நூற்படி உரை செய்துள்ளார் என்பதனை மயிலைச் சிவமுத்து பின்வருமாறு குறிப்பிடுகிறார். "பரிமேலழகர் உரை சிறந்ததாக இருந்தாலும் பெரும்பாலும் வடநூல்களை ஆதாரமாக வைத்துக் கொண்டே எழுதியிருக்கிறார் என்பது அறிஞர் பலருக்கு ஒப்ப முடிந்த கொள்கையாகும். வள்ளுவர் இல்லறம், துறவறம் என்னும் இரண்டிலேயே அறத்துப்பாலை அடக்கியிருக்கிறார். பரிமேலழகரோ வடநூல் கொள்கைப்படி பிரம்மச்சரியம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்றெல்லாம் கூறுகின்றார். வள்ளுவர் எந்தக் காலத்துக்கும் எல்லா நாடுகளுக்கும் பொருந்தும்படி எழுதியிருக்கிறார். பரிமேலழகர் உரைக்குப் பின்னரும் பல உரைகள் வெளிவந்த வண்ணமாக இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் பரிமேலழகர் தம்முடைய திருக்குறள் உரையில் வடநூல் கருத்துகளை வலிந்து புகுத்தியிருப்பதால் இந்நூல் வடநூலின் தழுவலோ எனும் எண்ணமும் உருவாகுமாறு செய்துவிட்டார் என்ற பாரதிதாசன் கூறுவதையும் அறிய முடிகிறது. வடமொழி நூல் கருத்துக்களை வலிந்து புகுத்திப் பொருள் தந்திருப்பதால் வள்ளுவத்தை வதைத்து வள்ளுவனாரை வாழவைத்துவிட்டார்"[26] என்கிறார்.

மேலும் "திருக்குறளாசிரியரின் உள்ளத்தை மறைத்து உரையென்ற பெயரால் மற்றவர் (வடமொழியாளரின்) கருத்துகளை முதன்மைப்படுத்திவிட்டார். அவருடைய அழகுத் தமிழிலும் ஆன்ற கருத்துச் செறிவிலும் விளக்க நிறைவிலும் நாம் ஒன்றித் திளைத்திடுவதால் குறட்பாக்களை நுணுகி ஆராய்வதில்லை; அறிய முயற்சிப்பதும் இல்லை. எனவே திருக்குறள் கருத்துகளில் திசை திருப்பம் ஏற்படுகிறது. மெய்ப்பொருள் மறைகிறது. உரை தந்த பொருள் நெஞ்சில் பதிகிறது. படிந்த மாற்றுப்பொருளைப் பின்னர் மாற்றிக் கொள்ள முடிவதில்லை. இறுதியில் திருவள்ளுவர் கருத்துகள் மாறி வேறு கருத்துகள் நிலைத்துவிடுகின்றன."[27] இது போன்ற பல காரணங்கள் பரிமேலழகர் உரைக்கு மறுப்பக்கமாகக் கூறப்பட்டாலும், திருக்குறளின் உண்மைப் பொருளை உலகிற்கு உணர்த்தியவர். காய்த்த மரம் கல்லடிப்படத்தான் செய்யும் எனும் பெரியோர்களின் வாக்கிற்கு இணங்க பல்வேறு

காரணங்கள் இருந்தாலும் இன்றும் பரிமேலழகரின் உரை சிறப்பித்துப் போற்றப்படுவதைக் காணமுடிகிறது.

1.2.12.2.3 மு.வரதராசன்

மு.வ என்று அனைவராலும் அழைக்கப்படுவர். 20ம் நூற்றாண்டின் நன்கு அறியப்பட்ட தமிழ் அறிஞர். இக்கால எளிய பொழிப்புரை வெளியிட்டவர். இவரது 'திருக்குறள் தெளிவுரை' மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. மேலும் திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் போன்ற நூல்கள் இவரின் சிறப்பைப் பறைசாற்றுகின்றன. மு.வ. அவர்கள் இக்கால மக்களின் தேவையைக் கருதி உரைசெய்த சிறப்பு பெற்றவராவார். திருக்குறளுக்கு மேன்மேலும் பல புதிய உரைகள் வெளிவந்து வண்ணமுள்ளது, இருப்பினும் அள்ள அள்ளக் குறையாத தங்கச் சுரங்கமாய்த் திருக்குறளின் கருத்துகள் இன்றைய தேவைக்கு பயனுடையதாய் அமைகின்றது.

1.2.13 திருக்குறள் பதிப்பு

தமிழ் மொழியில் தோன்றியுள்ள பல்லாயிரக்கணக்கான நூல்களுள், திருக்குறளே மிகுதியான பதிப்புகளையும், ஆய்வு நூல்களையும் பெற்றுப் பெருமையுடன் விளங்குகிறது. ஏறத்தாழ ஆயிரம் நூல்களுக்கும் அதிகமாக ஆராயப்பட்டு பதிப்புகள், உரைநூல்கள், மேலும் இதழ்கள் என நாள்தோறும் திருக்குறள் பற்றிய செய்திகள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

"கற்றுணர்ந்த தமிழாசிரியர்கள் இயற்றிய இலக்கண இலக்கியங்களாகிய அரிய நூல்களையெல்லாம் இந்நாட்டில் அச்சிற் பதிக்கும் பயிற்சியின்றிக் கையினால் எழுதிக் கொண்டு வருவதில் எழுத்துகள் குறைந்தும் மிகுந்தும் மாறியும் சொற்கள் திரிந்தும் பொருள் வேறுபட்டும் பாடத்துக்குப் பாடம் ஒவ்வாது பிழைகள் மிகுதியும் உண்டாகின்றதால், அவ்வாறு பிழைகளின்றிச் சுத்தப் பாடமாக நிலைக்கும்படி- அச்சிற் பதித்தலை வழங்குவிப்பதற்கு உத்தேசித்து - நூலாசிரியர்களுள் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் அருளிச்செய்த - அறம் பொருள் இன்பம் என்னும் முப்பாலையும் நுட்பமாக விளங்கவுணர்த்துத் திருக்குறள் மூலப்பாடமும் முனிவர்களருளிச் செய்த நீதி

நூலாகிய நாலடி மூலப்பாடமும் இப்போது அச்சிற் பதிக்கப்பட்டன”[28] என்னும் கருத்திலிருந்து தமிழ் இலக்கியங்கள் அச்சுபெறாதிருந்த நிலைகளினால் ஏற்படும் குறைகளையும் மூலப் பாடங்கள் வேறுபடுவதையும் நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

இவை “அச்சிற் பதிப்பதற்கு முன்னர்த் தென்னாட்டில் பரம்பரை ஆதினங்களிலும் வித்வ சனங்களிடத்ததிலுமுள்ள சுத்தப் பாடங்கள் இலக்கணப் பிழையற ஆராய்ச்சியாளர்கள் குறிப்புகளையும், திருக்குறளின் அனைத்துச் சுவடிகளையும் தொகுத்துப் பார்த்த செய்தியை அறிவிக்கும் முடிவை அறிஞர்களுக்கு அனுப்பிக் கருத்துரை பெற்றதைக் காட்டுகிறது. இத்தகைய உண்மையைப் பெறத் திருப்பாசூர் முத்துசாமிப்பிள்ளை, திருநெல்வேலிச்சீமை அதிகாரி ம.இராமசாமி நாயக்கர் முன்னிலையில், தழைப்பித்த சுத்தப் பாடங்களுடனெழுதி வந்த வரலாறு இந்தப் பொத்தகத்திலெழுதிய தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் அருளச்செய்த திருக்குறள் மூலப்பாடமும்- நாலடியார் மூலப்பாடமும் திருவள்ளுவ மாலையும்- ஆக – மூன்று சுவடியும் வெகு மூலபாடங்காளதற்கு கருவியாக வேண்டும்.”[29] “இது கல்கத்தா தேசிய நூலகத்தில் கிடைக்கும் திருக்குறள் ஓலைச்சுவடி மூலம் இவ்வாறு தெரியவருகிறது. இது பொத்தகம் கலியுகாப்தம் 4900க்கு ஆங்கிரச தொண்டை மண்டலம் சென்னை பட்டினத்தில் தஞ்சை நகரம் மலையப்ப பிள்ளை குமரன் ஞானப்பிரகாசனால் அச்சிற் பதிக்கப்பட்டது.”[30] என்னும் குறிப்பினால் அச்சேறிய திருக்குறளின் முதல் பதிப்பிலும் மூலப்பாடங்களைத் திருத்தி மீண்டும் பதிப்பாசிரியருக்கே அனுப்பித் தீர்மானம் செய்த பதிப்பு வரலாறு தெரியவருகின்றது.

1.2.14.0 திருக்குறளின் சிறப்புகள்

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய இலக்கியமான திருக்குறள் இன்று வாழும் மனிதனுக்கும் நன்னெறிகளைகளையும் நல்வாழ்வினையும் போதிக்கிறது. மனிதன் வாழ்வில் உய்வதற்கு எக்கருத்துகள் வேண்டுமானாலும் கொடுக்கும் ஆற்றல் திருவள்ளுவரின் திருக்குறளுக்கு இருக்கிறது. “திருக்குறளின் உள்ள கிடக்கையைப் பலபடக் கூறலாம். அவற்றுள் உயிர்ப்பால் ஒளிர்வது அஃது உலகம் ஒரு குலம் என்பது பழந்தமிழர் பண்பாட்டினின்றும் முகிழ்ந்த ஒரு பெருங்குறிக்கோள். அக்குறிக்கோள் திருவள்ளுவருள் படிந்து, நின்று, வளர்ந்து சீரிய உலக

நூலாயிற்று. அந்த நூலின் உள்ளுறை நுண்ணியதாய்ப் பேரறிஞர் பலரிடம் புகுந்து பல மொழிகளில் சிறப்புற்று விளங்கியது. இவ்வாறு திருவள்ளுவர் கருத்து பெருகி இந்நாளில் விஞ்ஞானத்தில் விரவி மார்க்கீசியமாகவும் தெய்வீகத்திற் கலந்த காந்தியமும் ஒன்றிய ஒரு கொள்கையே இக்கால உலகை ஒருமை படுத்தும் ஆற்றல் வாய்ந்தது.''[31]

1.2.14.1 திருக்குறள் செந்தமிழ் நூல்

முதற்பா 'அ'கரத்தில் தொடங்கி இறுதிப்பா 'ன'கரத்தில் முடிவதால் இது தமிழ் நூல் என்பதற்கோர் சான்றாகும். இந்நூலின் முதற்குறள் அகர முதல என தொடங்கி, முயங்கப்பெறின்' என முடிகிறது. இவ்விரு குறள்களையும் இணைத்து நோக்கும் போது உயிர்களுக்கு முதல்வன் இறைவன் என்பதும் மக்களின் ஐம்புல இன்பங்களைத் துறந்து வீடுபேறு அடைவது பேரின்பம் என்ற பொதுவான கருத்துகளை நயம்படத் தமிழ்மொழியில் விளக்கியுள்ளது.

1.2.14.2 திருக்குறளைக் கற்பவர் நோக்கம்

திருக்குறளைத் தங்கள் தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளும் ஒரு காலப் பெட்டகம் எனலாம். பலர் பலவகையில் தங்களின் தேவைகளுக்காகக் கற்கிறார்கள் என்பதை மு.வ அவர்கள்,

"அரசியல் அறிவுப்பெறக் கற்போர் சிலர்;

அறநெறி உணரக் கற்போர் சிலர்;

இன்பக் கற்பனைகளில் மகிழக் கற்போர் சிலர்;

திருவள்ளுவரின் அனுபவச் செல்வத்தை நுகரக் கற்பவர் சிலர்;

பழந்தமிழரின் நாகரீகக் கொள்கைகளைத் தெளியக் கற்பவர் சிலர்;

வாழ்வாங்கு வாழும் நெறியை அறியக் கற்பவர் சிலர்;

சொல்திறன் நாடிக் கற்பவர் சிலர்;

பாநலன் போற்றி கற்பவர் சிலர்;

தாம் சொல்வன செய்வன யாவற்றிற்கும் சான்றுகள் காட்டக் கற்பவர் சிலர்;''[32]

என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் பலக்காரணங்களுக்காகவும் தங்களின் வாழ்வை நல்வழிப்படுத்துவதற்காக அள்ளிப் பருகும் அருஞ்சுவை கொண்டதாகத் திருக்குறள் விளங்குகிறது.

1.2.14.3 மாறா உண்மைகள்

திருவள்ளுவர் இன்றைய உலக வாழ்க்கைக்கு என்று எண்ணாமல் காலம் சென்றாலும் உண்மைகள் மாறுவதில்லையென்றும், உயிர்களின் வாழ்க்கைக்குத் தேவையான உண்மைகளைக் கண்டு எழுதியுள்ளார். எனவே பல்வேறு காலகட்டத்திற்கும் பொதுவானவற்றையே இருபத்தியொன்றாம் நூற்றாண்டில் வாழும் நமக்கும் உண்மைகளை உணர்த்தும் 'உறைக்கல்லாய்' திருக்குறள் அமைந்துள்ளது.

1.2.14.4 திருக்குறள் பற்றியக் கருத்துகள்

திருவள்ளுவர் நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற முப்பாலால் ஆக்கப்பட்டது. அறமும், பொருளும், இன்பமும் எந்தவொரு வகுப்பினர்க்கோ, இனத்தாருக்கோ, மதத்தாருக்கோ, நிறத்தாருக்கோ, மொழியாருக்கோ நாட்டாருக்கோ உரியன அல்ல, அது நம் உலகிற்கே படைக்கப்பட்ட பொதுவான நூலாகும். திருக்குறளில் தொடக்கம் முதல் இறுதி வரை உலகு எனும் சொல்லும் பொதுமையாகத் திகழ்கின்றது. திருவள்ளுவர் என்று நாம் நினைவுகூரும் போது அவருடைய கருத்துகள் மனதில் பதிந்து எந்தவிதப் பாகுபாடும் இன்றி அனைத்து உயிர்களுக்கும் பொதுவான ஒரு கருத்தையே உலகிற்கு எடுத்துரைப்பதால் இது 'உலக நூல்' என்று அனைவராலும் போற்றப்படுகிறது. மனிதனை மான்புறச் செய்வது திருக்குறள் என்பதை,

"மாந்தனை மாந்தன் ஆக்குவது திருக்குறள்;
மாந்தனைச் சான்றோன் ஆக்குவது திருக்குறள்;
மாந்தனைத் தெய்வம் ஆக்குவது திருக்குறள்;
மாந்தனை இறைவன் ஆக்குவது திருக்குறள்;
மாந்தனைப் பெயராக் கடவுள் பெருநிலையில்
ஒன்றச் செய்வதும் திருக்குறள்! "[33]

திருக்குறள் தமிழ் மொழியில் பிறந்த உலகப்பொது மறை என்றால் மிகையாகாது. உலகைக் கூறுபடுத்தாமல், உலகையே ஒற்றுமைப்படுத்தும் அருங்குணத்தோடு சிறந்து விளங்குகிறது. இத்தகைய நூலினைக் கற்றறிந்தவர் இவ்வாழ்க்கையில் சிறப்படைகின்றார்கள். 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்பது கணியன் பூங்குன்றனாரின் வியத்தகு வரிகள்

இக்கருத்தையே பழந்தமிழர்கள் தம்கொள்கையாகவே வாழ்ந்தார்கள் என்பது திருக்குறளிலும் மிளிர்கின்றது. மனித இனத்திற்கே ஒரு பொதுமறையைப் படைத்தருளிய திருவள்ளுவரை 'தமிழ்மணி' என்றும் கூறுகின்றனர்.

1.2.14.5 மேனாட்டு அறிஞர்களின் கருத்து

"தமிழ் நூல்களின் மிகவும் சிறந்த நூல்களாக எல்லோராலும் கருதப்படுகின்ற குறளும், சிந்தாமணியும் வடமொழித் தொடர்பு சிறிதும் இல்லாமல் அமைப்பிலும், யாப்பிலும் தனிச்சிறப்பு வாய்ந்துள்ளன"[34] என்று ராபர்ட் கால்டுவெல் குறிப்பிடுகின்றார்.

ஜி. யு. போப் அவர்கள், "நூற்சிறப்பில் அது மற்ற எல்லாத் தமிழ் நூல்களையும் தாழ்த்தித் தான் உயர்ந்து நிற்கிறது, ஒரு நாட்டு மக்களின் உள்ளத்தினுள்ளே உயிரிலே இடங்கொண்டுள்ளப் பெருநூல். அடக்கமுடைமையும், ஈகையுடைமையும், இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யும் சான்றாண்மையான பொறையுடைமையும் அரிஸ்டாடிலால் கூறப்படவில்லை"[35] என்று ஏ. கிராண்ட் கூறுகிறார்.

டாக்டர் கிரௌல் என்பவர் "திருக்குறள் பயக்கும் இன்பம் எத்தகையது என்று எம்மொழி பெயர்ப்பும் எடுத்துக்காட்ட முடியாது உண்மையைக் கூறுமிடத்து வெள்ளிச்சரிகையிலிட்ட பொன் – இலந்தைக்(ஆப்பிள்) கனியாகும்"[36] என்றார்.

1.2.14.6.0 திருக்குறளுக்குப் பிறநாட்டார் செய்துள்ள சிறப்பு

திருக்குறளுக்கு இன்றுவரை பல்வேறு நாடுகளிலும் சிறப்புகள் செய்யப்பட்டு வருவதோடு போற்றிப் பாதுகாக்கின்றனர்.

1.2.14.6.1 உருசிய நாட்டில் திருக்குறள்

"உருசிய நாட்டு கிரெம்ளின் மாளிகையில் அமைந்துள்ள அணுவும் துளைக்க முடியாத சுரங்கமும் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டுள்ள மிகச்சிறந்த நூல்கள் சிலவற்றுள் திருக்குறளும் ஒன்றாகும்"[37]என்று தென்மொழி ஞானப்பண்டிதர் குறிப்பிட்டுள்ளார்.

1.2.14.2 இங்கிலாந்து பேரரசி

விக்டோரியாப் பேரரசி "இங்கிலாந்து நாட்டு காட்சி சாலையில் விவிலிய நூலுக்கு அடுத்தபடியாகத் திருக்குறளை வைத்துப் போற்றி வந்தார். காலையில் கண் விழித்ததும் கற்கும் நூலாகத் திருக்குறளைக் கொண்டிருந்தார்"[38] என்பதிலிருந்து அரசியாரின் அறிவாற்றலையும் திருக்குறளின் சிறப்பினையும் நன்கறியலாம்.

1.2.14.7 திருக்குறள் அச்சு வடிவம் பெற்றது

“பிரிட்டன் அரசாங்கத்தில் சிவில் சர்வீஸ் பரீட்சையில் தேர்ந்து வந்த மிஸ்டர் எல்லீஸ் துரையவர்கள் 1825- ஆம் வருடத்திற்குப் பின் ஓர் தமிழ்ச்சங்கம் சென்னையில் ஏற்படுத்தி அதனை வருத்திச் செய்வதற்குப் பலரிடமிருந்த ஓலைப்பிரதிகளைக் கொண்டுவரச் செய்து நூற்களை அச்சிட்டு பரவச்செய்தார். பின் அதையறிந்த ஜார்ஜ் ஆரிங்டன் துரையின் பட்லர் கந்தப்பன் என்பவர், தன்னிடமிருந்த திருக்குறள் ஓலைப்பிரதி மூலமும் திருவள்ளுவமாலையும், நாலடி நானூறும் கொண்டுபோய்த் துரையிடம் கொடுக்க, அவர் தன்னிடமுள்ள தமிழ் வித்வான் தாண்டவராய முதலியாராலும் மானோஜ் முத்துச்சாமிப் பிள்ளை அவர்களையும் 1831- ஆம் ஆண்டில் ஓலைப்பிரதியிலிருந்து எடுக்கப்பட்ட திருக்குறள் மூலத்தை அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். எல்லீஸ் துரையவர்கள் 1984ம் ஆண்டில் அச்சிட்டு வெளியிட்டுள்ளார்.’’[39] இவ்வாறு அச்சுவடிவம் பெற்றது.

1.2.14.8 திருக்குறளால் தோன்றிய தஞ்சை மகால்

தஞ்சைப் பகுதியை ஆட்சி செய்த சரபோசி மன்னர் ஒருமுறை காசிக்குச் சென்று அங்கிருந்து கல்கத்தாவில் இருந்த அறிஞர்களைக் கண்டு உரையாடிய போது திருக்குறளின் மொழிபெயர்ப்பை ஆங்கிலத்தில் அறிந்தவர். எனவே தமிழ் பகுதியில் ஆட்சி புரியும் மன்னர் என்பதால் அவரின் மூலமாக அறிய விரும்பினார். ஆனால் அதைப்பற்றி அறியாததால் நான் நாடு சென்றதும் அப்புத்தகத்தை அனுப்பி வைக்கிறேன் என்றார். அதன் பின்னர்த் தமிழ் ஓலைச்சுவடிகளைத் தொகுக்க உருவானதே 'தஞ்சை சரஸ்வதி மகால்' இன்று நம்கலைக் கருவூலமாகத் திகழ்கிறது.

1.2.14.9 திருவள்ளுவ மாலையில் தேர்ந்தவை

- **புலவர்**

  புலவர் எனப் புகழப் பெறுவார் வள்ளுவர் ஒருவரே
  - மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர் கிழார்

- **பா**

  பா என்பது வள்ளுவர் வெண்பாவே- கவிசாகரப் பெருந்தேவனார்

- **முப்பால் மொழி**

  எப்பாவலரும் தப்பாமல் ஏற்றுக்கொள்ளும் மொழி ஒன்றே; அது வள்ளுவர் தம் முப்பால் மொழியே. - கல்லாடானார்.

- **ஒப்பிலா இன்பம்**

  வள்ளுவர் உரைத்த முப்பால் மொழி இன்பத்தில் மூழ்குவார். அப்பால் ஒருபாவை ஆராய விரும்பார். - நாகன் தேவனார்.

- **புலமைக்கு அளவுக்கோல்**

  திருக்குறளைத் தெளியக் கற்றவர்க்கு வேறொரு நூல் கற்க வேண்டுவது இன்று. புலமைக்கு அளவுகோல் திருக்குறள் கற்பதே. - நத்தத்தனார்.

- **உள்ளுவார் உள்ளுவன**

  வள்ளுவர் வாய்மொழியில், உள்ளுவார் உள்ளும் பொருளெல்லாம் - செல்லூர் கொடுஞ் செங்கண்ணனார்.

- **சொல்லுதல் வல்லார்**

  சுருங்கிய சொல்லால் பொருள் விளங்கச் செல்லுதல் வல்லார் வள்ளுவர் அல்லால் பிறர் அல்லர். - அரிசில்கிழார்.

- **ஈரடியால் அளந்தார்**

  உலகத்தார் உள்ளத்தில் உள்ளவற்றை எல்லாம் வள்ளுவர் ஈரடியால் அளந்தமை அருமையே காண்.

- **அறிவுசுரப்பி**

  புலமையாளர் ஆயும்தோறும் அறிவு சுரக்குநூல் திருக்குறள்
  - உருத்திரன் கண்ணனார்.

- **இனிமை**

  இனிய திருக்குறள், சிந்திப்பார் சிந்தைக்கு இனியது, கேட்பார் செவிக்கு இனியது, சொல்வார் வாய்க்கு இனியது, வருத்த வந்த வல்வினைக்கு நன்மருந்து. - கவுணியனார்.

- **பொய்யும் மெய்யும்**

  வள்ளுவர் வாய்மொழியால், பொய் பொய்யாகவும், மெய் மெய்யாகவும் விளங்கின. - தேனீக்குடிக் கீரனார்.

- **எளிமையும் அருமையும்**

  வள்ளுவர் வாய்மொழி ஓதற்கு எளிது, உணர்தற்கு அரிது, மறையென்னும் மாண்பினது, நினைத்தோரும் நினைத்தோரும் நெஞ்சம் உருக்குவது. - மாங்குடி மருதனார்.

- **பனித்துளிமேல் பனைமரம்**

  சிறியதொரு புல்லின் நுனியில் தினையின் அளவினும் சிறிதாக உள்ள பனித்துளி, நெடிய பனைமரத்தையும் தன்னிடத்து தெளிவாகக் காட்டும். அதுபோல் குறட்பாவும் மிக விரிந்த பொருளைத் தன்னிடத்து கொண்டுள்ளது. – கபிலர்.

- **வள்ளுவ விளக்கு**

  உலகோர் உள்ளிருள் நீக்கும் விளக்கு திருக்குறளே, அறத்துப்பால் அகல், பொருட்பால் திரி, இன்பத்துப்பால் நெய், செஞ்சொல் தீ, குறட்பா தண்டு, விளக்கு ஏற்றியவர் வள்ளுவர்.

  - நப்பாலத்தனார்.

- **கதிரும் குறளும்**

  செங்கதிரும் திருக்குறளும் ஒப்பானவை; செங்கதிர் உலகிருள் நீக்கும்; தாமரை மலரை மலர்த்தும்; திருக்குறள், உலகோர் உள்ளிருள் நீக்கும், உள்ளத்தாமரை மலரை மலர்த்தும்.
  - குலபதி நாயனார்.

- **கடுகு**

  ஏழு கடல்நீரைத் தன்னுள் அடக்கிக்கொண்டு இருக்கும் சிறு கடுகு போன்றது ஏழுசீர்க்குறட்பா - இடைக்காடனார்.

- **கடல்**

  ஏழுகடல் நீரைத் தன்னுள் அடக்கிக்கொண்டு இருக்கும் அணு அனையது ஏழுசீர்க்குறட்பா - ஔவையார்.

1.3.0 வாழ்வியல் அறங்கள்

உயிர்களுக்குத் துன்பங்களை விளைவிக்கத் தூண்டும் நூல்களும், மனதுள் ஆசைகள் எழக் காரணமான நூல்களும், இவைதவிரப் பிற உணர்வுகளை எழுப்பும் நூல்களும் நிறைந்திருக்கும் இவ்வுலகத்தில் நற்செயல்களை எடுத்துக்கூறி அறத்தினை வளர்ப்பதே நூலின் கடமையாகும். அறம் நிலைபெறவும் மக்களை நல்வழிப்படுத்த வேண்டுமென்பதை,

"மெய்மை பொறையுடைமை மேன்மை தவமடக்கம்
செம்மையொன் றின்மை துறவுடைமை - நன்மை
திறம்பா விரதந் தரித்தலோ டின்ன
அறம்பத்தும் ஆன்ற குணம்"[40]

அறநெறிச்சாரம் கூறுகிறது. இவ்வாறு உண்மை பேசுதல் முதலான நல்லறங்களை கடைபிடிப்பதோடு மேலே கூறப்பட்ட பத்து அறங்களும் ஒருவரை மேன்மையடையச் செய்யும். ஆகவே உடம்பு அழியும் தன்மையுடையது என்பதனால் வாழும்பொழுதே அறம் செய்யவேண்டும்.

1.3.1.0 இல்வாழ்க்கை

இல்வாழ்க்கையானது இல்லாளோடும், பெற்றோர்களுடனும், தம் மக்களுடனும் சேர்ந்து சுகபோக நல்லறத்தோடு வாழுகின்ற வாழ்க்கையாகும். முரண்பட்ட இரவும் பகலும் இணைந்து முழுநாளாவது போல, ஆணும் பெண்ணும் வாழ்நாள் முழுதும் பண்பு, கல்வி, வயது போன்ற அன்புடன் நன்மக்களை ஈன்று அறநெறியில் பொருள் ஈட்டி வாழ வேண்டுமென்பதை,

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறத்ததன் பயனே''[41]

கணவனும் மனைவியும் நன்மக்களைப் பெற்றுச் சுற்றத்தோடு இணைந்து சமுதாயத் தொண்டு செய்வதே இப்பிறவியின் பயனென்று தொல்காப்பியர் கூறுகிறார். குடும்பம் என்ற அமைப்பில் பல்வேறு இன்பத் துன்பங்கள் இருக்கும். நம் தேவைகளுக்காகப் பிறரும் பிறருடைய தேவைகளுக்காக நாமும் விட்டுக்கொடுத்தும் எட்டிப்பறித்தும் மகிழ்ச்சியோடு வாழ்வது. எப்படி வேண்டுமானாலும் வாழலாம்

என்றில்லாமல், இப்படித்தான் வாழவேண்டும் என்ற ஒரு கட்டுப்பாட்டு நெறிகலந்து வாழ்வதே சிறந்த இல்லறமாகும்.

1.3.1.1 இல்லற வாழ்வின் பயன்கள்

இல்வாழ்க்கை என்பது ஒழுக்கநெறி தவறாமலும் பிறர் பழிக்காமலும் அறநெறிகளைப் பின்பற்றி வாழ வேண்டும் என்பதை,

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது தில்லாயின் நன்று"[42]

என்று இக்குறள் விளக்குகிறது. இல்லறம் மேற்கொள்ளாத பிரம்மச்சாரிகள், துறவிகள் பழித்துப் பேசாத வகையில் ஒருவன் வாழ்க்கை அமையுமானால் அவ்வாழ்க்கை அறம் என்று போற்றப்படுகிறது. ஏனெனில் இல்வாழ்க்கை என்பது குறுகிய மனநிலையுடன் பிறர் பழிப்பதற்கு வாய்ப்புகள் அதிகம். ஆகவே பொதுநிலை பாங்கோடு அறத்தன்மையோடு வாழ்பவனை மற்ற அனைவரும் போற்றிப் பூசை செய்வார்கள். இவ்வாறான வாழ்க்கை நடத்துபவன் நேர்மை தவறாமல் துறவறம் பூண்டு தவம் செய்பவர்களைவிடவும் மிகவும் பொறுமையாகவும் சகிப்புத் தன்மையுடனும் காணப்படுவார்கள். எப்படியெனில் அறநெறியில் வாழ்பவர்கள் அனைவரை விடவும் மேலானவன். இவ்வாறான வாழ்வை கடைப்பிடிப்பதைவிட மேலான பயன் வேறொன்றும் இல்லை. இல்லறத்தின் துணைக் கொண்டுதான் துறவறத்தார் வாழ வேண்டியுள்ளதென்பதை,

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை"[43]

என்ற குறளில் துறவிகளுக்கும், பசித்திருக்கும் எவருக்கும், நிலைகெட்டுப் போனவர்களுக்கும் இல்வாழ்வார் துணையாவார்கள். மேலும் அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளாவன, தம் மூதாதையர்களைப் பூசித்தல், தெய்வ வழிபாடு, விருந்தாக வந்திருப்பவர்கள், வீட்டிலுள்ளவர்கள், தன்னை நம்பினவர்கள் என அனைவரையும் கவனித்து, பின்னர்த் தமக்கு வேண்டிய அனைத்தையும் முறையாகச் செய்து கொள்வதே சிறந்த இல்வாழ்வானின் கடமையாகும். அவ்வாறு செய்ய முடியவில்லை என்றாலும் பிறர் பழிக்காதளவு பழிபாவங்களுக்கு அஞ்சி நல்லனவற்றைச் செய்து தீயவற்றை தவிர்த்தல் இல்லானின் கடமை. மேலும்

பகைவர்களைக் குறைத்துக் கொண்டும் சுற்றத்தாரைப் பெருக்கியும், தன் இருவகை சுற்றத்தாரிடமும் அன்பு நீங்காமால் வாழ்வது கணவன் மனைவி இருவருக்கும் உரிய கடமை என்று,

"நட்டாரை யாக்கிப் பகை பணித்து வையெயிற்றுப்
பட்டா ரகல்கு லார்ப்படிந் - தொட்டித்
தொடங்கினா ரில்லாகத் தன்பிற் றுறவா
உடம்பினா னாய பயன்"[44]

என்னும் சிறுபஞ்சமூலப் பாடல் விளக்குகிறது. அதைப்போலவே தமக்கு வேண்டிய தேவைகளைச் சுருக்கிக் கொண்ட எறும்பு, தூக்கணாங்குருவி, ஒட்டகம் போன்றவைகள் தம்முடைய எதிர்காலத் தேவைக்கருதி வாழ்வதைப் போன்று இல்வாழ்வான் செயல்பட வேண்டும்.

1.3.2.0 இனிய வாழ்க்கைத் துணைநலம்

இல்லறத்தை மேற்கொள்பவன் தக்க துணையைப்பெற வேண்டும். இவ்வாழ்க்கை முழுமைபெற வேண்டுமென்றால், அனைவரும் போற்றி மதிக்கத்தக்க வகையில் வாழ்க்கைத்துணை வேண்டுமென்பதற்காக வள்ளுவர் அடுத்த அதிகாரமே 'வாழ்க்கை துணை' என்று வைக்காமல் 'வாழ்க்கைத் துணைநலம்' என்று அமைத்துள்ளார். ஏனெனில் தனிப்பட்ட ஒருவர் செய்வது இல்வாழ்க்கையாகாது என்று உணர்ந்த பெருந்தகை, வாழ்க்கை முழுதும் துணை வேண்டும் என்று தெளிவுபடுத்தியுள்ளார். வாழ்க்கைத்துணையின் மாண்பினை,

"மனைத்தக்க மான்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தாக்காள் வாழ்க்கை துணை"[45]

என்ற குறளை ஒவ்வொரு பெண் மட்டுமன்றி ஆணும் அதன் அடிப்படைத் தத்துவத்தை உணர்ந்து நடந்தால் எந்தவொரு வீட்டிலும் துன்பம் இராது. அதேபோன்று தன்னுடைய கணவனின் வருவாய்க்குத் தகுந்தார் போல் குடும்பம் நடத்தும் வாழ்க்கைத் துணை வேண்டும் என்பதைச் சிறுபஞ்சமூலச் செய்யுளும்,

"வருவாய்க்குத் தக்க, வழக்கு, அறிந்து சுற்றம்
வெருவாமை, வீழ் விருந்து ஓம்பி, திரு ஆக்கும்
தெய்வத்தை எஞ் ஞான்றும் தெற்ற வழிபாடு
செய்வதே பெண்டிர் சிறப்பு"[46]

கணவனின் வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்து சுற்றத்தாரை அழைத்து விருந்தோம்பி, தெய்வ வழிபாடு செய்து, மனத்தக்க மாண்புகளை பெற்றிருந்தால் துன்பப்பட வேண்டியதில்லை. மனைத்தக்க மாண்பு என்பதில் அனைத்து குணநலன்களும் அடங்கியுள்ளது. அவளின்றி அவனுக்கு வாழ்க்கையே இல்லை என்று கூறும் பண்புடைய பெண்கள் தியாக மனப்பான்மையுடன் இன்றும் பலர் வாழ்கிறார்கள் இத்தகைய அரும் குணவதிகளை மணந்து கொண்டவர்கள் பாக்கியசாலிகள்.

இவ்வாறான மனைமாட்சியுடைய பெண் ஒரு குடும்பத்தில் அமையாவிட்டால் எத்தகையச் சிறப்பான செல்வம் பெற்றிருந்தாலும் பயனில்லை என்றே கூறலாம். ஒரு பெண் எத்தகைய பெரிய பதவியில் இருந்தாலும் முதலில் தன்னிலையை உணர்ந்து குடும்ப்பப் பண்போடு மாறாத எண்ணத்துடன் வாழும் போதுதான், பெண்மையானது தாய்மையாக மலர்ந்து அனைவரிடமும் மதிப்படையச் செய்வதோடு பெண்மையானது வணங்கச் செய்யும் ஒரு உன்னத உணர்வினை சமூகத்தில் ஏற்படுத்துகிறது.

இல்லறத்திற்கு மனைமாட்சி என்பது தேவையான ஒன்றாகும். நல்ல பண்புடையவளை மனைவியாகப் பெற வில்லையென்றால் அவனது வாழ்க்கை உண்மையில் இருண்டு போகும். நல்ல இல்லாள் வாய்க்கப் பெற்றதால் தான் புலவர் பிசிராந்தையார் தன் தலைமுடி நரையாததற்கு காரணம் எனக்கூறினார். அவள் எத்தகைய செல்வங்களையும் கொண்டுவர வில்லை என்றாலும், சிறந்த பண்போடு திகழ்ந்தால் குடும்பம் மகிழ்ச்சியுரும். பெண்ணின் பெருமைபற்றி கூறும்போது வள்ளுவர் 'பெண்ணின் பெருந்தக்க யாவுள' என்ற வினாவினை எழுப்பி 'கற்பு என்னும் திண்மை உண்டாக்கப்பெறின்' என்று கூறியுள்ளார். கற்பென்பது சாதாரணமானது அன்று, அது திண்மையானது, உறுதியானது என்று வலியுறுத்திக் கூறியுள்ளார். 'திண்மை' என்பது எந்த நிலையிலும் மனம் கலங்காத உறுதி வேண்டும். இந்த உறுதிதான் அவளை உயர்த்திக் காட்டுமென்பதனை,

"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்"[47]

என்று இக்குறளில் பெண்ணின் மனவுறுதித் தன்மையினைப் பறைசாற்றுகிறது.

1.3.2.1 பெண்மையும் அரணும்

பெண்ணானவள் குடும்பத்திற்குச் சிறந்த அரணாக விளங்கக் கூடியவள். எந்த ஒரு செயலையும் அவள் கையாளும் திறன் முற்றிலும் மாறுபட்டது. குடும்பம், சமூகம் போன்ற அனைத்துச் சூழல்களையும் தன்னகத்தே கொண்டவள். இதனை வள்ளுவர்,

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற

சொற்காத்துத் சோர்விலாள் பெண் "[48]

மேற்கண்ட குறளில் 'தற்காத்துத்' என்று கூறுவதன் மூலம் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும் என்கிறார். தனக்குரிய பருவங்களில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகளையும், உயர் பண்பாடுகளைப் போற்றிப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். ஒரு பெண்ணிடம் 'நீ கற்புடையவளாக விளங்க வேண்டும்' என்று கடிந்து உரைப்பதன் மூலமோ அல்லது அவளுக்குக் காவல் வைத்துக் கற்புநெறி தவறாமல் வாழ்கிறாளா? என்று பார்த்துக் கொள்வதன்று, அது அவளாகவே உணர்ந்து போற்றப்படக்கூடிய தற்க்காப்புநெறியாகும். பாதுகாவல் வைத்து ஒரு பெண்ணைக் காக்க முடியாதென்பதை,

"சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்

நிறைகாக்கும் காப்பே தலை"[49]

என்ற குறள் மூலம் வள்ளுவர் சிறப்பாகக் கையாண்டுள்ளார். கொலையும் செய்வாள் பத்தினி இத்தகைய பண்புகள் இன்று ஒருசிலரிடம் மாறி வருவதனால் தான் சமூகத்திலும், குடும்பத்திலும் பல்வேறுபட்ட சிக்கல்கள் ஏற்படுவதை நாம் கண்கூடாகப் பார்க்கவும், கேட்கவும் முடிகிறது. ஆகவே தன் குடும்பத்திற்குத் தியாக உணர்வோடு செயல்படும் அவர்களின் உணர்வுகளுக்கும் மதிப்பளித்து வந்தால் இல்லறமானது சிறக்கும். விட்டுக்கொடுப்பதால் கெட்டுப்போவதில்லை, கெட்டுப்போகும் எண்ணம் உடையவர்கள் விட்டுக்கொடுப்பதுமில்லை. எனவே தன்னுடைய வாழ்க்கை முழுவதும் பயணிக்கும் இருவரும் புரிந்துகொண்டு வாழ்ந்தால் அதற்கான பயனாக நன்மக்கட்பேறு உண்டாகும்.

1.3.3.0 மக்கட்பேறு

அரிது அரிது மானிடர் ஆதல் அரிது என்று ஔவை கூறுகிறார். எனவே இப்பிறவியில் சிறப்பாகப் போற்றப்படுவது மக்கட்பேறே என்பதனை வள்ளுவர்,

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்

நன்கலம் நன்மக்கட் பேறு"[50]

என்ற குறளின் மூலம் விளக்கியுள்ளார். எத்தகைய செல்வ வளம் பெற்றிருந்தாலும் ஒரு குடும்பத்தில் நன்மக்கட்பேறு என்பது நல்ல அன்புடைய பெற்றோர்களின் பண்பட்ட வாழ்வினால் தான் முடியும். நாம் பெறக்கூடிய அரியச் செல்வங்களில் சிறந்த செல்வமாக மக்கட்பேறு போற்றப்படுகிறது. அறிவறிந்த மக்களைப் பெற்று அறிய வேண்டுவனவற்றை எல்லாம் அறிந்த நன்மக்களைப் பெறவேண்டுமென்பதனை,

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த

மக்கட்பே றல்ல பிற"[51]

இக்குறள் மூலம் நல்லறிவும் பண்பும் நிறைந்த பிள்ளைகளை யாரும் பழித்துக் கூற முடியாது. இத்தகைய நற்பண்புகளைக் கொண்ட குழந்தைகளைப் பெற்றால் ஏழு பிறவிகளிலும் துன்பங்களை அப்பெற்றோர்கள் அடைய மாட்டார்கள். ஆக, நல்ல பிள்ளைகளை உருவாக்குவது பெற்றோரின் கடமை என்பதனை,

"ஈன்றுபுறம் தருதல் என் தலைக்கடனே

சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே"[52]

என்ற புறநானூறு பாடலில் தன் மகனைக் கற்றறிந்தோர் அவைதனிலே முந்தியிருக்கச் செய்யவேண்டியது ஒரு தந்தையின் கடமையாகும். மேலும் அவனிடம் தலைசிறந்த பண்பான ஒழுக்கம் என்னும் பண்பில்லையேல் அந்த மகன் ஊனமுற்ற குழந்தையைப் போன்றவன் ஆவான். மலர்கள் அனைத்தும் பார்ப்பதற்கு மிகவும் அழகாகத்தான் இருக்கும். ஆனால் எந்த மலரில் வாசம் உண்டோ அதைத்தான் அனைவரும் விரும்புவார்கள். காகிதப்பூவும் மலர்ந்துதான் இருக்கிறது, மல்லிகைப்பூவும் பூக்கத்தான் செய்கிறது. ஆனால் வருபவர்களை வரவேற்கும் மணம் மல்லிகைக்குத்தான் உண்டு. அதைப்போலத் தேனீக்களைத் தன் பக்கம் ஈர்க்கும் மகரந்தப்பண்பு ஒருசில மலர்களிடம் தான் உண்டு. எனவே குழந்தைகளை பெருவது

என்பது புகழைப் பெறுவதற்காக இருந்தாலும், அது நல்லொழுக்கமுள்ள குழந்தைகளைப் பெற்றவன் தான் நல்ல புகழை அடைய முடியும்.

1.3.3.1 மக்கட் செல்வமும் இன்பமும்

தன்னிடம் உள்ள அனைத்துப் பொருட்களும் ஒருநாள் தீர்ந்து போகலாம். நாகரீக வசதி இல்லாது வறுமையும், இல்லாமையும் இருந்த அக்காலத்திலும் நன்மக்கள் செல்வத்துடன் மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ்ந்தார்கள் என்பதை 'தம் பொருள் என்பதாம் மக்கள்' என்று மக்கட் செல்வத்தையே பெரிதாக எண்ணினார்கள். அச்சின்னஞ்சிறு குழந்தைகளுடன் கொஞ்சிப்பேசி மழலைச்சொல் கேட்டு, அவர்களுக்கு உணவளிக்கபடும் சிரமத்தையெல்லாம் பேரின்பமாக அனுபவித்து அவர்களின் இன்முகத்தைப் பார்த்து ரசிப்பதற்கு ஈடு இணையில்லை என்பதை,

"உடைப்பெருஞ் செல்வராயினும் இடைப்படக்
குருகுரு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசின் மெய்ப்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லை தாம்வாழ் நாளே"[53]

எனும் புறநானூற்று வரிகளில் பாண்டியன் அறிவுடை நம்பி மக்கட் செல்வத்தைப் பெருஞ்செல்வமாகக் கருதிப் பாடியிருப்பது நோக்கத்தக்கது. தம் சின்னஞ்சிறார்கள் சிந்தி மகிழும் மழலை மொழியும், பால் போன்ற வெண்ணிறச் சிரிப்பும் என்றுமே நம் நெஞ்சத்தை விட்டு நீங்காத ஒன்று. இவை அனைத்தையும் நன்கு அனுபவித்து ரசிக்காதவர்கள் தான் மற்ற இசைகளைத் தேடி அலைவார்கள் என்பதனை,

"குழலினிதி யாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளாத் தவர்"[54]

என்ற குறளின் வாயிலாக வள்ளுவர் தெளிந்த நீரோடை போன்று விளக்கியுள்ளார். எவ்வளவு முறை கேட்டாலும் இன்பம் தரும் திகட்டாத மழலைகளின் பேச்சொலி. பாற்கடலைக் கடைந்தெடுத்த பொழுது கிடைத்த அமிழ்தம் போன்றது. அமிழ்தத்தை நாம் கண்டதும் இல்லை உண்டதும் இல்லை. ஆனால் வள்ளுவப் பெருந்தகை நம் குழந்தைகள் கைகளால் அளாவப்பெற்ற உணவினையே அமுதம் என்கிறார். இத்தகைய

இன்பமெல்லாம் உண்டு உயிர்த்து கண்டு இரசிப்பவள் தாய் தான் என்றால் அது மிகையாகாது. அவ்வாறு வளர்ந்த தம் மக்கள் நல்ல சான்றோன் என்ற உயர்ந்த நிலையினை அடைந்தால் முதலில் மகிழ்பவள் பெற்றெடுத்த தாய் தான் என்பதை,

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"[55]

என்ற குறளில் விளக்கியுள்ளார். ஒரு தாய்க்குப் பிரசவம் என்பது மறுபிறப்பு. அப்படிப்பட்ட துன்பத்தையும் ஒரு நொடியில் குழந்தையின் அழுகைக் குரலானது மறைத்துவிடும். ஆகவே அதைவிட இன்பம் பிறர் தம்மகனை புகழும் போது அடைகிறாள்.

1.3.3.2 சமுதாயமும் மக்கட்பேறும்

இந்த மண்ணில் பிறக்கும் அனைத்துக் குழந்தையும் பெரும்பாலும் கள்ளம்கபடமற்ற நல்லக்குழந்தைகள் தான், தீயக்குழந்தைகள் எனப் பிறப்பதில்லை. ஆனால் அவர்களின் வளர்ப்பு முறை, சமூகச் சூழ்நிலை, வாழ்க்கை முறையினைத் தீர்மானிக்கின்றது. சாதனை படைக்கும் குழந்தைகள் ஒருபுறம், சாக்கடையில் புரளும் குழந்தைகள் மறுபுறம் என இச்சமூகத்தில் இருக்கின்றார்கள். நல்லவர்கள் வாழும் சமூதாயத்தில் தீயவர்களும் வாழ்கிறார்கள். மக்கட் செல்வம் என்பது கிடைத்தற்கரிய பேறு. அவையின்றி அல்லல்படும் பெரும் செல்வர்கள் ஒருபுறம், வறுமையின் பிடியால் குழந்தைகளைக் காப்பகத்தில் அடைக்கும் தாய்மார்கள் மறுபுறம். அரசு எத்தகைய முயற்சிகள் எடுத்தாலும் அவரவரின் அறியாமையினால் ஒரு பிஞ்சுக்குழந்தையின் வாழ்க்கையை நஞ்சாக மாற்றும் பெற்றோர்களின் அறிவின்மையால் குழந்தைகளின் வாழ்க்கையே திசைமாறி சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுகின்றனர். இத்தகைய குடும்பச்சூழல் உள்ளவர்கள் குழந்தைகளைப் பெறாமல் இருப்பது சிறந்தது என்பதை,

"அறிவற்றல் பிள்ளைகளைப் பெறல் இன்னா"[56]

என்ற இன்னாநாற்பது வரி நமக்கு மெய்ப்பித்துச் செல்கிறது. மேலும் நற்குணமுடைய குழந்தைகளைப் பெற என்ன தவம் செய்தார்களோ என்று மற்றவர்கள் எண்ணும் அளவிற்கு நற்பண்புகளோடு இருப்பது தான் பெற்றோருக்கு குழந்தைகள் செய்யும் பேருதவி என்பதை,

‘‘மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை

என்நோற்றான் கொல்லெனும் சொல்’’[57]

என்ற குறளில் வள்ளுவப்பெருமான் நயம்படச் செப்பியுள்ளார். இத்தகைய செல்வங்களுடன் விருந்தோம்பல் பண்பினைப் போற்றவேண்டும்.

1.3.4.0 விருந்தோம்பல்

சங்கத் தமிழ் இலக்கியங்கள் காதல், வீரம், கொடையை மட்டுமன்றி இல்லறத்திற்குரிய அறங்களுள் ஒன்றாக விருந்தோம்பலைச் சிறப்பித்தனர். விருந்து என்ற சொல் புதுமையைக் குறிக்கும் என்பதனை,

‘‘விருந்தே தானும்

புதுவது புனைந்த யாப்பின் மேற்றே’’[58]

என்று தொல்காப்பியரும். மேலும் விருந்தோம்பல் பற்றி பாரதிதாசனும்,

‘’பொன்துலங்கு மேனி

புதுமெருகு கொள்ள மேனி
அன்றலர்ந்த செஞ்சதா
மரையாக- நன்றே வரவேற்பாள்’’[59]

என்று குடும்ப விளக்கில் கூறியுள்ளார். தம் இல்லத்திற்கு வரும் நபர்களை உபசரிப்பதோடு அவர்களின் மனம் வருந்தாத அளவு செயல்பட வேண்டும். தமக்கு இல்லையென்றாலும் வந்தவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதனை,

"எல்லோருக்கும் இல்லையென்று கொடுமதி"[60]

என்று பெருஞ்சித்திரனார் எனும் புலவர் குமணனிடம் பாடிப்பரிசில் பெற்ற பொருட்களை அனைவருக்கும் கொடுத்து உதவுமாறு தன் மனைவியிடம் கூறினார். விருந்தினர் அல்லாமல் தாம் மட்டும் உண்ணுதல் மிகவும் வெறுக்கத்தக்க ஒன்றாகும். தன்னை நம்பி வந்தவர்களைப் பாதுகாத்து போற்றி வந்தால் தன்னுடைய செல்வமானது பெருகும் என்பதனை,

"வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி

மிச்சில் மிசைவான் புலம்’’[61]

என்ற குறளில் விருந்தினர் உண்டபின் தாம் உண்பவர்களின் நிலத்தில் விதைகளை இடாமலே நல்ல விளைச்சல் பெருகும் என்று வள்ளுவர் போற்றியுள்ளார். மேலும் வந்த விருந்தினரைப் போற்றி, வரும் விருந்தினரை எதிர்பார்த்துக் காத்திருப்பவர் தேவர்களுக்கு நல்ல

விருந்தினர்களாக அமைவார்கள். ஆகவே, விருந்தினர்களை எவ்வாறு உபசரிக்க வேண்டும் என்பதை,

"முறுவ லினிதுரை கானீர் மனைபாய்
கிடக்கையோ டிவ்வைந்து யென்ப தலைச்சென்றார்
கூணொடு செய்யுச் சிறப்பு"[62]

என்ற பாடலில் ஆசாரக்கோவை சுட்டிக்காட்டுகிறது. விருந்தினரைத் தக்கவாறு அனுசரிக்கவில்லையென்றால் அவருடைய முகமும் வாடிவிடும் என்பதைச் வள்ளுவர்,

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"[63]

என்ற குறளில் அனிச்சம் மலரானது முகர்ந்தவுடன் வாடிப்போவதைப்போலத் தம்மை நாடிய விருந்தினரைக் கண்டவுடன் நமது முகமானது சுருங்கினால் அதனைப் பார்த்தவுடன் விருந்தினரின் மனமானது நொடிந்துவிடும். ஆகவே விருந்தாற்றுவது சிறந்த அறம் என்று அனைத்து நூல்களும் வலியுறுத்திக் கூறுகின்றது. விருந்திட முடியாமல் சிலப்பதிகாரத்தில் கண்ணகி படும் துயரை,

"அறவோர் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் கொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"[64]

என்ற செய்யுளில் அவள் எத்தகைய துன்பத்தை அடைந்தாள் என்பதை உணர்த்துகிறது. விருந்தென்பது அவரவர் அளிக்கும் உணவையன்றி அங்குச் சூழ்ந்திருக்கும் அன்பைப் பொறுத்ததே என்பதை,

"உண்டி கழகு விருந்தோ டுண்டல் "[65]

என்ற வெற்றி வேட்கை பாடலில் உறவினர்களோடு சேர்ந்து உண்ணும் பழக்கம் பழங்காலம் தொட்டே நம் கலாச்சாரத்தில் வந்துள்ளது. இவற்றின் மூலம் அன்பானது அனைவரிடமும் பெருகியது.

1.3.5.0 அன்புடைமை

அன்பென்பது மற்றவர் மனதினில் ஊடுருவி பார்த்து உள்ளத்தில் எழுகின்ற உணர்வாகும். அது வெறும் மனவுணர்ச்சி (EMOTION) அல்ல, நம் உள்ளத்தின் அமைப்பு (sentiment) மனதில் உண்டாகும் ஓர் உன்னதமான உணர்வு. தன்னைச் சார்ந்தோர் மட்டுமன்றித்

தொடர்பற்றவரிடத்தும் ஊடுருவுவது அன்பு. சுருக்கமாகக் கூறி 'நான்' என்ற சுயநல வட்டத்தைக் கடந்து மற்றவர் நலம் நாடுகிற பொதுநலப் பாங்கிற்கு வழிவகுக்கும் நிலை, என்பதை வள்ளுவர்,

"அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையர்

என்பும் உரியர் பிறர்க்கு"[66]

என்ற குறளில் அன்பிற்கு ஆதாரம் தன்னலமில்லாமல் பிறர்கு கொடுத்து உதவும் பண்பினால் அன்பானது பரிணமிக்கப்படுகிறது என்று கூறியுள்ளார். தலைவனும் தலைவியும் சந்தித்த போது காதல் தோன்றுகிறது இவருடைய தாய், தந்தையரிடையே எவ்விதத் தொடர்பட்டு இருப்பினும் செம்மண் நிலத்தோடு சேர்ந்த தண்ணீர்போல இருவருடைய அன்பும் பரிமாறிக் கொண்டன என்பதை,

"செம்புலப் பெயல்நீர் போல

அன்புடை நெஞ்சம் தான் கலந்தனவே"[67]

என்னும் குறுந்தொகை பாடல் விளக்குகிறது. மேலும் தலைவன் தன்மீது தான் கொண்டுள்ள அன்பு எத்தகையது என்பதை,

"நிலத்தினும் பெரிதே, வானினும் உயர்ந்தன்று

நீரினும் ஆரளவின்றே"[68]

என்னும் குறுந்தொகை வரிகளில் தலைவி காட்டும் அன்பின் தன்மை பதிவாகியுள்ளது.

1.3.5.1 அன்பு அறத்திற்குச் சார்பு

அன்பு என்பது உயிருள்ளவைகளுக்கு மட்டுமன்றி உயிரற்ற பொருள்களிடத்தும் விரவிக்காணக்படுகிறது. இங்குப் பணமோ பொருளோ முக்கியமல்ல, மற்ற உயிர்களின் மீதான அன்பின் வெளிப்பாடு கண்ணீராகும். நாம் அன்பு வைத்துப் போற்றும் ஏதேனும் ஒரு பொருளோ அல்லது நபரோ சிதைவடைந்தால் தன்னையறியாமல் கண்ணீர் விடுகின்றோம். இதனைதான் வள்ளுவர்,

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்

புன்கண்ணீர் பூசல் தரும்"[69]

என்ற குறள் மூலம் மெய்ப்பித்துக் காட்டியுள்ளார். அன்பு என்பது வரையறையுடன் இருக்குமானால் மிக்க மகிழ்ச்சியைத் தரும். அதுவே திசை மாறும் போது பல சிக்கல்களை ஏற்படுகிறது. அன்பென்பது பல்வேறு பரிணாமங்களோடு மனிதன் இறைவனிடமும், தலைவன்

தலைவியிடமும், பெற்றோர்கள் குழந்தைகள், உறவினர்கள் மற்றும் அனைத்து உயிர்களிடமும் அன்பானது நிறைந்து காணப்படுகிறது. அன்பு என்ற ஒற்றைச் சொல் தான் உலகின் பல்வேறு பகுதிகளிலும் பரவிக் கிடக்கிறது. எங்கேனும் ஏதேனும் இயற்கைப் பேரிடர் ஏற்பட்டால் நமக்கு ஏற்பட்டதைப் போன்ற உணர்வைத் தருகிறது. அவர்களுக்காகக் கண்ணீர் சிந்தும் அளவிற்கு அன்பென்ற சொல்லின் பொருள் ஆழமானதாக அவர்களுக்காக உடலாலும் உள்ளத்தாலும் உதவி செய்து பிறருடைய துன்பங்களைக் களைகின்றனர். அன்பின் வெளிப்பாடே உதவியாக மாறுகின்ற போது, பொருட்களாகவும் உழைப்பாகவும் பிறர் துன்பங்களைப் போக்குகின்றது.

ஒரு மனிதன் எத்தகைய சிறப்புகளைப் பெற்றிருந்தாலும் மற்றவரின் அன்பைப் பெறவில்லை எனில் சிறப்படைய முடியாது. மேலும் அன்பே அறம் செய்வதற்கு ஆதாரமாக அமைவதோடு தீமைகள் வராமல் இருப்பதற்கும் காரணமாக அமைகின்றது. மனிதர்களுக்கு மட்டுமன்றி மற்ற உயிர்களிடத்தும் நாம் எப்படி அன்பினை வெளிப்படுத்துகிறோம் என்பதை,

"பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாது உண் பறவை போதுறல் அஞ்சி"[70]

மேற்கண்ட செய்யுள் வரியில், பூத்த சோலைகளில் தம் துணையோடு தேனில் திளைத்து மகிழும் வண்டினங்கள் தேரின் மணியோசை கேட்டுப் பயந்து களைந்து சென்றுவிடுமோ என்றஞ்சி தலைவன் மெதுவாக வருவதாய்த் தோழி தலைவியை ஆற்றுப்படுத்துகிறாள். தலைவன் எவ்வுயிர்க்கும் தன்னால் துன்பம் நேர்ந்துவிடக்கூடாது என்ற உயர்ந்த பண்பினைக் கொண்டவனாக விளங்குகிறான் என்பதனை மாங்குடி மருதனார் இக்காட்சியின் மூலம் விளக்குகிறார். ஆகவே அன்பு ஒருவனுக்கு இல்லையென்றால் எலும்பும் தோலும் கொண்டு போர்த்தப்பட்ட வெற்று உடம்பாகத்தான் இருக்கும் என்று,

"புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு"[71]

வள்ளுவர் இக்குறளில் விளக்கியுள்ளார். அன்பு தருகின்ற உணர்வுகள் மனதில் அழியாத சித்திரங்களாய்த் தேக்கி வைக்கப்படுகின்றது. வள்ளுவர்,

"அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து

இன்புற்றார் எய்துஞ் சிறப்பு"[72]

இக்குறளின் மூலம் அன்பானது இவ்வுலகில் சிறப்பைத் தருவதைப் போலப் பொய்மை தராது. பொய்மையால் கிடைக்கின்ற சிறப்பு அற்பநேரத்தில் மறைந்து விடுகிறது.

1.3.6.0 பண்புடைமை

ஒரு மனிதனை மாண்புறச் செய்வது பண்பு, பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல் என்கிறது கலித்தொகை. பரிபெருமாளும், "யாவர் மாட்டும் அவரொடு ஒத்த அன்பினராய்க் கலந்து ஒழுகுதலும் அவரவர் வருத்ததற்கு வருந்துதலும், பகுத்துண்டலும் பழி நாணலும் முதலிய நற்குணங்கள்"[73] என்று விளக்குகிறார். பண்புடைமையின் அடிப்படையாக,

"நயனும் நண்பும் நாணும் நன்குடைமையும்

பயனும் பண்பும் பாடறிந் தொழுகலும்

நும்மினும் உடையேன் மன்னே"[74]

என்று நற்றிணை பாடல் பண்பினைப் பற்றி விளக்குகிறது. பெரியவர், சிறியவர் செல்வம் உடையவர், இல்லாதவர், பதவியில் இருப்பவர் என்று பாராது எல்லோரிடமும் சம உணர்வுடன் எளிமையாகப் பழகுபவர்கள் பண்புடையோர். ஒரு மனிதன் மற்றவர்களுக்கு நன்மைகளைச் செய்பவர்களையே நல்ல பண்பாளர்கள் என்கின்றனர். அவர் செய்யும் செயலைப் பொருத்தே அவருடைய குணநலன்கள் தீர்மானிக்கப்படுகிறது என்பதனை,

"எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்

பண்புடைமை என்னும் வழக்கு"[75]

இக்குறள் விளக்குகிறது. அன்புடையவன் நற்பண்புகளைப் பெற்றிருப்பதால் சிறப்படைகிறான். இல்லையேல் எவ்வளவு பெரிய அறிவாளியாக இருந்தாலும் அவனிடம் மனிதனுக்குரிய பண்பு நலன்கள் இல்லாமல் போகுமானால் மரத்திற்கு ஒப்பாவான் என்பதை,

"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்

மக்கட்பண்பு இல்லாத் தவர்"[76]

இக்குறள் வலியுறுத்துகிறது. மனிதன் தன்னுடைய உடல் பாகங்கள் கை, கால் போன்ற அனைத்து உறுப்புகளை பெற்றிருப்பதோடு நல்ல

குணநலன்களையும் பெற்றிருக்க வேண்டும். மேலும் அனைவரிடத்திலும் இரக்கமாகவும், மகிழ்ச்சியாகவும் மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனத்துடன் இருப்பவரின் பண்பு நலன்களையே இந்த உலகம் பாராட்டுகின்றது. மற்றவர்களிடம் உள்ள குறைகளையும் இல்லாமையையும் எண்ணி வருந்துவதோடு ஒருபடி சென்று தனக்கு ஏற்பட்டது போல எண்ணுவார்கள். என்பதனை,

"தான் அறிந்த இரகசியத்தை மற்றவரிடம் பறையடிக்காமை"[77]

என்னும் நீதிவெண்பா தாம் அறிந்த இரகசியத்தை மற்றவர்களிடம் கூற மாட்டார்கள். நல்ல பண்புடைய மனிதர்களைக் காலம் கடந்தாலும் போற்றுவதோடு பண்பற்றவர்களை தூற்றுவதோடு அவர்கள் தன்னுடைய நண்பர்களிடத்தும் உண்மையற்றவர்களாகவே விளங்குவார்கள். நல்ல பண்புள்ளவர் மற்றவரைப் புண்படுத்தி மகிழ்ச்சியடைய மாட்டார்கள். தமக்குத் தீங்கு செய்பவர்களிடத்தும் அப்பண்பு மாறாமல் இருப்பார்கள் என்பதனை,

"நகையுள்ளும் இன்னாது நிகழ்ந்து பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு"[78]

எனும்குறள் விளக்குகிறது. இச்சமூகத்தில் நட்பு பாராட்டுவது மிகவும் அவசியமாகும். ஏனெனில் 'தனி மரம் தோப்பாகாது' என்பதற்கிணங்க அனைவரிடமும் ஒற்றுமையோடு பழகுவதோடு, நமக்குத் தீமைகள் செய்பவர்களுக்கும் நன்மைச் செய்வதே சிறந்த பண்பாகும். மற்றவர்களுடன் இணக்கமாக வாழத்தெரியாதவர்கள் வெறுத்து ஒதுக்கப்படுவார்கள். அவ்வாறு வாழ்பவனுக்குப் பகலும் இரவாகக் காட்சியளிப்பதோடு இப்பண்பு கெட்டவனிடம் மிகுந்த செல்வம், புகழ், அதிகாரம் போன்றவை இருந்தாலும், அதனால் எந்தப் பயனுமில்லாமல் அவையனைத்தும் ஒருநாள் கை நழுவி மற்றவரிடம் சென்றுவிடும். எவ்வளவு தூய்மையான பாலாக இருந்தாலும் ஒரு துளி விஷம் சேர்ந்ததும் அப்பால் கெட்டுவிடுவது போல, அவர்களிடம் உள்ள அனைத்தும் ஏதோ ஒரு குற்றத்தால் கெட்டுப்போகும் என்பதனை,

"பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று"[79]

என்ற குறள் நமக்குத் தெளிய வைக்கிறது. அப்பண்பானது அவரையும் அவனைச் சார்ந்தவர்களையும் அழித்தொழித்தொழிப்பதை அரசன்

ஆண்டியாவதும் ஆண்டி அரசனாவதும் நிகழகிறது. எனவே பண்புடைமை இருந்தால் வாழ்க்கை இனிக்கும் இல்லையேல் வாழ்க்கை கசக்கும்.

1.3.7.0 சொல்வன்மை

காடுகளிலும், மலைகளிலும் நாடோடிகளாக வாழ்ந்த மனித இனம் இன்று பல்வேறு பரிணாமங்களைப் பெற்று நவ நாகரிகத்தோடு வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். மொழியானது சைகை மொழி, ஓவிய மொழி என வளர்ச்சிப் பாதையிலும் சென்று கொண்டுள்ளது. மொழியானது நம்முடைய கருத்துகளை மற்றவர்களுக்கு எடுத்துரைக்கும் கருவியாகப் பயன்படுகிறது. நம் நாவில் இருந்து பிறக்கும் சொற்களே ஒருவனின் முழு ஆளுமையினைத் தீர்மானிக்கிறது. எனவே அவனுக்கு அதைவிட மிக உயர்ந்த செல்வம் இருக்கவே முடியாது. நமக்கு ஏற்படும் நன்மையையும், தீமையையும் பிறரால் ஏற்படுவது என்று நினைக்கும் நாம், அவையனைத்திற்கும் நாம்தான் காரணம் என்பதை உணர மறுக்கிறோம். பகைவர்களையும் நண்பர்களாக மாற்றும் சொல்வன்மையோடு, சொல்ல வேண்டிய கருத்தைத் தெளிவாகவும் அதனால் உண்டாகும் நன்மைத் தீமைகளை ஆராய்ந்து கையாள வேண்டும் என்பதை,

"சொல்லுகச் சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து"[80]

என்ற குறளில் வள்ளுவர் தெளிவுபடுத்துகிறார். மற்றவர்களின் கருத்துகளைவிட தெளிவான சொற்களைக் கொண்டு அனைவரையும் ஏற்கும் வண்ணம் கூறுவதோடு, சொல்ல வேண்டியதை இடையே மறந்து தடுமாறாதவனாகவும், எதிர் வாதத்திற்கு அஞ்சாதவனாகவும், சபையில் குற்றமற்ற வார்த்தைகளையும், தம் கருத்துகளை சுருங்க உரைக்கத் தெரியாதவர்கள் மலர்கள் மலர்ந்தும் வாசனையில்லாத மலருக்கே சமமாவார்கள்.

1.3.7.1 வாய்மை

இன்றைய நிலையில் உண்மை, வாய்மை, மெய்மை ஆகிய மூன்று சொற்களும் ஏறத்தாழ ஒரே பொருளை உணர்த்துகிறது. அதன் நுட்பத்தை உணர்ந்தவர்கள் 'உண்மை' என்பது 'உள்ளத்தில் தோன்றுவது' என்றும், வாயிலிருந்து பிறக்கும் சொல்லின் தூய்மை 'வாய்மை' என்றும், மெய்மை

என்பதற்கு நாம் செய்யும் செயல்களின் ஒளிவு மறைவு அற்ற தன்மையினைக் குறிப்பிடுகின்றது. இதனை,

"உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"[81]

இக்கருத்து மக்களிடையே பொதுநலப் பண்பை ஊட்டி, உலகை நிலைநிறுத்தச் செய்கிறது. திருக்குறளில் உண்மை என்ற சொல் உள்ளத்திலிருந்து பிறப்பதைக் கூறவில்லை. மாறாக, உள்ளத்தின் தன்மை என்ற பொருளிலும், மெய்மை என்ற சொல் நிகழ்ந்ததைக் கூறுதல் என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. வாய்மை என்பது மெய்மையைக் காட்டிலும் சிறப்பானது, யாருக்கும் தீமை பயக்காதது என்பதனை,

"யாமெய்யாக் கண்டவற்று ளில்லை எனைத்துதொன்றும்
வாய்மையின் நல்ல பிற"[82]

இக்குறள் மூலம் வள்ளுவர் தெளிவுபடுத்தியுள்ளார். தர்மத்தின் வாழ்வுதனை சூதுகவ்வும் தருமம் மறுபடியும் வெல்லும் என்ற பகவத் கீதையில் உள்ள இந்த வாக்கியம், எத்தகைய சூழலிலும் உண்மையானது என்றைக்கும் நிலையானது என்பதை உணர்த்துகிறது.

1.3.7.2 வாய்மையின் வரையறை

வாய்மை எனப்படுவது எந்த ஒரு தீமையும் இல்லாத நிகழ்ந்ததைக் கூறுவது அல்லது உள்ளதை உள்ளபடி கூறுவது வாய்மை எனலாம். ஒருவர் சொல்லால் விளையும் பயனை வைத்தே அவரது கருத்து வாய்மையா அல்லது பொய்மையா என்பதைக் கண்டறிய வேண்டும். நிகழ்ந்தவற்றைக் கூறுதலால் தீங்கு ஏற்படாதாயின் அது வாய்மை ஆனால் தீமை விளையுமாயின் அது பொய்மை ஆகும்.

1.3.7.3 பொய்மையும் வாய்மையிடத்தே

சமுதாயத்தில் பிறருக்கு தீமையில்லாத நன்மையைப் பயக்குவதும், உள்ளதை உள்ளபடி கூறாத பொய்மையும் கூட வாய்மையென்பதை,

"பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"[83]

என்ற குறளில் புரைதீர்ந்த நன்மை என்பது, ஒருவருக்குத் தீமையும் மற்றொருவருக்கு நன்மையும் உண்டாக்குவது அன்று, எந்த நிலையிலும் யாருக்கும் தீமை உண்டாக்காத நன்மையே புரைதீர்ந்த நன்மை எனப்படும். பொய்மையானது நேரடியாக வாய்மை ஆவதில்லை, பொது நன்மையைப் பொறுத்தே அப்பொய்மை கூட வாய்மையாகிறது. தன்னிலை அறிந்து ஒருவன் பொய் பேசுவதினால் அவரின் நெஞ்சமே அதற்கான தண்டனை கொடுக்கும் என்பதனை,

"தன்நெஞ்ச சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்"[84]

என்ற குறளின் மூலம் சுட்டுகிறார். நாம் வாழும் உலகில் வஞ்சக மனம் கொண்டவர்கள் தான் அதிகம். தான் வாழவேண்டும் என்பதற்காக தன் வேலையை விட்டுவிட்டு அதற்காக நன்மை செய்பவர்களைப் போல் நடித்துக் கெடுதல் செய்யும் நயவஞ்சக எண்ணம் கொண்டவர்கள் தான் ஏராளம். நேரம், சமயம் பார்த்து அடுத்தவரை கெடுக்க நினைக்கும் மனிதர்கள் தமக்கும் அந்நிலை வரும் என்பதை அறியாமல் சாமர்த்தியமாகப் பொய்மையைக் கையாளுகின்றனர். அவர்களுக்கு அது நன்மை என்று நினைத்து, தாம் செய்யும் தவறை அடுத்தவர்கள் மேல் சுமத்தித் தப்பித்துக்கொள்கின்றனர். அவர்கள் நினைப்பது தவறு. இங்கு வேண்டுமானால் அவர்கள் அத்தோற்றத்தை உருவாக்கலாம். ஆனால் உண்மை ஒருநாள் வெளிவரும் என்பதைத் தெரிந்து செயல்பட வேண்டும். வாய்மையைக் கடைப்பிடித்தலைவிடச் சிறந்த அறம் வேறொன்றும் இல்லை என்பதை,

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"[85]

என்று வள்ளுவர் கூறியுள்ளார். ஆனால் கண்ணுக்குத் தெரிந்த உண்மைகளைச் சூழ்நிலை கருதி வெளியில் சொல்லாமல் ஊமைகளாய் வாழவேண்டியுள்ளது. இவற்றைப் பயன்படுத்தி ஒருசிலர் புகழின் உச்சிக்குச் செல்கின்றனர். மேலும் நம்முடன் பழகும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரிடமும் உண்மை நிலையில்லை, நெஞ்சத்தில் வஞ்சகமும் நாவினில் அன்போடு பேசுவது போல நடிப்பவர்கள் ஏராளம். இதனையே,

“நெஞ்சினில் நஞ்சு வைத்து நாவினில் அன்பு வைத்து
நல்லவர் போல் நடிப்பார் ஞானத்தங்கமே அவர்
நாடகம் என்ன சொல்வேன் ஞானத்தங்கமே”[86]

என்கிறார் கவிஞர் கண்ணதாசன். தனக்கு மட்டும் என்ற சுயநலத்தோடு மற்றவர்கள் மீது பழிகளைத் தூற்றக்கூடிய கயவர்கள் கூட்டம் ஏராளம். எனவே அவர்களை இனங்கண்டு ஒதுக்குவதை விட நாம் ஒதுங்கிக்கொள்வதே சிறந்தது. அவர்களுடன் மேலும் உறவு கொள்ளாமல் இருக்க வேண்டும் என்பதை,

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்"[87]

என வள்ளலார் விளக்கியுள்ளார். இவர்கள் நாம் ஒதுங்கினாலும் அவர்களின் தேவை முடியும் வரை நயவஞ்சகத்தோடு நம்மை பழிவாங்கத் துடிப்பார்கள். அவர்களைப் போல் நாமும் அச்செயலை செய்யக்கூடாது என்பதை,

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு"[88]

என வள்ளுவர் தெளிவாகச் சுட்டியுள்ளார். அவரவர் செய்யும் செயலுக்குத் தக்க பலன் எங்கோ ஓரிடத்தில் கிடைக்கும். இந்த உலகில் வாய்மை என்பதற்கு நிகரானது வேறொன்றும் இல்லை எனலாம்.

1.3.7.4 இன்சொல்லே அறம்

மனிதனின் எண்ணம், சொல், செயல், ஆகியவை இணைந்து மனதில் எந்தவொரு வஞ்சகமும் இல்லாமல் அன்பு கலந்த சொற்களே இன்சொற்கள் எனலாம். கரையாத கல்மனம் உடையவர்களைக் கூட இன்சொல்லானது மாற்றும் என்பதை,

"வெட்டெனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது - நெட்டிருப்புப்
பாறைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்து
வேருக்கு நெக்கு விடும்"[89]

என்ற நல்வழி பாடலில் கெட்டியான இரும்பு கடப்பாரையால் கூடப் பிளக்க முடியாத கல்லினையும் மரத்தின் மெல்லிய வேர்களானது பிளந்து விடும் என்று அறிவுறுத்துகின்றது. அது போலவே கடுஞ்சொற்களால்

கரைக்க முடியாத கல் மனத்தையும் மென்மையான இனிய சொற்கள் கரைத்துவிடும்.

1.3.7.5 இன்சொல் பயன்

வாழ்வின் உண்மை நிலையினை உணர்ந்தவர்கள் நல்ல அறப்பண்புகள் தழைத்தோங்க பணிவுடன் கூடிய இன்சொல்லைப் பெற்றவருக்கு அதுவே சிறந்த அணியென்பதனை,

"பணிவுடையான் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற"[90]

என்ற குறள் மூலம் சுட்டிக் காட்டுகிறார். தேவையற்ற கவலையும், பதற்றமுமே உடல்நலம் குன்றக்காரணம். அடக்கு முறைகளாலும், பணபலத்தாலும், ஆட்சி அதிகாரத்தாலும் எவ்வளவு வேண்டுமானாலும் மக்களைக் கட்டுப்படுத்தலாம். ஆனால் இனிய சொற்களும், செயலும் தான் மற்றவர்களின் மனதில் நிலைக்கும் என்பதனை மறைந்த குடியரசு தலைவர் டாக்டர். அப்துல் கலாம் அவர்களின் மறைவில் காணமுடிந்தது. இதை விடப் பெரிய ஆட்சி அதிகாரத்தில் வாழ்ந்த ஹிட்லர், முசோலினி போன்றவர்களின் இறப்புச் சரித்திரத்தில் வன்மத்தின் எதிர்ப்பு என்று எழுதப்பட்டுள்ளதை நாம் அனைவரும் அறிந்ததே. எனவே நம் வாழ்க்கையில் இனிமையான சொற்களை பயன்படுத்த வேண்டும் என்பதனை தெய்வப்புலவர்,

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந்த தற்று"[91]

என்ற குறளில் இனிமை தரும் பழங்கள் இருக்கையில், கசப்பைத் தரும் காய்களை யாரும் விரும்பமாட்டார்கள். அது போலவே நல்லவை வரும் வழிகளை அறிந்தவர்கள் தீய வழிகளைத் தேடி அலையமாட்டார்கள். இப்பிறவியில் நாம் செய்யும் செயலும், பேசும் பேச்சும் நம்மை இந்த உலகில் அடையாளப்படுத்தும் என்பதை அறிந்து தெளிய வேண்டியது அவசியமாகிறது.

1.3.8.0 அடக்கமுடைமை

நம்முடைய ஐம்புல உறுப்புகளை அறவழியில் செலுத்தி, தான் சார்ந்த சமுதாயத்தில் மற்றவர்களுக்கு தீயச்செயல்களை உடலாலும்

மனதாலும் தவிர்த்து கட்டுப்பாட்டுடன் இருத்தலையே அடக்கமுடைமை எனலாம். அடக்கம் என்பதைப் பணிவு என்றும் அதைவிட சிறந்த செல்வம் வேறு இல்லையென்றும் கூறலாம்.

1.3.8.1 அடக்கத்தின் பயன்கள்

நம் மனித இனத்திற்கு என்று ஒருசில கட்டுப்பாடுகளை நாமே உருவாக்கிக்கொண்டு இருக்கின்றோம். எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்பது வாழ்க்கையல்ல, ஒரு திட்டமிட்டு இப்படி தான் வாழவேண்டும் என்பதே மனித வாழ்க்கையாகும். காடுகளில் காட்டு மிராண்டிகளாய் வாழ்ந்த நாம், இன்று கலையுணர்வோடு காட்சியளிக்கிறோம். இக்காலக் கட்டத்திலும் ஒரு சிலர் மிருகங்களையும் மிஞ்சி வாழுகின்ற நிலப்பரப்பாக பூமி திகழ்கிறது. இவற்றிற்கு முக்கியக் காரணம் 'அடக்கமின்மை' எனலாம்.

அடக்கமின்மை தன்னை அழிப்பதோடு மட்டுமல்லாமல், தன் சந்ததியினரையும் அழித்துவிடுகிறது என்பதைத் சூர்ப்பனகையின் மூலம் கம்பர் அறிவுறுத்துகிறார். தன்னுடைய நிலையறிந்து வாழ்பவனிடம் செல்வச்சிறப்பு வந்து சேருவதோடு மட்டுமல்லாது அடுத்த ஏழு பிறவிக்கும் அடக்கம் உடையவன் துன்பமடையமாட்டான். செல்வம் உடையவர்களிடம் அடக்கம் இருக்குமேயானால் அதைவிட சிறந்தது வேறொன்றில்லை. எனவே உடல்வலியைவிட மனவலி மிகவும் வேதனையை உண்டாக்கும் என்பதனை,

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு"[92]

வள்ளுவர் குறிப்பிடுகிறார். நாம் சொல்லும் சொற்கள் அடுத்தவர் மனதைப் புண்படுத்தாமல் இருத்தல் அவசியம். ஏனெனில் நம்முடைய பெருமைகளைப் பேசுவதாக அடுத்தவர்களை இகழ்ந்துரைத்தல் தம் குடிப்பிறப்பை மட்டுமன்று தன்னையே தகுதியற்றவனாய் அவையில் காட்டும் என்பதனை,

"தொல்லவையும் டோன்றுங் குடிமையும் தொக்கிருந்த
நல்லவையுள் மேம்பட்ட கல்வியும் - வெல்சமத்து
வேந்துவப்ப வட்டார்ந்த வென்றியும் இம்மூன்றும்
தாந்தம்மைக் கூறாப் பொருள்"[93]

என்ற திரிகடுகப் பாடல் விளக்குகிறது. அடக்கமில்லாமல் பிறருக்குத் தீங்கு செய்வதும், அதனால் துன்புறுவதும் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. அடக்கம் நம்மிடமிருக்குமானால் நமக்குத் தேவையான அனைத்தும் வந்தடையும் என்பதை,

"அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா -மடைத்தலையில்
ஓடும் னோட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு"[94]

வாக்குண்டாம் செய்யுளில் ஆற்று நீரில் சிறிய மீன்களின் ஓடிக்கொண்டு இருக்கையில் பெரிய மீன்கள் வருகைக்காகக் காத்துக் கொண்டிருக்கும் கொக்கைப்போல தாம் கொண்ட கடமையை மனதிற் கொண்டு தேவையற்ற செயல்களைத் தவிர்த்து அடக்கமுடையவனாக வாழ்தல் சிறப்பைத் தரும்.

1.3.9.0 அறிவுடைமை

அறிவு என்ற பண்பை அனைத்து உயிர்களிடத்தும் காணப்பட்டாலும் அவற்றை எத்தகைய வழிமுறைகளில் செயல்படுத்துகிறோம் என்பதைப் பொருத்தே அறிவுடைமை வெளிப்படுகிறது. கல்வி, கேள்வி, அறிவு ஆகிய மூன்றும் வெவ்வேறு வகையானது, ஆனால், ஒன்றுக்கொன்று தொடர்புடையது. எனவே ஒருவனுடைய சிறப்பான வாழ்க்கைக்கு நூலறிவு மட்டும் இருந்தால் போதாது நல்ல அனுபவ அறிவும் வேண்டும். கல்வி கேள்விகளால் கிடைக்கும் அறிவுடன் நுண்ணறிவும் சேரும்போது அவன் சிறப்படைகிறான். மேலும் தன்னுடைய வாழ்க்கையில் ஏற்படுகிற அனுபவ அறிவே அனைத்தையும் விடச் சிறந்தது எனலாம். அந்த அறிவுதான் வாழ்நாள் முழுவதும் அவனுக்குப் பயன்படும் என்பதை,

"அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்''[95]

என்ற குறளில் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறைகளைத் தேடிக்கொண்டிருக்கும் உலகில் அவையத்தையும் மீறித்தான் குற்றங்களும் தவறுகளும் நடைபெறுகிறது. இத்தகைய வழிமுறைகளில் இருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் கேடயம் எதுவென்றால் அது அறிவுடைமையாகும். இக்குணந்தான் நமது மனதிற்குப் பாதுகாப்பு அரணாக விளங்குவதோடு மற்றவர்களால் அழிக்க முடியாது என்பதை

வள்ளுவர் நயம்படக் கூறியுள்ளார். அவ்வாறான மனதினை அதனுடைய விருப்பத்திற்கு இல்லாமல் நமக்கும் மற்றவர்களுக்கும் நன்மை அடைகின்ற வகையில் பயன்படுத்திக் கொள்வதே சிறந்த அறிவு எனலாம். அத்தகைய அறிவு எவ்வகையில் அமைய வேண்டுமெனில்,

"அறிவு தறிந்தடங்கு யஞ்சுவ தஞ்சி
உறுவ துலகுவப்பச் செய்து - பெறுவதனால்
இன்புற்று வாழு மியல்புடையா ரெஞ்சான்றும்
துன்புற்று வாழ்த லரிது"[96]

என்னும் நாலடியார் பாடலில், அறிந்து கொள்ள வேண்டியதை அறிந்தும், அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சியும், நாம் செய்யும் காரியங்களை உலகத்தார் ஏற்றுக்கொள்ளும் வகையில் நாம் வாழ்வதே நல்ல செயலாகும். பிறர் கூறும் சொற்களின் உண்மைப்பொருளைத் தெரிந்து கொள்வதுதான் அறிவு என்றும் நுட்பமான பொருளையும் எளிதில் கண்டறிவது அறிவின் மற்றொரு பகுதி, இதனைப் ஆசிரியர்கள் தேர்வில் மதிப்பீடு செய்யும் போது பின்பற்றுவார்கள். நம்மிடமுள்ள அறிவை எவ்வகையில் அணுக வேண்டும் என்பதனை,

"உலகந் தழீஇய தொட்பம் மலர்தலுங்
கூம்பலு மில்லத் தறிவு''[97]

வள்ளுவர் விளக்குகிறார். நமக்கு ஏற்படும் எந்த ஒரு செயலையும் எந்த வகையில் அணுகுகிறோமோ, அந்தச் சூழ்நிலைதக்கவாறு செயல்பட்டு உலகத்தார் கடைப்பிடிக்கும் நெறிமுறையில் நடந்து கொள்வதே சிறந்ததாகும். இத்தகைய அறிவாளிகளை எத்தகைய சூழ்நிலையிலும் மறைத்து வைக்க முடியாது என்பதை,

"பரந்த திறலாரைப் பாசமே லிட்டுக்
கரந்து மறைக்கலு மாம்மா - நிரந்தெழுந்து
வேயிற் றிரண்டதோள் வேற்கண்ணாய்! விண்ணியங்கும்
ஞாயிற்றைக் கைம்மறைப்பா ரில்"[98]

என்ற பழமொழி நானூறு பாடலில் நீரில் படர்ந்த பாசிபோல் கெட்டவர்கள் ஒருவரின் அறிவுத் திறனைப் பொய்யால் மறைப்பது போலவும், சூரியனை அவர்களின் கைகளால் மறைக்க முடியாது. இத்தகைய செயல்கள் அவர்களின் மதிநுட்பத்தைக் காட்டுகிறது. எப்படி இருப்பினும் அறிவிளிகளின் திறனை இவ்வுலகம் அறியும், அவர்களின் திறன்களை

மூடிவைக்க முடியாத பெட்டகமாகும். அவ்வறிவுடையவர்களின் செயல்களாக,

"நல்ல வெளிப்படுத்து தீய மறந்தொழிந்
தொல்லை யுயிர்க்கூற்றங் கோலாகு - ஒல்லுமெனின்
மாயம் பிறர்பொருட்கண் மாற்றியே மானத்தான்
ஆயினழித லறிவு''[99]

என்று சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் பிறர் தனக்கு நன்மையைக் கூறுதலும், தீமைகளைக் கூறாமையும், துன்பப்படுவதைக் கண்டு உதவிடுதலும் மற்றவர் பொருளை வஞ்சித்துக் கொள்ளாமையும் தன்னுடைய மானங்கெடின் உயிர்விடுதலும், அறிவுடையவர்களின் பண்புநலன் என்கிறார். அறிவுடையவர்கள் முன்னரே ஆராய்ந்து அதற்கு ஏற்றார்போன்று நடந்து கொள்வார்கள், அப்படி ஆராயாமல் துன்பப்படுபவர்களே அறிவில்லாதவர்கள் என்பதை வள்ளுவப் பெருந்தகை,

"அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்"[100]

என்னும் குறளில் விளக்கியுள்ளார். எந்தவொரு செயலையும் முன்னரே யூகித்து அது நடைபெறவில்லை என்றதுமே அதனை மறந்துவிடுவார்கள் என்பதை,

"கிட்டா தாயின் வெட்டென மற"[101]

கொன்றைவேந்தன் ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார். ஒருவரிடம் இருக்க வேண்டிய செல்வம் எதுவெனில்,

"அறிவுடையார் எல்லாம் முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"[102]

என்னும் இக்குறளின் மூலம் விளக்கியுள்ளார். நம்மிடம் எத்தகைய வளமும் இல்லாவிட்டாலும் அறிவுடைமை என்ற ஒன்று வாய்க்கப்படுமானால் அவற்றைவிட சிறப்பானது ஏதுமில்லை.

1.3.10.0 அருளுடைமை

அன்பின் முதிர்ச்சியும் கருணை, இரக்கம், போன்ற துணைமை குணநலன்களைக் கொண்டது அருளுடைமை எனக்கூறலாம். இவற்றைப்

பெறவேண்டுமெனில் மற்ற உயிர்களிடம் அன்பு பாராட்ட வேண்டும் என்பதை வள்ளலார்,

"அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்
ஆருயிர்க்கெல்லாம் நான் அன்பு செய்தல் வேண்டும்"[103]

என்ற இப்பாடல் மூலம் விளக்கியுள்ளார். இக்கருத்தினையொன்றியே தாயுமானவரும்,

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லால்
வேறொன்றும் அறியேன் பராபரமே"[104]

என்கிறார். அன்பு என்பது நிலையானது, அதனை அனைத்து உயிர்களிடமும் முழுமையாகச் செலுத்தி வாழவேண்டும் என்று உணர்த்துகிறார்.

1.3.10.1 அருளாளர் பண்புகள்

மனித உயிர்களுக்காக மட்டும் வாடுவது அருளாளர் பண்பல்ல, பிற உயிர்களிடத்தும் விரவிக்காணப்பட வேண்டுமென்பதை கூறிய வள்ளலார், வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று கூறியதனோடு மட்டுமல்லாமல் மற்ற உயிரினங்களாகிய தாவரங்கள் விலங்குகளும் துன்புரும்போது பிற உயிர்களையும் தம்முயிர்போல எண்ணும் அருட்பண்பாளர் என்பது நமக்குப் புலனாகிறது.

1.3.10.2 செல்வத்துள் செல்வம்

அருட்செல்வத்தை தான் வள்ளுவர் 'செல்வத்துள் செல்வம்' என்று போற்றுகிறார். ஏனைய செல்வங்கள் அனைத்தும் மற்றத் தாழ்ந்த இயல்புடைய அனைவரிடத்தும் இருக்கக்கூடியது என்கிறார். இதனை,

''அருட்செல்வஞ் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் முள."[105]

இக்குறளில் பொருட்செல்வத்தால் நன்மையை விடத் தீமையே மிகுதி. ஆகவே அருட்செல்வமே நமக்கும் பிறருக்கும் மேன்மையை உண்டாக்கும்.

1.3.10.4 அறமும் அருளும்

அறமும் அன்பும் ஒன்றிணையும் போதுதான் அருளும் சிறப்படைகிறது. உயிர்களிடம் காட்டும் அருள்நெறியைத்தான் அனைத்துச்

சமயங்களும் போதிக்கின்றது. தலையான அறமாக கொல்லாமையை கூறுவதோடு அருளுடைமைக்கு அடிப்படை என்பதனை,

"அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்

பொருளல்ல தவ்வூன் தினல்''[106]

என்ற இக்குறளில் புலால் உண்பவர்க்கு அருளுலகம் இல்லை என்பதை நயம்படச் செப்பியுள்ளார்.

1.3.10.5 அருளுலகமும் பொருளுலகும்

மனித வாழ்விற்கு பொருளின் தேவையும், இறைவன் அருளால் பேரின்பம் அடைகின்றனர். பொருட்செல்வம் எந்த அளவிற்கு முக்கியமானதோ அதனைவிட அருளினுடைய தேவை இவ்வாழ்விற்கு இன்றியமையாதது என்பதனை,

"அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்

கிவ்வுலகம் இல்லாகி யாங்கு''[107]

என்றக் குறளில் அறத்தோடு கூடிய பொருளின் உண்மையையும் அன்போடு கூடிய அருள் நெறியையும் உலகிற்கு உணர்த்துகிறார்.

1.3.11.0 ஒழுக்கமுடைமை

தன் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்து வாழவேண்டிய பண்புநிலைக்களனே ஒழுக்கமென்றும், அவ்வொழுக்கம் என்றைக்கும் நன்மையைத் தரவல்லது. அப்படிப்பட்ட ஒழுக்கத்தை நம் உயிரினும் மேலாகக் கருதவேண்டும் என்பதை,

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்''[108]

என்ற குறள் வழி எடுத்தியம்பியதோடு தம் வாழ்நாள் முழுதும் கடைபிடித்தால் இழுக்கு நேராது.

1.3.11.1 ஒழுக்கமும் நிலமும்

அனைத்து உயிர்களுக்கும் ஒழுக்கம் என்பது இன்றியமையாதது எனவும் அவற்றை எத்தகைய சூழ்நிலையிலும் கடைப்பிடிக்க வேண்டுமென்பதையும்,

"நாடா கொன்றோ காடா கொன்றோ

அவலா கொன்றோ மிசையா கொன்றோ

எவ்வழி நல்லவர் ஆடவர்

அவ்வழி நல்லவை வாழிய நிலனே''[109]

என்ற புறப்பாடலில் ஒழுக்கம் கெடின் நிலம் கெட்டுப் போகும் என்பதை அறிவுறுத்துகிறார். ஒரு அந்தணர் தன் வேதத்தை மறந்தாலும் திரும்பக் கற்றுக்கொள்ளலாம். ஆனால் ஒழுக்கத்தை மறந்தவனுக்கு வேறுவழியில்லை என்பதனை,

"மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்

பிறப்பொக்கும் குன்றக் கெடும்''[110]

என்ற குறளில் வள்ளுவர் விளக்கிச்செல்கிறார்.

1.3.11.2 கற்றலில் ஒழுக்கம்

'கற்றதனா லாயப் பயன்' என்கிறார் வள்ளுவர். பல நூல்களைக் கற்றறிந்து உயர் பதவிகளில் இருக்கும் அறிஞர்களாக இருந்தாலும்,

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்

கல்லார் அறிவிலா தார்''[111]

என்ற குறளில் தாம் வாழும் சமுதாயத்தோடு ஒன்றிவாழத் தெரியாதவர்கள் எத்தகைய சிறப்பைப் பெற்றிருந்தாலும் அறிவில்லாதவர்களே, அவர்களை மற்றவர்கள் பழிக்கும் பண்போடு விளங்குவர் என்பதனை,

"**கற்றுப் பிறர்க்குரைத்து தாநில்லார் வாய்ப்படுவுஉம்**

வெற்றுரை குண்டோர் வலிமை''[112]

என்று விளக்கியுள்ளார். மேலும் அனைவரிடத்தும் கடைபிடிக்க வேண்டிய நல்லொழுக்கமே நன்மையைத் தரும் எனவும் தீயொழுக்கம் என்றும் துன்பத்தை மட்டுமே தரும் என்பதையும் புலப்படுத்துகிறது. இதனைத் தான் தெய்வப்புலவரும்,

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கந் தீயொழுக்கம்

என்றும் இடும்பைத் தரும்''[113]

என்ற குறளில் தீயொழுக்கம் உடையவர்கள் எப்பொழுதும் மற்றவர்களுக்கு உதவாததோடு, அவ்வாறு நன்மை செய்தாலும் துன்பமே உண்டாகும் என்று கூறுகிறார் .

1.3.11.3 மனித ஒழுக்கமும் அறமும்

மனிதனை ஒழுங்குபடுத்துவதும், தூய்மை படுத்துவதும், விலங்குகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதும், தங்களின் வாழ்க்கையைச் சிறப்புடையதாக மாற்றுவதும் ஒழுக்கமுடைமையாகும். மற்ற உயிரினங்களைக் காட்டிலும் மனிதர்கள் சிறப்புடையவர்களாக விளங்குவதற்குக் காரணம், மனம் என்னும் சிறந்த குணநலனைப் பெற்று வாழ்வது தான். பொய்கூறாமை, திருடாமை, கொலை செய்யாமையோடு ஒழுக்கக்கேடான செயல்கனை தவிர்க்க வேண்டுமென்பதை,

"ஒழுக்க மிலனாகி யோர்த்துடைய னேனும்
புழுப்பொதிந்த புண்ணிற் கொடிதாம் கழுக்கிரையை
ஓம்பின்மற் றென்னை வறுத்திக்க னில்லாக்கால்
தேம்பி விடுதலே நன்று''[114]

என்று அறநெறிச்சாரப் பாடல் விளக்குகிறது. இதன் வாயிலாக அனைத்து அறத்திற்கும் அடிப்படையாக அமைவதே ஒழுக்கம் என்பது நமக்கு புலனாகிறது.

1.3.11.4 மனத்தூய்மை

மனத்துக்கண் மாசிலன் ஆதல் என்பதன் மூலம் எண்ணம், சொல், செயல் ஆகிய இம்மூன்றுமே அரணாக அமைகின்றது. மனத்தூய்மையைக் கடைபிடிக்கவில்லை என்றால் மற்ற அனைத்தும் வெற்று ஆரவாரம் என்ற வள்ளுவரின் தத்துவம் ஆழ்பொருளைக் கொண்டது. இக்கருத்தையொத்து,

''சினமாது ஒழிந்து, மனமாசு தீர்த்தாங்கு
அறச்செவி திறந்து, மறச்செவி அடைத்துப்
பிறவிப்பணி மருத்துவன் இருந்தறம் உரைக்கும்''[115]

என்று மணிமேகலைக் காப்பியத்தில் சுட்டப்பட்டுள்ளதை இச்செய்யுள் வரிகள் விளக்குகின்றது. ஆகவே மனமது செம்மையானால் மற்ற எதுவும் தேவையில்லை.

1.3.12.0 நாணுடைமை

இவ்வுலகில் இறந்தப்பின் தன்னுடைய புகழ் நிலைக்க வேண்டுமானால் அவர்கள் செயற்கரிய செயல்களைச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமாகத்தான் நிலைத்த புகழை அடைய முடியும்.

நல்லவற்றைச் செய்தும் அல்லவற்றை செய்ய அஞ்சுவதே 'நாண் உடைமை' எனப்படும். அத்தகையபண்பு இல்லாமல் அவரிடம் எத்தகைய சிறப்புகள் இருந்தாலும் மற்றவர்களால் இகழப்படுவார்கள் என்பதை,

"நாணம் இல்லாத் தவரிடம் இருக்கும் சால்பு சிரிப்பு குரியது"[116]

என்று சிறுபஞ்சமூல ஆசிரியர் காரியாசன் விளக்குகிறார். பிறருக்கு அஞ்சி வாழாதவர் வாழ்க்கையானது சிறப்படையாது என்பதை வள்ளுவர்,

"ஊணுடை எச்சம் உயிர்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு"[117]

என்ற குறளில் தெளிவுபடுத்தியுள்ளார். ஒருவன் மென்மேலும் உயர வேண்டுமெனில் தீயச்செயல்களைச் செய்ய நாண வேண்டும் என்பதை,

"நலத்தகையார் நாணாமை யின்னா"[118]

என்று இன்னாநாற்பது பாடலில் நற்குணமுடையோர் அறமற்ற செயல்களைச் செய்யக்கூடாது என்றுரைக்கிறார். ஒருவன் செய்யும் செயல்களே மற்றவர்களிடமிருந்து அவர்களின் பண்பு நலன்கள் வேறுபடுத்திக் காட்டும் என்பதை வள்ளுவர்,

"மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்டது இல்" [119]

என்ற குறளில் தீயவர்கள் மக்களைப்போல் தான் இருப்பார்கள். அவர்கள் இப்படித்தான் இருப்பார்கள் என்று கூறுவது இயலாதது, ஏனெனில் உயிர்கள் எல்லாம் தத்தம் உடம்பைப் பற்றிகொண்டு தான் வாழ்கிறது. ஆனால் நாணம் இல்லையே மதிப்பு கெடுவதால் சான்றோர்கள் இவ்வாழ்வைத் துறந்து விடுவார்கள். தாம் செய்தவற்றை எண்ணிப் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனும் அவனது மனைவி கோப்பெருந்தேவியும் அதே இடத்தில் உயிர் துறந்தமையைச் சிலப்பதிகாரத்தில்,

"வல்வினை வளைத்த கோலை மன்னவன்
சொல்லுயர் நிமர்த்துச் செங்கோல் ஆக்கியது"[120]

என்ற செய்யுளில் காண்கிறோம். இக்கருத்தையே வள்ளுவப் பெருமகனார்,

"நாணால் உயிரைத் துறப்பர் உயிர்பொருட்டால்

நாண்துறவார் நாணாள் பவர்"[121]

என இக்குறளின் மூலம் விளக்குகிறார். மானம் கெடின் வீழ்வது நன்று என்று கொள்கையைக் கடைப்பிடிப்பதால் தான் சான்றோர்கள் என்று நாம் போற்றுகிறோம். ஈதல், கொடிய தீமைகளைச் செய்யாமை, கொடியவர்கள் செய்த கொடுந்தீமையை மற்றவர்களிடம் கூறாமை ஆகியவற்றை போற்ற வேண்டுமென்பதை,

"நச்சியார்க்கு ஈயாமை நாண் அன்று

..... சொல்லாது இருப்பது"[122]

என்ற நாலடியார் பாடல் வரிகள் நமக்குத் தெளிவுபடுத்துகிறது. ஏனெனில் நாம் செய்யும் செயலையும் இவ்வுலகம் உற்று நோக்குகிறது என்பதை அறிந்து, பிறர்செய்யும் தீமைகளை மறந்து, முடிந்த வரை அச்செயலை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அவ்வாறு செய்தால் சமூகமும் ஏற்றம் பெரும் என்பனை வள்ளுவனார்,

"குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்

நாணின்மை நின்ற கடை"[123]

என்ற குறளில் நாணத்தைக் கடைப்பிடிக்காமல் வாழ்ந்தால், வாழ்க்கையானது சிறப்புறாது. ஆகவே நாம் வாழும் வாழ்க்கையை பிறரும் மேன்மை அடையுமாறு வாழப் பழகிக்கொண்டால் எங்கும் ஏற்றத்தாழ்வுகளோ, சண்டை சச்சரவுகளோ அறவே இருக்காது. எனவே நாம் ஒவ்வொருவரும் சிறப்படைவது மட்டுமன்று, இந்த உலகமே இன்புற வேண்டுமெனில் நாணுடைமை என்ற அறத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

1.3.13.0 பொறையுடைமை

ஒருவன் செய்யக்கூடாத தவறுகளைச் செய்தால் நாமும் அறிவிழந்து திரும்பவும் அத்தவறைச் செய்யாமல் நம்மைக் காத்துக் கொள்ளும் அறப்பண்பே பொறையுடைமையாகும். ஒருவர் பொறை இருவர் நட்பு என்பதனால் ஒவ்வொரு தனிமனிதனும் கடைபிடித்து ஒழுக வேண்டிய அடிப்படை அறமாகும். பொறையுடைமைக்கு உதாரணமாக,

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை

இகழ்வாரைப் பொறுத்தல் தலை"[124]

என்ற குறளில் தன்னை தோண்டுபவர்களையும் அக்குழியில் விழாமல் பூமி காத்துக் கொள்வதைப் போல, தமக்குத் துன்பத்தைத் தருபவர்களுக்கும்

எத்தீங்கும் செய்யாமல் பொறுமையைக் கடைப்பிடிப்பது சிறந்த பண்பாகும். அதனைவிட சிறந்தது அவர்கள் செய்யும் தீமையைப் பொறுத்துக் கொள்வதோடு மறந்துவிடுவது ஆகும். ஆனால் இன்றைய சமூகத்தில் அமைதி கெடுவதற்கு பழிக்குப் பழி வாங்கும் எண்ணமே பலரிடத்தும் காணப்படுகின்றது. இவ்விடத்தில் அறிவுடையவரிடம் பொறுமை வேண்டுமென்பதை,

"கோதை யருவிக் குளிர் வரை நன்னாடை
பேதையோ டியாது முரையற்க – பேதை
உரைப்பிற் சிதைந்துரைக்கு மொல்லும் வகையான்
வழுக்கிக் கழிதலே நன்று" [125]

என்ற பாடலில் அறிவில்லாதவன் செய்யும் தவறுகளைப் பொறுத்து கொள்வதன் மூலம் அவனின் குணநலன் மேலோங்கிச் செல்கிறது. நமக்குத் தீங்கு செய்தவர்களுக்குத் திரும்ப நாம் அவர்களுக்குத் தீமை செய்வதால் அவ்விடத்தில் மனிதப்பண்பு அழிந்து நற்புகழும் நமக்குக் கிட்டாதென்பதை,

"சிறுமை நோனாதோன் பெருமை வேண்டல் பொய்"[126]

என்ற முதுமொழிக்காஞ்சி பாடல் கூறுகிறது. பிறர் செய்யும் சிறுமையைப் பொறுத்துக் கொள்ளாதவன் பெருமை பெறுவான் என்பது இயலாதென்பதால், பொறுமையோடு இருப்பவர் பூமியாள்வார். எவ்விடத்தும் பொறுமையே வெல்லும் அனைவரின் கருத்து.

1.3.14.0 செய்நன்றி அறிதல்

இப்பிறவியில் தாய் தந்தையாகிய மனிதத் தெய்வங்களே நம்மை வாழவைத்துக் கொண்டிருப்பதோடு, ஐம்பூதங்களும் நமக்குத் தன்னிகரில்லா பேருதவி அளிக்கின்றன. எந்தவித எதிர்பார்புமின்றி ஒருவர் செய்த உதவியை மறவாமல் தன்மனதோடு வைத்துக்காப்பதே தனிச்சிறப்பாகும். இதனை,

"செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது"[127]

என்ற குறள் எத்தகைய பிரதிபலனும் எதிர்பார்க்காமல் செய்யப்படும் உதவிகு ஈடு இணையற்றது என்கிறார் வள்ளுவர். நம்மிடமுள்ளவற்றை கவரநினைக்கும் இவ்வுலகில் நமக்கு அறிமுகம் இல்லாதவர் செய்யும்

உதவிக்கு இவ்வுலகமும், வானகமும் நிகரில்லை. இதுபோன்று தக்க சமயத்தில் ஒருவன் செய்யும் உதவி உயிரைவிட மேலானதாகும். மற்றவர்களுக்குத் தீமை செய்ய வேண்டுமென்று தம்முடைய நன்மையைத் துறப்பவர்களும் இருக்கிறார்கள். அத்தகைய நிலையில் நாம் நல்லோருக்குச் செய்யும் உதவியானது கல்லில் எழுதிவைத்த சிற்பம் போன்றதென,

"நல்லா ரொருவர்க்குச் செய்த வுபகாரம்
கண்மே லெழுந்துப்போற் காணுமே"[128]

என்ற வாக்குண்டாம் பாடல் உணர்த்துகிறது. இவ்வாறு எவ்விதப் பலனும் எதிர்பார்க்காமல் செய்யும் உதவிக்குப் பலனாகக் கடலையே ஒப்புமைபடுத்துகிறார் வள்ளுவர். பிறர் நமக்குச் செய்த உதவியை வாழ்நாள் முழுதும் மறக்கக் கூடாதென்பதை,

"நன்றிப் பயன் தூக்கி வாழ்தல் நனியினிது"[129]

என்று இனியவை நாற்பது பாடல் நமக்குணர்த்துகிறது.

1.3.14.1 நன்றியின் பலன்

தவறு செய்வது மனித இயல்பு, திருத்திக்கொள்பவன் உயர்கிறான், மறுப்பவன் துன்பத்தில் உழல்கிறான். மற்றவர்கள் செய்த உதவியை மறத்தலாகாது என்பதனை,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"[130]

இக்குறளில் ஒருவர் தம் வாழ்க்கையில் பிறர் செய்த உதவிகளையும் நன்மைகளையும் கண்ணை இமைகாப்பது போல மனதில் வைத்து பாதுகாப்பதே சிறந்த அறமாகும்.

1.4.0 மனிதன் வாழ்க்கையில் தவிர்க்க வேண்டியவைகள்

1.4.1.0 கல்லாமை

ஒருவனின் வாழ்நாளில் அவனுக்கு ஏற்படுகின்ற செயலை எப்படி அணுகுகிறான் என்பதைப் பொருத்தே அவனுடைய அறிவு தீர்மானிக்கப்படுகிறது. நூலறிவு ஒரு சிலருக்கு வாய்க்கப் பெறாமல்

இருக்கலாம். ஆனால் அனுபவ அறிவு கண்டிப்பாக அனைத்து உயிர்களுக்கும் கிடைக்கப்பெறும். எனவே ஒருமுறை செய்த செயலை அடுத்த முறை எவ்வாறு அணுகுகிறோம் என்பதே அதன் சாரம்சமாகும். மற்றவர்கள் பழிக்கும் படியான செயல்களைத் தவிர்ப்பதற்கே கல்வியானது தேவைப்படுகிறது. முழுமையற்ற அறிவை முழுமையானதாக வளர்க்கும் கருவியே கல்வி.

1.4.1.1 கல்லாதாரின் செயல்பாடுகள்

கல்லாத ஒருவன் எத்தகைய செல்வங்களைப் பெற்றிருந்தாலும் அதனால் எந்தவொரு நற்பயனுமில்லை. கல்வியறிவில்லாதவன் எந்த செயலையும் திட்டமிடாமல் அசட்டுத்தனமாக ஈடுபடுபவர்கள் சபையறியாமல் பேசுவதும், பிறரிடம் தம்முடைய கருத்தைத் தெளிவுற எடுத்தியம்பாமலும், மீறிப் பேசினால் அவனுடைய உண்மை நிலை வெளிப்பட்டுவிடும். உருவத்திலும் நல்ல தோற்றத்தோடு சபைதனில் நுழைந்தாலும் கற்றவருக்கும் கல்லாதவர்க்கும் இருக்கும் மதிப்பு மாறுபட்டிருக்கும் என்பதனை,

“கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத்- தானுந்தன்
பொல்லாச் சிறகை விரி தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி”[131]

என்ற வாக்குண்டாம் பாடலில் காட்டிலுள்ள மயில் தன் தோகையை விரித்து ஆடுவதைப் பார்த்த வான்கோழி தன்னிடம் உள்ள தோகையை எண்ணி ஆடலுறுவதைப் போல கல்லாதவரும் கற்றவர் போலத் தம்மை நிலைநிறுத்திக் கொள்ள ஆசைப்படுவார்கள். மேலும்,

"கல்லா வொருவன் குலநம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே"[132]

என்ற செய்யுளில் ஒருவன் எத்தகைய குடித்தன்மையைப் பெற்று விளங்கினாலும் அதனால் சிறப்பில்லை. தீயவர்களோடு வாழ நேரிடும் பொழுதும் தம்முடைய நிலையறிந்து வாழ்வார்கள். அதனை,

“வேம்பின் இலையுள் கனியினும் வாழைதன்
தீஞ்சுவை யாதும் திரியாதாம்; ஆங்கே
இனம்தீ தெனினும் இயல்புடையார் கேண்மை
மனம்தீதாம் பக்கம் அரிது”[133]

என்று நாலடியார் பாடலில் வேம்பின் அடியில் வாழைமரம் கனிந்தாலும் அப்பழம் இனிப்பதைப்போலத் தீயவர்களோடு நல்லவர்கள் சேர நேரிட்டாலும் அவர்களின் பண்பில் மாற்றம் இருக்காது. மனிதனுக்கும் விலங்குகளுக்கும் உள்ள வேறுபாடு கல்விதான். அப்படிப்பட்ட கல்வியை வியபாரமாகவும் கல்வியின் மூலம் உழைத்து வாங்கவேண்டியப் பொருளை இலவசமாமாகவும் கொடுப்பதே இன்றைய அரசின் நடவடிக்கைகள் வருத்தத்திற்குரியச் செயலாகும்.

1.4.2.0 அழுக்காறாமை

மற்றவர்களுக்கு ஏற்படும் நன்மைகளைப் பொறுத்துக் கொள்ளாமல் தம்மனதுக்குள் நினைத்து தீயவற்றை நினைப்பதே அழுக்காறு எனலாம். இக்குணம் தான் பிற குற்றங்களுக்கு வழிவகை செய்கிறது. ஒருவன் அறத்தோடு வாழவேண்டும் என்றால் பொறாமை கொள்ளாதிருப்பது மிகவும் அவசியம். மேலும் இவ்வுலகில் ஒழுக்கம் நிலைத்து சிறப்படைவதற்குப் பொறாமையின்றி வாழ்தல் வேண்டும் என்பதை,

"ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்

தழுக்கா றலாத இயல்பு" [134]

இக்குறளில் மனிதன் இன்பம், துன்பம் எது நடந்தாலும் தன்மன அமைதியை மட்டும் இழக்கக்கூடாது. ஏனெனில் நமக்கு ஏற்படும் நன்மை, தீமைக்கு நாம்தான் காரணம் என்பதை எண்ணவேண்டும். இதனை 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்ற கணியன் பூங்குன்றனாரின் புறநானூற்று பாடல் தெளியவைக்கிறது . அதற்காகப் பிறருடைய நலன்களைக் கண்டு பொறாமை கொள்வதைவிட்டு நம் முன்னேற்றத்திற்கான திட்டங்களை உருவாக்கி ஆக்கப்பூர்வமான செயல்களைச் செய்ய வேண்டும். 'தான் வாழப் பிறரைக் கெடுப்பதோ, பிறருக்காகத் தன் வாழ்க்கையை கெடுத்துக் கொள்வதும் தவறென்பதை உணர வேண்டுமென்பதனை,

"கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்

உண்பதூஉம் இன்றி கெடும்"[135]

என்ற குறளில் பொறாமை எனும் பண்புடையவன் மற்றவர்களுக்கு எதையும் கொடுக்க மாட்டார்கள், மற்றவர்கள் கொடுத்தால் அதனை ஏற்று கொள்ளவும் மாட்டார்கள். இத்தகைய பண்பாளன் உணவு, உடை, இருப்பிடமின்றி மிகப்பெரிய துயர் அடைவார்கள். ஆனால் எந்தவித உடலுழைப்பும் இல்லாமல் அடுத்தவர்களைக் கண்டு பொறாமை கொண்டு

வாழ்பவர்களைக் கண்டால் அவர்களிடம் இருக்கும் செல்வம் அனைத்தும் கரைந்து போகும் என்பதை வள்ளுவர்,

"அவ்வித் தழுக்காறு உடையானைச் செய்பவர்

தவ்வையைக் காட்டி விடும்"[136]

என்ற குறளில் கூறியுள்ளார். தன்னுடைய செல்வங்களை வளர்ப்பதும் அழிப்பதும் அவரவரின் செயல்களிலே உள்ளது. மகாபாரதத்தில் வரும் கௌரவர்கள். தங்கள் சகோதரர்களான பாண்டவர்களின் வளர்ச்சி கண்டு பொறுக்க முடியாமல் அழிவுற்றார்கள். எனவே எவ்வளவு பெரிய செல்வந்தனாகவோ, அறிவாளியாகவோ இருந்தாலும் தன் மனதில் பொறாமை என்னும் தீ பட்டவுடனே வீட்டின் கூரையில் பட்டது போல் அனைத்தும் எரிந்துவிடும். இதனை கொன்றை வேந்தனில் ஔவையார்,

"ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு"[137]

பொறாமை தன்னிடமுள்ள அனைத்துச் செல்வத்தையும் அழிப்பதோடு, பாலில் கலந்த நஞ்சு போன்று தனக்கும் அடுத்தவர்களுக்கும் உதவாமல் போகும். ஆனால் இன்று பலரை அழித்து பதவி சுகம் அனுபவித்துக் கொண்டு உயர்நிலையில் வாழ்ந்தாலும்,

"அழுக்காற் றகன்றாரும் இல்லை யஃதில்லார்

பெருக்கத்தில் தீந்தாரும் மில்"[138]

இக்குறளில் வள்ளுவர் அழுக்காறு கொண்டவனின் செல்வம் உயர்ந்ததும் இல்லை, உயர்பண்பாளர்கள் வறுமையில் உழல்வதுமில்லை. எனவே உழைத்து வாழ்பவர் உயர்வடைவதும், அழுக்காறு உடையவர் இன்னலுருவதும் இயற்கையின் நியதியாகும்.

1.4.3.0 வெகுளாமை

நாம் மிகுந்த நம்பிக்கை வைத்திருப்பவர்கள் அவற்றை சிதைக்கும் பட்சத்தில் மனதில் ஏற்படும் மனவெழுச்சியே கோபமாகும். அன்பை நாம் அனைத்து உயிர்களிடத்திலும் காட்டலாம். ஆனால் கோபம் நம் உயிருக்கு மேலான உரிமை உள்ளவர்களிடம் மட்டுமே காட்ட முடியும். எனவே அவ்வாறான உறவுகளிடமாவது தன்னுடைய கோபத்தை அடக்கிக் காக்க வேண்டுமென்பதை,

"செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்

காக்கின்னெ காவாக்கால் லென்"[139]

என்னும் குறளில் நம்மையறிந்தவர்களிடமே கோபத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை எனில் மற்றவர்களிடத்தில் எப்படிக் கட்டுப்படுத்த முடியும். ஆகவே தனக்குத் தெரிந்தவர்களிடம் கோபத்தைக் காட்டினால் துன்பத்தையோ மதிப்பையோ இழக்க நேரிடும். இத்தகைய கோபம் எதனால் உண்டாகிறது என்றால் அறிவியல் முறைப்படி தலையில் உள்ள மூளையில் 'ஹைப்போ தாலமஸ்' (HYPOTHALAMUS) என்ற நாளமில்லாச்சுரப்பியின் வாயிலாகத்தான் எற்படுதைக் கண்டுபிடித்துள்ளார்கள். மிருகங்களைப் போல் அல்லாமல் மனிதர்களுக்கு அக்கோபத்தை அடக்கும் சக்தி உள்ளது. யானைக்கு மதம் பிடித்தால் ஊரையே நாசம் செய்வதைப்போல மனிதனின் கோபம் மற்றவர்களுக்குத் தீங்கை ஏற்படுத்துவதோடு, நமது உடல் சார்ந்த பிரச்சனைக்கும் உள்ளம் சார்ந்த பிரச்சனைகளுக்கும் முதன்மையாகிறது.

“நாவினால் பேசுவதற்கு ஒரு குழந்தைக்கு இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் நாவை அடக்கிப் பழகுவதற்கோ ஒரு மனிதனுக்கு அறுபதாண்டுகள் ஆகின்றன”.[140] என்ற ரசூல் கம்சதோவ் என்னும் ரஷ்ய அறிஞர் கூறியுள்ளார். உதட்டில் சிரிப்பையும் உள்ளத்தில் மகிழ்ச்சியையும் கெடுக்கும் கோபம் அனைத்துச் சுகத்தையும் அழித்துவிடுவதோடு, அவனது பகுத்தறிவு செயலிழந்து போகிறது. எவ்வளவு பெரிய அறிஞராகவோ, துறவியாகவோ இருந்தாலும் அவர்களை ஒரு நொடியில் கீழ் மக்களாக்கும் பண்பு இதற்குண்டு. ஆகவே ஒருவன் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்றால்,

"தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்

தன்னையே கொல்லும் சினம்"[141]

என்ற குறளின்வழி எத்தகைய பாதுகாப்பையும் உடைத்தெறிய வல்லது கோபம் என்கிறார். நம்முடைய எதிரிகளை அழிப்பதர்க்கு மாறாக தனக்குள்ளே இருக்கும் கோபத்தை காப்பது சிறப்பு, இல்லையேல் அச்சினம் அவனை மட்டுமன்றி அவனது சுற்றத்தாரையும் அழித்தொழிக்கும். சிறு தீ உலகையே அழிப்பதைப்போல சினம் ஏற்படின் நம்முடைய அனைத்துக் குணநலன்களையும் அழிப்பதோடு தன்னுடைய உடைமையாகக் கொண்டவர்கள் பெருந்துன்பம் அடைவார்கள் என்பதை,

"சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு

சிலத்தறைந்தான் கைபிழையா தற்று"[142]

என்னும் குறளில் விளக்கியுள்ளார். கோபமே ஒரு சில நேரங்களில் தீர்வாகவும் அமைகிறது. அன்பிற்குச் செய்யாத செயலைக் கோபத்திற்காகப் பலர் செய்தாலும் இவை இரண்டிற்கும் வேறுபாடுண்டு.

1.4.3.1 சேர்ந்தாரைக் கொல்லும் சினம்

தீயானது நம்மை சுடுவதைப் போலச் சினம் கொண்டவனுடைய இரத்தம், நரம்பு, மூச்சுக்காற்று போன்றவை சூடேற்றும் என்பதை இன்று அறிவியல் பூர்வமாக மருத்துவர்கள் கூறுகின்றனர். இதனை,

"சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைரச் சுடும்"[143]

என்ற குறளில் சினம் 'சுடும்' என்றுரைத்து, அதனை நெருப்பாகச் சுட்டிக்காட்டி அவைச் சேர்ந்தவர்களைக் கொள்ளும் என்று அதனுடைய இழிச்செயலையும் விளக்குகிறது. ஒருவனுடைய அறிவின் முதிர்ச்சி அவன் எந்த அளவிற்குக் கோபத்தைக் காப்பவனாக விளங்குகிறான்' என்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம் என்பதை,

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரமென்ப"[144]

என்ற தொல்காப்பிய நூற்பாவில் ஒருவனுடைய சொற்களே அவர்களை வெளிப்படுத்துகிறது. வாழ்க்கையில் யாவரும் கோபத்தைப் பின்பற்றக்கூடாது. ஏனெனில் அது எத்தகைய பயனையும் விளைவிக்காது என்று,

"இறந்தார் இறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை"[145]

என்னும் குறளில் கோபத்தை விட்டவர்களே துறவிகள். இல்லையே துறவறத்தார் அல்ல என்கிறது.

1.4.4.0 புறங்கூறாமை

ஒருவரை நேரே போற்றி அவர்கள் இல்லாதபோது இகழ்ந்துரையாமையே 'புறங்கூறாமை' என்கிறோம். பழந்தமிழர்கள் புறமுதுகில் வேல்பாச்சுவது குற்றமென்றும் கொலைக்கு நிகராகக் கருதினார்கள். இதனை,

"முன்னை யுரையார் புறமொழிக் கூற்றின்னா''[146]

என்று இன்னா நாற்பது பாடல் உணர்த்துகிறது. எத்தகைய அறச்செயல் செய்யாமல் இருப்பினும் மற்றவர்களைப் புறங்கூறாமல் வாழ்வதே சிறந்ததென்பதை,

"அறங்கூறா னல்ல செயினும் ஒருவன்
புறங்கூறா னென்றால் இனிது"[147]

வள்ளுவரும் குறளின் வழி விளக்கியுள்ளார். தான்வாழ மற்றவர்களைக் குறை கூறுவதைக் காட்டிலும் அவர்கள் செய்யும் நன்மை, தீமைகளை நேரே கூறுவது மிகச்சிறந்த அறமாகும். அவற்றை விடுத்து அவர்களை முன்விட்டு, பின்பழிப்பது தவறு என்றுரைக்கிறது. இதனை,

"பகையின்றிப் பல்லார் பழியெருத் தோழி
நகையொன்றே நற்பயனாக் கொள்வர்''[148]

என்று நீதிநெறிவிளக்கத்தில் முன்விட்டு பின்புறம் பேசுபவர்களைக் காணாமல் இருப்பதே சிறந்தது என்கிறது.

1.4.5.0 இன்னா செய்யாமை

தனக்கு ஏற்படும் துன்பம் போன்று மற்றவர்களுக்கும் ஏற்படுத்த நினைப்பது அறியாமையின் விளைவு. "தனக்கு ஒரு பயன் நோக்கியதால் சோர்வனதால் ஓர் உயிர்க்கு இன்னாதவற்றைச் செய்யாமை".[149] என்பர் பரிமேலழகர். அதாவது நல்ல பண்புடையவர்கள், எந்த நிலையிலும் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமை என்பதனை வள்ளுவர்,

"சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க் கின்னா
செய்யாமை மாசாற்றார் கோள்''[150]

என்ற குறளில் தமக்கு செல்வச்சிறப்பு கிடைப்பதாயினும் மற்ற உயிர்களுக்குத் தீங்கென்னுவது அறிவுடையவர்களுக்கு அழகன்று, அவ்வாறு தமக்குத் தீமைசெய்தவர்கள் படும் துன்பத்தைத் தன் துயராக எண்ணுவர் என்பதை,

"வினைப் பயம் ஒன்று இன்றி, வேற்றுமை கொண்டு
நினைத்துப் பிறர் பனிப்ப செய்யாமை வேண்டும்
புனப் பொன் அவிர் சுணங்கின் பூங்கொம்பர் அன்னாய்
தனக்கு இன்னா, இன்னா பிறர்க்கு''[151]

என்ற பாடலில் தமக்கு ஏற்படும் துன்பத்தை பிறருக்கு செய்வது தவறு எனக்கூறுகிறது. ஆனால் அவற்றை விடுத்து தான் மட்டும் முன்னேற வேண்டுமென்பதில் மிகவும் தீவிரமாக பலர் குற்றம் செய்தாலும் ஒருநாள் பெருந்துன்பத்தினை அடைவார்கள். என்பதை,

"இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண

நன்னயஞ் செய்து விடல்"[152]

என்ற குறள் தெளிவுபடுத்துகிறது. மேலும் அனைத்து நாடுகளின் சட்டத்திலும் தவறுக்குத் தவறுதான் தண்டனை என்றில்லாமல் அங்கு மனிதநேயம் பொற்றப்படவேண்டும் என்றுணர்ந்துள்ளது. இந்திய நாட்டின் அரசியலமைப்பும் தவறு செய்பவர்களைவிட தவறு செய்யத் தூண்டுபவர்களுக்கே தண்டனை அதிகம் என்கிறது. ஆனால் அவன் செய்யும் தவறைத் திருத்தி கொள்ள வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டியது அவசியமாகும். பழி, பாவங்களுக்கு அஞ்சாத செயல்களைச் செய்வதை விரும்பமாட்டார்கள் அறிவுடையவர்கள். ஏனெனில்,

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்குகின்னா

பிற்பகல் தாமே வரும்"[153]

என்ற குறள் உண்மையை உணர்த்துகிறது. நாம் படும் இன்ப துன்பங்கள் அனைத்தும் நம் முற்பிறப்பு பலன் என்பதைப் பல்வேறு அறநூல்கள் எடுத்துரைக்கின்றது. 'வினை விதைத்தவன் வினை அறுப்பான் திணை விதைத்தவன் திணையறுப்பான்' என்பதற்கேற்ப நல்லதை செய்தால் நன்மையும், தீமையைச் செய்தோம் என்றால் துன்பம் வந்தே தீரும். பிறருக்கு மறந்து தீமைகளை செய்தோம் என்றால், அதற்கான பலன் ஏதோ ஒருவகையில் நம்மை வந்து சேரும். இன்று தவறுசெய்ய பணபலம், ஆட்சி அதிகாரம், செல்வச் செழிப்பும் துணைச் செய்யலாம். ஆனால் அதற்கான பலன் இன்றில்லை என்றாலும் அவன் வாழ்க்கையில் ஏதோ ஒருவகையில் துன்பத்தைக் கொடுக்கும் என்பதை உணரவேண்டும்.

1.4.6.0 பொச்சாவாமை

"பொச்சாத்தலாவது சோர்வின் காரணமாக மறதிக்கு ஆட்படுதல். பொச்சாவாமை என்பது அத்தகைய மறதிக்கு ஆட்படாத நிலையைக் குறிப்பது"[154] என்பார் பொற்கோ. ஒருவன் தான் செய்யும் செயல் முழுமை பெறாமல் மறந்தோ, சொர்வினாலும் பிறகு செய்து கொள்ளலாம் என்று அசட்டுத்தனமாக இருத்தல். தனிமனிதன் முதல் அரசு வரை இதன்

தாக்கங்கள் ஏராளம். மறதி என்பது நோயாகவும் உள்ளது. ஆக மறதியினால் ஏற்படும் செயல்கள் மிகவும் ஆபத்தானது என்று வள்ளுவர்,

"இறந்த வெகுளியின் தீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியிற் சோர்வு"[155]

என்ற குறளில் விளக்குகிறார். ஒருவர் இன்பதிலும், துன்பத்திலும், உடல் சோர்வாலும், அதிக வேலை பளுவாலும், கோபத்தாலும், வயோதிகம் போன்ற ஒருசில காரணங்களால் தாம் செய்ய வேண்டியவைகளை மறந்துவிடுகின்றனர். ஒருவனின் உடலில் ஏற்பட்ட நோய் எப்படி ஒருவனைக் கொள்வதைப்போல தன்னிடமுள்ள அனைத்து நற்குணங்களையும் மெல்ல அழித்துவிடும் ஆற்றல் கொண்டது மறதி. ஒருவருடைய கவனக்குறைவால் பலர் துன்புற வேண்டியுள்ளது. அரசியல் முதல் உயிர்காக்கும் மருத்துவர் வரை மறதியினால் பெரும்பாதிப்பு ஏற்படுகிறது. ஆகவே எச்செயலையும் திட்டமிட்டு செய்ய வேண்டுமென்பதை,

"முன்னறக் காவா திழுக்கியான் தன்பிழை
பின்னூ றிரங்கி விடும்"[156]

என்ற குறளில் விளக்கியுள்ளார். வேறு எந்தக் குற்றத்தைச் செய்யாவிடினும் தான்செய்ய வேண்டிய கடமைகளான மாணவரின் பள்ளிப்படிப்போ, ஆசிரியர் கற்பித்தலோ, தொழிளாலர்களின் வேலையோ, ஆட்சியாளர்களின் அரசியலோ என எதுவாகயிருந்தாலும் அவரவரின் பணிகளைச் செவ்வனே செய்தல் வேண்டுமென்பதனை,

"இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை
வாயின் அதுவொப்பது இல்"[157]

என்ற குறளில் வள்ளுவர் தன்னுடைய கடமைகளை மறந்துவிடாமல் செய்யக்கூடிய ஒருவனுக்கு அதைவிட சிறப்பேதும் இல்லை என்கிறார். ஒருசில அதிகாரிகளின் கவனக்குறைவினால் கும்பகோணத்தில் பல குழந்தைகள் கருகிப்போனதோடு இன்றும் இதுபோன்ற துயரச்சம்பவங்கள் நடைபெறுகிறது. இவ்வாறு ஒவ்வொரு நிகழ்வும் மற்றவர்கள் குறைகூறும் அளவிற்கு நிகழாமல் தம்முடைய கடமைகளை செய்தால் சோதனைகளைச் சாதனைகளாகவும் சாதனைகளைச் சரித்திரங்களாக மாற்ற முடியும். மேலும் வள்ளுவர்,

"இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக தாந்தம்

மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து "[158]

என்ற குறளில் பிறர் தம்மைப் புகழும் போது அவ்வின்பத்தில் திளைக்காமல் தன்னுடைய கடமைகளைச் செய்யவேண்டும். நம்முடைய கொள்கைகளை மனதில் நிலைநிறுத்த வேண்டுமென்பதனை, 'ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாக இருக்க வேண்டும்' என்ற பழமொழி உணர்த்துகிறது. நாம் செய்யும் செயலில் ஆழ்ந்த சிந்தனையோடு திட்டமிட்டு செயல்பட்டோம் என்றால் நினைத்தது நிறைவேறும்.

1.4.7.0 கொல்லாமை

எந்த ஒரு உயிரையும் கொள்ளுதல் மனிதப் பண்பு அல்ல, பிற உயிர்களை வாழ தான்னாலியன்ற உதவியைச் செய்ய வேண்டுமே தவிர, அவற்றைக் கொள்ளுவது அறச்செயல் அன்று. இதனை,

"அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்

பிறவினை எல்லாந் தரும்"[159]

இக்குறள் மூலம் விளக்குகிறார். ஒருவர் செய்யும் தானம், தவம், அறம் ஆகிய அனைத்தையும் விடச் சிறந்தது மற்றொரு உயிரினைக் கொல்லாமல் இருப்பது. அனைத்து மதங்களும், தத்துவ ஞானிகளும் மற்ற உயிர்களைக் கொல்லக்கூடாது என்றாலும் இன்றும் பச்சிளங் குழந்தைகளைக் கருவறையில் கொலை செய்பவர்களையும், தனக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக பெற்றவர்களே பெண் குழந்தைகளைக் கொல்லும் மிருகத்தனமானவர்களைக் காண முடிகிறது. கொலை செய்வதையே தொழிலாகக் கொண்டவர்களும் இருக்கிறார்கள் என்பதை,

"கொல்வது தான் அஞ்சான் வேண்டலும்"[160]

என்ற செய்யுளில் கொலை செய்பவர்களை மூடர்கள் என்கிறது திரிகடுகம். கொல்லாமை என்பது ஒரு அறச்செயல். அனைத்து உயிர்களையும் நேசித்து வாழ்வதோடு பகிர்ந்துண்ணுதல் சிறந்தது இதனை,

"பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்

தொகுத்தவற்று ளெல்லாந் தலை"[161]

என்ற குறளில் ஒருவன் தனக்குள்ள உணவினையும் மற்றவருடன் பகிர்ந்துண்ணுதலும், மற்ற உயிர்களைப் பாதுகாத்தலும், அறநூல்களை

இயற்றுதலும், துறவறத்தில் இருத்தலை விடச் சிறந்தது. கொலை என்பது ஒரு ஆணவப்போக்கு ஒருவன் தான் நினைத்தது நிகழவில்லை என்னும் போது அந்த வெறுப்பின் காரணமாகவும் தன்னால் மட்டுமே முடியும் என்ற கர்வத்தினாலும் செய்கிறான். ஆனால் அவனுக்கும் அதே நிலை என்பதை உணர மறுக்கிறான். இதனை,

"நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை"[162]

என்று வள்ளுவர் கூறியுள்ளார். கொலை செய்வது தீமையான செயல் என்பதை,

"கொல்லாமை நன்று; கொலை தீது"[163]

என்னும் சிறுபஞ்சமூலம் பாடலிலும் கொல்லாமை நன்மை என்கிறது. மேலும்,

"கொன்றான், கொலையை உடன் பட்டான், கோடாது
கொன்றதனைக் கொண்டான், கொழிக்கங்கால், கொன்றதனை
அட்டான், இட உண்டான், ஐவரினும் ஆகும் என
கட்டு எறிந்த பாவம் கருது"[164]

என்ற செய்யுளில் பிறஉயிரைக் கொன்றவன், அதற்கு உடன்பட்டவன், கொன்ற ஊனினை விலை கொடுத்து வாங்கியவன், அதனைச் சமைத்து உண்டவன் ஆகிய அனைவருக்கும் பாவம் செய்தவர்கள் என்கிறது. எனவே மற்றொரு உயிரினைக் கொன்று அதன்வழி செல்வம் பெருக்குவது மிகவும் இழிவான செயலாகும்.

1.4.8.0 புல்லறிவாண்மை

"புல்லிய அறிவினை ஆடல் தன்மை, சிற்றறிவினனாய் இருந்தே தன்னைப் பேரறிவினனாக மதித்து உயர்ந்தோர் கூறும் உறுதிச்சொல் கொள்ளாமை என விளக்குவார் பரிமேலழகர். சிற்றறிவின் இயல்பும், அதனால் வரும் குற்றமும் கூறுதல்"[165] என்பர் மணக்குடவர். ஒருவன் தான் செய்யும் செயலை ஆராய்ந்து பார்க்காமல், தனக்கும் மற்றவர்களுக்கும் கெடுதல் நேரும்படி அற்பப்புத்தியால் தீயவழிகளில் ஆட்பட்டுத் துன்பத்தினை அடைவது. இதனை,

"அவ்விய மில்லா ரறத்தா றுரைக்குங்காற்
செவ்விய ரல்லார் செவிகொடுத்துங் கேட்கலார்

கவ்வித்தோல் தின்னுங் குணங்கர்நாய் பாற்சோற்றின்
செவ்வி கொளறேற்றா தங்கு''[166]

என்னும் நாலடியார் பாடலில் தோலைக் கடித்துத் தின்று வாழும் நாயிக்கு, பாற்சோற்றின் சுவையறியாதது போல, கீழோர் கூறும் மதிவுரைகளைக் கேட்டுவாழும் புல்லறிவாளர்கள், மேலோர் கூறும் அறிவுரைகளைக் கேட்கமாட்டார்கள். இத்தகைய பண்பாளர்களுக்கு நன்மை, தீமை எதுவும் தெரியாது. மீறி நாம் நன்மை செய்தோம் என்றாலும் அவர்களால் நமக்குக் தீமைநேரும் என்பதை,

"வேங்கை வரிப்புலி நோய் தீரத்த விடகாரி
ஆங்கதனுக் காரா மானாற்போல்- பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரம்
கல்லின்மே லிட்ட கலம்''[167]

எனும் வாக்குண்டாம் பாடலில் புலியைப் பாம்பு தீண்டியதால் நஞ்சி தலைக்கேறியதைக் கண்ட மருத்துவர் அதைக்காப்பாற்றினார். ஆனால் மயக்கம் தெளிந்த அடுத்த கணமே மருத்துவனைத் தாக்கியது புலி. அதுதான் புலியின் குணம். அவர் செய்த நன்மையால் தான் நாம் உயிர் பிழைத்தோம் என்பதை எண்ணிப்பார்க்க முடியாத அளவு சிற்றறிவு படைத்த புலியைப் போன்ற குணம் மனிதர்களிடம் இருக்கிறது. அவர்களுக்குச் செய்யும் உதவியானது கடலில் கரைத்த பெருங்காயம் போன்று யாருக்கும் பயனற்றுப் போகும். என்பதை,

"வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு"[168]

என்ற குறளில் வள்ளுவர் தெளிவுபடுத்துகிறார். மேலும் இவர்களுக்கு மற்றவர்கள் செய்யும் துன்பத்தைவிட இவர்களே துன்பத்தை உருவாக்கிக் கொள்வார்கள், 'தவளை தன் வாயால் கெடும்' என்பதற்கெற்ப அவர்களுக்கு மட்டுமின்று அவர்களைச் சார்ந்தவர்களும் படுந்துயரை அடைவர் என்பதை,

"உலகத்தார் உண்டென்பது தில்லென்பன் வையத்
தலகையா வைக்கப் படும்''[169]

என்ற குறளின் மூலம் வள்ளுவர் தான் என்ற எண்ணத்தையும் பகட்டான ஆடம்பரத்தையும் விட்டொழிக்க வேண்டும் என்கிறார்.

1.4.8.1 மாந்தர்களின் பண்பு

நல்ல பண்பும் அறிவும் வாய்க்கப் பெற்ற மனிதனை உயர்திணையென்றும், அவ்வாறில்லாதவற்றை அஃறிணை எனப் பிரித்துப் பாகுபாடு செய்கிறார் தொல்காப்பியர். இதனை,

"உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே

அஃறிணை என்மனார் அவரல பிறவே"[170]

என்ற நூற்பாவின் மூலம் அறிவுறுத்துகிறார். ஆனால் இவ்வுலகில் உள்ள அனைவரையும் மனிதர்கள் என்று வள்ளுவர் ஏற்காமல் மாண்புடைய மனிதனையே போற்றுகிறார். அவ்வாறு மனநலம் கெட்ட மானிடர்களைச் சாடுவதில் வள்ளுவர் தயங்கவில்லை என்பதை,

"மக்களே போல்வர் கயவர்''[171]

"தேவர் ரனையர் கயவர்''[172]

"அறைபறை அன்னர் கயவர்''[173]

"ஈர்ங்கை விதிரார் கயவர்''[174]

"எற்றற் குரியர் கயவர்''[175]

எனும் குறள்வழி உணரலாம். மனநலம் இல்லாத மனிதனை மக்கட் பதடி என உளவியலையும், உலகியலையும் பாகுபடுத்தியுள்ளார். ஒரு கருத்தைக் கூறினால் பயனுண்டாகாத சொற்களைப் பேசுவதினால் பல துன்பங்கள் வந்து சேரும். எல்லாச் சொற்களும் பொருளை அடிப்படையாகக் கொண்டது, **'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'** என்று தொல்காப்பியர் நமக்கு நினைவுபடுத்துகிறார். ஆகவே நாம் சொற்களை கவனமாக கையாள வேண்டும். எனவே பயனற்ற சொற்களை எப்பொழுதும் பேசக்கூடாது இதனை,

"பல்லார் முனியப் பயன்ல சொல்லுவான்

எல்லாரும் எள்ளப் படும்''[176]

என்ற குறளில் அனைவரும் கூடியிருக்கும் சபைதனில் பயனில்லாத சொற்களைப் பேசுவதே துன்பம் தருவதாகும் என்கிறார். மகாபாரதத்தில் பலசான்றோர்கள் அமர்ந்திருந்த அவைதனிலே, துரியோதனன் பாண்டவர்களைப் பேசிய பேச்சுகள் அனைவரையும் வியப்படைய வைத்தது. அவனுடைய தரம் தாழ்ந்த செயல் இன்று வரையும் நினைவுபடுத்தி வருகிறது. அவ்வாறு பயனற்ற சொற்களை வகைப்படுத்தியும், விரிவாகவும், அழகுபடவும், திறமையாகவும் பேசுகின்ற

பேச்சானது மற்றவர்களை ஏமாற்ற பயன்படுகிறதே ஒழிய அவர்கள் எந்தச் செயலையும் செய்யமாட்டார்கள் என்பதை,

"நயனில னென்பது சொல்லும் பயனில

பாரித் துரைக்கும் வரை"[177]

என்ற குறலில் பயனில்லாத சொல் நன்மையை நீக்கித் தீமையை உண்டாக்கும். மேலும் இதுபோன்று பேசுபவர்களைக் கண்டாலே அனைவரும் வெறுத்து ஒதுக்குவதோடு மனித இனத்தின் பதர் என்று கூறுகிறார். மேலும்,

"பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்

மக்கட் பதடி யெனல்" [178]

என்று குறிப்பிடுகிறார். இன்று பலர் மத்தியில் பேசித் தன்னைப் பெரியவர் என்று காட்டிக்கொள்கின்றனர். ஆனால் அவர்களுடைய செயலில் ஒன்றுமிறாது இவர்களுக்கு எதிரி வேறுயாரும் அல்ல அவர்களுடைய நாவே அதற்கான விளைவைத் தருமென்பதனை,

"நாவிற்கு நன்று அல்வசை"[179]

எனும் வரியில் சிறுபஞ்சமூல ஆசிரியர் தெளிவாக எடுத்துரைக்கின்றார். சிலந்திக்கு அதன் முட்டையும், களிற்றுக்குத் தன் தந்தமும், மனிதனுக்கு அவன் பேசுகின்ற இழிந்த சொற்களே எமனாகிறது. என இழிந்த சொற்களைக் கூறாமல் தேவையானவற்றை பேசித் தாமும் பிறரும் இன்புற்றுச் சிறக்க வேண்டுமென வள்ளுவர் நமக்கு வழிகாட்டுகிறார்.

1.5.0 தொகுப்புரை

அறமானது அனைவருக்கும் பொதுவானதும், நிலையானதும் ஆகும். எனவே தம் வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய இன்றியமையாத தேவை என்பதை திருக்குறள் மட்டுமல்லாது, பிற இலக்கியங்களான சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், நீதி இலக்கியம், இக்கால இலக்கியம் போன்றவையும் அறத்தை முதன்மைப்படுத்தி விளக்கப்பட்டுள்ளதை இவ்வியலின் மூலம் விரித்துரைக்கப்பட்டுள்ளது.

அறம் இல்லையெனில் இவ்வுலகமே இல்லை, அறத்தால் மட்டுமே இவ்வுலகம் நிலைப்பெறும். மனிதனின் வாழ்வியலுக்கு திருக்குறளின் அறக்கருத்துகள் இவ்வியல் விளக்கப்படுகிறது.

திருவள்ளுவர் அனைத்து உயிர்களுக்கும் முதன்மையாக வேண்டப்படுவது 'அறம்' என்று கூறி அதனை முதன்மைப்படுத்தி 1330 குறள்களிலும், அறம் பற்றிய அகராதிகள் மற்ற அறிஞர்களின் சொற்பொருள் விளக்கங்கள் இவ்வியலில் விரிவாக அறியப்பட்டுள்ளது.

எந்தவொரு மனிதனும் அறம் செய்தால் வாழ்வில் புகழ்ச்சியையும் மேன்மையையும் அடைய முடியும். ஆகவே ஒரு மனிதன் ஒழுக்கம் என்ற பண்பை பெற்றால் மற்றப்பண்புகள் தானாகவே வரும் என்பது திருக்குறள் மூலம் நம் அனைவருக்கும் அறிவுறுத்தி ஒழுக்கத்தை, அனைவரின் வாழ்க்கையிலும் கடைபிடிக்குமாறு உணர்த்தியுள்ளது.

எச்சூழலிலும் மனிதன் மனிதத் தன்மையோடு வாழ வேண்டும். பிறருக்குத் துன்பம் இழைக்காமல், நன்மைகளை இயன்றவரைச் செய்ய வேண்டும் என்பதை வள்ளுவர் நமக்கு அறிவுறுத்துவதை என்பதை இவ்வியல் வெளிக்கொணர்கிறது.

மனிதர்களாகிய நாம் எவற்றையெல்லாம் கடைபிடிக்க வேண்டும், எவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்பதை, வள்ளுவர் நமக்கு அறிவுறுத்தியுள்ளார் என்பதை இவ்வியல் வெளிப்படுத்துகிறது.

இக்காலச் சூழ்நிலையில் பெரிதும் மறுக்கப்பட்ட அன்பு, விருந்தோம்பல், பண்பு, கருணை, பாசம், பணிவு, அடக்கம், ஒழுக்கம், நன்றி போன்ற இவைகளை மேலும் மெருகூட்டி, ஒரு மனிதன் கடைபிடித்து வாழ்வானேயானால் அவன் இறைவனுக்கு ஒப்பானவன். ஏனெனில் தான் மட்டும் என்றில்லாமல் பிறர் நலனையும் தன்னலம் போல் போற்ற வேண்டிய பண்பு என இவ்வியல் மூலம் உணர்த்தப்படுகிறது.

மனிதனின் அறத்தைச் சிறப்பிக்கும் வகையில் தன்னுடைய ஐம்புலன்களையும் அடக்கித் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்தலே அடக்கமுடைமையாகும். அனைத்துத் துன்பத்திற்கும் ஆதாரமாக விளங்குவதே இதன் சிறப்பம்சமாகும். எனவே எந்தச் சூழ்நிலையிலும்

அடக்கம் மட்டுமே சிறப்பாக அமையும் என்பதை வள்ளுவர் வழி அறியப்பட்டுள்ளது.

மனித வாழ்கையில் தவிர்க்க வேண்டியவைகளாகக் கல்லாமை, வெகுளாமை, அழுக்காறாமை, புறங்கூறாமை, இன்னாசெய்யாமை போன்ற கருத்துகள் இவ்வியலில் அறியப்பட்டுள்ளது.

கோபம், பேராசை, பொறாமை, இவையனைத்தும் மனிதனை அழித்துவிடும் என்பதை உணர்ந்து மேலும் சினமென்பது தன்னை மட்டுமின்றித் தன்னைச் சார்ந்தவர்கள் அனைவரையும் கொல்லும் கொடிய தீ போன்றது என்பதை எடுத்துரைக்கின்றது.

மாறிவரும் காலச் சூழ்நிலைக்குத் தகுந்தார்போல் அனைத்து அறங்களையும் ஒதுக்கிவிட்டு வாழும் இவ்வாழ்க்கையில் துன்பம் மட்டுமே இறுதியில் எட்டமுடியும். எனவே மனிதனுக்குத் தேவையான ஆற்றவேண்டிய அனைத்து அறங்களையும் கடைபிடித்தும், தூற்ற வேண்டிய செயல்களை ஒதுக்கியும் வாழ்ந்தால் இல்வாழ்க்கையைத் துன்பமின்றி இன்பமாக வாழலாம் என வள்ளுவரின் அறக்கருத்துக்கள் இவ்வியலில் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

அடிக்குறிப்புகள்

1. நாகை தண்டபானிதேசிகர், திருக்குறள் அறத்துப்பால், பக். 42,43.
2. கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப.81.
3. கௌரா தமிழ் அகராதி, ப.45.
4. மதுரை தமிழ்ப் பேரகராதி, முதல் பாகம், ப.170.
5. Dictionary Tamil and English, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், ப.100.
6. மு.வரதராசன், திருக்குறள் நீதிஇலக்கியம், ப.1.
7. மு.வ, திருக்குறள் ஆராய்ச்சி, ப.17.
8. சிவாலய மோகன். திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், ப,9.
9. கே. சந்தானராமன், திருவள்ளுவமாலை, ப.32.
10. ச.தண்டபானிதேசிகர், திருக்குறள் உரைக்களஞ்சியம், அறத்துப்பால், ப.9.
11. மேலது, ப.30.
12. பேரா. சண்முகசுந்தரம், தெ. பொ. மீ. களஞ்சியம், ப.481.
13. மேலது, ப. 482.
14. மேலது, ப.3.
15. மேலது, ப.4.
16. மேலது, பக்- 484.
17. தொல்.பொருள்- 653. பக். 487.
18. ச.தண்டபாணிதேசிகர், உரைக்களஞ்சியம் அறத்துப்பால்- பாயிரவியல், ப.15.
19. தென்மொழி ஞானப் பண்டிதன், திருக்குறள் சிறப்பியல் களஞ்சியம், ப.5.
20. அ.மா. சாமி, திருக்குறள் செம்பதிப்பு, ப.17.
21. முனைவர். சு. அழகேசன், நன்.எழு, ப.27.
22. தமிழ் வளர்ச்சித் துறை, குறளமுதம், ப.144.
23. ஜெ. மோகன். திருக்குறளும் பரிமேலழகருரையும், ப.42.
24. மு.வை. அரவிந்தன், உரையாசிரியர்கள், பக்.333, 334.
25. நாமக்கல் கவிஞர், திருவள்ளுவர் திடுக்கிடுவார், ப.7.

26. மயிலை சிவமுத்து, திருவள்ளுவர் திருநாள்விழா மலர், ப.60.
27. கு.ச. ஆனந்தன், திருக்குறள் உண்மைப் பொருள், பக். 72,73.
28. ரோசாமுத்தையாநூலகம்பதிப்பு, திருக்குறள்மூலப்பாடம், ஆண்டு 1812, ப.2.
29. சரவைஎழுத்துப்பிழை, தமிழ்பேரகராதி, தொகுதி-3, ப.1315.
30. மு. சண்முகம்பிள்ளை, கல்கத்தா தேசியநூலகத் தமிழ்ச்சுவடிகள், ப.30.
31. இரா. இளங்குமரன், வான்புகழ் வள்ளுவம், ப.2.
32. மேலது, ப.4.
33. தென்மொழி ஞானப்பண்டிதன், திருக்குறள் சிறப்பியல் களஞ்சியம், ப.294.
34. மேலது, ப.276.
35. மேலது, ப.277.
36. மேலது, ப.279.
37. மேலது, ப.294.
38. மேலது, ப.294.
39. மேலது , ப,296.
40. முனைப்பாடியார், கதிர்முருகு, அறநெறிச்சாரம், ப.11.
41. ச.வே.சுப்பிரமணியன், தொல்காப்பியம் தெளிவுரை, நூற்.1138.
42. குறள்-49.
43. மேலது-42.
44. கௌ. மாரீஸ்வரி, பதினெண்கீழ்கணக்கு மூலமும் உரையும், பா.18.
45. குறள்-51.
46. கௌ. மாரீஸ்வரி, பதினெண் கீழ்கணக்கு மூலமும் உரையும், பா.43.
47. குறள்-54.
48. மேலது, 56.
49. குறள்- 57.
50. மேலது, 60.
51. மேலது, 61.
52. ஒளவை. துரைசாமிபிள்ளை, புறநானூற்றுக் கருவூலம், பா.301.
53. மேலது, பா.188.

54. குறள்-66.
55. மேலது, 69.
56. துரை. தண்டபாணி, இன்னாநாற்பது, பா.29.
57. குறள்-70.
58. ச.வே.சு, தொல்.நூற், 1495.
59. பாரதிதாசன், குடும்பவிளக்கு, ப.37.
60. ஒளவை. துரைசாமிபிள்ளை, புறநானூற்றுக் கருவூலம், பா.163.
61. குறள்-85.
62. ஆசாரக்கோவை, பா.54.
63. குறள்- 90
64. சிலம்பு, கொலைக்களக் காதை, பாடல் எண்; 71-73
65. ந.மு. வேங்கடசாமிநாட்டார், நல்வழி நறுந்தொகை மூலமும் உரையும், பா.10.
66. குறள்-72.
67. குறுந்தொகை, பா.40.
68. மேலது, பா.4.
69. குறள்-71.
70. ந. சி. கந்தையா, செவ்விலக்கியக் கருவூலம் அகநானூறு , பா. 4:10-12.
71. குறள்-79.
72. மேலது, 75.
73. சி.வை. தாமோதரம்பிள்ளை, கலி.16.
74. முனைவர். கு.வை. பாலசுப்பிரமணியன், நற்றிணை மூலமும் உரையும், பா. 160
75. குறள்-991.
76. மேலது. 997.
77. நீதிவெண்பா, பா. 90.
78. குறள்-995.
79. மேலது, 1000.
80. மேலது. 645.

81. ஒள. துரைசாமி, புறநானூறு, பா. 182; 6-9.
82. குறள்-300.
83. மேலது, 292.
84. மேலது, 293.
85. மேலது, 297.
86. கவிஞர். கண்ணதாசன், திரையிசை பாடல்கள் முதல் தொகுதி, ப.319.
87. வள்ளலார் பாடல்கள், பா.2938.
88. குறள்-299.
89. ந.மு. வேங்கடசாமி நாட்டார், நல்வழி, பா. 33.
90. குறள்-95.
91. மேலது, 100.
92. மேலது, 129.
93. கௌமாரீஸ்வரி, பதினெண்கீழ்க்கணக்கு மூலமும் உரையும், திரிகடுகம், பா. எண். 8.
94. க.ப.அறவாணன், அற இலக்கியக் களஞ்சியம், வாக்குண்டாம், பா.எண்.16.
95. குறள் – 421.
96. புலவர் குழந்தை, நீதிக்களஞ்சியம், ப.134.
97. குறள்-425.
98. அரிமா தென்னகன், பழமொழி நானூறு, பா.எண் – 32.
99. கௌமாரீஸ்வரி பதினெண் கீழ்கணக்கு மூலமும் உரையும், சிறுபஞ். பா.57.
100. குறள்-422.
101. ஔவையார், கொன்றைவேந்தன், பா.எண்.36.
102. குறள்-430.
103. முனைவர் ச.மெய்யப்பன், தாயுமானவர் பாடல்கள், பா.எண் 221.
104. வள்ளலார், திருவருட்பா, தொகுதி -8, பா.எண்.4073.
105. குறள்-241.
106. மேலது, 254.

107. மேலது, 247.
108. மேலது,131.
109. ஔவை. துரைசாமிப்பிள்ளை, புறநானூறு, பா.187.
110. குறள்-134.
111. மேலது, 140.
112. புலவர் குழந்தை, நீதிக்களஞ்சியம், ப.58.
113. குறள்-138.
114. கதிர்முருகு, அறநெறிச்சாரம், பா. எண். 133.
115. மணிமேகலை 9: 59 – 61.
116. சிறுபஞ்சமூலம், பா.எண்.10.
117. குறள்-1012.
118. துரை. தண்டபாணி நானாற்பது மூலமும் உரையும் பா. எண்.19.
119. குறள்-1071.
120. உ.வே.சா. சிலப்பதிகார மூலமும், அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும் மதுரைக் காண்டம் பா. எண்.25:98-99.
121. குறள்-1017.
122. நாலடியார், பா.எண்.299.
123. குறள்-1019.
124. மேலது-151.
125. நாலடியார், பா.எண்.71.
126. முதுமொழிக்காஞ்சி பா.எண்.66:7.
127. குறள்–101.
128. புலவர்குழந்தை, நீதிக்களஞ்சியம், வாக்குண்டாம் பா. 702.
129. துரை. தண்டபாணி இன்னாநாற்பது மூலமும் உரையும், பா.19.
130. குறள்-110.
131. க. ப. அறவாணன் , வாக்குண்டாம், பா.14.
132. ந. மு. வேங்கடசாமி நாட்டார், கொன்றைவேந்தன், பா.167.
133. ச. கிருஷ்ணமூர்த்தி, நாலடியார் மூலமும் பதிக்கப்பட்ட உரையும், ப.315.
134. குறள்-161.

135. மேலது,166.
136. மேலது, 167.
137. நா. மு. வேங்கடசாமி நாட்டார், கொன்றைவேந்தன், பா.12.
138. குறள்-.170.
139. மேலது, 301.
140. ஆ. முத்துராமன், வாழ்வியல் சிந்தனைகள், ப.92.
141. குறள்-305.
142. மேலது, 307.
143. மேலது, 306.
144. ச.வே. சு, தொல்.தெளிவுரை, நூற். 1434.
145. குறள்-310.
146. துரை. தண்டபாணி இன்னாநாற்பது மூலமும் உரையும், பா.எண், 32;2.
147. குறள்-181.
148. புலவர் குழந்தை, நீதிகளஞ்சியம், ப.109.
149. க.ப.அறவாணன், திருவள்ளுவம், ப.305.
150. குறள்-311.
151. அரிமாதென்னகன், பழமொழி நானூறு, பா.266.
152. குறள்-314.
153. மேலது, 319.
154. பொற்கோ, பொருட்பால், ப.375.
155. குறள்-531.
156. மேலது, 535.
157. மேலது, 536.
158. மேலது, 539.
159. மேலது, 321.
160. திரிகடுகம், பா. 87.
161. மேலது, 322.
162. மேலது, 325.

163. கௌமாரீஸ்வரி பதினெண்கீழ்கணக்கு மூலமும் உரையும், சிறுபஞ்சமூலம், பா.74-4.
164. மேலது, பா. 70.
165. க. ப அறவாணன், திருவள்ளுவம், ப.152.
166. நாலடியார் பாடல், பா.எண்.322.
167. புலவர் குழந்தை, நீதி இலக்கியக் களஞ்சியம், ப.222.
168. குறள்-844.
169. மேலது, 850.
170. ச.வே. சு, தொல்.தெளிவுரை, நூற். 484.
171. குறள்-1071.
172. மேலது,1073.
173. மேலது,1076.
174. மேலது,1077.
175. மேலது,1080.
176. மேலது, 191.
177. மேலது, 193.
178. மேலது, 196.
179. கௌமாரீஸ்வரி பதினெண்கீழ்கணக்கு மூலமும் உரையும் சிறுபஞ்சமூலம், ப.எண்.9. வரி. 4

இயல் - 2

திருக்குறளில் சமுதாய அறங்கள்

2.1.0 முன்னுரை

மனிதனை நெறி தவறாது நேர்வழியில் செல்லப் பல்வேறு அற இலக்கியங்கள் தோன்றி மக்களுக்குத் தேவையான நற்கருத்துக்களை எடுத்துரைத்தாலும் அவற்றுக்கெல்லாம் முதன்மை நூலாகத் திகழ்வது உலகப்பொதுமறையான திருக்குறள். இந்நூல் மக்களின் இன்றியமையாத பண்பு நலன்களை எடுத்துரைத்து ஒரு மனிதன் தான் வாழும் சமூகத்தில் எத்தகைய குணநலன்களைப் பெற்றுத் திகழ வேண்டும் என்று அறிவுறுத்துகிறது. பல தனிமனிதர்களைக் கொண்டது குடும்பமாகவும் அவர்களின் செயல்கள் அம்மனிதரை மட்டுமல்லாது சமூகத்துடன் இணையும் போது அவர்களுக்கென்று சில அறங்களை மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கிறது அவைதான் சமுதாய அறங்களாகப் போற்றப்படுகின்றது.

2.2.0 உயிரினங்களின் தோற்றம்

பூமியில் முதல் உயிரினமானது மூன்று மில்லியன் ஆண்டுகளுக்கு முன் தோன்றியதாக அறிஞர்கள் கருதுகின்றனர். இருநூற்று இருபத்தைந்து மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்ப் பாலூட்டிகளும் (malals), தொண்ணூறு மில்லியன் ஆண்டுகளுக்கு முன் உயர் பாலூட்டிகளும் (primates: மனிதக் குலத்தில் பிரிவது), நாற்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன் இக்கால மனிதனை ஒத்தவனும் (modern man) தோன்றினர்''[1] என பக்தவச்சல பாரதி கூறுகிறார்.

2 2 1 மனிதர்களின் தோற்றம்

மனித இனம் படிம வளர்ச்சியின் இறுதிக்கட்டத்தில் தோன்றியவர்கள். அவர்கள், முதல் உயிரினம் தோன்றியதிலிருந்து எவ்வாறெல்லாம் படிம வளர்ச்சி அடைந்துள்ளார்கள் என்பதை மானுடவியல் இன்று நமக்கு ஆராய்ந்து கூறுகிறது. குரங்கிலிருந்து வந்தவன் மனிதன் என்ற உண்மையைச் சொன்னவர் டார்வின். தான் கண்டுபிடித்த இந்த உண்மையை உலகிற்கு உணர்த்த அவர் பெரிதும் போராட வேண்டியிருந்தது. ''இங்கிலாந்தில் பிறந்து மருத்துவத்துவம் படித்தார். ஆனால் அவற்றில் ஈடுபாடு இல்லாமல் இயற்கை வல்லுநர் படிப்பு மேற்கொண்டு, விலங்குகளின் எலும்புகளைச் சேகரித்து அவை அனைத்தும் குறிப்பிட்ட சில உயிரினங்களின் எலும்புகளோடு பொருந்திப் போவதைக்

கண்டார். இதற்கான காரணத்தைத் தேடிய போது ஒருசில விலங்குகளிடமிருந்து பல விலங்குகள் உருமாறி இருப்பதை அறிந்தார். அவ்வாறுதான் மனிதனும் குரங்கிலிருந்து பரிணாம வளர்ச்சி அடைந்தான் என்கிற உண்மையை உலகறியச்செய்தார்''[2] இவ்வாறு ஆராய்ச்சியின் மூலம் அனைவரின் நம்பகத்தன்மையை ஏற்றார்.

2.3.0 சமூக அமைப்பு

சமூகவாழ்வு என்பது ஓர் ஒருங்கிணைந்த கட்டுக்கோப்பான வடிவமைப்பைக் கொண்டது. ''இங்கிலாந்து சமூக மானுடவியலில் 1920 - முதல்1950 - வரை மிக முக்கியமான சமூக அணுகுமுறையானது நிலவி வந்தது. மலினாவ்ஸ்கியும், ராட்கிளிஃப் பிரௌனும் சமூக அமைப்பு (social structure) என்னும் கருத்தாக்கத்தைப் பயன்படுத்திச் சமூகத்தில் புழுக்கள் எவ்வாறு உருவாகி இயங்குகின்றன என்றும் மக்களின் நடத்தை முறைகளை ஒழுங்கமைத்தும் விதிமுறைகள் என்னென்னவென்றும் வெவ்வேறு குழுவினர் ஒருவரோடு ஒருவர் எவ்வாறு தொடர்பு கொள்கின்றனர் என்றும் அவ்வகைக் குழுக்களின் செயல்பாடுகள் என்னென்ன என்றும் அறிந்துகொள்ள முற்பட்டனர். சமூக அமைப்பின் எதிரொளிப்பாக மக்களின் நடத்தை முறைகள் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதை ஆராய்ந்தனர்.''[3] இவ்வாறு மக்கள் தங்களுக்குள் ஏற்படுத்திக்கொள்ளும் இன மொழி பண்பாட்டு கலாச்சாரங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்துக் காட்டக்கூடிய ஒன்றாகும். மக்களால் மக்களுக்காக உருவாக்கப்பட்டது சமுதாயமாகும். பல்வேறு வண்ணங்களால் ஆன பூக்கள் ஒன்றிணைந்து மாலையாவது போல, மதத்தாலும், இனத்தாலும், மொழியாலும் வேறுபட்டவர்கள் ஒன்றிணைந்து வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமையாக வாழ்வதுதான் சமுதாயம்.

2.3.1 சமுதாயம் – பொருள் விளக்கம்

''சமுதாயம் என்ற சொல்லிற்கு மக்கள் திரள், பொருள் திரள், கோவில் நிர்வாக அதிகாரிகளின் கூட்டம், பொதுவாகப் பேணும் அவரவர்குரிய பங்குப்படி பிரித்தேனும் அனுபவிக்கப்படும் ஊர்ச்சொத்து உடன்படிக்கை''[4] எனப் பல்வேறு பொருள்களில் தமிழகராதி விளக்கம் தருகிறது. சமூகம் என்ற சொல்லை ஆங்கிலத்தில் community என்றும், சமுதாயத்தை society என்ற சொல் பல பகுதியினரையும் கொண்ட பல சமூக நிறுவனங்களை

ஒருங்கிணைத்த அமைப்பைக் குறிக்கும். கம்யூனிட்டி என்ற சொல்லானது சமுதாயம், சமுதாய வாழ்வு, சமுதாயப்பாங்கு, சமுதாய அமைப்பு, சமுதாயப் பழக்க வழக்கங்களின் தொகுதி, நாகரிகச் சமுதாயம் என்ற பொருள்களை உணர்த்துகிறது. ஒரு பரந்த நிலப்பரப்பில் தங்களுடைய அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றிக்கொண்டு வாழ்கின்ற மக்கள் கூட்டமே சமுதாயம். சமூக அறிவியல்களின் கலைக்களஞ்சியம் சமுதாயம் பற்றி கூறுமிடத்து "மனிதன் தன்னுடன் வாழ்வாரோடு கொள்ளும் அனைத்துவகைத் தொடர்புகளின் முழுமையைப் பற்றி குறிக்கும் மிகப்பொதுவான சொல் சமுதாயம் எனக் கருதலாம்."[5] "sociology என்ற சொல் ஆகஸ்ட் கோம்த் என்ற அறிஞரால் 1839 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. சமூகவியல் ஒரு தனிப்பாடமாக 1876ல் ஐக்கிய அமெரிக்க நாட்டில்தான் அறிமுகமாயிற்று. 1889ல் பிரான்ஸ் நாட்டிலும் 1907ல் பிரிட்டன் நாட்டிலும் உருவாக்கப்பட்டது. இந்திய நாட்டில் 1919லேயே அறிமுகமாகியிருந்தாலும் 1930ஆம் ஆண்டுதான் பம்பாய்ப் பல்கலைக்கழகம் தனிப்பாடமாக நிறுவியது.

சமூகவியலின் பொருள் பற்றியும் அதன் பாடவரையறை (scope) பற்றியும் பல்வேறான கருத்துகளும், விவாதங்களும் இருந்துள்ளன. சமூகத்தைப் பற்றிய அறிவியல் சமூகவியல் என்பது சுருக்கமான விளக்கம். ஜின்ஸ்பர்க் என்ற அறிஞர் சமூக அறிவியல் என்பது மனிதத்தொடர்பு, மனித உறவுகள் ஆகிய இரண்டின் போக்குகளையும், விதிகளையும், விளைவுகளையும் பற்றிய ஆய்வு என்று வரையறுத்துள்ளார். மனித உறவு, மனிதத்தொடர்பு (interation) இவையிரண்டையும் மையமாகக் கொண்டு அமைகின்ற நிறுவன அமைப்பையும் (institution) அமைப்பையும் (structure) பற்றிய ஆய்வும் கூடச் சமூகவியலின் எல்லைக்குள் அடங்கும்."[6] என்கிறார் க.ப. அறவாணன்.

ஒரே வகையான எண்ணங்களை உடைய மனிதர்கள் தங்களுக்குள் ஒன்றுபட்டு வாழும்போது சமுதாயம் உருவாகிறது. ஏனெனில் மனிதர் எவரும் தனித்து வாழ இயலாது. ஆகவே, தங்களின் ஆவல்களையும், தேவைகளையும் நிறைவேற்றிக்கொள்ளப் பிறரது துணை அல்லது உதவி கட்டாயமாகிறது. ''மனிதர்களுக்குப் பலவகை பொருட்களையும், பிறர்தம் உதவிகளும் தேவைப்படும்போது ஓரிடத்தில் கூட்டாளிகளாக

இணைகின்றனர் இதனையே சமுதாயம் எனலாம்"[7] என்று சாக்ரடீஸ் கூறுகிறார். "பொதுவான பண்புகளையும் நியதிகளையும் கொண்டு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மக்கள் தொகுதி (society) தனக்கென வாழாது சமுதாயத்திற்காக மனிதர் உயர்ந்தவராகக் கருதப்படுவர்"[8] எனக் க்ரியா அகராதி விளக்கம் தருகிறது.

எந்த ஒரு மனிதனும் பிறரைப் புறக்கணித்து வாழ்வது இயலாது. ஏனெனில் உணவு, உடை, உறையுள் போன்ற அடிப்படைத் தேவைகளுக்காக அவன் பிறரைச் சார்ந்து வாழவேண்டியுள்ளது. அடிப்படைத் தேவைகள் மட்டுமல்லாமல் இயல்பாகவே ஆணும் பெண்ணும் தங்களுக்குள் இணைந்து இல்லறம் மேற்கொண்டு தம்மைப்பேணிப் பாதுகாத்துக் கொள்வதற்கும், அழியாமல் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கும், ஏதாவதொரு சமூக அமைப்பிற்குள் இடம் பெறுகிறோம். மு.வ அவர்கள் சமுதாயம் பற்றி கூறுகையில் ''நாகரிகம் வளர வளர மனிதன் சிறு கூட்டமாக இருந்து வாழ்ந்த நிலையிலிருந்து பெரிய சமுதாயமாக வாழும் நிலைக்கு உயர்ந்துள்ளனர். வர வரச் சிறு நாடுகள் பலவும் ஒரு குடும்பத்தின் உறுப்புகள் போல் ஆகி உலகமே ஒரு சமுதாய அமைப்பாக உருக்கொள்கிறது''[9] என்கிறார்.

சமுதாயம் என்பதை எவ்வாறு வரையறுக்கலாமென்றால் ஒவ்வொருவரும் தங்களுக்குள் கட்டுப்பாட்டு ஒழுங்குடன் வாழ்வது. ஏனெனில், பலரது தேவைக்காக ஒருவனும், ஒருவனது தேவைக்காகப் பலரும் வாழ வேண்டியுள்ளது. "இயற்கையின் படைப்பில் மனிதன் குறைகளுடையவன் மற்றவர்களுடன் நெருங்கிப் பழகும்போது அவனது இயல்பான ஆற்றல் வெளியாகும். எனவே, மனிதன் மனிதனாக நிறையுடையவனாக வாழ வேண்டுமானால் சமுதாயம் என்ற அமைப்பு மிகவும் தேவைப்படுகிறது''[10]. ஒரு தனி மனிதன் தனது தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் பொருட்டு பிறருடன் கூடி வாழ்கிறான் இந்தக் கூட்டு வாழ்க்கையே சமுதாயம் ஏற்படக் காரணமாகிறது.

2.3.2 சமுதாய நோக்கம்

சமுதாயத்தின் உன்னதமான நோக்கம் மக்கள் அனைவரும் கூடி மகிழ்ச்சியுடனும், ஒழுங்குடனும், ஒருங்கிணைந்த கூட்டமைப்போடு

வாழ்வது. ஒவ்வொரு சராசரி மனிதனும் அரசியலறிவு, பொருளாதார மேம்பாடு, அறிவியல் முன்னேற்றத்தோடு நடப்பு நிகழ்வுகளை அறிந்துகொள்ள வேண்டும். சமூகத்தில் உள்ள நிகழ்வுகளை அறிந்து தன் வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களைத் தன் அறிவினால் தீர்க்கவேண்டும். ஒரு தனிமனிதனின் ஒழுக்கமானது குடும்பத்தை உயர்த்துவதாக அமைகிறது, அக்குடும்பத்தின் ஒழுக்கம் பல குடும்பங்களை நன்னெறியில் வாழத்தூண்டுகிறது. இவை பெருகி ஒவ்வொரு குடும்பமும் ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்து வாழுகின்ற போது இயல்பாகச் சமுதாயத்தின் மதிப்பும் உயருகிறது. இம்மக்கள் பொது நலனில் ஈடுபாடு கொண்டவர்களாகவும், சமுதாயத்தில் வரையறுத்துள்ள பொய்கூறாமை, மது உண்ணாமை, திருடாமை, பிறன்மனை நயவாமை போன்ற பொதுவான கட்டுப்பாடுகளைப் பின்பற்ற வேண்டியது சமுதாயத்திற்குத் தேவைப்படுகிறது.

"நாம் ஒரு ராஜ்ஜியத்தை அமைப்பதன் நோக்கம் அதிலுள்ள ஒரு சிலர் சுகத்தை அனுபவிக்க வேண்டும் என்பதற்காக அல்ல; எல்லா ஜனங்களும் ஒரே மாதிரியான சுகத்தை அனுபவிக்க வேண்டுமென்பதற்காக; ஒரு சித்திரத்தில் கண்களை மட்டும் அழகாக அமைத்துவிட்டு மற்ற அங்கங்களை அழகுபடுத்தாமல் விட்டுவிட்டால் அந்தச் சித்திரம் எப்படிச் சோபிக்காதோ அதைப்போல், ஒரு ராஜ்ஜியத்தில் ஒரு சிலர் மட்டும் சந்தோஷத்தை அனுபவிக்க விட்டுவிட்டு மற்றவர்களைத் துக்கப்படும்படி விட்டுவிட்டால் அந்த ராஜ்ஜியம் சுபிட்சமான ராஜ்ஜியம் என்று சொல்ல முடியாது"[11] என்கிறார் சாக்ரடீஸ். ஆகவே சமுகத்தில் இன்பம், துன்பம் எதுவானாலும் சமுதாய உறுப்பினர்கள் அனைவருக்கும் பொதுவானதாகும். எனவே அவர்களுக்குள் ஒருசில கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கடைபிடிக்கவேண்டியது அவசியமாகிறது.

2.3.3 சமுதாயக் கூறுகள்

சமுதாயத்தில் உள்ள சிறுசிறு பகுதிகளையும், அமைப்பு முறைகளையும் சமுதாயக் கூறுகள் என்று கூறலாம். இவையனைத்தும் ஒன்றிணையும் போது சமுதாயம் முழுவடிவம் பெறுகிறது. தனிமனிதன், குடும்பம், கல்வி, அரசு, நீதி, தொழில், சமயம் போன்றவற்றைத் தனித்தனியாகப் பாகுபடுத்தலாம். ஒரு தனி மனிதனோ, குடும்பமோ மட்டும்

சமுதாயம் ஆகிவிடாது. மேற்கண்ட உறுப்புகள் அனைத்தும் இணையும் போது சமுதாயம் முழு உருவம் பெறுகிறது. தலை அல்லது கைகளை மட்டும் நாம் உடல் என்று கூறுவதில்லை, அவைகள் உடலின் ஒரு பகுதிகளே, அனைத்து உறுப்புகளும் சேரும்போது உடலானது முழுமை பெறுவதைப்போலச் சமுதாயம் என்பது உடல் எனில் உயிராகத் திகழ்வது சமுதாய ஒழுக்கங்கள் எனலாம். இவைகள் அனைத்தும் சரியாக வாய்க்கும் போது சமுதாயமானது சிறப்புற்று விளங்குகிறது. ஒருதனிமனிதனுக்குள்ள உயர்ந்த எண்ணமும், திடமான உள்ளமும் தான் சமுதாயச்சொத்தாகும். எனவே சமுதாயத்தில் நிறை குறைகள் யாவும் ஒவ்வொரு தனிமனிதனின் செயல்களைப் பொறுத்தே அமைகின்றது. ஏனெனில் அவன் குடும்பத்தில் அன்பு, பாசம் போன்ற அனைத்து உணர்வுகளை இங்குத்தான் பெறுகின்றான். மேலும் அறிவு கல்வி, தொழில் போன்ற அனைத்தையும் தான் சார்ந்த சமூகத்தின் மூலமே கிடைக்கின்றது. ஆகவே இவையனைத்துச் செயல்பாடுகளையும் வைத்தே அச்சமூகத்தின் பண்பாடு, நாகரிகம், கலாச்சாரம் போன்றவற்றை அறிய முடிகிறது.

மேலும் இச்சமூகத்தில் சாதி, சமய, இன, பாலின மோதல்கள் அதிகரிப்பதால் சமூக அமைதி குறைந்து வருவதும், குடும்ப அமைப்புமுறை சிதைவுறுவதாலும், சமூகத்தில் தனிநபர்களால் கைவிடப்படுவதும், இளமையிலேயே குடிமயக்கத்துக்கு அடிமையாவதால் குற்றப்பின்னணி உடையக் குழுக்களில் இணைந்து கொள்வதால் சமூகக் குற்றங்கள் பெருகுகிறது. இச்செயல்களின் மூலம் சமூகம் சீர்குலைந்து அழிவிற்குத் தூண்டுவதோடு சமூக முன்னேற்றத்திற்குப் பெரும் பாதிப்பை உண்டாக்குகிறது.

2.3.4 சங்ககாலச் சமுதாயமும் திருக்குறளின் தோற்றமும்

ஆதி மனிதன் காட்டுமிராண்டியாக வாழ்ந்த நிலையிலும் பிறரோடு இணைந்து வாழ்ந்தான். பழங்காலத்திலிருந்து இன்றுவரை மனிதன், சமுதாயத்தில் கூடி வாழ்வதற்கான காரணம் சமூக இயல்பு மட்டுமன்றி, அவனது பலதரப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகத்தான். சங்க காலத்தில் இன்று இருப்பது போன்று சாதி அமைப்புகள் இல்லை. நிலத்தையும், தொழிலையும் அடிப்படையாக வைத்தே மக்கள் இயல்பாகப்

பிரிக்கப்பட்டிருந்தனர். நிலம் அவற்றின் பண்பிற்கேற்ப பிரிந்திருந்தமையைத் தொல்காப்பியர்,

"மாயோன் மேயக் காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேயத் தீம்புனல் உலகமும்
வருணன் மேயப் பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"[12]

இந்நூற்பாவில் விளம்பியுள்ளார். ஒவ்வொரு நிலப்பகுதியிலும் மக்கள் அந்நிலத்தின் இயற்கைப் பண்பிற்கு ஏற்றவாறும், அவரவர் செய்யும் தொழில்களுக்கு ஏற்பவும் பிரிக்கப்பட்டிருந்தனர். சங்ககால மக்கள் தொழில்களால் எவ்வித வேறுபாடும் பாராட்டவில்லை. கல்வி, ஒழுக்கம் போன்ற பண்புகளை வைத்தே மக்கள் மதிக்கப்பட்டனர். இவன் இத்தகைய தொழிலைச்செய்கிறான் என்பதற்காக யாரும் இழிவுபடுத்தவில்லை. என்பதனை வள்ளுவனார்,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" [13]

எனும் குறளில் விளக்கியுள்ளார்.

2.3.5 சமூகப் பழக்கவழக்கங்களும் பண்பாட்டு கூறுகளும்

தமிழர்களின் சிறப்புகளைத் தொல்காப்பியம் முதல் சங்க நூல்கள் வரை நமக்குத் தெளிவாக விளக்குகிறது. "ஒரு சிறிய நிலப்பரப்பில் ஒரு பொது வாழ்க்கை வழியைப் பின்பற்றிக் கூட்டமாக வாழும் மக்கள் தொகுதியே சமுதாயம் எனப்படும். சமுதாயம் சமூகத்திற்குள் அடங்குவதாகும். தம்மைப் பேணிப்பாதுகாத்துக் கொள்வதற்கும் அழியாமல் நிலை நிறுத்தி கொள்வதற்கும் ஒன்றாக இணைத்துள்ள ஒரு மானிடக் குழு சமூகம் எனப்படும். உலகில் உள்ள மானிடர் அனைவரும் எதுவாவது ஒரு சமூக அமைப்பிற்குள் இடம் பெறுவர்"[14] என்று ஜோசப் கலியபெருமாள் சமுதாயம் பற்றிய தம் கருத்தினை வெளிப்படுத்தியுள்ளார். தமிழர்களின் சமுதாய வாழ்வானது ஒரளவு சங்கிலித்தொடர் போன்ற அமைப்புடையது என்பதை நமக்குத் தொல்காப்பியம் அறிவிக்கிறது. அவற்றோடு சமண இலக்கியங்களும், சிந்து சமவெளி நாகரீகங்களும், நமக்கு வரலாற்றை

அறியும் கருவூலமாக அமைகிறது. மேலும், ஆரியர் வருகைக்கு முன் இந்தியா முழுமையும் பரவியிருந்த நாகரிகத்தை மொகஞ்சதாரோ, ஹரப்பா கண்டுபிடிப்புகளில் இப்பகுதியில் அன்று வாழ்ந்த மக்களின் நாகரிக உச்ச நிலையை எய்தி இருந்ததோடு கலை, பண்புகளில் மேம்பட்டுத் திகழ்ந்தனர். இதனை,

"ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
பேர் இல் பிறந்தமை ஈரத்தின் அறிய" [15]

எனும் முதுமொழிக் காஞ்சிப் பாடல் விளக்குகிறது.ஆகவே இன்றைய நிகழ்வுகள் நாளைய வரலாறாக மாறுகிறது என்பதை உணரவேண்டும்.

2.3.6 சமூக அமைப்புகளும் வாழ்க்கைமுறைகளும்

ஒவ்வொரு நிலப்பகுதியிலும் மக்கள் அந்நிலத்தின் இயற்கைப் பண்புகளுக்கு ஏற்பத் தொழில் புரிந்து வந்தனர். "தமிழரசர் காலத்தில் மக்கள் அனைவரும் திணை நிலை, திணை மயக்கநிலை ஆகிய இருநிலைப்பட்டு வாழ்ந்து வந்தனர். குறிஞ்சியில் குறவரும், முல்லையில் இடையரும், மருதத்தில் உழவரும், நெய்தலில் செம்படவரும், பாலையில் கள்ளர், மறவர் முதலியோருமாக ஒவ்வொரு திணைக்குலமும் தனித்து வாழ்வது திணை நிலம்; சிற்றூரிலும் பேரூரிலும், நகரிலும், மாநகரிலும் பல திணைக்குலம் கலந்து வாழ்வது திணை மயக்க நிலையாகும். முதலாவது மருத நிலத்தூர்களிலும், பின் பிற நிலத்தூர்களிலும், திணை மயக்க நிலையாலும், தொழிற் பிரிவினாலும் பல குலங்கள் ஏற்பட்டிருந்தன. ஆசிரியரும், பூசாரியாரும், துறவியரை அந்தணர் என்றும், ஆட்சியினைப் பூண்டோர் அரசர் என்றும், வாணிகம் மேற்கொண்டோர் வணிகர் என்றும், உழுதும் உழுவித்து உண்போர் வேளாளர் என்றும், கைத்தொழில் செய்பவர் வினைவலர் என்றும், குற்றேவல் செய்பவர் ஏவலர் என்றும், இரந்துண்போர் இரப்போர் என்றும், மருதநில மக்கள் எழுபேரு வகுப்பினராக வகுக்கப்பட்டு நால்வகை நிலத்தும் நாடு முழுவதும் பரவினர்"[16] என்று ஞா. தேவநேயன் தெளிவுபடுத்தியுள்ளார். தொழில்களால் மக்களிடம் ஏற்படும் பாகுபாட்டினை வள்ளுவனார், 'செய்தொழில் வேற்றுமை யான்' என்று கூறி அனைவரும்

ஒன்றுபட்டு வாழ வேண்டுமே ஒழியத் தொழில் மூலம் பாகுபாடு கூடாது என வலியுறுத்துகிறார்.

2.3.7 தனிமனிதன்

ஒன்றுபட்டு வாழும் மக்கள் கூட்டத்தில் ஓர் உறுப்பினராகத் திகழ்பவன் மனிதன். ஆழ்ந்து பார்த்தால் தனிமனிதன் தம்முடைய இன்பத் துன்பங்களைப் பகிர்ந்து கொள்ள மற்றொருவரின் உதவி தேவைப்படுகிறது. "மனிதன் எவன்? - உன்னுவோம். மனிதன் தன்னந்தனியனல்லன். அவன் மண் முதல் - இறைவரை – தொடர்புடையவன் அகிம்சையில் உறைபவன்; அருளாளன்"[17] எனத் திரு.வி.க கூறுகின்றார். மனிதருக்குரிய பண்பினையே 'பகுத்தறிவு' என்கிறோம். அப்பகுத்தறிவே விலங்குகளிடம் இருந்து வேறுபட்டது என்பதையும் அறிஞர் பலர் நமக்கு உணர்த்துகின்றனர். "மனிதர்களின்றேல் சமூகமில்லை. சமூகத்திலிருந்து விடுபட்ட தனித்தியங்கக்கூடிய தனிமனிதனுமில்லை என்ற கூற்று உண்மையாகும்"[18] என்று பாஸ்கல் கிஸ்பர்ட் இயம்புகிறார். மேலும் தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளத் தனிமனிதன் பிறருடன் கூடிவாழ்வதற்கு குடும்பம் தேவையாகிறது.

2.3.8 குடும்பம்

ஆண் - பெண் இருவரும் இணைந்து தங்களுக்குள் எழுகின்ற அனைத்து உணர்வுகளைப் பரிமாறிக்கொள்ளவும் தம் தேவைகளை நிறைவு செய்து கொள்ளவும் திருமணம் செய்து கொள்கிறார்கள். அவ்வாறு திருமணத்தின் வழியாகத் தோன்றுகின்ற அமைப்பே குடும்பம் எனலாம். "குடும்பம் எல்லாச் சமூகங்களிலும் உள்ள அடிப்படையான அமைப்பு தாய், தந்தை, குழந்தைகள் அடங்கிய குடும்பத்தைத் தனிக்குடும்பம் என்பர். இவ்விதக் குடும்பத்தின் அமைப்பு சமூக வழக்காலும் சமயத்தாலும் கட்டுப்படுத்தப்படும் உறவு குடும்பத்தினின்று ஏற்படுகிறது. சமூகத்தின் பல்வேறு பிரிவுகளுக்கும் குடும்பம் அடிப்படையானது"[19] எனக் கலைக்களஞ்சியம் விளக்கம் தருகிறது. அன்புடன், கூடிவாழ உருவாக்கப்பட்ட சமூக அமைப்பே குடும்பமாகும். இவை தங்களுக்குள் இரத்த உறவுகளை ஏற்படுத்தி மிக நெருக்கமான சூழ்நிலையை உருவாக்குகிறது. இப்பண்பு நலன்களே சமூக நலத்திற்கு

அடிப்படையாகிறது என்பதனை,

"அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்

நண்பென்னும் நாடாச் சிறப்பு"[20]

என்று இக்குறளில் விளக்குகிறார் வள்ளுவர். ஆகவே குடும்பம் என்பது "ஆண் பெண்ணாகிய குடியானவர் மக்கட்பயிர் விதைத்து வளர்க்கும் மனையியல்; குழந்தை மழலை ஒலிக்கும் இன்பக்காடு; சமூகம் கொந்தளித்து மோதும் துன்பக்குன்று; செயலெல்லாம் நினைவெல்லாம் ஓடிவிழும் பற்றுக்கடல்; அன்பு நீரற்ற காலை சினப்பாலை; குடும்பம் என்பது உலகத்துப் பலர் எண்ணமெலாம் சிறு பேரலையாக வந்து தாக்கும் மண்தீவு"[21] என்று வ.சுப.மாணிக்கம் புகழ்ந்துரைக்கிறார். இதுவே சமுதாயத்தின் இன்றியமையாதது.

2.3.9 அகம்

பண்டைய காலத்தில் தமிழர்கள் அகம் என்பதை உள்ளம் என எண்ணினர். உள்ளத்தின் ஒழுங்குணர்வைக் குறிக்கவே அகம் எனப்பொருள் கொள்ளப்பட்டது. "உள்ளத்துள் தோன்றும் பால் உணர்வுகள், கட்டவீழ்த்து போகாமல், அவைகளை ஒரு கட்டுக்கோப்பில் கொண்டு வந்து நெறிப்படுத்திய ஒழுங்குமுறையை அகம் என்று பழந்தமிழர் குறிப்பிட்டார்."[22] என்று தி.வெ.ரா இயம்பியுள்ளார். மனிதனுள் ஏற்படும் உணர்வுகளுக்கு உருவம் ஏதுமில்லை. அது ஒருவரின் உணர்வு மிகுதியால் அன்பாகப் பெருகிக் காதலாகச் சமூகத்தில் மலர்கிறது. அவ்வன்பின் மூலமே அனைத்த உயிர்களும் பெருகி இவ்வுலகம் நிலைபெறத் துணைசெய்கிறது.

2.3.10 காதல்

சங்க காலத்தில் தமிழர்கள் தங்கள் குடும்ப வாழ்க்கையைக் காதல் வாழ்க்கைக்குப் பின்னரே அமைத்துக்கொண்டனர். காதல் என்பது அக்காலத்தில் உயர்ந்த நெறியாகவே போற்றப்பட்டது. இன்றும் உண்மையான காதலை அனைவரும் போற்றுகின்றனர். "காதல் என்பது இல்லற வாழ்க்கைக்கு முன் இளைஞரிடையே உண்டாகும் குறிப்பிட்ட கால மனநிலை என்பதன்று. அது வாழ்வு முழுவதும் பரவி இருக்கக்கூடிய இருக்க வேண்டிய மனநிலை என்பது சங்கச் சான்றோர் கண்ட உண்மையாகும். இல்லறம் தொடங்கும் போது காதலை உணர்ச்சி நிலையில் மட்டும்

உணராமல் அறிவு நிலையிலும் சங்கப்புலவர் கண்டனர்”[23] என டாக்டர் பாஸ்கரதாஸ் கூறுகின்றார். ஆம் காதல் என்பது உணர்ச்சி நிலையைச் சார்ந்தது அன்று, அது அன்பு என்ற உணர்வின் அடிப்படையில் நிகழப்பெறுவது. தூய அன்பு கொண்ட அனைவரும் காதலிக்க வேண்டும் என்பதை பாரதி,

“காதல் காதல் காதல்

காதல் போயிற் சாதல் சாதல் சாதல்” [24]

என்று கூறுகின்றார். சமுதாயத்தில் அமைதியும் அன்பும் நிலவ வேண்டுமென்றால் காதலிக்க வேண்டியது அவசியமாகிறது. உடலில் உயிருள்ளவரை மனிதன் காதலித்துக் கொண்டுதான் இருக்கிறான். அவை பணமோ, புகழோ, தொழிலோ, பிறப்போ, இறப்போ எதுவாக இருந்தாலும் மனமானது அவற்றை ஏற்றுக்கொள்கிறது. அவை கிடைக்காதபோது தறிகெட்டுச் சென்று தனக்கும் பிறருக்கும் துன்பத்தை ஏற்படுத்துகிறது. பிறரிடம் கொள்ளும் அன்பு வெறும் தேவைக்காக அல்லாமல் உண்மையாகப் பழகுதல் வேண்டும். மேலும் குடும்பத்தில் தலைவன், தலைவி ஆகிய இருவரின் அன்பானது வெறும் உடல் சேர்க்கைக்காக அல்ல என்பதைக் காதற் சிறப்புரைத்தல் என்னும் அதிகாரத்தில் உடம்பு உயிருக்கும் உடையேயானத் தொடர்பு என்பதனை,

“**உடம்பொ டுயிரிடை என்னமற் றன்ன**

மடந்தையொ டெம்மிடை நட்பு” [25]

என்னும் குறளில் வள்ளுவர் விளக்குகின்றார். தலைவியின் மனதில் தலைவன் நிறைந்திருப்பதால் அவனை எண்ணி வெப்பமான உணவு உண்பதையும் தவிர்க்கிறாள் என்பதனை,

“**நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்**

அஞ்சுதும் வேபாக் கறிந்து” [26]

எனும் குறளில் வள்ளுவர் உரைக்கின்றார். சங்க காலப்புலவர்கள் காதலர்க்கு எத்தகைய முன்னுரிமையைக் கொடுத்துள்ளார்களோ, அதைப்போன்றே வள்ளுவரும் தமது நூலில் கொடுத்துள்ளார். காதலில் களவிருந்தமையை,

“களவு என்றும் சொற் கண்டுழியெல்லாம்
அறப்போர் படாதென்றல் அமையாது
களவானது, பிறர்க்குரிய பொருள் மறையாற்
கோடல், இன்னதன்றி ஒத்தார்க்கும்

மிக்கார்க்கும் பொதுவாகிய கன்னியரைத்
தமர் கொடுப்ப கொள்ளாது, கண்ணியர்
தம் இச்சையினால் தமரை மறைத்துப்
புணர்ந்து பின்னும் அறநிலை வழாமல்
நிற்றலால் இஃது அறமெனப்படும்" [27]

என தொல்காப்பிய நூற்பாவில் இளம்பூரணர் விளக்கியுள்ளார். ஆகவே தலைவன் தலைவி இருவருக்கும் இடையே நிகழும் களவு, கற்பு, ஊடல், கூடல், பிரிவு என அனைத்தையும் சங்க இலக்கியப் புலவர்களைப் போன்று வள்ளுவரும் விளக்கியுள்ளார். பிரிவை பற்றியுணர்ந்த வள்ளுவர் பிரிவாற்றாமை என்னும் அதிகாரத்தில் மகளிர்க்குத் தம் குறிப்பறிந்து நட்புடைய தோழியரில்லாத ஊர்களில் வாழ்தல் எத்தனைக் கொடியதோ அதனினும் கொடியது தம் தலைவனைப் பிரிந்து வாழ்வது என்றக்கருத்தினை,

"இன்னா தினன்இல்லூர் வாழ்தல் அதனினும்
இன்னா தினியார்ப் பிரிவு" [28]

இக்குறள் மூலம் வள்ளுவர் விளக்குகிறார். அக்காலத்திற்கு மட்டுமன்று எக்காலத்திலும் காதலர்கள் எவ்வாறு இல்வாழ்க்கையில் வாழ வேண்டுமென்பதையும் இருவருக்கும் இடையேயான ஒழுக்க நெறிகளை இன்றைய சமுதாயத்தினரிடம் கொண்டு சேர்க்காததன் விளைவே விவாகரத்து, வரைவின் மகளிர், பிறன்மனை நோக்குதல், கணவன் மனைவி குடும்பச் சிக்கல்கள் போன்றவை ஏற்படுகிறது. இதனை தவிர்க்க,

"மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்" [29]

என்ற குறள்வழி, இன்றைய ஆண், பெண் இருவருக்கும் மிகச்சிறந்த சவுக்கடியைத் தந்துள்ளார். வாழ்க்கையின் பேரின்பம் எது என்பதை உணராதவர்கள் சமூகத்தில் திசைமாறிச் செல்கின்றனர். காதல் என்பதின் பாதையை இவர்களே மாற்றி கொள்கின்றனர். மேலும் தலைவன் தலைவிக்கிடையில் ஊடல் நடைபெறுவது இயற்கை. அதைச் சரிசெய்து கொண்டு நல்ல முறையினில் வாழ வேண்டுமென்பதை,

"ஊடுதல் காமத்திற்கு இன்பம்; அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்"[30]

எனும் குறளின் வழி இல்வாழ்க்கைக்கான அறிவுரையை வள்ளுவர் செப்பியுள்ளார். ஆகவே காதல் வாழ்வானது ஒரு குடும்பம் தழைத்தோங்கி

ஒருவரையொருவர் புரிந்து கொண்டு அன்போடு நன்மக்களை ஈன்று வாழ்ந்தால் இச்சமூகம் சிறப்படையும்.

அறத்தை வாழ்க்கை முழுமையும் கொண்டதால் குடும்பத்தை இல்லறம் என்றனர். வாழ்வின் அனைத்துக் கூறுகளிலும் மக்களைப்பெறுதல், விருந்தோம்பல், ஈகை, பொருள் ஈட்டல் எனக் குடும்பத்தேவைகள் அனைத்திலும் அறக்கலப்பு இருக்க வேண்டுமென்பதை வாழ்வியல் நெறியாகவே போற்றினார்கள். திருவள்ளுவர் இல்வாழ்க்கை, மக்கட்பேறு, விருந்தோம்பல், அன்புடைமை என்னும் அதிகாரங்களில் நாம் எத்தகைய வழிமுறைகளில் செயல்பட வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

2.4.0 அனைத்து அறங்களுக்கும் அடிப்படை இல்லறம்

வள்ளுவர் இல்லத்திற்கு முதன்மை தருவது அறத்தை நிலைபெறச் செய்ய வேண்டும் என்ற நோக்கமேயாகும். வள்ளுவரால் வகுக்கப்பட்ட மூன்று அதிகாரங்களிலும் உயர்ந்த நோக்கம் சமூகத்தை அடிப்படையாகக் கொண்டது. "தனிமனிதன் ஆணும் பெண்ணும் இயற்கை வழி நின்று குடும்பத்தளத்தின் வாயிலாகச் சமுதாயத்துக்கும், இனத்துக்கும் ஆற்ற வேண்டிய கடமைகளே அறமாகவும், அதுபோல, சமுதாயமானது குடும்பத்துக்கும் இனத்துக்கும் ஆற்ற வேண்டிய கடமைகளே பொருளாகவும் இனமானது குடும்பத்துக்கும் சமுதாயத்திற்கும் ஆற்ற வேண்டிய கடமைகளே இன்பமாகவும் இம்மூன்றின் மொத்த நோக்கம் இனக் குறிக்கோளாகிய இறையாகவும் முழு மொத்த வளமே இறைப்பேறாகிய பேரின்பமாகவும் திருவள்ளுவரால் கொள்ளப்பட்டுள்ளன."[31] என்று டாக்டர் இரா. அருளப்பா மொழிந்துள்ளார். குடும்ப வாழ்க்கையிலிருந்து இறைப்பேராகிய துறவரம் வரை அடிப்படையாக அமைவது இல்லறம்.

2.4.1 அறவழியில் பொருள் ஈட்டல்

இல்வாழ்வான் தாம் செய்ய வேண்டிய கடமைகள் அனைத்திற்கும் பொருள் இன்றியமையாதது. அப்பொருளையும் அறவழியில் ஈட்ட வேண்டும் என்பதை வள்ளுவனார்,

"பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்" [32]

இக்குறளின் வாயிலாகக் குடும்பத்தை ஆளுகின்ற தலைவனின் பண்பு நலன்கள் கூறப்படுகிறது. இல்வாழ்வானுடைய கடமைகளுள் தலைசிறந்தது

இயல்புடைய மூவரைப் போற்றுதல், மனைவியுடன் இல்வாழ்க்கைப் பணிகளைச் செம்மையுற செய்தல், சிற்றின்பத்தினை எண்ணாமை, தான்பெற்ற மக்களைச் சிறந்த சான்றோனாக்க நல்வழியில் பொருளீட்டி மேற்கண்ட புறக்கடமைகளைச் செம்மையுற ஆற்றவேண்டும்.

2.5.0 உழவனே அனைத்திற்கும் அடிப்படை

சங்ககாலச் சமுதாயம் உழவனிடமிருந்து தொடங்குகிறது. உழவனே வணிகன், அரசன், அந்தணன் எனப் படிப்படியாகக் காலந்தோறும் உருவாகி வந்திருக்கிறான். உழவுத்தொழில் செய்தவனே பின்பு கால நிலைக்கேற்ப விளைபொருட்களை விற்கும் வணிகனாகவும், அவ்வணிகன் பெருஞ்செல்வத்தைச் சேகரித்ததால் பலரை ஆதரித்துத் தனக்கென ஒரு கூட்டத்தை உருவாக்கி அக்கூட்டத்திற்கு அவனே தலைவனாகவும், நாளடைவில் அத்தலைவன் மக்கள் கூட்டத்தினை நல்வழிப்படுத்தி ஒழுங்காக வாழப் பல அறநூல்களை இயற்றி அந்தணனாகவும் ஆகியிருக்கிறான். அந்தணர் என்பது சாதிக்கு அப்பாற்பட்டது என்பதை வள்ளுவனார் 'அந்தணர் என்போர் அறவோர்' என விளக்கிக் கூறியுள்ளார்.

''பழங்காலச் சமுதாய அமைப்பின் வண்ணம் ஒருவனே முன்னர் உழவனாகிப் பின்னர் வணிகனாகிப் பின்னர், அரசனாகிப் பின்னர், அந்தணர் ஆகினான். அன்றியும் உடன்பிறந்தார் நால்வரில் ஒருவன் உழவன் ஆகவும், மற்றவன் வணிகன் ஆகவும், பின்னொருவன் அரசன் ஆகவும், வேறொருவன் அந்தணன் ஆகவும் இருந்தனர். இங்ஙனம் தமிழ்நாட்டில் மட்டும் அன்று, வடநாட்டில் மட்டும் அன்று உலகம் முழுவதிலும் உள்ளச் சமுதாய அமைப்பில் இருக்கின்றனர்''[33] என்று க. கிருஷ்ணசாமி நாயுடு அறிவுறுத்துகிறார்.

2.5.1 வேளாண்மை

வேளாண்மை என்னும் சொல் பொதுவாகக் கொடை, ஈகை ஆகியவற்றைக் குறிக்கும் நிலமானது தரும் கொடை என்பதலால் இப்பெயர் வழங்கியிருக்கலாம். ''வேளாண் என்னும் சொல் வெள்ளத்தை (நீரை) ஆள்பவன் என்னும் பொருளது''[34] இவ்வாறு நிலத்தோடு தொடர்புடைய வேளாண்மைத்தொழில் மனித இனத்தின் உயர்நிலைச் செயல்பாடாக அமைகிறது. விவசாயிகள் தங்கள் குடும்பங்களுக்குத் தேவையான உணவை

உற்பத்தி செய்து கொள்ளும்போது அந்தச் சமூகத்திலுள்ள மற்றவர்களுக்கும் பகிர்ந்தளித்த்தனால் வேளாண்மையைத் தவிர்த்து மற்றப் பணிகளில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு மனிதன் முன்னேற்றமடைந்தான். வேளாண்மைத் தொழில் பல நூற்றாண்டுகள் பழமையானது. இது பல்வேறு காலகட்டங்களில் நிலப்பரப்பிலும் விளைச்சலிலும் பெரிய அளவில் விரிவடைந்துள்ளது. இத்தகைய நிலையில் புதிய தொழில் நுட்பங்களும், பயிர்களும் இன்று ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. நீர்ப்பாசனம், பயிர்சுழற்சி, உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் போன்ற அனைத்தும் கடந்த நூற்றாண்டில் தான் பெரும் மாறுதல்கள் நிகழ்ந்தது.

5. 2 வான்சிறப்பு

"வான்சிறப்பு, மழையின் பெருமை, மழை கடவுள் என்ற ஒரு சக்தியை நினைவூட்டுகிறது. மழையினால் உலகம் அடைகின்ற நன்மையை எண்ணி, அந்த மழை இல்லாவிட்டால் உலகத்தில் உயிர்கள் துன்பத்தையும் நினைத்து அந்த மழையைத் தருகிற வல்லமையை வியந்து பாராட்டுகிறோம். அதனால் கடவுள் வணக்கத்துக்கு அடுத்ததாக வான்சிறப்பு சொல்லுகிறார்''[35] என்பர் நாமக்கல் கவிஞர். இயற்கையோடு இயைந்த வழிபாட்டுடன் கூடிய வாழ்க்கை முறையினை முன்னோர்கள் பின்பற்றி வாழ்ந்தார்கள். விண்ணையும், மண்ணையும், வளியையும், ஒளியையும் இறைவனாக வழிப்பட்டனர் என்பதை,

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் எனது என்றவரைக் கூத்தாட்டுவானாகி" [36]

இவ்வரிகள் மூலம் இறைவனை இயற்கையோடு பழந்தமிழர்கள் போற்றினர் என்பது புலப்படுகிறது.

2.5.3 வான்மழை

இயற்கையில் கிடைக்கின்ற அனைத்துப் பொருள்களிலும் மழை இன்றியமையாதது. மழையின்றேல் இவ்வுலகம் இல்லையென்பதை உணர்ந்த வள்ளுவனார் தாம் இயற்றிய வான்மறையில் கடவுள் வாழ்த்திற்கு அடுத்த நிலையில் வான்சிறப்பைப் போற்றுகின்றார். கடவுளின் அருள் வடிவாய் நின்று மழை பொழிந்து இவ்வையகத்தைக் காக்கின்றார் எனவும், தேவர்கள் வாழ அமிழ்தம் இன்றியமையாதது போல, மக்கள் அனைவருக்கும்

மழைநீர் அமிழ்தம் போன்றது என்பதனை,

"வானின் றுலகம் வழங்கி வருதலால்

தானமிழ்தம் என்றுணரற் பாற்று" [37]

மேற்கண்ட குறளில் மழையினால்தான் உலகத்தில் உள்ள உயிர்கள் இன்றும் நிலைபெறுகின்றது என்பதைத் தெளிவுபடுத்துகின்றார். மழை பொழிதலும், நீர்நிலைகள் நிரம்புவதும் ஆவியாகி மீண்டும் மேலே சென்று மேகங்களாய்த் திரண்டு மீண்டும் மழைநீராய்ப் பூமியை அடைவதும் இயற்கையின் சிறப்புகள். இடைவிடாத இந்நிகழ்வு இறையருள் என்றுணர்ந்த இளங்கோவடிகள்,

"மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்
மேல்நின்று தான் சுரத்தலான்" [38]

என்று வான்சிறப்பைப் போற்றுகின்றார். மழைநீர் மலைகளிலே பிறந்து பல நதிகளிலே ஓடிப் பல நிலைகளில் படர்ந்து சென்று அனைத்து உயிர்களைக் காக்கின்றது. அதனைப் போலவே இறைவனும் பல வடிவங்களில் தோன்றி உலகினைப் பேணுகின்றான் என்பதனை,

"கல்லிடைப் பிறந்த போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையில் மறைகளாலும் இயம்பரும் பொருள் ஈதென்னத்
தொல்லையில் ஒன்றே ஆகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சி
பல்பொருள் சமயம் சொல்லும் பொருளும் போல் பரந்த ஒன்றே" [39]

எனக் கம்பரும் மழையை இறையோடு இணைத்துப் போற்றுகின்றார். எனவே அனைத்து உயிர்கள் வாழ்வதற்கும் இன்றியமையாது விளங்கும் மழைநீரைப் போற்றி காக்க வேண்டும்.

2.5.4 மழையும் பசியும்

விண்ணிலிருந்து மழை பொய்க்குமானால் மண்ணிலுள்ள உயிர்கள் அழிவுற்று பல கொடிய கேடுகள் நிகழ்வதோடு உலகம் பசி துன்பத்தினால் இன்னலுற்றுச் சமுதாயம் மக்கள் வாழத்தகுதியற்றதாக மாறும் என்பதனை,

"குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்வி பெரும்புணை விடுஉம்
நாண் அணி களையும் மாண் எழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி" [40]

என்னும் மணிமேகலை செய்யுள் விளக்குகிறது. ஆகவே உலகில் இத்தகைய கொடுமைகள் நிகழா வண்ணம் காப்பது மழையே என்பதனை வள்ளுவனார்,

"விண்இன்றி பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின் றுடற்றும் பசி"[41]

இக்குறள் வழி தெளிவுபடுத்துகின்றார். நெருப்பினுள்ளும் உறங்கலாம்; ஆனால் ஒருவன் பசியினால் உறங்க முடியாது என்பதனை அனைவரும் அறிவார்கள். மழைவளம் குன்றியதனால் மக்களின் வாழ்க்கை நிலை திரிந்து இன்றும் சில நாடுகளில் அடிப்படைத் தேவைகளான உண்ண உணவு இன்றி பசியால் இறக்கும் குழந்தைகள் ஏராளம். எனவே பசியின் கொடுமையினால் ஒருவன் எத்தகைய தீமையான செயல்களையும் செய்ய நேரிடுகிறது.

2.5.5 உணவும் நீரும்

நமக்குத் தேவையான உணவுப்பொருட்களை உற்பத்தி செய்து கொடுப்பது மட்டுமன்றி உண்ணும் உணவாகவும் பருகும் நீராகவும் உயிரினங்களை வாழவைப்பது மழையென்பதை,

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை" [42]

இக்குறள் வழி வள்ளுவர் எடுத்துரைக்கின்றார். இல்லறத்தார்க்கு மட்டுமின்றித் துறவரம் பூண்டு தவயோகிகளுக்கும் மழையானது தேவையாகின்றது. விண்ணுலகில் இருந்து வருவதனாலேயே வானுலகில் இறைவன் இருப்பதாக மக்கள் எண்ணிக்கொண்டுள்ளனர். ஆகவே உயிர் உடலில் நிலைத்திருப்பதற்கு உணவும் நீரும் அடிப்படையாக விளங்குகிறது.

2.5.6 மழையும் ஒழுக்கமும்

உலகம் நிலைபெறுவதற்கு மட்டுமல்ல, ஒழுக்கம் நிலைபெறுவதற்கும் மழை மிகவும் இன்றியமையாதது. உலகம் நிலைபெறுவதற்கு இறைவனுடைய அருளும் ஒழுக்கம் நிலைபெறுவதற்கு மழையின் அருள் வேண்டுமென்பதை,

"நீரின் றமையா உலகம் போலத்
தம்மின்று அமையா நம்நயந்தருளி
நறுநுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை யுறுபவோ செய்பறி யலரே" [43]

என்று நற்றிணையும், மேலும்

"நீரின்றி அமையா யாக்கைக்கு எல்லாம்" [44]

எனப் புறநானூறும்,

"மழையின்றி மாநிலத்தார்க்கு இல்லை" [45]

இவ்வாறு நான்மணிக்கடிகையும் நீரின் இன்றியமையாச் சிறப்புகளை எடுத்துரைக்கின்றது. ஆனால் வள்ளுவர் இதனினும் உயர்ந்த ஒழுக்கமும் மழையினால் உண்டாகிறது என்பதனை,

"நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்

வானின் றமையா தொழுக்கு" [46]

இக்குறளின் மூலம் மழை வள்ளுவரின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்திருப்பதனால் தான் இறையையும் மழையையும் அடுத்தடுத்து இணைத்துள்ளார். கடல் வளமும், நிலவளமும், மனவளமும், மழைவளத்தால் தான் பெறமுடியும். ஏனெனில் ஆக்கவும், அழிக்கவும், காக்கவும் வல்ல சக்தி கொண்டதோடு மக்களைப் பஞ்சத்தால் தவிக்கவிட்டுத் துன்பத்தைத் தருவதும் அவற்றில் இருந்து விடுபட்டு நல்லொழுக்க நெறிகளில் வாழவைப்பதும் மழையேயாகும்.

2.5.7 நீரும் இன்றைய தேவையும்

நீர் என்பது தண்ணீர், கண்ணீர், புண்ணீர் எனக் கூறலாம். ஒருவனுக்கு அடிப்படைத் தேவை தண்ணீர். துன்பத்தினால் ஏற்படுவது கண்ணீர். இன்பத்தின் எல்லை ஆனந்தக்கண்ணீர். நாம் இயற்கையில் கிடைக்கும் நீரினைச் சரியாகப் பராமரிக்காமல் அடுத்த தலைமுறைக்குப் பெரும் கண்ணீரைக் கொடுக்கிறோம். மழையானது கொடுக்கவும் செய்கிறது கெடுக்கவும் செய்கிறது என்பதை வள்ளுவனார்,

"கொடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே

எடுப்பதூஉம் எல்லாம் மழை" [47]

எனும் குறளில் விளக்கம் தருகிறார். டிசம்பர் மாதம் 2ஆம் தேதி 2015ல் சென்னை பெறும் தண்ணீரில் மிதந்தது. ஆனால் அடுத்தாண்டு டிசம்பர் 2ம் தேதி 2016ல் தண்ணீர் இன்றி கண்ணீரில் மிதந்தனர். இதைத்தான் வள்ளுவர் நமக்கு அன்றே உணர்த்துகிறார். தனிமனிதனும் ஆட்சியாளர்களும் சுயநலத்தோடு பொருள் தேடுகிறோம். ஆனால் நீரின் இன்றியமையாமை மனதில் கொள்வது இல்லை. அரசு இவற்றை திட்டமிட்டு செய்ய வேண்டும். தண்ணீரைச் சேமிக்கப் பல்வேறு தொழில் நுட்பங்கள் இருந்தாலும் அரசின்

அலட்சியப் போக்கால் இன்று படும் துயர் அதிகம். ஆனால் இதைவிட எதிர் காலத்தில் பெரும்பாதிப்பை ஏற்படும்.

ஏனெனில் தண்ணீரைச் சேமிக்க இன்றைய ஆட்சியாளர்கள் எந்த முறைகளையும் பின்பற்றவில்லை. பருவ மழைக்காலத்தில் வரும் மழைநீரை முறையாகத் தேக்கி வைக்காமல் வீணாகக் கடலில் விட்டுவிடுகின்றனர். குலங்கள், ஏரிகள், ஆறுகள் போன்றவற்றைத் தூர்வாராமல் இருப்பதனாலும் புதிய தடுப்பணைகள் ஏற்படுத்தாமல் இருப்பதனாலும் மழைநீர் பயனற்றுப் போகிறது. எத்தனையோ தேவையற்ற இலவசங்களுக்குப் பணத்தை விரையமாக்கும் அரசு இதுபோன்ற ஆக்கப்பூர்வமான செயல்களை மேற்கொள்ள வேண்டும்.

மழையின் தேவையினை உணர்ந்து பல மாநிலங்கள் செயல்படுத்துகின்றன. ஆனால் தமிழக அரசானது மேற்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தாமல் பிற மாநிலங்களிருந்து தண்ணீரைப் போராடிப்பெற்றுக் கொண்டிருக்கிறது. இவற்றை உணர்ந்து இந்திய அரசாவது அனைத்து மாநில ஆறுகளையும் இணைத்து மக்கள் பயனடையும் வகையில் விரிவான திட்டத்தினைச் செயல்படுத்த வேண்டும்.

2.5.8 நிலமென்னும் நல்லாள்

ஆணும் பெண்ணும் எவ்வாறு ஒருவரையொருவர் சார்ந்துள்ளார்களோ அதைப்போல மக்கள் உழுது உண்டு வாழ நீரும் நிலமும் இன்றியமையாததாகிறது. இப்பரந்த உலகில் நிலங்கள் பலவிருந்தும் வீணாக வறுமையால் வாழ்கின்ற மக்களைக் கண்டால் நிலம் நகைக்கும். ஏனெனில் தனக்குப் பொருளில்லை என்றும் வேலையில்லை என்றும் அடுத்தவர்களைப் பார்த்து பொறாமை கொல்வதோடு தான் முன்னேற வேண்டும் என்ற தன்னம்பிக்கை இல்லாதவர்கள் என்பதனை,

"இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்" [48]

என்னும் குறள் கூறியுள்ளது. அனைத்து வகையான செல்வங்களும் இப்பூமிதனில் இன்றும் ஆங்காங்கே அவரவரின் தேவைகளுக்கேற்ப பெற்றுக் கொண்டேதான் இருக்கிறார்கள். ஒருபுறம் வேளாண்மையும், இன்னொருபுறம் மலைகளும், காடுகளும், கடல்களும், எண்ணெய்

வித்துகள், தங்கம் போன்ற ஆபரணங்கள் மேலும் கிடைத்தற்கரிய அரியச் செல்வங்கள் அனைத்தையும் கொடுத்துக்கொண்டேதான் இருக்கிறது. ஆனால் இவற்றை விடுத்து எனக்கு ஏதுமில்லை என்று கூறுபவர்களைப் பார்த்து நிலமானது ஏளனமாகச் சிரிக்கும் என வள்ளுவர் கூறுகிறார்.

அனைத்துத் தொழிலுக்கும் வித்தாக அமைவது நிலமாகும், இந்நிலத்தில் இல்லாத வளங்கள் இல்லை, அனைத்து வளங்களும் இவற்றினுள் புதைந்து கிடக்கின்றது. இவையனைத்தையும் எவ்வாறு கையாள்வது என்று தெரியாமல் நாம் இன்றும் மலைக்கிறோம். ஏனெனில் பூமிதனில் மூன்று பங்கு தண்ணீராலும் ஒருபங்கு நிலத்தாலும் சூழ்ந்துள்ளது. இங்கு எந்தெந்த வளங்கள் இருக்கின்றது என்பதை அறிவியல் தொழில் நுட்பத்தின் உதவி கொண்டு பயன்படுத்தி வருகிறோம்.

இயற்கை வளங்களைப் பெற்றுக்கொண்டு மனிதர்களால் ஏற்படும் தீமைகளின் தாக்கமே பருவநிலை மாற்றம், காற்று மாசுபாடு, குடிநீர் தட்டுப்பாடு, பூமி வெப்பமாதல், காடுகளை அழித்து நிலத்தின் தன்மையினை மாற்றுகிறோம். வேளாண்மையில் செயற்கை உரங்களைப் பயன்படுத்துவதாலும் மலட்டுச்செடிகள், முள் போன்றவைகளை உபயோகிப்பதாலும் மண்ணின் தன்மை மாறுவதோடு ஓசோன் மண்டலம் பாதிப்படைகிறது, இதன்மூலம் மலைகளில் உள்ள பனிக்கட்டிகள் உருகிக் கடலின் நீர்மட்டம் உயர்கிறது. நிலத்தின் அளவு குறைகிறது. அதனால் தான் நம் முன்னோர்கள் இயற்கையை இறைவழிபாட்டுடனும் வேளாண்மையைச் சார்ந்தும் பண்பாட்டு பழக்க வழக்கங்களோடும் போற்றினார்கள். அவற்றை விடுத்துச் செயற்கையை அதிகரிக்கத் தொடங்கியதால் தான் இன்று பூமி நமக்குப் பல்வேறு இன்னல்களைத் தந்து நம்மை அறிவுறுத்துகின்றது.

2.5.9 உழவே தலை

வள்ளுவர் காலத்தில் தமிழ்ச்சமுதாயம் உழவுத் தொழிலையே அடிப்படையாகக் கொண்டு விளங்கியது. பிற தொழில்களைப் பற்றி ஆங்காங்கே குறிப்பிட்ட வள்ளுவனார் உழவுக்காகத் தனியொரு அதிகாரமே படைத்துள்ளார். ஏனெனில் இது தொழில் மட்டுமின்றி உழவன் 'பசிப்பிணி மருத்துவன்' ஆவான். எத்தொழில் செய்பவரானாலும் உணவை உண்டுதான்

உயிர்வாழ முடியும். அமைச்சர், படைவீரர் போன்ற பிறர் செல்வ வளம் மிக்கவராக இருப்பினும் ஒரு தலைவனுக்குக் கீழ்ப்பட்டு வாழ்கின்றான். ஆனால் இவனோ அத்தலைவனுக்காக உணவினை உற்பத்தி செய்வதால் அனைவரைவிடவும் உழவனே உயர்ந்தவன் என்பதனை,

"சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனால்

உழந்தும் உழவே தலை" [49]

இக்குறளின் மூலம் வள்ளுவர் உழவின் சிறப்பை அறிவுறுத்திச் செல்கிறார். மேலும் உழவனின் இலக்கணத்தினை,

"நன் புலத்து வை அடக்கு, நாளும் ஏர் போற்றி

புன் புலத்தைச் செய்து, எரு போற்றிய பின் நன் புலக்கண்

பண் கலப்பை பாற்படுப்பான் உழவன் என்பவே

நுண் கலப்பை நூல் ஓதுவார்"[50]

சிறுபஞ்சமூலப் பாடல் உழவனின் தினசரிச் செய்கைகளான எருதுகளைக் கொண்டு உழவிடுதல், காடுகளைத் திருத்துதல், வைக்கோல் போர்களைப் பாதுகாத்தல் போன்றவைகளை விளக்குகிறது. மேலும் உழவின் உயர்வினை,

"**ஆற்றங்கரையின் மரமும், அரசு அறிய**

வீற்றிருந்த வாழ்வும் வீழும் அன்றே ஏற்றம்

உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பு இல்லை கண்டீர்

பழுது உண்டு வேறு ஓர் பணிக்கு"[51]

மேற்கண்ட பாடலில் நல்வழி ஆசிரியர் உழவின் உயர்வுகளை ஆற்றங்கரையில் உள்ள மரம் கூட ஒருநாள் வீழ்ந்துவிடும். ஆனால் உழவனின் பெருமை ஒப்பற்றது எனப் போற்றுகின்றார். அதிவீரராம பாண்டியன் தம் வெற்றி வேட்கையில்,

"வித்தும் ஏரும் உளவா இருப்ப,

ஏய்த்து அங்கு இருக்கும் ஏழையும் பதரே" [52]

விதை நெல்லும் ஏர் கலப்பையும் தம்மிடம் இருக்க அவற்றைக் கொண்டு உழைத்து வாழாதவர் பதருக்கு நிகரானவர் எனத் தூற்றுகின்றார். அதைப் போன்று உழவின் சிறப்பினை,

"யானை நிரையுடைய தேரோ ரினுஞ் சிறந்தாத

எனை நிரையுடைய ஏர்வாழ்நர் – யானைப்

படையோர்க்கும் வென்றி பயக்கும் பகட்டே
ருடையோர் கரசரோ வொப்பு" [53]

என்னும் செய்யுளில் யானைப்படை, தேர்ப்படை கொண்ட அரசனைவிட உழவனே சிறந்தவன் எனக் கூறுகின்றது. ஆகவே உடல் உரமாய் விளங்க உணவு மிகவும் இன்றியமையாதாகும். அவ்வுணவினை அடிப்படையாகக் கொண்டுதான் அரசர், அமைச்சர், அறிஞர், பாவலர், படைவீரர் என யாவராகயிருப்பினும் உயிர்வாழ முடியும். ஆகவே அனைவருக்கும் தேவையான உணவினை அருளும் உழவன் போற்றுதற்கும் நன்றிக்கும் உரியவனாகிறான். வெள்ளைக்குடி நாகனார் என்னும் புலவர் உழவரது மாண்பைக் கூறுமிடத்து பிற அரசர் படையெடுத்துவரின் அவர் எதிர்ப்பைத் தாங்கி புறங்கொடுத்து ஓடக்கண்டு ஆரவாரம் செய்யும் படைவீரரின் வெற்றியும், உழவர்தம் உழவு கருவியால் ஏற்படுத்தப்பட்ட சால்களினால் விளையும் நெல்லின் பயனை பின்வரும் செய்யுளில்,

"வருபடை தாங்கு பெயர்புறத் தார்த்துப்
பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே"[54]

என்று புறப் பாடல் வழி எடுத்துரைக்கின்றார்.

2.5.10 உலகத்தார்க்கு ஆணி

உழுகின்றவர்கள் தங்களைத் தேய்த்துக்கொண்டு உலகையே வாழ வைப்பதனால் உலக தேருக்குக் கடையாணி போன்ற காப்பாளர்களாகவும், மற்ற அனைவருக்கும் உணவளித்து அவர்களைத் தாங்கி கொண்டிருப்பதனை,

"உழுவார் உலகத்தார்க் காணியஃ தற்றா
தெழுவாரை எல்லாம் பொறுத்து" [55]

இக்குறள் மூலம் விளக்குகிறார். இவ்வுலகில் பல தொழில்கள் செய்தாலும் அவற்றுள் உழவுத்தொழிலினால்தான் இவ்வுலகம் நிலைபெறுகிறது.

2.5.11 உழவின்மையின் விளைவுகள்

உலகிற்கு உணவிடுபவன் உழவன், அவனே உணவின்றி இறக்கிறான் என்பது எத்தகைய கொடுமையான ஒன்று. இன்றைய உழவனின் நிலை இதுதான். 'உழைத்தவன் கணக்கு பார்த்தால் உழக்குகூட

மிஞ்சாது' என்பது கிராமத்துப் பழமொழி. சொந்த உழைப்பினால் சோறுண்ணும் இயல்புடையவர்கள் உழவாளிகள் பிறர்க்குக் கொடுத்துதவும் பண்புடையவர்கள் என்பதனை,

"இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது

கைசெய்தூஉண் மாலை யவர்" [56]

இக்குறளில் தன்னால் தர இயலாமல் போனாலும் இயன்றளவு கேட்பவர்களுக்கு இல்லை என்று எண்ணாமல் சிறிதேனும் கொடுக்கும் உள்ளம் கொண்டவர்கள் என்பது புலனாகிறது. உழவுத் தொழிலையே உயிராகப் போற்றுகின்றனர், 'தொழில் கெடின் உயிர் கெடும்' என்று வாழுபவர்களை இன்றும் காண முடியும். இவர்கள் இல்லையென்றால் அனைத்தையும் துறந்த துறவிகளும் இப்பூமிதனில் வாழ முடியாது என்று வள்ளுவர் கூறுகிறார். அவ்வாறு நிலமிருந்தும் உழவு செய்யாதவர்கள் கெட்டழிவார்கள் என்பதனை,

"கிளைஞர்க்கு உதவாதான் செல்வமும் பைங்கூழ்

விளைவின்கண் போற்றான் உழவும், இளையானாய்க்

கள் உண்டு வாழ்வான் குடிமையும், - இம்மூன்றும்

உள்ளன போலக் கெடும்"[57]

மேற்கண்ட திரிகடுகப்பாடலில் உறவினரைப் பேனாதவனும் பயிர்களைக் காப்பாற்றாத உழவனும், சிறுவயதில் கள் குடிப்பவர்களின் குடிகள் அழிந்துவிடும் என்று எடுத்துரைக்கிறார். இக்கருத்தினை ஒற்றியே பாரதியும்,

"உழவுக்கும் தொழிலுக்கும்

வந்தனை செய்வோம் – வீணில்

உண்டுகளித் திருப்போரை

நிந்தனை செய்வோம்"[58]

என்று சாடுவதோடு உழவுத்தொழில் மிகவும் அத்தியாவசியமானது என்று நமக்கு அறிவுறுத்துகிறார்.

2.512 உழவும் காப்பும்

அரசன் மக்களைக் காப்பது போல விவசாயி பயிர்களைக்காக்க வேண்டுமென்றும், பயிர் செய்யும் முறைகளையும் அதன் நுணுக்கத்தைப் பற்றியும் வள்ளுவனார்,

“ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்

நீரினும் நன்றிதன் காப்பு”[59]

இக்குறளில் உழுவதா அல்லது எருவிடுவதா என்ற கேள்வி எழும் போது எருவிடுதல் சிறந்தது என்றும், எருவிடாத போது நன்கு உழுதல் சிறந்தது என்றுரைக்கிறார். நல்ல முறையினில் ஏர்கொண்டு உழுதலும், பயிருக்கு ஏற்றவாறு அடியிலும், பயிர் வளர்ந்த பின்னரும் அதற்குத்தக்க உரமிடுதலும் அதன்பின் பயிரின் தன்மைக்கு ஏற்ப நீர்ப்பாய்ச்சலும், மேலும் பயிர்களை விலங்குகளிடமிருந்தும் மற்றத் தேவையற்ற செடிகளைக் களைந்தும் பாதுகாக்க வேண்டியது அவசியம் என்பதை அன்றே நமக்கு அறிவுறுத்தியுள்ளார்.

2.5.13 அறிவியலும் இன்றைய வேளாண்மையும்

வேளாண்மை இன்று படர்ந்து பெருகிய ஒரு அறிவியல் துறைகளாக விளங்குகிறது. எத்தகைய வழிமுறைகளைக் கையாள வேண்டும் என்று ஆராயப்படுவதோடு மட்டுமல்லாது அவற்றுள் பல உட்பிரிவுகளாகப் பிரிந்து வளர்ச்சியடைந்து கொண்டே வருகிறது. நவீன வேளாண்மையில் எம். எஸ் சுவாமிநாதன் அவர்களின் பங்கு அளவிடற்கரியது. அவரே புதிய வேளாண் உபகாரங்களையும், இடுபொருள்களையும் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தார்.

2.5..14 வேளாண்மையியல் (agriculture)

உழவியல், மண்ணியல், பயிரியல் விதையியல் பூச்சியியல், நோயியல், தோட்டவியல் போன்ற பலத்துறைகளில் நாம் எத்தகைய வழிமுறைகளைக் கையாள வேண்டும் என்று இன்று ஆராயப்பட்டு வருகிறது. இவை மட்டுமன்றிக் கால்நடை வளர்ப்பு, அதற்கான பராமரிப்பு, மருத்துவம் போன்றவையும் கண்டறியப்படுகிறது. அதைபோன்றே வேளாண்மையில் புதிய புதிய தொழில் நுட்பத்தை எவ்வாறு பயன்படுத்தலாம் என்றும், பயன்படுத்தினால் ஏற்படும் விளைவுகளும் ஆராயப்படுகிறது. மேலும் இது போன்று பல பிரிவுகளிலும் புதிய கோணங்களிலும் வேளாண்மையானது ஆராயப்பட்டு வருகிறது. இவற்றையே,

“அருவினை யென்ப உளவோ கருவியாற்

கால மறிந்து செயின்”[60]

என்னும் குறளில் எந்த ஒரு செயலை வெற்றிகரமாக முடிப்பதற்குக் கருவிகள் அவசியம் என்பதை நமக்குத் தெளிய வைக்கிறார். நம் பயன்பாட்டில் உழவுக்கும், களையெடுப்பதற்கும், உரமிடுவதற்கும், அறுவடைக்கும் எனப் பல்வேறு கருவிகளினால் வளர்ச்சி அடைந்துள்ளோம். மேலும் மண்ணியல் ஆராய்ச்சி, நீரியல் ஆராய்ச்சி, பயிரியல் ஆராய்ச்சி எனப் பல நிலைகள் இருந்தாலும் அனைத்திற்கும் வள்ளுவனார் அன்றே அடிகோலியுள்ளார். மண்ணின் தன்மையினை,

“உளரென்னும் மாத்திரைய ரல்லால் பயவாக்

களரனையர் கல்லா தவர்”[61]

என்ற குறளில் களர் நிலம் விளைவுக்குப் பொருந்தாத தன்மையுடையது இதனை 'சவட்டு நிலம்' என்றும் 'உவர் நிலம்' என்றும் கூறுவர். இவை பெரும்பாலும் நெய்தல் நிலத்தில் காணப்படும். இங்கு விவசாயம் செய்ய இயலாது என்பதை அறிந்து நமக்கு அன்றே தெளிய வைத்துள்ளார்.

2.5.15 வேளாண்மையின் இன்றைய நிலையும் நாளைய தேவைகளும்

மனிதனுக்கு உணவு இன்றியமையாதது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் இன்று விளைவிக்க நிலமும் இல்லை, உழைக்க யாரும் தயாராகவும் இல்லை. ஏனெனில் எந்த ஒரு பொருளையும் தயாரிப்பவர் தான் பெரும்பாலும் விலைநிர்ணயம் செய்கிறார்கள். ஆனால், இங்கு தலைகீழாய் நடைபெறுகிறது. இலாபமின்மையும், பருவநிலை மாற்றமும், இடுபொருட்கள் விலையேற்றம், சேமிப்பு வசதியின்மை போன்ற குறைபாடுகலாள் வேளாண்மையைச் சிதைத்துக் கொண்டிருக்கிறது. இவையனைத்தையும் தாண்டி விளைநிலங்கள் வீட்டுமனைகளாக மாற்றப்பட்டு வருவதால் பல்வேறு இன்னல்களுக்கு விவசாயிகள் ஆளாகின்றனர். அதனால்தான் விவசாயம் செய்யப் பெரும்பாலானோர் முன்வருவதில்லை. இத்தகைய பொருளாதாரச் சிக்கல்களில் சிக்கிச் சின்னாபின்னமாகிப் போவதால் உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டு உணவுப் பஞ்சம் ஏற்படுகிறது. இந்நிலையைத்தான்,

“தனியொரு மனிதனுக்கு உணவில்லை எனில்

இந்தச் சகத்தினை அழிப்போம்” [62]

என்று சூளுரைத்தான் பாரதி. ஆனால் உழவனுக்கு உணவில்லாமல் மாண்டு போகும் கொடுமை இங்கு அரங்கேறிக் கொண்டிருக்கிறது. இவற்றைச் சரி செய்யவேண்டிய அரசின் கவனமின்மையால் மக்களுக்கு அடிப்படையான உணவில்லாததால் அவர்களின் வாழ்க்கைத்திரியும் என்பதை அறிந்து, விவசாயிகளுக்குத் தேவையான கட்டமைப்புகளை உருவாக்க வேண்டியது அரசின் கடமையாகும்.

இவற்றை விடுத்து வெளிநாட்டு நிறுவனங்களுக்குப் பல சலுகைகளைக் கொடுக்கும் அரசு நம் விவசாயிகளைக் கண்டு கொள்ளவில்லை என்பது நிதர்சனமான உண்மையாகும். தமிழக விவசாயிகள் டெல்லியில் பலர் மத்தியில் தங்களின் குறைகளைப் பிரதம மந்திரியிடம் கூற வேண்டும் எனப் பலகட்ட போராட்டங்களை நடத்தியும் இறுதி வரை அவர்களைக் கண்டுகொள்ளவில்லை. ஆகவே தம் உயிரைவிட மானம் பெரிது என வாழ்ந்த தமிழன், ஏப்ரல் 23, 2017ம் தேதி பிறந்த மேனியாக ஆடை இல்லாமல் டெல்லி ஜந்தர்மந்தரில் போராட்டம் நடத்தியதோடு மட்டுமல்லாது மலம் தின்னும் போராட்டமும் நடந்தேறியது. இப்போராட்டம் அவர்களுக்கு மானத்தைக்காக்க மட்டுமல்ல எதிர்கால வழித்தோன்றலின் உயிர்களையும், உரிமைகளையும் காக்க வேண்டும் என்ற உணர்வினால் நிகழ்ந்தது. இதனைத்தான் வள்ளுவர்,

“உரமொருவற் குள்ள வெறுக்கை அஃதில்லார்

மரம்மக்க ளாதலே வேறு”[63]

என்ற குறளில் அன்றே உரிமையென்பது மனவுறுதியெனக் குறிப்பிடுகிறார். அவர்களின் உணர்வுகள் சிதைக்கப்பட்டதன் விளைவுதான் அந்நிகழ்வு. நிகழ்ந்தவற்றில் உள்நோக்கம் இருக்கிறதா அல்லது அதிலும் அரசியல் சாயம் உள்ளதா என்பது வேறு. இருப்பினும் விவசாயிகள் வஞ்சிக்கப்படுகிறார்கள். வெளிநாட்டு குளிர்பானத் தொழிற்சாலைக்குத் தடையின்றித் தண்ணீர் தரும் அரசு வேளாண்மைக்குத் தேவையான நீரினை சேமிக்க புதிய அணைகளை கட்டுவதில்லை.

மேலும் பல நிறுவனங்களுக்குச் சலுகைகளை அள்ளிக்கொடுக்கும் அரசு தரும் விளக்கம் சிலருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தருகிறோம்

என்று, ஆனால் உணவு தரும் விவசாயிகளின் உழைப்பு இங்கு மறைக்கப்படுகிறது இவர்களுக்குத் தரவேண்டியது சலுகைகள் அல்ல, தேவையான விலை. அவர்களுக்கான தகுந்த விலையைத்தான் கேட்கிறார்கள். குண்டூசி தயாரிக்கும் நிறுவனம் அதற்கான விலையை வாங்கும் போது பல நாட்கள் உழைக்கும் விவசாயிகளுக்குத் தருவதில் சிரமம் கொள்கின்றனர் ஆட்சியாளர்கள். அவர்களின் ஊதியத்தை மட்டும் உயர்த்தி கொண்டே செல்வதோடு, இதற்காக யாரிடமும் கேட்பதில்லை. இத்தனை துன்பத்தினைத் தாங்கிக்கொண்டு இன்று பயிர்செய்யும் அனைவரையும் வள்ளுவர் ஆற்றுப்படுத்துவதை,

"தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்

மெய்வருத்தக் கூலி தரும்" [64]

இக்குறளில் இறைவனால் கூட ஒருசில செயல்கள் கைவிடப்பட்டாலும் அதற்கான முயற்சியின் பயன் வீண்போவதில்லை என்று அனைவருக்கும் ஆறுதல் கூறுகிறார். உண்மைதான் எத்தகைய துன்பம் வந்தாலும் இன்றும் வேளாண்மை நடந்துகொண்டுதான் இருக்கிறது. இவை மேலும் சிறப்படைய வேண்டுமென்றால் இறையருளும், ஆட்சியாளரின் செயல்பாடுகளும், நம் அனைவரின் ஒத்துழைப்பும் இருக்குமானால் வேளாண்மையின் மூலம் வணிகம்பெருகி தொழில் வளம் சிறப்புற்று மக்களின் வாழ்க்கைத்தரமும், நாட்டின் பொருளாதாரமும் சிறப்படையும்.

2.6.0 பண்டைய மக்களின் வளம்

தமிழர் பன்னெடுங்காலமாக வளமாக வாழ்ந்தனர். குறிஞ்சி நிலத்தில் இயற்கையாகக் கிடைத்த காய்கள், கனிகள், தேன் முதலியவற்றோடும், முல்லை நில மக்கள் ஆடுமாடுகளை மேய்த்து அதன் மூலம் கிடைக்கும் பொருட்களோடும், நெய்தல் நில மக்கள் கடல் சார்ந்த பொருட்களான உப்பு, மீன் வகைகள், முத்து போன்றவைகளையும், மருத நிலத்தில் வாழ்ந்தவர்கள் நிலத்தினைப் பக்குவப்படுத்தி நெல், கரும்பு, வாழை ஆகியவற்றை உற்பத்தி செய்து வளமாக வாழ்ந்தனர். மேலும் பழந்தமிழகம் எத்தகைய வளம் பொருந்தியது என்பதை,

"ஒருபடி படியும் சீறிடம்

எழுகளிறு பரக்கும் நாடு கிழவோயே" [65]

என்று மருத நிலத்தின் வளத்தினை ஆவுர் மூலங்கிழனார் புறப்பாடலில் ஒரு

பெண்யானை படுக்கும் இடத்தில் பயிரிட்டால் அவ்விடத்தில் ஏழு ஆண் யானை உண்ணும் அளவிற்குச் சோழநாடு வளமுடையது என்கிறார். மேலும் பறம்பு மலை வளத்தினை,

"உழவர் உழாகன நான்கு பயன் உடைத்தே

.....

வான்கண் அற்று அவன் மலையே; வானத்து

மீன்கண் அற்று அதன் சுனையே" [66]

எனும் பாடலில் உழவர் உழுது விளைவித்த பொருட்களைத் தவிர இம்மலையில் உழாமலே பலாவும், நெல்லும், வள்ளிக்கிழங்கும் தேனும் கிடைப்பதாக கபிலர் பாடுகின்றார். மழைநீர், அருவிநீர், சுனைநீர் வளம் தருகின்றது. ஆகவே, நெய்தல் நில மக்கள் பரதவர், மருத நிலமக்கள் உழவர், குறிஞ்சி நிலமக்கள் குறவர், முல்லை நிலமக்கள் ஆயர் என அனைவரும் தங்களுக்குள் தேவையான அனைத்தையும் விளைவித்து அதனைப் பகிர்ந்து கொண்டு வாழ்ந்தனர்.

2.6.1 தொழில்கள்

சங்க காலச்சமுதாயம் பொருளாதாரத்தில் மிளிர்ந்தோங்கினாலும் கலைஞர்கள், புலவர்கள் முதலானோர் தம் தேவைகளுக்காக மன்னர்களை மட்டுமே சார்ந்து வாழ்ந்தனர். "தொல்காப்பியனார் சமுதாயத்தில் உழைத்துண்ணாமல் பிச்சை எடுத்து வாழும் இரப்பவர் இலர். தமது கலைகளுக்கு இரவலாகப் பொருட்களைப் பெற்று வாழும் இரவலர் உளர். சங்க இலக்கியச் சமுதாயத்திலும் பிச்சை எடுக்கும் இரப்போர் இல்லை. கலைஞராகிய இரவலரையே காண்கிறோம்"[67] என்று பண்டிதர் அ.கி. நாயுடு கூறியுள்ளார். மேலும் "மதுரைக் காஞ்சியில் நெசவாளர் கம்மியர் எனப்பட்டனர். கம்மியர் என்பது நெசவாளருக்கு மட்டுமின்றிப் பொதுவாகத் தொழில் செய்வோர் அனைவருக்கும் வழங்கப்பட்டது. சிற்ப நூல் முறைப்படி மனைகள், நகரங்கள் வகுத்தோரைக் கைவல் கம்மியர் என நெடுநல்வாடையும், செப்புப் பானை கடைவோரைக் கம்மியர்"[68] என நற்றிணையும் குறிப்பிடுகின்றது. அதைப்போலவே "நூற்புத் தொழில்களுக்குரிய பணிக்குப் பெண்கள் அமர்த்தப்பட்டனர்."[69] கைம்பெண்டிர் இதனைப் பிழைப்புத் தொழிலாகக் கருதினர் என்பதனை,

“பருத்திப் பெண்டின் பதுவல்”[70]

எனும் புறப்பாடல் விளக்குகிறது. இதைப்போன்றே,

“கார்க் கரும்பின் கமழாலை”[71]

என்ற பட்டினப்பாலை வரிகளால் சர்க்கரை, வெல்லம் செய்யும் தொழிலகங்கள் அக்காலத்தில் இருந்தமையை உணர்த்துகிறது. மேலும் கைத்தொழில் செய்பவர்களுக்குத் தங்கள் விருப்பப்படி தொழில் நடத்த உரிமை இருந்திருக்கிறது. “வினைவலரும் தச்சரும் கொல்லரும் நிலக்கிழவர் சொல்லியபடி உழவுக் கருவிகளைச் செய்து கொடுப்பர். வீடுகள் கட்டுவர் ஆனால் அவ்வினைவலருக்கும் இப்படிச் செய்ய வேண்டும். வீடுகள் இங்ஙனம் கட்ட வேண்டும் எனச் சொல்லும் உரிமையுண்டு.”[72] என்பர் அறிஞர். இவ்வாறு வாழ்ந்து வந்த மாந்தர் இனம் சில சமயம் தம் தேவைகளுக்கு மிகுதியாகப் பொருள் சேர்க்க வேண்டும் என்று எண்ணத்துவங்கினர். தங்களின் வாழ்க்கைக்காகப் பொருட்களைச் சேர்த்து வைக்க, எத்தகைய வழிமுறைகளில் அதிகமாகப் பொருள் ஈட்ட முடியும் என்றும் அதற்காக வாழத்துவங்கியதன் விளைவே சொத்துடைமையும் அதனைத் தொடர்ந்து உணவு உற்பத்திக்குக் காரணமான நில உடைமையும் தோன்றின. எனவே தான் பொருளின் தேவையை உணர்ந்த வள்ளுவர் தனியொரு இயலினை மட்டும் படைத்ததோடு அல்லாமல் எவ்வகையில் பொருளீட்ட வேண்டும் என்று ஆங்காங்கே தெளிவுபடுத்துகிறார்.

2.6.2 படைத்தொழில்

வாழ்க்கைகுத் தேவையான பொருட்களைப் பல்வேறு வகையான தொழில்கள் மூலம் பெற்றாலும் அந்நாட்டினையே பாதுகாக்கும் படைத்தொழிலே சிறப்பென்பதை படைமாட்சி, படைச்செருக்கு என்னும் அதிகாரங்களில் படைத்தொழிலின் சிறப்புகளை எடுத்துரைக்கிறார். “யானை முதலிய நான்குறுப்பானும் நிறைந்து போரின்கண் ஊறுபடுதற்கஞ்சாது நின்று பகையை வெல்வதாய படை, அரசன் செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் தலையாய செல்வம்”[73] என்று கூறுவதால் உறுப்பு என்பதை நால்வகை படைகளையே குறிக்கிறது எனலாம். இதைப்போன்றே படைத்தொழில்கள் இருந்தமையைக் காணமுடிகிறது.

2.6.3 கால்நடை வளர்ப்புத்தொழில்

வேளாண்மை மட்டுமன்று பிற உணவு தரும் தொழில்களையும் திருவள்ளுவர் எடுத்துரைத்துள்ளார். காமத்துப்பாலில் தலைவி கூற்றாக அமைந்த,

"அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்

குழல்போலும் கொல்லும் படை" [74]

இக்குறளில் அக்காலத்தில் ஆயர்கள் மாலைப்பொழுதில் பசுக்களோடு மாலையில் வீடு திரும்புகையில் கையில் குழலூதி வருவது வழக்கம் என்பதைக் குறிக்கின்றார். மேலும் வேட்டுவத்தொழில் பற்றி கூறுமிடத்து,

"தவமறைந் தல்லவை செய்தல் புதல்மறைந்து

வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று" [75]

எனும் குறளில் வள்ளுவர் பறவைகளை வேட்டையாடும் வேடுவர் தொழில் இருந்தமை புலப்படுகிறது. மேலும் தோட்ட வேலைகளும் செய்துள்ளனர் என்பதனை,

"வகையறச் சூழாத் தெழுதல் பகைவரைப்

பாத்தி படுப்பதோ ராறு" [76]

என்னும் குறளில் 'பாத்தி படுத்துதல்' என்ற சொற்களின் மூலம் பாத்தியமைத்துச் செடி நட்டு விதையூன்றி நீரூற்றி வளர்க்கும் தோட்டத்தொழில் பண்டைக்காலத்தில் இருந்ததையும் அறியமுடிகிறது. மேலும் இது போன்று இரும்புக் கொல்லரையும் பொற்கொல்லரையும் அவர்கள் பயன்படுத்திய சில கருவிகளைப் பற்றிய குறிப்புகளை,

"அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொரு

துட்பகை உற்ற குடி" [77]

இக்குறளின் மூலம் கருவிகளைத் தேய்த்துக் கூர்மை செய்யும் முறையினைக் கொல்லர்கள் பயன்படுத்தினர் என்பதை அறிய முடிகிறது. மேலும் பாகர் காட்டு யானைகளைப் பிடித்துப் பழகுவதற்குப் பழகிய பழைய யானைகளைப் பயன்படுத்தியதை,

"வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்

யானையால் யானையா தற்று" [78]

என்னும் குறளில் வள்ளுவர் எடுத்துரைக்கிறார். இதைப் போன்றே,

"நெடுஞ்சுழிப் பட்ட கடுங்கண் வேழத்

துரவுச்சினம் தணித்துப் பெருவிளிற் பிணிமார்

விரவுமொழி பயிற்றும் பாக ரோதை” [79]

என மலைபடுகடாம் பாடலில் யானைகளைப் பிடித்துப் பழகும் தொழிலைக் குறிப்பிடுகிறது. இவ்வாறு பல்வேறு தொழில்களைச் செய்து தமது பொருளியலின் தேவைகளை நிவர்த்தி செய்து கொண்டு வாழ்ந்து வந்தார்கள்.

2.7.0 பொருளியல்

பொருள் பொருளுக்காக அன்றி வாழ்க்கைக்கு இன்றியமையாது தேவைப்பட்டது. ஆனால் இன்றைய நடைமுறை வாழ்வில் பொருளைத் தேடுவதே வாழ்க்கையின் குறிக்கோளாக உள்ளது. பொருளின் முக்கியத்துவத்தைப் பற்றி நன்கு உணர்ந்தமையால் தான் வள்ளுவனார் அறத்தோடு பொருள் ஈட்டி இன்பம் அடையமுடியும் என்று ‘இடையில்’ அமைத்துள்ளார். தம் நூலில் பொருள், செல்வம், திரு, ஆக்கம், உடைமை ஆகிய பெயர்களில் பொருட்களின் சிறப்பைக் கையாள்கிறார். “பொருட்கள் சாப்பிடுவதற்கு, உடுப்பதற்கு, தங்குவதற்கு நல்லவை என்பதை மறந்துவிடுங்கள். அவற்றின் அன்றாட பயனை விடுத்துப் பொருட்கள் மக்களின் சிந்தனையை வெளிப்படுத்தும் ஊடகங்கள் என எண்ணுங்கள்”[80] என்று மானிடவியலர் மேரி டக்ளஸ் (1979) கூறுகிறார். ஆகவே நாம் பயன்படுத்தும் பொருட்கள் எல்லாம் வாழ்க்கையின் அடிப்படைத் தேவையாக அமைகிறது, அவற்றைப் பொருத்தே இன்றைய தனிமனிதனானாலும் சமூகமானாலும் ஒருவரின் தகுதியினைத் தீர்மானிக்கின்றது.

வள்ளுவர் பொருளை வெறும் ‘செல்வம்’ என்ற கண்ணோட்டத்தில் மட்டும் பார்க்காமல் அறம் என்ற மையப்பகுதியை வைத்தே தம் நூலை இயற்றியுள்ளார். இச்சிந்தனையைத் தான் இக்காலப் பொருளியல் சிந்தனையின் தந்தையான ஆடம் ஸ்மித் (Adam smith) பிளிட்டோ, அரிஸ்டாடில் போன்ற அறிஞர்களும் கூறியுள்ளனர். ஆனால் சமுதாயச் சிந்தனையாளரான காரல் மார்க்ஸ் கருத்து என்னவென்றால், “பொருளாக்கத்துக்கு வேண்டிய நிலம், தொழில், வாணிகம் முதலான கருவி காரணிகளையெல்லாம் நாட்டுடைமையாக்க வேண்டும். இப்படிச் செய்தால் செல்வம் எல்லாம் நாட்டு மக்கள் அனைவருக்கும் உரிமையாகும். அப்படி

ஒரு நிலைத்தோன்றினால் பொருள் வாழ்வில் சமநிலை தோன்றலாம். சமூகத்தில் போட்டிக்கும் பொறாமைக்கும் பூசலுக்கும் எந்தவித இடமும் இருக்காது"[81] என்கிறார். ஆகவே பொருளைச் சேகரிக்க அனைத்துவித கட்டமைப்புகளை மக்களுக்கு ஏற்படுத்தித் தர வேண்டியது அரசின் கடமையாகும், அவற்றைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்வது அவரவரின் திறமையைப் பொருத்து அமைகின்றது. அப்பொருட் செல்வத்தைக் கொண்டே இவ்வாழ்வினைச் சிறப்பாக்க முடியும் என்பதனை,

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்" [82]

இக்குறட்பா மூலம் எடுத்தியம்பியுள்ளார். ஒருவன் கல்லாதவனாக இருந்தாலும் பொருள் உடையவனாக இருப்பின் அவனை அனைவரும் மதிப்பு கொடுப்பார்கள் என்பதனை,

"நல் ஆவின் கன்று ஆயினு, நாகும் விலை பெறூஉம்,
கல்லாரே ஆயினும், செல்வர் வாய்ச்சொல் செல்லும்" [83]

எனும் நாலடியார் செய்யுள் தெளிவுபடுத்துகிறது. ஒருவன் எத்தகைய வழிகளில் பொருட்களைச் சேர்க்க வேண்டும் என்றால்,

"ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கொபொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு" [84]

என்பர் வள்ளுவர். ஒருவன் நல்ல வழிகளில் சம்பாதிக்கப்பட்ட செல்வம் அறத்தையும், இன்பத்தினையும் தரும் என்கிறார். சிறுபஞ்சமூல ஆசிரியரோ பொருள் எத்தகைய வழிமுறைகளைப் பின்பற்றினால் பெருகும் எனும் கருத்தினை,

"கைம்மாறும், அச்சமும் கானின் பயம் இன்மை
பொய்ம் மாறு நன்மை, சிறு பயன், மெய்ம் மாறு
அருள் கூடி ஆர் அறத்தோடு, ஐந்து இயைந்து, ஈயின்
பொருள் கோடி எய்தல், புகன்று" [85]

என்றுரைக்கிறார். எவ்விதக் கைமாறு பாராமல் உதவி செய்தல், அஞ்சுவதற்கு அஞ்சுதல், நல்லோரைக் கண்டால் அஞ்சாமை, பொய் கூறாமை, அருளுள்ளத்தோடு கூடிய ஈகை புரிபவர் இடத்தில் செல்வம் குவியும் என்றும் அவ்வாறு கிடைத்த செல்வத்தினைத் தகுந்தவாறு சேமித்து வாழவேண்டும்.

2.7.1 பொருட்களைச் சேமிக்கும் வழி

தனிமனிதனோ, அரசாங்கமோ இன்றைய காலச் சூழ்நிலையில் எத்தகைய வழிமுறைகளைப் பின்பற்றினாலும் முடிவில் பற்றாக்குறையே மிஞ்சுகிறது. இந்தியப் பொருளாதாரமானது விவசாயத்தை மூன்றில் இரண்டு பங்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் சார்ந்துள்ளது. மேலும் கைவினைப் பொருட்கள், தொழில் துறைகள் மற்றும் சேவைத்துறை போன்ற பலவற்றைச் சார்ந்துள்ளது, இருப்பினும் முன்னேற்றம் என்பது எத்தகைய திட்டம் போட்டாலும் அடைய முடியவில்லை. அதற்கான வழிகளாக,

"ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை" [86]

இக்குறளில் நம் அனைவருக்கும் வள்ளுவர் நல்லறிவுரையை வழங்கியுள்ளார். தம்முடைய வரவு குறைந்தே இருந்தாலும் செய்யும் செலவு அதிகரிக்காமல் இருக்கப் பழக வேண்டும் அதிகம் செலவு செய்தால்,

"ஆனமுதலில் அதிகம் செலவு ஆனால்
மானம் அழிந்து, மதிகெட்டுப்போன திசை
எல்லார்க்கும் கள்ளன் ஆய், ஏழ் பிறப்பு தீயன் ஆய்
நல்லார்க்கும் பொல்லன் ஆம், நாடு!" [87]

என்று நல்வழிப்பாடல் அறிவுறுத்துகிறது. ஒருவன் வரவுக்கு மீறிச் செலவு செய்தால் மானம் போகும், அறிவு கெடும், திருட நேரிடும், ஏழு பிறவிக்கும் தீமைகள் ஏற்படும் என்று கூறுகிறது. ஆகவே தம்மிடம் அதிகமான பொருள் இருந்தாலும் மற்றவர்களுக்கு வேண்டுமென்றால்,

"ஆற்றின் அளவறிந் தீக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி" [88]

என்ற குறளில் நம்முடைய பொருளாதாரத்தை எண்ணி அதற்குத் தகுந்தார்போல் மற்றவர்களுக்குக் கொடுத்து உதவுவதே பொருட்களைச் சேமித்து வைக்கும் வழியாகும்.

2.7.3 பண்டைய தமிழகமும் பொருளாதாரமும்

சங்ககாலத் தமிழ் மக்கள் வளமான வாழ்க்கை வாழ்ந்தனர் என்பதற்கும் பல சான்றுகள் உள்ளன. திருமாவளவனுடைய சோழநாட்டில் "சோற்றை

வடித்துக் கொட்டிய கஞ்சியானது ஆறு போல ஓடியது”[89] என்று கடியலூர் உருத்திரங்கண்ணனார் கூறியுள்ளார். மேலும் சோழநாட்டு மகளிர் தம் வீட்டுத் தானியங்களைத் தின்னும் கோழியை விரட்டியமையை,

“நேரிழை மகளி ருணங்குணாக் கவரும்
கோழி யெறிந்த கொடுங்கோற் கனங்குழை
பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டும்
முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்”[90]

என்ற பட்டினப்பாலை பாடல்மூலம் விளக்குகிறது. மேலும் சிறுபாணாற்றுப்படை உமணர்களோடு வந்த குரங்குகள் விளையாடிய விதத்தினைக் குறிப்பிடுகையில்,

“மகாஅர் அன்ன மந்தி மடவோர்
நகாஅர் நன்ன நளிநீர் முத்தம்
வாள்வா யெருந்தின் வயிற்றகத் தடக்கி” [91]

என்னும் செய்யுளின் மூலம் அக்காலப் பொருளியற் செழுமையை நமக்கு உணர்த்துகின்றனர். மேலும், பண்டையக்கால வேந்தர்கள் தம்மிடம் குவிந்துள்ள செல்வத்தினை அனைவருக்கும் கொடுத்து வாழ்ந்தார்கள் எனவும் சேர நாட்டில் யானையின் தந்தமும் சோழ நாட்டில் உணவுப் பொருட்களும், பாண்டிய நாட்டில் கடல்சார் முத்துப் பவளங்களும் நிறைந்து மக்கள் இன்புற்று வாழ்ந்தனர்.

2.7.3 இன்றைய தமிழகமும் பொருளாதாரமும்

தமிழனென்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா என்னும் நாமக்கல் கவிஞரின் வாக்கிற்கிணங்க அன்று சிறப்போடு வாழ்ந்த தமிழன். தம்மை நாடிவந்த அனைவரையும் அன்போடு அரவணைத்து வாழ்ந்தமையை,

“தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவனுக்கொரு குணமுண்டு” [92]

எனும் வரிகளின் மூலம் தமிழர்கள் பரந்து பட்ட உயர்பண்பு நெறிகள் நமக்குத் தெரிகின்றது. அவன் பிறப்பு முதல் இறப்பு வரை சில ஒழுங்குநெறி கலந்த பண்பாட்டு கலாச்சாரத்தினைப் பின்பற்றி வாழ்ந்ததோடு அல்லாமல் எத்தகைய முறைகளில் பொருட்களைச் சேர்க்க வேண்டும் என்பதனை,

“கருமமும் உள்படாப் போகமும் துவ்வா
தருமமும் தக்கார்க்கே செய்யா ஒரு நிலையே

முட்டு இன்றி மூன்றும் முடியுமேல் அஃது என்ப
பட்டினம் பெற்ற கலம்" [93]

என்னும் நாலடியார் பாடலின் பொருள்வழி இன்பமும் அதன்வழி அறமும் செய்து வாழ்க்கையைச் சிறந்த முறைகளில் வாழ்ந்தனர். மானங்கெடின் உயிர் துறக்கும் உத்தமச் சீலர்களாய் வாழ்ந்த இனம், மற்றொறுப்பாடலில் இன்று நடைபெறும் நிகழ்வுகளை அன்றே நமக்கு அறிவுறுத்தியதனை,

"உண்டாய போழ்நின், உடைந்துழிக் காகம்போல்
கொண்டு ஆயிரவர், தொகுபவே, வண்டாய்த்
திரிதரும் காலத்து இலிரோ? என்பார்
ஒருவரும் இவ் உலகத்து இல்" [94]

இச்செய்யுளில் ஒருவன் வறுமையில் பொருளைத்தேடி அலையும் போது அவனை விசாரிக்கக்கூட ஆளில்லை ஆனால் பணக்காரனாக வாழ்ந்து இறப்பின் காகங்களும் கூடி ஒப்பாரி வைப்பது போல அனைவரும் துக்கம் விசாரிக்கும் உலகம் என்ற உண்மையை விளக்குகிறது. பொருளானது சேர்ப்பதைக் காட்டிலும் அவற்றைப் பாதுகாத்தல் கட்டாயமாகிறது. மிகுதியாகச் செலவு செய்தாலும், கடன் வாங்கிநாளும் அளவறிந்து செய்ய வேண்டும் இல்லையே பெரும்பாதிப்பு உண்டாகும் என்பதை,

"அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்" [95]

இக்குறளின் மூலம் நமக்குக் விளக்கும் வள்ளுவர், தனி மனிதருக்கு மட்டுமின்றி அரசுக்கும் ஓர் எச்சரிக்கை விடுகிறார். ஆம் உண்மைதான். தேவையற்ற இலவசங்கள், முன்யோசனையின்றி உலக வங்கியில் பணத்தை வாங்கிக் கொண்டு வாங்கிய கடனுக்கு வட்டிக்கட்டாமலும் சரியான முறைகளில் வருவாய்களைப் பெருக்காமலும் ஒருசிலத்துறைகளை மட்டுமே நம்பி ஆட்சி செய்யும் போது செலவினங்கள் மிகுதியாகிப் பணமில்லாமல் திண்டாடும் திறத்தை அறிய முடிகிறது.

கொடுத்துச் சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரரான இனம் இன்று தன்மானத்தை இழந்து தன்னுடைய உரிமைக்காகப் பிறரிடம் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. தனது வாக்கினைச் செலுத்தவும் தேவையற்ற இலவசங்களை வாங்கவும் முண்டியடிக்கும் கூட்டம் ஒரு புறம், தனது சொந்த உழைப்பில் ஈட்டின பணத்தை மதுவுக்காகச் செலவு செய்பவர் மறுபுறம். இத்தகைய செயல்களைக் குறைத்து மக்களை நேரிய வழிகளில் பொருளீட்டி அதன் மூலம் சேமித்துத் துன்பத்தில் தத்தளிக்கும் மக்களை நல்வழிப்படுத்த

வேண்டியது அரசின் கடமையாகும். அத்தகைய நல்லரசை உருவாக்க வேண்டியது மக்களின் பொறுப்பாகும் என்பதனை,

"தம்தம் நிலைக்கும் குடிமைக்கும் தப்பாமே
ஒத்த கடப்பாட்டில் தாஆள் ஊன்றி எய்த்தும்
அறங்கடையில் செல்லார் பிறன் பொருளும் வெஃகார்
புறங்கடையது ஆகும் பொருள்" 96

என்னும் நீதிநெறி விளக்கப்பாடலில் தன்னுடைய நிலையறிந்து தக்க வழியில் பொருளைச் சேர்க்க வேண்டும். தம்முடைய விடா முயற்சியால் உண்மையாகச் சேர்த்த பொருளே நிலைபெறும் என்பதனை,

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையான் னுழை" 97

என்ற குறளின் மூலம் வள்ளுவர் நமக்கு மெய்மை வழி காட்டுகிறார்.

2.7.4 செல்வத்தை அழிக்கும் படைகள்

பெரும் முயற்சியால் உழைத்துப் பொருட்களைச் சேர்த்து வைத்தாலும் அதைச் சரியான வழிகளில் பாதுகாக்க வேண்டும். அதைவிடுத்து உழைக்காமல் பிறரை பார்த்து பொறாமை கொள்ளுதல் நம்மிடம் உள்ள அனைத்துச் செல்வங்களையும் அழிக்கக் கூடியவை. இதனை,

"தன்னை வியந்து தருக்கலும், தாழ்வு இன்றிக்
கொன்னே வெகுளி பெருக்களும், முன்னிய
பல் பொருள் வெஃகும் சிறுமையும் – இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை" 98

எனும் திரிகடுகச் செய்யுளில் ஒருவன் தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளுதலும் தேவையின்றி வீண் கோபத்தைப் பாராட்டுதலும் பல்வேறு பொருள்களின் மீது ஆசை கொள்ளுதல் போன்றவைகளால் தான் சேர்த்து வைத்திருக்கும் பொருட்கள் அழிவுறும். ஆகவே நம் நேர் வழியில் பொருட்களைச் சேர்த்தோம் என்றால் எக்காலத்திற்கும் நிலைத்திருக்கும், இல்லையேல் வந்த சுவடு தெரியாமல் அழியும். ஆகவே நாம் எத்தகைய வழிகளில் பொருள் சேர்க்க வேண்டும் என்பதை,

"அறனீனு மின்பமு மீனுந் திறன்றிந்து
தீதின்றி வந்த பொருள்" 99

என்னும் குறளில் வள்ளுவர் தெளிவுபடுத்துகிறார். எனவே தம்முடைய தேவைகளை நிறைவு செய்து கொள்ளப் பொருள் கண்டிப்பாகத்தேவை

ஆனால் பொருளே வாழ்க்கை அல்ல. எத்தகைய செல்வங்கள் இருந்தாலும் மனது செம்மையாக இருக்கும் பட்சத்தில் மற்றவைகள் மீது ஆசை கொள்ளாது. ஆகவே பொருட்கள் நல்ல வழிகளில் திரட்டும் போது நமது தேவைக்கு மிகுதியானவற்றைப் பிறரிடம் கொடுக்கவும், தம் தேவைக்காக அவர்களிடம் உள்ளதை நாம் பெறுதல் எனத் தொடர்ந்து கொண்டே வந்தது. இவ்வாறு பரிமாறிக்கொள்ளும் முறைகள் தான் பின்னாளில் வணிகமாகத் தழைத்தோங்கியது.

2.8.0 வணிகம்

ஒரு நாட்டின் பொருளாதார மதிப்பு அந்நாட்டின் வணிக நடவடிக்கைகளைப் பொருத்தே அமைகிறது. பல நாடுகளுக்கு இடையே ஒற்றுமையுணர்வும், நட்புணர்வும் தொண்டுள்ளமும் பெருக வணிகமே சிறந்த கருவியாக அமைந்துள்ளது. "கிறித்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் கிரிஸ், ரோம், எகிப்து மற்றும் சீனம் உட்பட்ட பல நாடுகளோடு வாணிகம் செய்தனர். இந்த நாடுகளிலெல்லாம் தமிழரின் பொருட்கள் மேற்காசிய நாடுகளில் நல்ல விலைக்கு விற்கப்பட்டன. யூதர்களின் தலைவர் மோசஸ் தமது வழிபாட்டில் தமிழ்நாட்டு ஏலக்காயைப் பயன்படுத்தி உள்ளார்"[100] என்று அ.தட்சிணாமூர்த்தி அவர்கள் கூறியுள்ளார். தமக்குத் தேவையானதை மற்றவர்களிடம் இருந்து பெற்றுக்கொண்டு அதற்கு ஈடாக வேறு ஏதேனும் ஒன்றினைக் கைமாற்றிக் கொள்வதனையே வணிகம் எனக் கூறலாம். இன்றைய காலச் சூழ்நிலையில் அனைவருக்கும் தேவையானதைக் கிடைக்கச் செய்கிறது.

2.8.1 தமிழர்களின் வணிகம்

சங்ககாலத் தமிழர்கள் நன்றாக உழைத்துப் பொருள் ஈட்டியதோடு மலைகளையும் காடுகளையும் கடல்களையும் கடந்து சென்று தம் திறமையினால் வணிகம் புரிந்தனர். இதனை,

"ஓங்குதிரை வியன்பரப்பின்
ஒலிமுந்நீர் வரம்பாகத்
தேன்தூங்கும் உயர்இமய
மலைநாறிய வியன் ஞாலத்து"[101]

என்ற மதுரைக்காஞ்சி பாடலில் கடலில் ஆதிக்கம் செலுத்திக் கடல் கடந்து வணிகம் செய்தனர் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. "நாணயம் எங்கே

சுண்டப்படுகிறதோ அங்கெல்லாம் தமிழரைக் காணலாம்”[102] என்று சி. அரசப்பனார் குறிப்பிடுகிறார். அவ்வளவு செழிப்புடன் மற்ற நாடுகளோடு தொடர்பு கொண்டு வாழ்ந்து வந்தமை அறியப்படுகிறது. மேலும்,

“மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவடை
மெய்ப்பைப் புக்க வெருவரும் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்” [103]

என்ற முல்லைப்பாட்டு வரிகளில் பாண்டிய மன்னர்களிடம் உரோமர்கள் அலுவல் பார்த்தமை அறியலாகிறது. அதைப்போன்றே தங்களுக்குள் பண்டமாற்று முறையைக் கையாளப்பட்டுத் தமது தேவையை நிறைவு செய்தனர். சங்கக் காலத்தில் உப்பும் நெல்லும் ஒரே மதிப்பு கொண்டிருந்ததை அகநானூறு தெரிவிக்கிறது. இதைப்போன்றே,

“வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி
நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி” [104]

எனும் பட்டினப்பாலை பாடலில் அக்கால உள்நாட்டு வணிகச் சிறப்பினை அறியலாம். “பால் போன்ற வெண்மை நிறமும் மென்மையான தலையாட்டத்தினையும் கொண்ட மேற்குத் திசைக் குதிரைகளும் வடதிசையிலிருந்து வந்த பலவகைப் பொருட்களையும் ஒருங்கே கொணர்ந்த மரக்கலங்கள் சூழ்ந்த துறைமுகம்”[105] பற்றிய செய்திகளைப் பெரும்பாணாற்றுப்படை நூல் விளக்குகிறது. மேலும் அகநானூற்றுப்பாடல்,

“யவனர் தந்த வினைமான் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்”[106]

இதைப்போன்றே,

“விழுமிய நாவாய்ப் பெருநீர் ஓச்சுநர்
நனந்தலைத் தோத்து நன்கல துய்மார்
புணர்ந்துடன் கொணர்ந்த புரவியோ டனைத்தும்”[107]

என்ற மதுரைக்காஞ்சி செய்யுள் குறிப்புகளால் சங்கக் காலத்தின் வணிகச் சிறப்பினை அறிய முடிகிறது.

2.8.2 பண்டமாற்று முறை

ஒரு குடும்பத்தில் சுகதுக்கம் போன்ற நிகழ்வுகளில் தங்களிடம் உள்ள பொருட்களை மற்றவர்களுக்குக் கொடுத்துத் தமக்குத் தேவையானவற்றை மற்றவரிடம் பெற்றும் வாழ்ந்தனர். இத்தகைய பண்டமாற்று முறையே பல நாடுகளுக்கு இடையில் வளரந்து ஓங்கியது. இப்பண்டமாற்றுமுறை பெருகித்

தமிழர்கள் கடல்கடந்து வணிகம் செய்ததைப் பல வரலாற்றுச்சான்றுகள் மற்றும் புதைபொருள்கள் மூலம் நாம் அறியலாம்.

"பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தென்னிந்தியாவிற்கும் ஆசியாவிற்கும் வாணிகத் தொடர்பு இருந்தது. சுமேரிய மன்னர்களின் ஊர் என்ற இடத்தில் தென்னிந்தியாவிற்குரிய தேக்குமரம் காணப்பட்டது. கி.மு 2000 ஆண்டுகளுக்கு முன்பு அரசாண்ட எகிப்திய மன்னர்களின் சடலங்கள் மூடிய கல்லறையில் தென்னிந்தியாவின் மெல்லிய பட்டாடைகளால் மூடி புதைக்கப்பட்டிருந்தது. எபிரேய நாட்டில் சாலமன் ஆட்சி செய்த போது கப்பல்களில் வந்து தமிழகத்தில் தங்கம் வெள்ளி தந்தம் குரங்குகள் மயில்களை ஏற்றிச் சென்றதற்கான சான்றாக எபிரேய மொழியிலும் விவிலிய நூலில் குரங்கைக் குறிக்கும் 'கவி' என்ற சொல் 'கபம்' என்றும் மயிலைக் குறிக்கும் 'தோகை' என்ற தமிழ்ச்சொல் துகிம் என்றும் வழங்குகின்றன."[108] என்று புலவர் அரசப்பனார் தெரிவிக்கிறார்.

இவ்வாறு தமிழர்கள் மிகப் பழங்காலத்திலேயே வாணிகத்தின் பொருட்டு உலக நாடுகள் பலவற்றிற்கும் வெளிநாட்டார் பலர் தமிழ் நாட்டிற்கு வணிகத்தொடர்பை ஏற்படுத்தினார்கள் என்பது அறியப்படுகிறது. மேலும் வேற்று நாட்டு அரசர்கள் சேர நாட்டின் துறைமுகமான தொண்டி, முசிறி, குமரி, கீழைக்கடற்கரை, கொற்கை, காவிரிப்பூம்பட்டினம், புதுச்சேரி, மரக்காணம், மசூலிப்பட்டினம் போன்ற இடங்களில் தங்கினர் என்றும் பிறநாட்டு வணிகர்கள் வணிகத் தொழில் நடத்துவதற்குக் காவிரி பூம்பட்டினத்தில் மாளிகையில் குடியேறி இருந்தனர் என்பதை,

"மொழிபல பெருகிய பழிதீர்தேஎத்துப்
புலம்பெயர் மக்கள் கலந்து இனித் துறையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம்" [109]

எனும் பாடலின் மூலம் அறியப்படுகிறது. மேலும் வணிகர்கள் பிறரிடமுள்ளப் பொருட்களை வாங்கி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பண்டமாற்று முறையில் வணிகம் செய்தனர். மருத நிலத்து உணவுப்பொருட்களும், நெய்தல் நிலத்தில் உப்பு, மீன், சங்கு, முத்து, ஆமை முதலியனவும், முல்லை நிலத்தில் சந்தனமரம், வேங்கைமரம், பால்பொருட்களும், குறிஞ்சி நிலத்தில் தேன், திணைவகைகளைத் தங்களுக்குள் பகிர்ந்து பண்டமாற்று முறைக்கு அன்றே அடிக்கோலிட்டனர்.

அதுபோல உள்நாட்டில் உமணர்கள் உப்பை வண்டிகளில் ஏற்றி விற்பனை செய்து அதற்கு ஈடாகத் தானியங்களைப் பெற்றுக் கொண்டனர். இதுபோன்று உடை வணிகம், ஓலை வணிகம், பொன்வணிகம் என அனைத்தையும் பண்டமாற்று முறைகளிலேயே தொடக்கக் காலங்களில் செய்து வந்தனர். இவற்றின் மூலம் மக்களிடம் சகோதரத்துவம் பெருகி நட்பாக மலர்ந்து திருமணம் வரை தொடர்ந்து வளர்ந்தது. தங்கள் நில மக்களின் வாழ்க்கை முறையினைச் செம்மையாக வளம் பெருகி மற்றவர்களுக்குத் தம் மரக்கலங்களில் பரிமாற்றம் செய்தமையைச் சங்க இலக்கியமான புறநானூற்றில்,

"காதுறை வாழ்க்கை தேநாய் வேட்டுவன்
முரன்தகை செரிந்த வட்டியும் ஆய்மகள்
தயிர்நெரு வந்த தசும்பு நிரைய
ஏரின் வழிநர் பேரில் அரிவையர்
லேரக்கீழ் வளைந்து கணக்கொள் வெண்ணெல்
கேந்தனர் கொடும்ப உகந்தனர் பெயரும்" [110]

இச்செய்யுள் மூலம் அறியப்படுகிறது. தேன், கிழங்கு வகைகள், உணவுப்பொருட்கள், மீன், யானைகளின் தந்தம், வாசனைப் பொருட்கள், பொன் மருத்துவம் போன்ற அனைத்தையும் தங்களுக்குள் பரிமாறிக்கொண்டனர். இவ்வாறு சிறப்புற்று விளங்கிய அன்றைய வணிகத்தின் மூலம் தான் இன்றைய 'உலகமயமாதல்' என்று பண்பினை வள்ளுவன் தம் நூலில் அமைத்துள்ளார். ஏனெனில் ஒருவனுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் ஒருங்கே அமைவது மிகவும் இயலாது. எனவே இவ்வுலகத்தின் பல்வேறு உயிரினங்கள் நிலைபெறுவதற்கும், பகை குறையவும் இவை உறுதுணையாக விளங்கியது.

2.8.3 வள்ளுவரும் வணிகமும்

வாழ்க்கையின் உட்கூறே வணிகம், இவையின்றி உலகில்லை என்பதை உணர்ந்த வள்ளுவனார் பிறருடைய பொருளையும் தம்முடைய பொருளாய் எண்ணவேண்டும் என்பதனை,

"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தம்போற் செயின்" [111]

என்பர் வள்ளுவப் பெருமகனார். "கொடுக்கும்போது குறைவாகக்

கொடுக்காமலும் கொள்ளும்போது மிகுதியாகக் கொள்ளாமலும் இருத்தல் வேண்டும்”[112] என்று பரிமேலழகர் கூறுகிறார். நாம் கொடுக்கும் போது பெறுகின்ற மனநிலையும் மற்றவர்களிடமிருந்து வாங்கும்போது கொடுக்கின்ற மனதுத்தன்மையுடன் விளங்கினால் அனைவருக்கும் உகந்ததாய் அமையும். ஏனெனில் இன்றைய மக்களின் நிலை பொருட்களை உற்பத்தி செய்வதைக்காட்டிலும் வாங்கிப் பயன்படுத்துபவர்களே மிகுதியானவர்கள். எனவே சரியான முறைகளில் விற்பனை செய்பவர்கள் வளர்ச்சிப் பாதையில் முன்னேற்றம் அடைகின்றனர்.

வணிகமும் கலப்படமும்

தானென்ற உணர்வோடு மற்றவர்களையும் எண்ணிப்பார்க்கும் மனோபாவம் வணிகத்திற்கு இன்றியமையாதது. ஏனெனில் இன்றைய சூழலில் நல்லவற்றைக் காட்டிலும் போலியானவை சந்தைகளில் புழக்கத்தில் விரைவாக வந்துவிடுகிறது. இதுவே வணிகத்தில் பெருஞ்சிக்கலை உண்டாக்குவதோடல்லாது உழைத்துத் தனக்கென ஒரு மதிப்பைச் சமூகத்தில் பெறுவதும் சிறமமாகிறது. உண்மையான உழைப்புதான் ஒருவனை உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்லுமென்பதனை,

“செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை

உள்ளறிவான் உள்ளம் கொளல்” [113]

என்னும் குறளில் தாம் ஒரு செயலைச் செய்யப்போகிறோம் என்றால் அச்செயலை நன்கு அறிந்தவர்களின் உதவியைத் தேடிக்கொள்வதே சிறந்தது என்கிறார் வள்ளுவர். ‘ஆழம் தெரியாமல் காலை விடாதே’ என்பதற்கேற்ப நாம் வணிகத்தில் மற்றவர்களின் அனுபவத்தினை ஏற்றுசெய்தால் முன்னேற்றம் அடையமுடியும். அதைவிடுத்து போலியான வழிகளில் முன்னேற கலப்படம் செய்கின்றனர்.

தான் உயர்ந்த நிலையினை அடைய வேண்டும் என்பதற்காகக் குறுகிய மனநிலையில் பிறர் நலம் பேணாது அற்பச் செயல்களால் இச்சமூகம் சீரழிந்து வருகிறது. பசிக்கு உணவு உண்ணலாம் என்றால் நிம்மதியில்லை, தாகத்திற்குத் தண்ணீரையும் நம்பிக் குடிக்க முடியவில்லை. ஏதேனும் ஒரு உணவுப்பொருளை நம்பி உண்ண முடியவில்லை. ஏன் இந்த நிலை இச்சமூகத்தில் அனைத்துப் பொருட்களையும் கவனித்துத் தான் வாங்க வேண்டியுள்ளது. இதுபோன்ற தீயநோக்கத்தினல் வணிகத்தில் பெரும்பாதிப்பை உண்டாக்குகிறது. இதை எவ்வாறு சரி செய்ய முடியும்

என்றால்,

"நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்காற்

கண்ணல்லது தில்லை பிற"[114]

என்ற குறளில் வள்ளுவனார் இவ்வுலகில் உள்ள அனைத்தையும் நாம் பார்த்துத் தெரிந்து கொள்ள முக்கிய உடல் உறுப்பாகக் கண் விளங்குகிறது. கூரிய அறிவுடையவர் தன் கண்களால் நிகழும் செயல்களை நுணுகிப்பார்த்து அவற்றைச் சரிசெய்து கொள்வார்கள், இவ்வுலகில் அனைவரையும் திருத்துவது என்பது இயலாத காரியம். ஏனெனில் குழந்தைகள் அருந்தும் பால் முதல் உயிர் காக்கும் மருத்துவம் வரை கலப்படம் அதிகமாகிவிட்டது. அவற்றைத் தடுக்க எத்தனையோ கட்டுப்பாடுகள் இருந்தாலும் அரசால் முழுமையாக ஒழிக்க முடியவில்லை என்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டியுள்ளது.

அரசு, இவற்றை உண்ண வேண்டாம் என்று அறிவுறுக்கிறதே ஒழிய உண்பதற்கு எவை தகுதியானவை என்பதை அறிந்து அதனை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில்லை. பொருள் சம்பாதிக்க வேண்டும் என்ற வணிக நோக்கோடு செயல்படுவது தனிமனிதர்கள் மட்டுமின்றி, அரசும் ஒருசில செயல்களைச் செய்வதை எண்ணி மனம் வருந்த வேண்டியுள்ளது. ஆம் இன்றைய சூழ்நிலையில் அரசு மதுபானங்கள் மூலம் பெரும் வருவாய் கிடைப்பதால் பெரும்பாலான இடங்களில் துவங்கினார்கள். ஆனால் குடிநீர் எங்கோ ஓர் இடத்தில் உள்ளது.

உச்சநீதி மன்ற உத்தரவின்படி மத்திய மாநில நெடுஞ்சாலைகளில் இருக்கும் மதுக்கடைகள் அகற்றப்பட்டது பாராட்டுக்குரிய செயல். ஆனால் நெடுஞ்சாலையில் அகற்றப்பட்ட மதுக்கடைகளை மக்கள் வாழும் குடியிருப்புக்குள் துவங்கினர். இதுபோன்ற இலாப நோக்கத்தோடு வணிகம் செய்வோரும் பிறர் நலனைக் கருதாதவரும் ஏதோ ஒரு வழியில் அழிந்து போவதோடு, அச்செல்வமும் பயனற்றுப் போகும் என்பதனை,

"சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்

கலத்துண் பெய்திரீஇ யற்று" [115]

இக்குறளின் மூலம் மிகச்சரியாக விளக்கியுள்ளார் வள்ளுவனார். பிறரைத் துன்பப்படுத்திச் சேர்த்த பணம் வேகவைக்காத மண் குடத்தில் தண்ணீர் சேமித்து வைப்பது போன்றது என்று உணர்த்தியுள்ளார். பிறரை துன்புறுத்தி பொருட்களை சேர்த்து வைத்தவர்கள் இன்று உணவைக் கூட உண்ண

முடியாமல் உயிர் வாழ்பவர்கள் பலர். ஆகவே இவ்வாழ்க்கையை நாம் பிறருக்கும் நமக்கும் பயனுள்ள முறையில் வணிகம் செய்வது சிறப்பைத் தரும். அவ்வாறு உழைத்தவர்கள் இன்று உலகம் போற்றும் உத்தமர்களாய் உயர்ந்துள்ளனர். அவர்கள்தான் நல்ல சான்றோர்களாக விளங்குவார்கள் என்ற கருத்தினை,

"கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்

கோடாமை சான்றோர் கனி" [116]

என்னும் குறளில் குறிப்பிட்டுள்ளார். இவ்வுலகில் ஏழையாகவும் பணக்காரராகவும் இருப்பது அவரவரின் திறமையால்தான். ஆனால் எவ்வளவு செல்வம் வருவதானாலும் தன்மன நேர்மையினை விட்டுக்கொடுக்காமல் வாழும் குணமுடையவர்களின் செயல்களே வணிகத்துக்குச் சிறந்த அணிகலன்களாக விளங்குகிறது.

2.8.4 உலகமயமாதலும் இன்றைய வணிகமும்

உலகில் எங்கோ ஒரு மூலையில் இருப்பவர் தயாரிக்கும் பொருள் இன்று எங்கும் கிடைக்கப் பெறுவதற்கு உலகமயமாதல் ஒரு முக்கியப்பங்காக அமைகிறது. முதலீடு மிகுதியாக உள்ளவர்கள் தங்களின் முதலீட்டினைக் குறைந்த ஊதியம், சுற்றுச்சூழலுக்குத் தகுந்தார் போன்று ஒத்துழைப்பு தரும் பின்தங்கிய நாடுகளிலும், வளரும் நாடுகளிலும் வளர்ச்சி பெற்ற நாடுகள் தங்களின் வணிகத்தை நிறுவுகின்றனர்.

2.8.5 இந்தியாவும் வணிகமும்

மனிதர்கள் மற்றவர்களைப் பார்த்து அவர்களைப்போலத் தானும் மாற வேண்டும் என்ற எண்ணம் கொண்டதன் விளைவுதான் ஆங்கிலேயர் நம்மை ஆட்சி செய்தது. அந்நிய மோகத்தினால் நம்முடைய அரசர்கள் பிளவுபட்டு ஆட்சியிழந்து ஆங்கிலேயருக்கு அடிமையானார்கள். அவையனைத்தையும் கடந்து இன்று உலகில் இந்தியா தனிப்பெரும்பான்மையுடன் விளங்குவதற்கு வணிகம்தான் அடித்தளமாக அமைகிறது. ஆம் உலக நாடுகள் பல இந்தியாவை ஒரு வணிகச் சந்தையாகவே பார்க்கின்றனர்.

தொலைத்தொடர்பு, போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம், அரசியல், பண்பாடு ஆகிய துறைகளை ஒன்றிணைத்துக் கொடுக்கும் தளமாக இந்தியா இன்று விளங்குகிறது. இவற்றால் பல நன்மைகளும்

ஒருசில தீமைகளும் ஏற்படுவதோடு வணிகத்தின் மூலம் ஒரு நாட்டின் பண்பாட்டு கலாச்சாரம் மற்ற நாடுகளுக்கும் பரவுகிறது. பன்னாட்டு நிறுவனங்கள் கவர்ச்சி, இலவசம் போன்றவைகளால் சிறு, குறு வணிகம் நசுக்கப்படுகிறது. எனவே வணிகத்திற்கு உரியச் சிறப்பாகப் பட்டினப்பாலை செய்யுளில்,

"நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாமக்
கொள்வதூஉம் மிகைகொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும்
தொல் கொண்டி துவன்றிருக்கை" [117]

வணிகத்தில் நடுவுநிலைமை மிகவும் அவசியம் என்பதையும் தம் பொருள் போன்று பிறர் பொருளையும் எண்ணுதல் வேண்டும் எனக்கூறுகிறது. இக்கருத்து வணிகருக்கும் மட்டுமன்றி அரசுகளுக்கும் இருக்க வேண்டும். அந்நிய நிறுவனங்களுக்குத் தரும் சலுகைகளை வரவேற்கிறோம். ஆனால் அவைகளும் வரன்முறையோடு இருக்க வேண்டுமென்பதனை,

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபாற்
கோடமை சான்றோர் கனி" [118]

இக்குறளில் ஆட்சியாளர்களுக்கு அறிவுரை வழங்குகிறார். எந்தப் பக்கமும் சாராமல் உள்நாட்டு வணிகமும், வெளிநாட்டு வணிகமும் இரண்டையும் சமமாக போற்றினால் ஏற்றுமதியும் இறக்குமதியும் பெற்று பொருளாதாரம் பெருகும். இதையுணர்ந்த கவிஞன்,

"என்னவளம் இல்லை இந்தத் திருநாட்டில்
ஏன்கையை ஏந்த வேண்டும் வெளி நாட்டில்
ஒழுங்காய்ப் பாடுபடு வயக்காட்டில்
உயரும் உன்மதிப்பு அயல்நாட்டில்" [119]

எனும் பாடலில் 'உலகமயமாதல்' கொள்கைப் பண்பினை தெளிவாக எடுத்துக்கூறியுள்ளார். இதனைத்தான் பாரதப்பிரதமரும் 'Make in India' என்ற கொள்கையை இன்று முன் வைத்துள்ளார். அனைத்துப் பொருட்களையும் தயாரிக்கும் கருவூலமாக இந்தியா திகழ வேண்டுமெனவும் இதன் மூலம் வணிகம் பெருகி மக்களின் பொருளாதாரம் சிறப்புறும். ஆகவே மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களைப் பகிர்ந்தளிக்க வணிகம் ஒரு ஊன்று கோலாய் இருக்கிறது.

2.9.0 கல்வியும் செல்வமும்

"கல்வி என்ற சொல் ஆங்கிலத்தில் 'எஜீகேசன்' என அழைக்கப்படுகிறது. மனிதப் பண்பை வளர்த்தல், வெளிக்கொணர்தல் போன்ற பொருள்களைத் தரும் 'எஜீகேர்' என்ற இலத்தீன் சொல்லிலிருந்து 'எஜீகேசன்' என்ற ஆங்கிலச் சொல் வந்தது"[120] என்பர் அறிஞர். "கல்லுதல் என்பதன் பொருள் தோண்டுதல் கல் என்னும் அடிச் சொல்லிலிருந்து கலப்பை என்ற கருவிப்பெயரும் கல்வி என்ற பண்பு பெயரும் வந்தன. நிலத்தைக் கிளறுதற்கு கலப்பை பயன்படுகிறது. கல்வி கல்லுதல் என்பதற்கு மனதைக் கிளறித் திருத்தப் பயன்படுத்துவதாம்"[121] என்று சித்பவானந்தர் சுவாமி மொழிகிறார். மனதைப் பக்குவப்படுத்த உகந்த கருவி கல்வியாகும். அத்தகைய கல்வியே ஒருவனை உயர்ந்த நிலையை அடையச் செய்கிறது.

2.9.1 கல்வியின் இன்றியமையாமை

மனிதனுக்கும் விலங்கிற்கும் உள்ள வேறுபாடு அவன் பெற்றுள்ள பகுத்தறிவாகும். ஒரு மனிதனிடமுள்ள கூரிய ஆக்கம் தரும் அறிவினையே பகுத்தறிவு எனலாம். நல்ல நூல்களைக் கற்றுணர்ந்தவர்கள் பிறர் நலனைக் கருதியே செயல்படுவார்கள். கல்வியறிவு பெறாதவர்கள் மனிதர்களாய்ப் பிறந்து விலங்கினத்தவராக வாழ்கின்றனர். ஆகவேதான் வள்ளுவர் கல்வியறிவு இல்லாதவர்களை விலங்கு என்றும் பெண் தன்மை பெறாத பாவையர் என்றும்,

"விலங்கொடு மக்கள ணையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்" [122]

என்றும். மேலும்,

"கல்லாதான் சொற்கோ முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று"[123]

இக்குறள் மூலம் சுட்டி காட்டுகிறார். மேலும் மனிதனுக்குக் கல்வியானது கண் போன்றது, இது வாய்க்கப் பெறாதவர்கள் முகத்தில் புண்களை உடையவர்கள் என்பதை,

"கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லா தவர்" [124]

என்பதனை வள்ளுவர் இடித்துரைக்கின்றார். ஆகவே கல்வியறிவே ஒருவனுக்கு இன்றியமையாத பண்பாகும். கல்வி என்பது மனிதனுடைய வளர்ச்சி நிலையிலும் அவனுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் உள்ள வேறுபாட்டினைத் தரம் பிரித்துக் காட்டுவது. "மனிதனை ஒரு விலங்கிடமிருந்தோ அல்லது எந்திரத்திடமிருந்தோ பிரித்துக் காட்டுகின்ற அவனது ஒவ்வொரு தன்மையின் வளர்ச்சியிலும் கல்வி அமைந்துள்ளது. எனவே அறிவு நுட்பத்தின் கட்டுப்பட்ட வளர்ச்சி கற்பனையின் விளைவு மற்றும் உணர்வுகளின் விரிவாக்கம் இவைகளே கல்வியின் நோக்கமாகும்."[125] என்று வில்லியம் டெம்மின் கூறுகிறார். மனிதன் இயல்பாகவே மிருகத்தின் சாயல் கொண்டவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குணநலமுண்டு. அவை சலனமும் சபலமும் தரக்கூடியது. அவற்றைக் கட்டுப்படுத்தி உயர்ந்த எண்ணங்களை மனிதனுக்கு அடிக்கடி போதிக்கப்படும் போது தான் அவை உயர்ந்த இலட்சியமாக உருமாறுகிறது. மேலும் ஒருவனின் சிந்தனையில் தடுமாற்றம் நீங்கித் தெளிவுபெற உதவி புரிவது கல்வியாகும். அக்கல்வியை ஒருவன் முறையாகப்பெற "உண்மை, அழகு, நன்மை ஆகிய மூன்றிலும் நிறைந்திருக்கும் மகிழ்ச்சியை உணரக்கூடிய அறிவை வளர்ப்பதே கற்பித்தல்"[126] என்கிறார் அரிஸ்டாடில்.

மனிதன் பெறுகிற வளர்ச்சி சூழ்நிலைக்குத் தகுந்தார் போன்று அவனைப் பக்குவப்படுத்துவது கல்வியேயாகும். "கல்வி மற்றும் நல்வாழ்க்கையின் முழுமையான இறுதியான நோக்கம் ஒழுங்கான மனத்தைப் பெற்று இருத்தலேயாகும். நோக்கங்களின் எண்ணிக்கை ஆளின் மனத்தில் அமைந்துள்ள சிந்தனைத் துறைகளின் எண்ணிக்கை ஆளின் மனத்தில் அமைந்துள்ள சிந்தனைத் துறைகளின் வகைகளைப் பற்றி மேலும் விரிவான ஆய்வு செய்யும் பொழுது கல்வியின் அடிப்படை நோக்கம் பொதுவாக ஆறு துறைகளின் வளர்ச்சியைக் குறிப்பது என அறியலாம். அவையாவன புலன் அறிவுத் துறைகள் நினைவு, கற்பனை, பகுத்தறிவு உணர்ச்சித்துறை, மனவல்லமை"[127] என்பர் அறிஞர். ஐம்புல உணர்வுகளையும் மனம், மொழி, இவைகளைச் சீர்திருத்தி ஒழுங்கான முறைகளில் சீர்படுத்துவதே கல்வியின் நோக்கமாகும்.

2.9.2 கேள்வி அறிவு

கேட்கக்கூடிய அறிவு ஒரு மனிதனின் உள்ளத்தை நன்கு பக்குவப்படுத்துவதோடு அறியாமையை நீக்க வல்ல கருவியாகவும், அறிவைக் கூர்மைப் படுத்துவதற்காக கேள்விகள் தோற்றுவிக்கப்படுகின்றன. ஒருவனின் ஐயத்தைத் தெளியவைப்பதே கேள்வி அறிவு என்றுணர்ந்த வள்ளுவனார்,

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை" [128]

என்ற குறட்பாவில் விரித்துரைத்துள்ளார். மேலும் அறிவின் பெருமையை வலியுறுத்த மற்றோரிடத்தில்,

"செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்" [129]

என மொழிகிறார். ஒருவனின் உடலைவிட மனதினைப் பக்குவப்படுத்தக் கேள்வி அறிவைக் கற்றுக்கொண்டே இருக்க வேண்டும். அவ்வாறு அமையாத பட்சத்தில் தான் வயிற்றுக்கு உணவினைத் தர வேண்டும் எனக் கூறுகின்றார். இக்குறட்பாவிற்கு உரை வழங்கும் பரிதியார் "செவியிற் கேள்வி இல்லாத போது சிறிய வயிறாகிய எறும்புக்கும் ஈயவிதப்படும்"[130] என்கிறார். ஒரு மனிதன் அறிவு விளக்கமடைய கேள்விஞானம் அவசியமாகிறது.

2.9.3 கல்வியும் ஒழுக்கமும்

ஒருவரின் அறியாமையை அகலச் செய்ய கல்வியும் கேள்வியும் இன்றியமையாதது. ஆகவே தாம் கற்றதை வாழ்வில் கடைபிடிக்க வேண்டுமென்பதை,

"**கற்றக் கசடறக் கற்பவை கற்றபின்**
நிற்க அதற்குத் தக" [131]

என மொழிகிறார். "கல்வியைக் குறித்த வள்ளுவருடைய சிறப்பான கருத்து கல்வியும் கேள்வியும் அறிவும் ஒருவனை நல்வழிப்படுத்த வல்லவனாக இருத்தல் வேண்டுமென்பதே. கல்விக்கும் ஒழுக்கத்திற்கும் தொடர்பில்லையென வள்ளுவர் கருதவில்லை. இரண்டும் இணைந்தன ஒன்றே கருதினார்." [132] என்று காமாட்சி சீனிவாசன் கூறுகிறார்.

கற்றவனிடம் அறிவும் ஒழுக்கமும் இணையும் பொழுது இல்வாழ்க்கை சிறக்கிறது.

வள்ளுவர் காலத்தில் அறிவியல் மற்றும் கலைத்துறைக் கல்வி வளர்ச்சியுற்று இருக்கவேண்டும். "எண் என்பது கணிதம். அது கருவியும் செய்கையும் என இருவகைபடும். அவை ஏரம்பம் முதலிய நூல்களும், எழுத்தெனவே அதனோடு ஒற்றுமையுடைய சொல்லும் அடங்கிற்று. இவ்விருதிறமும் அறமுதற் பொருள்களைக் காடற்குக் கருவியாகலின் 'கண்' எனப்பட்டன" [133] என வகுக்கிறார் பரிமேலழகர். இதனையே வள்ளுவனார்,

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு" [134]

எனக் கூறுகிறார்.

2.9.4 இன்றைய கல்வியும் நாளைய சமுதாயமும்

கல்வி நிரம்பிய சமுதாயமே அறம் மலர்ந்த சமூகமாகக் காட்சியளிக்கும் என்பதை பலவிடங்களில் வள்ளுவர் தெளிவுபடுத்தியுள்ளார். ஒருவன் எத்தகைய செல்வம் பெற்றிருந்தாலும் நிலையான செல்வம் கல்விச் செல்வம். அதைப் பெற,

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"[135]

என்று ஔவை கூறியுள்ளார். சிறப்புவாய்ந்த சமுதாயத்தை கல்வியறிவுடைய பெண்மையால்தான் உருவாக்க முடியும் என்பதை,

"கல்வி இல்லாத பெண்கள்
களர்நிலம் ! அந்நிலத்தில்
புல்விளைந் திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை"[136]

இப்பாடலின் மூலம் பாவேந்தர் கூறுகின்றார். 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்ற நிலைமாறி அகிலம் போற்றும் அளவிற்கு பெண்கல்வி உயர்ந்துள்ளது. இதற்க்கு முக்கியக் காரணம் மக்களின் விழிப்புணர்வும் அரசாங்கத்தின் பங்களிப்பும் பொது மக்களின் சேவையுமே என்றால் அது மிகையாகாது. இன்றைய சூழலில் கல்விக்காகச் செலவு செய்வதைப் பெறும் முதலீடாகப் பார்க்கப்படுகிறது. எவ்வளவு பணம் செலவு செய்யப்படுகிறதோ அதற்கு தகுந்தாற் போன்று கல்வி

வழங்கப்படுகிறது. அதற்கான கல்வி நிறுவனங்கள் ஏராளமாகச் செயல்படுகிறது. உடலுக்கு மிக இன்றியமையாத கண்ணைப்போல மனிதனை நல்வழிப்படுத்துவது எண்ணும் எழுத்துமாகிய கல்வியே. எனவேதான் தெய்வப்புலவர் 'கண்ணென்ப வாழும் உயிர்க்கு' என்றுரைக்கிறார். அவ்வாறான கல்வியை அறிவார்ந்த ஆசிரியரை அணுகிக் கற்காதவர்கள் இருளில் அகப்படுவர் என்பதனை,

"குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே" [137]

என்று திருமூலர் அறியாமை என்பதனை 'குருடு' எனும் சொல்லால் குறிப்பிடுகிறார். ஆகவே கல்வியானது ஒருவனிடத்தில் இருக்கும் மெய்யறிவை வெளிக்கொணர்வதாக இருக்க வேண்டும் என்கிறார். 'மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்கிறார் வள்ளுவர். கற்றது கையளவு கல்லாதது உலகளவு என்கிறார் ஔவை. அறிவார்ந்த நல்லவர்களோடு சேர்ந்து கற்க வேண்டிய நூல்களை ஆசிரியப்பெரு மக்களோடு இணைந்து கற்க வேண்டும். எவ்வளவு பணம் கொடுத்தாலும் ஒருவனுடைய அறிவை அவனால் மட்டுமே வளர்த்துக்கொள்ள முடியும். எவ்வாறென்றால்,

"நீர் அளவே ஆகுமாம், நீர் ஆம்பல்; தான் கற்ற
நூல் அளவே ஆகுமாம், நுண் அறிவு; மேலைத்
தவத்து அளவே ஆகுமாம், தான் பெற்ற செல்வம்
குலத்து அளவே ஆகும்,குணம்"[138]

என்னும் செய்யுள் வரிகள் பிரதிபலிக்கின்றது. ஒருவனின் நுண்ணறிவு பணத்தால் வருவதன்று. அவனுடைய கற்ற கல்வியினாலே வரும். உழைப்பினாலே செல்வம் பெருகும். அவருடைய குடிப்பிறப்பினாலே குணமானது புலனாகும் என்கிறார். ஆகவே கல்வியின் மூலம் தன்னை நல்லறிவுடையவனாகப் பக்குவப்படுத்திக் கொள்ள நூலறிவும், ஆசிரியர் துணையும் கொண்டு வாழ்க்கையில் கற்றதைக் கடைப்பிடித்துத் தனக்கும் பிறருக்கும் உதவியாக வாழவேண்டும். அவ்வாறு கல்வியறிவு சரியான முறைகளில் வாய்க்கப் பெறாதவர்கள் சமூகத்தில் வறுமை பொய் களவு போன்ற பாதகச் செயல்களில் உழல்கின்றனர். இவர்களைச் சீர் செய்ய

வேண்டியது அரசின் பணியாகும் கல்வியை தரமாக வழங்க வேண்டும். ஒரேநாடு ஒரேவரி எனும் போது கல்விமுறையிலும் இதுபோன்ற மாற்றங்கள் இன்றியமையாது தேவைப்படுகிறது. அதற்கு அனைத்து பள்ளிகளையும் அரசுடைமையாக்க வேண்டும்.

2.9.5 கல்வியும் இன்றைய வறுமையும்

இன்றைய சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளுக்கு காரணம் கல்வியாகும். அறிவாளிகள் வளர்ந்து கொண்டே செல்கிறார்கள். அறிவற்றவர்கள் மங்கிய புத்தியுடன் தாழ்ந்த செயல்களைச் செய்கின்றனர். செல்வந்தர்களும் வறுமையில் உழல்பவர்களும் தங்கள் வாழ்க்கை நெறிகளை அமைத்துக்கொண்ட விதம் கூர்ந்து கவனிக்கத்தக்கது. எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்று தங்களுக்குள் திட்டமிட்டுக் கட்டுப்பாடுகளை உருவாக்குகிறவர்களே, பின்னாளில் பலர் போற்றுமாறு வாழ்கிறார்கள். இது போன்று எந்தவிதத் திட்டமிடுதலும் இல்லாதவர்கள் தம்மிடமுள்ளப் பொருள்களையும் இழந்து வறுமையில் வாடுகிறார்கள். இம்மண்ணில் வாழ்வதற்கு உரியப் பொருள் இல்லாத நிலையை வறுமையின் ஆரம்பம். இன்றைய சமுதாயச் சீர்கேடுகளில் மிகப்பெரிய இடத்தைப் பெறுவது இவ்வறுமையே ஆகும். இவ்வுலகில் வறுமையில்லாத சூழலைக் காண்பது மிக அரிதாக உள்ளது. இவற்றை உணர்ந்துதான் புலவர்கள், மன்னர்கள் அனைவரும் ஈகை, கொடை, தானம் எனப் பிறருக்குக் கொடுக்க வேண்டும் என்று இலக்கியங்களின் மூலமாகவும் வாழ்க்கையின் மூலமாகவும் எடுத்துரைத்து வந்தனர்.

2.9.6 மக்களின் நிலை

உணவின்மை தான் அனைத்துக் குற்றங்களுக்கும் காரணம். 'பசி வந்தால் பத்தும் பறந்து போகும்' என்ற வாய்மொழிக்கேற்ப தம்மிடமுள்ள அனைத்துக் குணநலன்களையும் அழித்தொழிக்கும் என்பதனை நல்வழிப்பாடலில்,

"மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை
தானம், தவம், உயர்ச்சி, தாளாண்மை, தேனின்

கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் – பத்தும்

பசி வந்திடப் பறந்து போம்" [139]

பசியின் தன்மையினை விளக்குகிறார். ஆகவேதான் முன்னோர்கள் 'தானத்தில் சிறந்தது அன்னதானம்' என்று கூறுகின்றனர். எனவே உணவளிப்பதன் மூலம் பசிப்பிணியைத் துரத்த முடியும். வறுமையின் பண்புகளை வள்ளுவர் நல்குரவு என்னும் அதிகாரத்தில் விளக்கியுள்ளார். இவ்வுலகில் துன்பத்திற்கெல்லாம் மேலான துன்பதினை,

"**இன்மையின் இன்னா யதெனின் இன்மையின்**

இன்மையே இன்னா தது" [140]

என்று வறுமையின் கொடுமையை இக்குறளின் வழி வள்ளுவர் விளக்கியுள்ளார். இத்தகைய கொடுமைகளைத் தரவல்லது யாதெனில்,

"**வாய் நான்கு அமையாக் குளனும் வயிறு ஆரத்**

தாய் முலை உண்ணாக் குழவியும், சேய் மரபின்

கல்வி மாண்பு இல்லாத மாந்தரும் – இம்மூவர்

நல்குரவு சேரப் பட்டார்" [141]

என்னும் திரிகடுகப் பாடல் நீர் சரியாக வராத குளம், தாய்ப்பால் உண்ணாத குழந்தை, கல்வி கற்காதவர்கள் போன்றோர் வறுமையில் வாழ்வார்கள் என்கிறது. ஆகவே இத்தகைய துன்பத்தோடு வாழ்வதென்பது மிகவும் கொடுமையானது. இவ்வாறானத் துன்பத்தை ஒருமுறை அடைய நேர்ந்தால் இம்மை இன்பமும் மறுமை இன்பமும் இல்லாமல் போகும் என்பதனை,

"**இம்மை எனவொரு பாவி மறுமையும்**

இம்மையும் இன்றி வரும்" [142]

இக்குறளில் வள்ளுவர் விளக்கிக் கூறியுள்ளார். வறுமை நிகழ்கால, எதிர்காலத்திற்கு மட்டும் துன்பம் தருவதில்லை இப்பிறவிக்கும் அடுத்த பிறவிக்கும் துன்பத்தைத் தருவதோடு ஒருவரின் நற்பண்பினையும் கெட்டழிக்கும். சிறந்த ஞானமுடையவர்கள் செல்வமுடையவரின் தயவை நாட வேண்டியுள்ளது. மேலும் இவ்வறியவரின் சொல்லை, பெற்ற தாயே கேட்க மாட்டாள் என்பதனை,

"**கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்று உண்டாயின்**

எல்லாரும் சென்று அங்கு எதிர் கொள்வர், இல்லானை

இல்லாளும் வேண்டாள், மற்று ஈன்று எடுத்த தாய் வேண்டாள்

செல்லாது அவன் வாயில் சொல்”[143]

நல்வழிப்பாடல் தெளிவுபடுத்துகிறது. பொருளுடையவர்களையே இந்த உலகம் போற்றி புகழ்வதோடு, வறுமையின் துன்பத்தினை,

“**நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்**

யாது தொன்றும் காண்ப தரிது”[144]

இக்குறளில் வள்ளுவர் நெருப்பின்னுல் உறங்குதல் கடினம். அதைவிட துன்பம் வறுமையில் வாழ்வது எனக் குறிப்பிடுகிறார்.

2.9.7 உலகமும் வறுமையும்

வானுயரக் கட்டிடங்கள் ஒருபுறம், இவ்வுலகை ஆய்ந்தறியும் விஞ்ஞானம் மறுபுறம் இப்படி எத்தனையோ பல கண்டுபிடிப்புகள் தொடர்ந்து கொண்டே செல்கிறது. இவ்வளர்ச்சி அனைவருக்கும் கிடைக்கிப்பதில்லை, நிலவிற்கு விண்கலம் அனுப்பும் நாம், நம்மோடு வாழ்பவர்களுக்கு மின் இணைப்பு இல்லையென்பதனை ஒப்புக்கொள்ள வேண்டும். இதைப்பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. நம்நாட்டில் மட்டுமல்ல உலகம் முழுதும் காணப்படுகின்றது. இன்றும் காடுகளில், மலைகளில், தீவுகளில் மட்டுமல்ல நம்முடனும் வாழ்பவர்களுக்கு அடிப்படைத் தேவைகள் கிடைப்பதில்லை. இதனை,

“**வறிஞர்க்கு அழகு வறுமையிலும் செம்மை”**[145]

என்று வெற்றி வேற்கைப் பாடல் விளக்குகிறது. தங்களுக்குத் தேவையான பொருட்கள் கிடைக்காத போதுதான் இவர்கள் படும்துயரை வள்ளுவர் கடுமையாகச்சாடியதோடு, மற்ற அனைத்துத் தீயச்செய்யல்களுக்கும் அச்சாரமாக விளங்குவது இவ்வறுமையேயாகும். உலகின் பல்வேறு பகுதிகளிலும் இதுபோன்ற குற்றச் செயல்கள் நடைபெறுகிறது. இவ்வறுமையினைப் பயன்படுத்தியே சமுகவிரோதக்கும்பல் குழந்தைகள், இளைஞர்கள் போன்றவர்களைச் தீயச்செயல்களில் ஈடுபடுத்துகின்றனர்.

2.10.0 இரவு

இரவு என்பது இருப்பவரிடம் இல்லாதவர் தனக்கு வேண்டியவற்றை கேட்பது, வறுமையின் முடிவே இரத்தல். துறவியர் இல்லறத்தாரிடம் இரந்து

வாழ்வதிலிருந்து வேறுபட்டது. மற்றவரிடம் யாசித்தலைக் குறிப்பதால் நல்குரவு அதிகாரத்தை அடுத்து இந்த அதிகாரம் வைக்கப்பட்டுள்ளது.

2.10.1 இரப்பாரும் இறக்காறும்

இச்சமூகத்தில் பொருள்வளம் கொண்டவர்கள் பலர், மிக்க வறுமையுற்றவர் வெகுசிலர் அவர்கள் தங்களின் வாழ்வதற்காக இரக்க நேரிடுகிறது. மற்றவர்களுக்கு கொடுத்து உதவ வேண்டியது அவசியம் எனபல்வேறு இலக்கியங்களும் சமயங்களும் வலியுறுத்துகிறது. பொருட்களைச் சேமிப்பதே மற்றவர்களுக்குக் கொடுப்பதற்காகத்தான். ஒருவர் கேட்டும் தரவில்லை என்றால் பழிச்சொல்லுக்கு ஆளாவார்கள் என்பதனை,

"இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்
அவர்பழி தம்பழி அன்று" [146]

என்னும் குறளில் விளக்கிக் கூறியுள்ளார். தமிழர்கள், புகழுக்காக உயிரையே கொடுப்பார்கள். பழியேற்படின் அவட்றைச்செய்ய அஞ்சுவார்கள். ஆகவே இல்லையென்பவர்க்கு கொடுத்தலே சிறந்த அறப்பண்பாகும். அதுதான் ஒருவனைப் புகழோடு வாழவைக்கும். பாரதப் போரில் கர்ணன் மீது அம்புகள் பாய்ந்தும் அவனது உடம்பில் உயிர் பிரியாததற்குக் காரணம் அவனது கொடைத்தன்மையே ஆகும். எனவே இல்லையென இரப்பவர்களை என்ன செய்வதென்றால்,

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகுஇயற்றி யான்"[147]

இரத்தல் நன்றெனக்கூறி அவ்வாறு உயிர் வாழ்பவர்களைப் படைத்த இறைவனே கெட்டுப்போக வேண்டும் என்றொரு முற்போக்கு சிந்தனையினைக் கூறியுள்ளார். உலகில் வறுமைகள் ஒழிய வேண்டும் என்பதற்காக உலக வங்கியும் பல நாடுகளுக்குத் தன்னால் இயன்ற அளவு பணத்தினை வாரி வழங்கிக்கொண்டுதான் இருக்கிறது. ஆனால் பஞ்சம் தீர்ந்த பாடில்லை. பட்டினிச்சாவுகள் குறைந்த பாடில்லை. ஆகவேதான் வள்ளுவன் இரப்பவரை படைத்த இறைவனே கெட்டழிக எனகூறுகிறார்.

2.10.2 கயவர்

இச்சமூகத்தில் இன்றும் இந்த அவலநிலை தொடர்வதற்கு முக்கியக் காரணமானவர்கள் ஆட்சியாளர்கள். ஒரு தாய் தன்னுடைய குழந்தைகளின் தேவையறிந்து கொடுப்பதைப் போல ஆட்சியாளர்களும் தான் ஆட்சிசெய்யும் மக்களின் வாழ்வியல் நிலையினை அறிந்து செயல்பட வேண்டும். மக்களின் தேவைகளை விடுத்து தான் மட்டும் வாழும் சுயநலத்தோடுள்ள ஆட்சியாளர்களும் அரசு அதிகாரிகளின் சரியான கண்ணோட்டமின்மையால் பலர் அடைய வேண்டிய பயன்களைச் சிலர் அனுபவிப்பதால் இச்சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இது போன்று சமூகத்தில் வாழ்பவர்களை,

"மக்களே போல்வர் கயவர் அவரன்ன

ஒப்பார் யாம்கண்டது இல்" [148]

என்னும் குறளில் வள்ளுவர் கயவர்கள் பல தீமைகளைச் செய்தாலும் அதற்கான வினைப்பயனை ஒருநாள் அறுவடை செய்வார்கள். ஆகவே இச்சமூகம் உயர்வுபெற வேண்டுமெனில் அன்பு, நட்பு, ஈகையோடு வாழும் மக்களின் பண்புகளும் சமூக நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச்செல்லப்படுகிறது.

2.10.3 சமூகத்தில் இன்றியமையாத குறைபாடுகள்

சமுதாயத்தில் கள்ளுண்பதும், புலால்லுண்பதும் பரத்தையர் உறவும் பரவலான குறைபாடுகளாகக் காணப்படுகிறது. வணிக நிலையிலும் பொருளியல் நிலையிலும் உயர்ந்திருந்த மக்கள் தம்வாழ்க்கையில் ஒருசில கட்டுப்பாடுகளைத் தளர்த்தி வாழ்கிறார்கள். "கள்ளையுண்பீராக, சோற்றைச் சமைப்பீராக, தின்னப்படும் ஊன்கறியை அறுப்பீராக, புழுக்குதற்குரிய இறைச்சி வகைகளை உலையில் ஏற்றுவீர்களாக"[149] எனப் பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது. மக்களை மதிமயக்கும் கள்ளைத் தவிர்க்க அன்பும் அறிவும் அருளும் ஒரு சமுதாயத்திற்குத் தேவையான உயர்ந்த பண்புகளாகும்.

2.10.4 கள்

கள்ளுண்பது உடல்நலத்தைக் கெடுக்கும் என்பதைவிட மனிதனை அழித்து, அறிவுதடுமாறி நேர்மை சிதைவதோடு பெற்ற தாயின் முகத்தில்

விழிப்பதையும் மிகுந்த துன்பமென்றுரைத்தனர். இதனை,

"ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்

சான்றோர் முகத்துக் களி"[150]

இக்குறளின் மூலம் வள்ளுவரும் வலியுறுத்தியுள்ளார். கள்ளின் கொடுமையினைப் பரிமேலழகர், "மனமொழி மெய்கள் தம் வயத்த அண்மையின் நணழியும்; அழியவே. ஈன்றாட்டும் இன்னாதாயிற்று; ஆனபின் கள் இருமையும் கெடுத்தலறிந்து சேய்மைகண்ன கூடியுஞ் சான்றோர்க்கு இன்னாதால் சொல்ல வேண்டுமோ என்பதாம்"[151] எனக்கூறுகிறார். மதிமயங்கி அறிவற்ற பல செயல்களால் மனிதனை மாக்களாகச் செயல்பட வைப்பது கள். எனவே இதையுண்பவர் மனிதன் என்ற உணர்வற்றுச் செய்யத்தக்க செயல்களால் அழிவை ஏற்படுத்துவதால் இவற்றை அறவே தவிர்க்க வேண்டும். இப்பழக்கம் மேலும் சில தீயச்செயல்களை ஊக்குவிக்கிறது.

2.10.5 சூது

தன்னிலைக்கெட்டு மதி மயக்கத்தாலும் பொருள் வேட்கையாலும் நடப்பதே சூதாட்டம். உடல் உழைப்பையும் தனது அறிவையும் நம்பாத மனிதன் அற்ப வழிகளில் பொருட்களைச் சேர்க்கச் சூதாட்டத்தில் இணைகிறான். இச்சூதாட்டம் பேராசையைத் தூண்டுவது மட்டுமல்லாமல் உழைப்பை வெறுத்துச் சோம்பேறித்தனத்தை தோற்றுவிக்கிறது. சூதாட்டத்தினால் மனிதன் பொருளை மட்டும் இழப்பதில்லை தன் பெருமைகள் அனைத்தையும் இழக்கிறான் என்பதனை,

"ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்

நன்றெய்தி வாழ்வதோர் ஆறு" [152]

இக்குறள் மூலம் விளக்கியுள்ளார். சிறந்த அறத்தை உடைய தர்மனே சூதின் சூழ்ச்சியால் அனைத்தையும் இழக்க நேரிட்டது. எனவே தன்னிடம் இருக்கும் அனைத்துப் பண்புகள் மற்றும் செல்வங்களை அழிக்கவல்லது.

2.10.6 பரத்தையர் உறவு

சங்ககால ஆடவர்கள் பல மகளிரோடு தொடர்பு கொண்டு வாழ்ந்தனர். தலைவன், தலைவி இருக்கும்பொழுதே பரத்தையரிடம் உறவு கொண்டு தன் மார்பிலணிந்த பூமாலை குழையும்படி பரத்தையரோடு

குளத்தில் நீராடியமையை,

“கழைநிலை பெறாஅக் காவிரி நீத்தல்
குழைமா ணொள்ளிழை நீவெய் யோளோடு
வேழ வெண்புணை தழீஇப் பூமியர்
கயனா டியாணையின் முகளமர்ந் தாஅங்
கேந்தெழி லாகத்துப் பூந்தார் குழைய
நெருந லாடினை புனலே” [153]

என்னும் அகநானூற்று பாடல் சுட்டுகிறது. ஆனால் திருக்குறள் ஒருவன் ஒருத்தியோடு வாழும்முறைமையை வலியுறுத்தியுள்ளது. வள்ளுவரும் தம் நூல் முழுமைக்கும் இக்கருத்தினை உறுதியாகக் கூறியுள்ளார். காமத்துப்பாலில் உள்ள கருத்தும் ஒருவன் ஒருத்தியைப் பின்னணியாகக் கொண்டது. ஒருவன் பல மகளிரோடு தொடர்பு கொள்வதையும், பொருளுக்காகப் பிற ஆண்களுடன் தொடர்பு கொள்வதையும் கடுமையாகச் சாடியுள்ளார். அவரின் கருத்தினை ஏற்காத மனிதன் இன்று HIV என்னும் வைரஸ் பரப்பக்கூடிய நோயினுக்கு அஞ்சுகின்றனர்.

2.11.0 சமுதாயத்தை வளமாக்குவன

ஒரு மனிதன் பிறர் குற்றங்களைச் சுட்டிக்காட்டுவதற்கு முன் தன்னிடம் உள்ள குறைகளை உணர்வது அவசியமாகும். வரைவின் மகளிர் தொடர்பு உடல்நலத்தைச் சிதைப்பதோடு பால்வினை நோயினையும் உண்டாக்குவதால் அவற்றைத் தவிர்க்க வேண்டும். கொல்லாமை ஒரு அறமாகும். ஆகவே மற்ற உயிர்களை நேசிப்பது சிறந்த பண்பாகும். மனிதனுக்கு சோம்பலை உண்டாக்கும் சூதினையும் மதிமயக்கும் கள்ளினையும் போற்றுவது சமுதாயத்தில் அமைதியின்மையை ஏற்படுத்தும். திருடுதல், பிறன்மனை நோக்குதல் இவற்றைத் தவிர்த்து மனதிற்கும் அறிவிற்கும் சிறப்பைத் தரும் பிற துறைகளில் தன்மனதினைச் செயல்படுத்தித் தனக்கும் சமுதாயத்திற்கும் பெருமையினை ஏற்படுத்த வேண்டும்.

2.11.1 கலைகள்

இயற்கையின் படைப்பில் மனிதன் ஒப்பற்ற கற்பனைத்திறனும் பகுத்தறிவும் அவனுக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும். தனக்குக் கிடைத்த நேரத்தில் அவன் மனமகிழ்ச்சியுடன் ஈடுபட்டு வந்தமையே பின்னாளில்

கலைகளாய்ப் பரிணாமம் பெற்றது. கலை கலைக்காக இன்றி வாழ்க்கைக்கும் பயன்பட்டது. தன்னுடைய கருத்துகளை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும் ஊடகமாகக் கலைகள் பயன்பட்டது. "மனிதன் மற்ற உயிர்களில் இருந்து சிறந்து விளங்கக் காரணம் அவன் பகுத்தறிவே. அதன் துணைகொண்டு எண்ணும்போது அவன் காலத்தையும், தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடிகிறது. பணம் ஆற்றல் மிக்கது என்பது உண்மை. அந்த ஆற்றலுக்கும் அப்பாற்பட்டது ஒன்று இருக்கிறது. அதுதான் மனநிறைவு"[154] என்று ஈ.கோ பாஸ்கரதாஸ் கூறுகிறார். ஆக மக்கள் அடிப்படைத் தேவைகளைப் பெறுவதுடன் நிறைவடைவதில்லை, அவர்களின் மனம் முழுமையடையக் கலைகள் பெரும்பங்கு வகித்தன.

மனிதன் கலைகளின் வாயிலாகப் பல அரியக் கருத்துகளையும் உயர்ந்த நோக்கத்தையும் வெளிப்படுத்தியதோடு வாழ்வியலை கலைநுணுக்கத்தோடு அறியலானான். இதனை, மயிலை. சீனி வேங்கடசாமி, "மனிதனுடைய நல்வாழ்வுக்கு உதவுகின்ற எல்லாத் தொழில்களையும் கலைகள் என்று கூறலாம். தச்சு வேலை, கருமார வேலை, உழவு, வாணிபம், நெசவு, மருத்துவம் முதலிய தொழில்கள் யாவும் கலைகளே"[155] என்றுரைக்கிறார்.

மனிதனின் மனதிற்குப் பெரிதும் அமைதியைத் தரவல்லது அழகுக் கலைகளே. அவற்றில் தம்முடைய நுண்ணறிவையும் கலை நுணுக்கத்தையும் வெளிப்படுத்தினர். அழகுக்கலைகள் ஐந்து வகைப்படும். அவை கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை போன்றவையாகும்.

2.11.2 சிற்பக்கலை

தம் கலை நுட்பத்தினைச் சிற்பங்களின் வாயிலாக வெளிப்படுத்துகின்றனர். மேலும் அக்கால மக்களின் தம்பழக்க வழக்கங்களை மிகத்துல்லியமாக செப்பனிடனர். நெடுநல்வாடையில் நக்கீரனார் சிற்பநூலறிந்த தச்சரை,

"நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேளங் கொண்டு தெய்வ நோக்கிப்
பெரும்பெயர் மன்னீர் கொப்ப மனைவகுத்
தொடங்குடன் வளைஇ யோங்குநிலை வரைப்பீர்" [156]

என்றுரைக்கிறார். தச்சுத் தொழிலைச் சார்ந்த பல செயல்கள் உவமைகள் மூலம் திருக்குறளில் சுட்டப்படுகின்றது. இதனை,

"இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி"[157]

என்னும் குறளில் குடும்பத்தில் பொருள் சேர்க்கும் முயற்சியில்லாத குடி அழிந்துவிடும் என்பது வெட்டப்படும் மரத்திற்கு உருவகப்படுத்தப்படுகிறது. "இடுக்கண் கால் கொன்றிட வீழும் எனும் தொடருக்குத் துன்பமாகிய நவியம் புகுந்து கன்முதலை வெட்டி சாய்க்க ஒரு பற்றின்றி வீழா நிற்கும்"[158] எனப் பரிமேலழகர் உரை செய்துள்ளார். ஆகச் சங்கக் காலத்தைப் போலத் திருவள்ளுவர் காலத்திலும் தச்சுத்தொழில் இருந்திருப்பது அறியப்படுகிறது.

2.11.3 கட்டிடக்கலை

கட்டிடக் கலைகளில் வல்லவர்களான தமிழர்கள் பற்பல மாட மாளிகைகளையும், கோபுரங்களையும் உருவாக்கித் தம் கலைநுட்பத்தினை வெளிப்படுத்தியுள்ளனர். தமிழரின் கட்டிடச் சிறப்பினை இன்றும் தஞ்சை பெரியக்கோவில், மதுரை மீனாட்சி அம்மன் கோவில், ஆயிரங்கால் மண்டபம் எனக் கூறிக்கொண்டே போகலாம். இது போன்ற கலைத்திறனை,

"இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென
மணிப்புறா துறந்த மறந்சோர் மாடத்து
எழுதணி கடவுள் போகலிற் புல்லென்று
ஒழுகுபலி மெழுகா புன்றிணை"[159]

எனும் அகநானூற்று பாடலில் செங்கற்கலால் கோயில் கட்டும் முறை இருந்தமை உணரமுடிகிறது. கட்டடக்கலையைப் பற்றிய தெளிவான குறிப்புகள் குறளில் இல்லையெனினும் அக்காலத்தில் மண்ணைக் கொண்டு தொழில் செய்தனர் என்பதற்கு,

"நுண்மாண் நுழைபுல மில்லான் எழில்னலம்
மண்மாண் புனைபாவை யற்று" [160]

என்னும் குறளில் மண்ணினால் புனையப்பட்ட சிறந்த பாவையென வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். அந்நாளிலும் மண்ணினால் சிலை செய்யும் வழக்கம் இருந்தமை இதனால் புலனாகிறது. இன்றும் விண்ணுயரக் கட்டிடங்கள் காணப்படுவதையும் மெய்மறக்கும் கலையுணர்வையும் காணமுடிகிறது.

2.11.4 இசைக்கலை

அக்காலத்தில் பல்வகையான இசைக்கருவிகள் வழக்கத்தில் இருந்தன. பாணர், கூத்தர், பொருநர் போன்ற கலைஞர்கள் இசைக் கருவிகளைப் பயன்படுத்தினார்கள் என்பதனை,

"நல்யாழ் ஆகுளி பசலையொடு சுருக்கிச்
செல்லா மோதில் சில்வளை விறலி" [161]

என்னும் புறநானூறு வரிகளில் பாணர் இசை நிகழ்ச்சி முடித்துக் கருவிகளை உடன் கொண்டு சென்றமை அறியமுடிகிறது. வள்ளுவரும் தம் குறளில் 'குழலினிது யாழினி தென்ப' என்று கூறுவதால் இக்கருவிகள் அக்காலத்தில் இருந்தமையை உணரமுடிகிறது. மனிதனின் மனதை வருடும் இசைகள் காலத்தைக் கடந்து என்றும் வாழ்ந்து வருகின்றது.

நாடகக்கலை

அரசர்கள் மற்றும் மக்கள் முன்னிலையில் கலைஞர்கள் ஏதேனும் ஒரு கருப்பொருளை மையமாக வைத்து நாடகங்களாக நடித்து வந்தனர். இவர்கள் யாழிசைத்துப் பாடுவதால் யாழ்ப்பாணர், இசைப்பானர், மண்டகப்பாணர் எனக் காணப்பட்டனர். விறலியர் ஆடிய நடனம் பற்றி,

"அறற் குழற் பாணி தூங்கு யவரொடு" [162]

என சிறுபாணாற்றுப்படைக் குறிப்பிடுகிறது. கலைஞர்கள் குரவைக்கூத்து ஆடுவதை,

"ஓராவு உருட்டுங் குடுமி குராலொடு
மராஅஞ் சீறூர் மருங்கிற் றூங்குஞ்" [163]

என்ற வரிகளில் மாமூலனார் வெளிப்படுதியுள்ளார். இது போன்று வள்ளுவர் காலத்திலும் இடம் பெற்றுள்ளதை,

“கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்

போக்கும் அதுவிளிந் தற்று”[164]

என்னும் குறளில் அக்காலத்தில் கூத்துக்கலை நிகழ்ந்தமை புலனாகிறது. மேலும் அக்காலத்தில் கூத்து நிகழ்வதற்குரிய அரங்கங்கள் இருந்தமையும், இக்கலைகளைக்காண இக்காலத்திலும் பெருந்திரளாக மக்கள் கூடுவதையும் இவற்றின் வாயிலாக தம் கருத்துகளை வெளிப்படுத்தப் பயன்பட்டது. இக்கலை இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பை நல்கியது.

2.11.5 வழிபாடுகள்

மக்கள் பல்வேறு வகைகளில் வழிபட்டு வருகிறார்கள். எந்தவொரு செயல் செய்தாலும் அதில் வழிபாட்டிற்கு முக்கியப்பங்கு வகிப்பதோடு பலியிட்டு நன்றி தெரிவித்தனர். இதனை அகநானூற்று பாடலில்,

“வயவாள் எறிந்து வில்லின் நீக்கிப்
பயனிரை தழீஇய கடுங்கண் மழவர்
அம்புசேட் படுத்து வன்புலத் துய்த்தெனத்
தெய்வம் சேர்ந்த பராரை வேம்பிற்
கொழுப்பா எறிந்து குருதி தூஉய்ப்
புலவு புழுக்குண்ட வான்கண் அகலறைக்” [165]

என குறிக்ப்பிடுகிறது. மேலும் இயற்கையையும் பல தெய்வங்களை வணங்கினார்கள் என்பது புலனாகிறது. இதனை,

“பரவியுந் தொழுதும் விரவுமலர் தூயும்
வேறுபல் லுருவிற் கடவுட் பேணி
நரையும் விரையு மோச்சியு மலவு” [166]

எனக் கபிலர் உரைக்கிறார். சங்கக் காலம் போன்று வள்ளுவர் வாழ்ந்த காலங்களிலும் வழிபாடுகள் நடைபெற்றதை,

“சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு” [167]

என்ற குறள் மூலம் அறியமுடிகிறது. மக்கள் அவர்களுக்குப் பிடித்தவாறு வழிபாடு செய்தனர். போரில் வீரமரணம் எய்துபவர்களை முன்னோர்கள் வழிப்பட்டனர் என்பதை ஐங்குறுநூறு பாடலில்,

“விழுத்தொடை மறவர் வில்லிடத் கொலைந்தோர்
எழுத்துடை நடுகல்” [168]

எனும்பாடலில் வீரர்களின் பெயரும், சிறப்பும் நடுகல்லில் எழுதி வைக்கப்பட்டமையைக் காணமுடிகிறது. வள்ளுவர் காலத்திலும் நடுகல் வழிபாடு இருந்தமையை,

"என்னைமுன் நில்லன்மின் தெவ்வீர் பலரென்னை
முன்னின்று கல்தின் றவர்"[169]

இக்குறட்பா மூலம் வள்ளுவர் உணர்த்துகிறார். ஆகவே வழிபாடுகள் அவரவர் வாழும் சமூகச்சூழலைப் பொறுத்துச் சடங்குகள், நம்பிக்கைகள், தெய்வங்கள் போன்றவற்றில் மாறுபட்டிருந்தமையை இன்றும் அறிய முடிகிறது.

2.11.6 சடங்குகள்

"இனக்குழு மக்கள் தங்களது அடிப்படைத் தேவைகளான மழை, உணவு, வேட்டை, கால்நடை, வெற்றி, பாதுகாப்பு, செழிப்பு ஆகியவற்றுக்காகப் பலவிதச் சடங்குகள் செய்தனர். இச்சடங்குகள் நன்மையைத் தருவதாக நம்பினார்கள்."[170] இம்முறைகள் அவர்களின் வாழ்க்கை முறைகளில் இரண்டறக்கலந்து இருந்தது. அக்காலத்தில் பூவும் நெல்லும் சேர்த்துத் திருமணச் சடங்கு செய்தமையை,

"நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றைக்"[171]

என்ற அகநானூறு பாடல் வரிகள் விளக்குகிறது. குன்றக்குறவன் தன் நிலத்தினில் மழைவேண்டிச் சடங்கு செய்ததை,

"**குன்றக்குறவன் ஆர்ப்பின் எழில்**
நுன்ப லழிதுளி பொழிய நாட"[172]

என்ற ஐங்குறுநூறு பாடல் நமக்குத் தெளிவுறுத்துகிறது. சங்ககால மக்கள் தெய்வங்களுக்குப் பலியிடுதல் போன்ற சடங்குகளைச் செய்தமையை வள்ளுவர்,

"**அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்**
உயிர்செகுத்து உண்ணாமை நன்று" [173]

இக்குறளில் நெய் முதலிய பொருட்களைத் தீயில் இட்டு வேள்விகள் செய்வதைக்காட்டிலும் பிற உயிர்களைக் கொல்லாமையே சிறந்தது

என்கிறார். ஆனால் அன்று முதல் இன்று வரை தெய்வ வழிபாடுகளும் நம்பிக்கைகளும் பின்பற்றப்படுகிறது.

2.11.7 நம்பிக்கைகள்

மக்கள் தாங்கள் செய்யும் அனைத்துச் செயல்களையும் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்தார்கள். "வீர வாழ்க்கை வாழ்ந்து தாம் செய்ய வேண்டிய கடமைகளைச் செவ்வனே முடித்தவர்கள் விண்ணுலகம் செல்வர்."[174] எனப் புறநானூற்று பாடல் விளக்குகிறது. ஆனால் வள்ளுவரோ,

"நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தே ளுலகு" [175]

என்னும் குறளில் தேவலோகம் என்று மக்களின் நம்பிக்கையைக் கூறியுள்ளார். மேலும் இன்று மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கும் 'பேய்' என்பது அக்கால மக்களிடம் வழக்கத்தில் இருந்தமையைத் தம் குறளில்,

"**அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்**
பேஎய்கண் டன்ன துடைத்து" [176]

எனக் குறிப்பிடுகிறார். மேலும் இதுபோன்ற நம்பிக்கை இருந்தமையை,

"வாய்வன் காக்கையும் கூகையும் கூடிப்
பேஎய் ஆயமொடு பெட்டாங்கு வழங்கும் நாடு" [177]

என்னும் புறநானூற்று பாடல் வரிகள் இயம்புகிறது.

2.11.8.0 தெய்வங்கள்

மக்களிடம் சமயம் தொடர்பான வேறுபாடுகள் இருந்தாலும் அவரவரின் விருப்பம் போன்று செயல்பட்டனர். திருவள்ளுவரும் எந்த ஒரு மதக்கலப்பும் இன்றி தம் நூலினை இயற்றியுள்ளார். பல சமயங்கள் திருக்குறளின் கருத்துக்களையொத்து விளங்குவதால், எம்மதத்தவரும் போற்றும் உறைவிடமாகத் திருக்குறள் விளங்குகிறது.

2.11.8.1 சங்க இலக்கியமும் தெய்வங்களும்

சங்கக் காலத்தில் அவரவர் திணைக்குரிய தெய்வங்களை வழிப்பட்டனர். அதைப்போன்று காஞ்சிபுரம் பல சமயங்களின்

உறைவிடமாகத் திகழ்ந்தது என்பதை,

"மலர்தலை யுலகத் துள்ளும் பலர்தொழ

விழவுமேம் பட்ட பழவிறன் மூதூர்" [178]

இப்பெரும்பாணாற்றுப் பாடல் சுட்டுகிறது. எனவே அக்கால மக்கள் பல தெய்வ வழிபாட்டைப் போற்றினர். அது பற்றிய செய்திகள் இலக்கியங்களில் காணப்படுகிறது. புறநானூற்றில்,

"**நன்றாய்ந்த நீள்நிமிர் சடை முதுமுதல்வன்"** [179]

என்று சிவபெருமானையும். மேலும்,

"**வெண்டகப் புணரி அலைக்கும் செந்தில்**

நடுவேள்" [180]

என்ற அடியில் முருகப்பெருமானையும்.அதைப்போன்று,

"**உருகெழு மரபின் அயிரை பரவியும்"** [181]

என்று பதிற்றுப்பத்து அடியில் கொற்றவையையும். திருமாலை,

"மாயோ னன்ன மால்வரை கவாஅன்" [182]

என்னும் நற்றிணைச் செய்யுளும். மேலும்,

"**வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுள்"**[183]

இப்புறநானூற்று வரிகளில் இந்திரனுக்குக் கோவில் இருந்தமை அறியமுடிகிறது. இது போன்று மக்கள் தங்களின் சமயமோ, மதங்களோ அவரவரின் காலச் சூழ்நிலைக்குத் தகுந்தார் போன்று அமைந்தது.

2.11.9.0 திருக்குறளும் சமயங்களும்

"சமயம் என்ற சொல் 'சமையம்' என்னும் சொல்லினின்று தோன்றியது. சமையம் என்ற சொல்லுக்குச் சமைக்கப்பட்டது அல்லது வகுக்கப்பட்டது என்பது பொருள். இச்சொல் ஆங்கிலத்தில் சமயத்தைக் குறிக்க 'ரிலிஜியன்' என்ற சொல் வழங்கப்படுகிறது. அச்சொல் இலத்தின் மொழியிலிருந்து பெறப்பட்டது. மனிதனுக்கும் மனிதனைவிட உயர்ந்த ஒருவனுக்கும் உள்ள உறவைக் குறிப்பது அச்சொல்லின் பொருள்"[184] என்று இரா. மாணிக்கவாசகர் செப்புகிறார். "சமயம் என்ற சொல் முதன் முதலாக மணிமேகலையிலும், பெருங்கதை, திருமந்திரம், அப்பரின் தேவாரப்பாடல்கள் ஆகியவற்றிலும் காணப்படுகிறது"[185] என ஏ.வி.சுப்பிரமணிய ஐயர் கூறுகிறார். சமயம் என்பது

மனிதனை இறையுணர்வோடு தொடர்புபடுத்தி நல்வழிப்படுத்த உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பாகும்.

2.11.9.1 சமயத்தின் நோக்கம்

பிற உயிர்களையும் தன்னுயிர் போன்று எண்ண வேண்டும் என்ற கொள்கையை உணர்த்துவதற்காகவே சமயங்கள் உருவாகின. ஆனால் அவை காலப்போக்கில் 'தாம்' என்ற சுயநலப்போக்கு பெருகி இறையென்ற உண்மைப்பொருளை மறந்து சுயநல வட்டத்திற்குள் இன்று உழன்று கொண்டு மக்களிடம் பிரிவினையை ஊக்குவிக்கிறது. ஆனால் பெரும்பாலான சமய அமைப்புகள் உணர்ச்சி வெறி ஊட்டக்கூடிய வகையிலேயே இருக்கிறது. காரல் மார்க்ஸ் "மனிதன் தான் மதத்தை உண்டுபண்ணுகிறான். மதம் என்பது நசுக்கப்பட்ட ஒரு பிராணியின் ஓலம்; மனமில்லாத உலகத்தின் நிலைமைக்கு உயிர். அது ஜனங்களுக்கு அபினி; ஜனங்களுக்குச் சந்தோஷம் அளிப்பதாக வெறும் பிரமை ஊட்டுவது மதம்"[186] என்றுரைக்கிறார். ஆக மதங்கள் நல்லெண்ணங்களைப் போதிக்குமானால் யாரும் அவற்றைக் குறை கூறுவதில்லை. உணர்ச்சி வயப்படுத்தி மக்களை மதிமயங்க வைக்கும் போது பெரும்பாலானோர் எதிர்க்கின்றனர்.

ஆகவே ஒவ்வொரு மனிதனும் ஒழுக்கமான உயர் பண்புகளைப்பெற்று உலக இன்பங்களைத் துய்க்கச் சான்றோர்களால் உருவாக்கப்பட்ட அமைப்பே சமயம் எனலாம். அவை மனித உணர்வுகளைப் பக்குவப்படுத்தி நல்வழிப்படுத்துவதே அவற்றின் முதன்மையான நோக்கமாகும். மக்கள் இயற்கை வழிபாட்டினைக் கடைப்பிடித்து வாழ்ந்தார்கள் என்பதை,

"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றாம்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"[187]

என்னும் நூற்பாவில் கதிரவன், நிலா போன்றவற்றை வணங்கினர். மேலும் சங்க கால இறைவழிபாடு குறித்துப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களின் வாயிலாக அறிய முடிகிறது. கோயில்களின் வாயில் திருமகளின் வடிவத்தை ஓவியமாக எழுதும் வழக்கம் இருந்ததை,

"குன்றுகுயின் றன்ன ஓங்குநிலை வாயில்
திருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பின்
தருமணல் ஞெமிரிய திருநகர்"[188]

என்ற நெடுநல்வாடை பாடல் வரிகளிலும், கலித்தொகையில்,

"ஆலும் கடம்பும்
அணிமார் விலங்கிட்ட
மாலைபோல் தூங்கும் சினை"[189]

இப்பாடலிலும், நற்றிணையில்

"எம்மூவர் வாயில் ஒண்டுறைத் தடைஇய
கடவுள் முதுமரத்து ...."[190]

என்னும் செய்யுள் வரிகள் மூலம் இயற்கைப் பொருட்களையும் மரங்களையும் வழிப்பட்டனர் என்பது தெளிவாகிறது. மேலும் அக்கால மக்கள் தங்கள் செய்யும் செயலை இறையுணர்வோடு வேள்விகள் போன்றவற்றை அந்தணர் மூலம் அரசர்களுடன் இணைந்து நடத்தி வந்தனர். ஏனெனில் மக்கள் வினைப்பயன், மறுபிறவி போன்றவைகளில் மிகுந்த நம்பிக்கை கொண்டவர்களாகத் திகழ்ந்தனர். இதனை,

"**வாழச் செய்த நல்வினையல்ல**
தாமுங் காலைப் புணை பிறிதில்லை" [191]

இப்புறநானூற்றுப் பாடல் விளக்குகிறது. விண்ணுலகில் தன் நண்பன் பாரியைக் காண்பதற்காகக் கபிலர்,

"இம்மை போலக் காட்டி யும்மை
இடையில் காட்சி நின் னொடு
உடனுறைவு ஆக்குக உயர்ந்த பாலே"[192]

என்னும் புறநானூற்றுப்பாடல் அடியின் மூலம் சுட்டுகிறார். ஆக சங்ககால மக்கள் தங்கள் வாழ்வியலை இறைத்தன்மையோடு இயைந்து வாழ்ந்தனர் என்பது புலனாகிறது.

2.11.9.2 திருவள்ளுவர் காலச் சமயச்சூழல்

மக்கள் பல்வேறு வகையான நெறிமுறைகளையும் நம்பிக்கைகளையும் வழிபாட்டு முறைகளையும் தெய்வங்களையும் வணங்கி வாழ்ந்து வந்தனர். இத்தகைய பழக்க வழக்கங்களை அடுத்த தலைமுறையினர் கண்மூடித் தனமாக நம்பாமல் அதே சமயத்தில் அறவழியிலும் அறிவு வழியிலும் இறையருளைக்காண வேண்டும் என்று வள்ளுவர் விழைந்துள்ளார். அதுவும் தன்னையும் பிறரையும் ஏற்புடையத்தக்க வகையில் அமைய வேண்டும் என்பதற்காகவே முதல் பத்துக்குறளை அளித்துள்ளார். இதன் பொருட்டே

அனைத்துச் சமயத்தவரும் உரிமை கொண்டாடும் அளவிற்குப் பொதுக்கருத்தினைப் பெற்றுத் திருக்குறள் விளங்குகிறது.

2.11.10 திருவள்ளுவரும் கடவுள் கொள்கையும்

திருவள்ளுவருடைய சமயம் பற்றியும், அவரின் கடவுள் கொள்கையைப் பற்றி கொண்டிருந்த கருத்துகளைத் தெரிந்து கொள்ளத் துணைப் புரிவது 'கடவுள் வாழ்த்து' அதிகாரம் ஆகும். பலவகையான சமயத்தவரும் வணங்கி வழிபட ஒரு கடவுளின் உருவம் அல்லது நெறிமுறைகள் தேவைப்பட்டதால் அவற்றைத் திருக்குறளோடு பொருத்திப்பார்த்து உரிமை கொண்டாடுகின்றனர். சைவச் சமயத்தைச் சார்ந்தவர்கள் சிவனையும், வைணவச் சமயத்தைச் சார்ந்தவர்கள் திருமாலையும் புத்தச் சமயத்தவர் புத்தரையும் சமணச் சமயத்தவர் தீர்த்தங்காரங்களும் ஜைனச் சமயத்தவர் மகாவீரரையும் கிறித்துவச் சமயத்தவர் இயேசுபிரானையும், இசுலாமியச் சமயத்தவர் அல்லாவையும் என இன்னும் பல சமயத்தினர் பல கடவுள்களை வணங்கினர்.

2.11.10.1 அகரமும் கடவுளும்

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"[193]

இம்முதற் குறளில், எழுத்துகள் அகரத்தை முதலாகக் கொண்டு இருப்பதைப்போன்று, உலகம் இறைவனை அடிப்படையாகக் கொண்டது. "எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய எழுத்தைத் தமக்கு முதலாக உடையன; அவ்வண்ணமே உலகம் ஆதியாகிய பகவானைத் தனக்கு முதலாக உடைத்து என்றவாறு" [194] என விளக்கம் தருகிறார் பரிதியார்.

உலகில் உள்ள மொழிகள் அனைத்தும் 'அ' என்ற எழுத்தை முதலாகக் கொண்டது என்பதை ஒரு சிலர் மறுக்கின்றனர். ஏனெனில் பல்வேறு நாடுகளிலும் முதல் எழுத்தாய் 'அ' அமைவதில்லை. டாக்டர் சோமசுந்தரப் பாரதி "வள்ளுவர் அகரம் எனக் குறிப்பது 'அ' என்ற ஒலியை அன்று. அங்காத்தலைக் குறிக்கவே அகரமென்றார். உயிரினங்கள் யாவும் ஒலிப்பதற்கு முதலில் வாயை அங்காத்தல் வேண்டும். அங்காக்கும் அவ்வளவே தோன்றுவது. அகரம் பிற எழுத்துகளுக்கு முதற்காரணமாவதோடு அவ்வெழுத்துகள் உள்ளளவும் உடனொலித்து

உதவுவது கடவுளும் உலகங்கள் தோன்ற காரணமாகி அவை இயங்க உதவியும், தன் மறைவில் அனைத்துலகும் அடங்க வைக்கும் மூலப்பொருளாகவும் இருப்பதே கடவுள் இலக்கணம்”[195] என்கிறார். உலகத் தோற்றத்திற்கு மூலமாய் விளங்கும் ஆதியாகிய இறைவனை வணங்குவது அறிவார்ந்த செயலாகும்.

2.11.10.1 இறைவன் அறிவு வடிவானவன்

வள்ளுவர் முதல் பத்துக் குறளில் உள்ள கருத்துகள் அனைத்துமே அறிவுக்கு உடன்பட்டவை இதில் கற்பனைச் செய்திகளோ புனைந்துரைகளோ எங்குமில்லை. இறைவனை அவர் அறிவு வடிவாகவே காண்கிறார். வாலறிவன், ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதான், எண்குணத்தான் போன்ற தொடர்களை இதற்குச் சான்றாக அமைத்துள்ளார். “கடவுள் வாழ்த்துக் கருத்துகள் மனிதகுலக் கொள்கைக்கும் மானிட மேன்மையிலுள்ள நம்பிக்கைக்கும் அரண் செய்வனவாக அமைகின்றன. இறைவனை வணங்கி, வேண்டி, வரம் பெறும் வழிவகைகளைக் குறள் எடுத்துரைக்கவில்லை. இறைவனுடைய நற்பண்புகளைப் புரிந்து தெளிந்து போற்றி அவற்றின் வழி வாழ்வாயாக என்று அறிவுறுத்துகிறது குறள். இறைவனை நம்பிச் செயலாற்றச் சொல்லவில்லை; இறைவன் வழியினைத் தழுவி அருட்செல்வனாகச் செயலாற்று என்று ஆணையிடுகிறது குறள்”[196] என்று டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன் கூறுகிறார். இறைவன் எல்லாப் பொருட்களுக்கும் மூலமாகத் திகழ்வதால் இவரின் கருத்துகள் பல சமயத்தவர்களின் சாராம்சமாக விளங்குவதால் வள்ளுவனைத் தம்முடைய சமயச்சார்போடு இணைக்கின்றனர் என்பதே நிதர்சனமான உண்மை.

2.11.10.3 சைவம்

அறிஞர்கள் சிலர் திருவள்ளுவர் சைவச் சார்புடையவர் என்ற கருத்தினை முன்வைக்கிறார். அதற்குச் சான்றாக,

“கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்

தாளை வணங்காத் தலை”[197]

இக்குறட்பாவிற்கு உரை செய்யும் பரிதியார் “எண்குணத்தான் என்பது சிவனேயென்றும் அவனது குணங்களாவன அனந்த ஞானம், அனந்த வீரியம், அனந்தக் குணம், அனந்தத் தரிசனம், நாமமின்மை,

கோத்திரமின்மை, அவாவின்மை, அழியாவியல்பு"[198] என்று விளக்கினார். "இசுலாமும், கிறித்தவமும் மறுபிறப்பு மற்றும் வினைத்தொடரை ஏற்பதில்லை. புத்த, சமணச் சமயங்கள் கடவுள் ஒருவர் உளரென நம்புவதில்லை. உலகு உயிர் ஆகியவற்றை வேதாந்தம் ஏற்பதில்லை. வள்ளுவர் இவைகள் அனைத்தையும் ஏற்பதால் அவர் இச்சமயங்களைச் சார்ந்தவர் அல்லர். எண்குணத்தான் எனும் வழக்கு வைணவத்தில் இல்லை. எனவே வள்ளுவர் சைவரே" [199] என்பது டாக்டர் ந. சஞ்சீவியின் கருத்தாகும்.

இக்கருத்தையொத்தே க. வச்சிரவேல் முதலியார் என்ற அறிஞர் "கடவுள் வாழ்த்து முழுமையும் சைவசித்தாந்தக் கொள்கையுடனேயே பொருந்துமென்கிறார். மேலும் 'ஆதிபகவன்' உலகைப் படைத்த கடவுளையே குறிக்குமெனவும் 'பொறிவாயில் ஐந்தவித்தான்' எனும் தொடர் சிவபெருமானின் தவக்கோலத்தைக் குறிக்கிறது."[200] எனக் குறிப்பிடுகின்றார். இக்கருத்தின் வாயிலாக வள்ளுவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என ஏற்றுக்கொண்டாலும், கடவுள் வாழ்த்தில் சிவனைப் பற்றி எந்தகுறளிலும் குறிப்பிடவில்லை. "சித்தாந்தக் கருத்துகளில் காணப்படும் கடவுளைப் பற்றிய வழிபாட்டு முறைகள் குறளில் இல்லை. இறைவனடி சேர்தல், பற்றற்றான் பற்றினைப் பற்றுதல் ஆகியவற்றை வள்ளுவர் கூறியுள்ளார் என்றாலும் கடவுள் அருளினாலேயே மக்கள் துறவு பூணுவதும், வீட்டையடைவதும் என அவர் கூறவில்லை. சித்தாந்த நூல்கள் அருளாலேயே மெய்யுணர்வும் வீடும் கிடைக்கின்றன எனப் பன்முறை கூறுகின்றன"[201] என விளக்குகிறார். காமாட்சி சீனிவாசன் எனவே, திருவள்ளுவர் சைவரல்ல என்பது புலனாகிறது.

2.11.10.4 வைணவம்

சில சான்றோர்கள் திருவள்ளுவர் 'கடவுள் வாழ்த்தில்' திருமாலைக் குறிப்பிடுகிறார் என்கின்றனர். அதற்கு அவர்கள் தரும் குறள்,

"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீத்தல் அரிது"[202]

என்பர். இதற்கு உரைசெய்யும் பரிமேலழகர், "பல்வேறு வகைப்பட்ட அறங்களெல்லாவற்றையும் தனக்கு வடிவாகயுடையனாகலின்

'அறவாழியந்தனன்' என்றார். அறவாழி அந்தணனைத் தருமசக்கரமாக்கி அதனையுடைய அந்தணனென்று உரைப்பாரும் உளர்"[203] என்கிறார். வள்ளுவரை வைணவர் எனகூறுபவர்கள் "ஆதி பகவன், இறைவன் என்னும் தொடர்கள் திருமாலைச் சுட்டும் என்பர். அடியளந்தான், தாமரைக்கண்ணன் ஆகிய தொடர்கள் திருமாலைக்குறிப்பன. அறவாழி அந்தணன் என்ற தொடரில் ஆழி என்னும் சொல் திருமாலின் சக்கரமாகும் என்பர். ஆனால் திருமாலைப் பற்றிப் பொதுமக்களிடம் பரவியிருந்த கதையை வள்ளுவர் ஆண்டு உள்ளார். கடவுள் வாழ்த்தில் திருமாலின் பெயரில்லை. ஆழி என்பது திருமாலின் தர்மச்சக்கரமா என்பது ஐயமே"[204] என்று காமாட்சி சீனிவாசன் குறிப்பிடுகிறார். இதன்மூலம் வள்ளுவர் வைணவர் என அறுதியிட்டுக்கூற முடியவில்லை.

2.11.10.5 சமணம்

சமணச் சமயத்தைச் சார்ந்தவர் திருவள்ளுவர் என்பதற்கு அவர்கள் முன்வைக்கும் குறளாக,

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"[205]

என்னும் குறட்பாவைச் சான்றாக அமைத்துள்ளார். ஏனெனில் சமணச் சமயத்தில் முழுமுதற் கடவுள் இல்லையென்றும் ஆதிபகவன் என்ற தொடர் சமணச் சமயத் தீர்த்தங்கரராகிய விருஷப தேவரைக் குறிப்பிடுகின்றார். "சமணத்தில் முழுமுதற் கடவுள் இல்லை. இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களைச் சமணர் வணங்குவர். இவர்களில் முதல்வரான இடப தேவரையே வள்ளுவர் ஆதிபகவன் எனக் குறிப்பிடுகிறார் என்றும் அவரே உழவு, வாணிகம் ஆகிய தொழில்களை மக்கட்குக் கற்பித்தார். ஆதலால் முதற்றே உலகு எனக் கூறப்பட்டது."[206] என்பர் அறிஞர்.

இக்கருத்தினையொத்தே சமணர் என்பதை, "பொறிவாயில் ஐந்துடையனாய்ப் பின்னை அவ்வைந்தைப் பின்னை அவ்வைந்தை அவித்த ஒருவனை ஆதிபகவனாகப் போற்றுவது எச்சமயம்? எங்கும் நீக்கமற நிறைந்து அசைவற்று ஒன்றை ஜைனம் மறுக்கின்றதில்லை. அவ்வசைவற்ற ஒன்று ஐந்தொழில் புரியாதென்பது ஜைனச் சித்தாந்தம் உற்பத்தியும் நாசமும் ஒன்றுமில்லாத பரஞ்சுடரே, என்பது ஜைனர் திருநூற்றந்தாதி

ஜைனரும் வழிபாட்டிற்குப் பொறிவாயில் ஐந்தவித்து கடந்த நிலையை ஆதியில் பெற்ற விருஷப தேவரையே ஆதிபகவனென்று கொண்டிருக்கிறது."[207] என்கிறார் திரு.வி.க. ஆக வள்ளுவர் ஆதிபகவன் எனக் கூறுவது உலகின் முதல் தோற்றமாய் இருந்து ஒரு பொருளையே அன்றி விருஷப தேவரையல்ல என்பது தெளிவாகிறது.

வள்ளுவர் கூறியது ஆதியந்தம் இல்லா உலகப்பொதுவானது என்பதை உணர வேண்டும். "ஆதிபகவன் முதற்றே உலகு என்ற தொடர் உலகுக்கு மூலகாரணமாக உள்ள ஒரு கடவுளைக் குறிப்பதன்றிச் சமுதாயத்தில் மக்களுக்குப் பல தொழில்களைக் கற்பித்துச் சமுதாய ஒழுங்கை நிலைநாட்டியவரையல்ல. மேலும் புத்தர், இடபதேவர், மகாவீரர் ஆகியோர் நம்மைப் போன்ற உயிர்கள் தாமே"[208] என்றுரைக்கிறார் காமாட்சி சீனிவாசன்.

2.11.10.6 பௌத்தம்

வள்ளுவரைப் புத்தச் சமயத்தைச் சார்ந்தவர் என்றும் அதன் தாக்கமாகவே திருக்குறளை இயற்றினார் என்பதற்கு ,

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்

நிலமிசை நீடுவாழ் வார்"[209]

என்னும் குறளை மேற்கோளாகக் குறிப்பிடுகின்றார். "மலர்மிசை ஏகினான் எனும் தொடர் புத்தரைக் குறிக்குமெனவும் அவர் பிறந்த உடனேயே ஏழடி நடந்தார் எனவும் ஒவ்வொரு அடி நடக்கும் போதும் ஒவ்வொரு தாமரை மலர் தோன்றி அவர் பாதங்களைத் தாங்கியது எனவும் புத்தச் சமய நூல்கள் கூறும்"[210] என்று தி.வெ.ரா கூறுகின்றார். இதுபோன்ற செய்திகள் அவரவரின் கற்பனையேயன்றி உண்மையில்லை. ஆனால் புத்தரின் கருத்துகளும் வள்ளுவனின் எண்ணங்களும் பல சமயங்களில் ஒத்துப்போகின்றது. பொய், களவு, காமம், கள், ஊண் போன்ற குற்றங்களை அறவே தவிர்த்து பிறஉயிர்களிடம் அன்பு பாராட்ட வேண்டுமென்றக் கருத்துகள் இருவரிடமும் காணப்படுவதால் வள்ளுவர் புத்த மதத்தைச் சார்ந்தவர் எனக் கூறுகின்றார். தனிநாயக அடிகள். "புத்தர் துறவிகளைப்போல் இறப்பு, துன்ப நீக்கத்திற்கு வழியென்று வள்ளுவர் கருதினாருமல்லர்; அதனை அஞ்சி ஒழுகினாருமல்லர். இறப்பும், நிலையாமையும் வாழ்க்கையில் இயல்புகளாதலால் அவற்றின் இயல்புகளை உணர்ந்து வாழ்நாள் இருக்கும்போதே அன்பிலும் அறத்திலும் இன்பத்திலும்

ஈடுபடுதல் வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்."[211] ஆகவே புத்தச் சமயத்தாரும் அல்ல என்பது நமக்குத் தெளிவாகிறது. இதைப்போன்று அனைத்து மதத்தவரும் தம்மதக்கருத்துக்களை இதனுல் புகுத்தி வள்ளுவரைச் சாதி மதத்தோடு சொந்தம் கொண்டாடுகின்றனர். இவற்றிலிருந்து நமக்குப் புலப்படுவது குறளானது அனைத்து மக்களுக்கும் பொதுவான வாழ்வியல் களஞ்சியமாக அமைகிறது. இனிவரும் காலங்களிலாவது அவரின் சாதி, மதத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யாமல் அவரது கருத்துகளை மட்டும் ஏற்று உலக வாழ்வில் கடைப்பிடித்து அனைவரும் இன்புற்று வாழவேண்டும்.

2.11.11.0 துறவு

நிலையில்லாத உலகில் சுயநல உணர்வே அனைத்துத் துன்பத்திற்கும் காரணம் என்பதையுணர்ந்த துறவிகள் உலகின்மீதும் இல்வாழ்க்கையின் மீதும் கொண்டிருந்த பற்றுதலை விடுத்து நிலையானதை அறிந்து இல்லம்துறந்து துறவறத்தை நாடிச்சென்றனர். இதனை உணர்ந்த வள்ளுவர் துறவு என்னும் அதிகாரத்தினைப் படைத்துள்ளார். இவ்வாழ்வில் நிலையென்பதனை,

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்று"[212]

எனும் குறளில் வாழ்வின் வினைப்பயனைப் போக்கும் நிரந்தரமான ஒன்றைக் கை கொள்ள வேண்டும். நம் வாழ்வில் இல்லறத்தை விடுத்துத் துறவறம் மேற்கொண்ட வள்ளல்பெருமான், பட்டினத்தார் வாழ்க்கைகள் நமக்குணர்த்துகிறது. நாம் கொண்ட இவ்வுடல் அழியும், உயிரும் அழியக் கூடியதே என்பதனை,

"உடம்பால் அழியின் உயிரார் அழிவர்
திறம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேர்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே."[213]

என்று திருமூலர் தெளிவுபடுத்துகிறார். இக்கருத்தினையொத்தே,

"உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"[214]

இக்குறளில் வாழ்வின் உன்னதத்தினையும், இன்றிருந்தவர் நாளை இல்லையென்னும் நடைமுறை வாழ்க்கையினைத் தெளிவுபடுத்துகிறார்.

2.11.11.1 நீத்தார் பெருமை

"நீத்தலாவது துறத்தல் யான் என்ற உணர்வின் அடியாக எழுகின்ற அகப்பற்றுக்கும் எனது என்ற உணர்வின் அடியாக எழுகின்ற புறப்பற்றுக்கும் இடந்தராமல் துறவு பூண்ட மனிதர்கள் எக்காலத்துக்கும் பெரியோராக மதிக்கப்பட்டிருக்கிறார்கள். செயற்கரிய செய்த முனிவர் நிலையை அடைந்தார் என்றும் துறந்தார் என்றும் குறிக்கப்பட்டுள்ளனர்"[215] என்று பொற்கோ கூறுகின்றார். எவ்வுயிருக்கும் தீங்கு நினைக்காமல், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற தம் உணர்வுகளை ஒருங்கே கட்டுப்படுத்தும் வல்லமை பெற்றவர்கள். இதனை,

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"[216]

எனும் இக்குறளில் அறநூல்களே அவர்களின் பெருமைதைக் காட்டிவிடும் என்கிறார் வள்ளுவர். ஏனெனில் ஐம்புலன் அடக்கங்களைத் தம் கட்டுப்பாட்டில் வைத்துப் போற்றுவதோடு, மற்றவர்களால் செய்ய முடியாத காரியங்களைச் செய்வதே இவர்களின் சிறப்பு. இவ்வுலகில் பிறந்த, இறந்த உயிர்களைக் கணக்கிடுவது அரிது, மேலும் பிறந்தவர் இறப்பதுண்டு ஆனால் இறந்தவர் பிறப்பதில்லை. அவ்வாறு பிறந்து துறவறத்தின் வாயிலாக அனைத்து உயிர்களுக்கும் சிறப்பு செய்பவர்களை,

"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லாயின்"[217]

என இக்குறளில் அறவழியில் அனைத்து உயிர்களுக்கும் சிறப்பைச் செய்பவர்களையே அந்தணர் என்று போற்றப்பட்டனர். இதுபோன்று இவ்வுலகில் பல அரியச் செயல்களைச் செய்து மக்களை நல்வழிப்படுத்துபவர்கின் பெருமை நிலைத்திருக்கும்.

2.11.12 திருக்குறளும் உளவியலும்

மனிதன் முதன் முதலில் நாடோடிகளாகக் காடுகளில் வாழ்ந்தான். அவன் தெளிவற்ற எண்ணங்களிலும், மூட நம்பிக்கைகளிலும் உழன்று கொண்டிருந்த நிலையில் தான் சார்ந்த சமுதாயத்தில் உள்ள குற்றங்களையும், தன்னிடமுள்ள அறியாமைகளையும் களைய அறிவின்

துணைகொண்டு செயல்பட வேண்டுமென வள்ளுவர் தம் நூலினை அறிவுக்களஞ்சியமாகப் படைத்துள்ளார். மேலும் அறம், பொருள், இன்பம் என்ற படிநிலைகளை மட்டும் எடுத்துரைக்காமல் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள செயல்கள் அனைத்தையும் மக்களின் உள்ளுணர்வு சார்ந்து வெளிப்படுத்தியுள்ளார்.

இந்நூல் மனித இனம் மேம்புறும் வகையில் அகம், புறம் சார்ந்த கருத்துகளையும், உளவியலில் கருத்துகளான ஊக்கம், திட்டமிடுதல், உற்றுநோக்கல், பின்பற்றுதல், வெளிப்படுத்துதல் போன்றவைகளையும், சமூகக் காரணிகளான அறிவு, பண்பு, ஒழுக்கம், பணிவு ஆகிய குணநலன்களை எடுத்துரைக்கிறது. அதைப்போன்றே எந்தவொரு செயலையும் நன்கு திட்டமிட வேண்டுமென்பதனை,

"எண்ணித் துணிக் கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு"[218]

இக்குறளில் தம்செயல்களை ஆராய்ந்து செய்ய வேண்டுமெனவும், அவ்வாறு செய்யத் துவங்கியப்பின் செய்யாமல் விடுத்தால் துன்பம் வந்து சேரும். மேலும் ஒருவர் நமக்கு அளவு கடந்த துன்பத்தைச் செய்துவிட்டாலும் பொறுமையாக இருந்தால் நம்முடைய உடல் நன்மை பெறும் என்ற உளவியல் கருத்தினையும் எடுத்துரைக்கிறார். அஞ்ச வேண்டியவைகளுக்கு அஞ்சுதல், பணிவு, ஒழுக்கம், பணிவு, வீரம் போன்ற குணநலன்களைப் பெற்றால் உடல்நலம் பெருகுவதோடு, உள்ளம் கெட்டுப்போயின் உயிரும் உடலும் கெட்டுப்போகும். ஆகவே மன வலிமையோடு திகழ வேண்டுமென்ற உளவியல் சாரங்கள் ஆங்காங்கே குறளில் விரவியுள்ளது.

2.11.13 மருந்து

வள்ளுவர் மருந்து என்னும் அதிகாரத்தில் உள்ள குறட்பாக்களில் உடலியல், உளவியல் சார்ந்த மருத்துவக் குறிப்புகளைக் காணமுடிகின்றது. நோய் ஏற்படுவதற்கான காரணம், நோய் தடுக்கும் முறைகள், நோய் நீக்கும் மருத்துவம் என மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். இவற்றில் முதல் குறள் நோய் ஏற்படக் காரணங்களை ஆராய்வதையும், அதனையடுத்துள்ள ஆறு குறள்களும் நோய் தடுக்கும் முறைகளையும், இறுதியில் உள்ள மூன்று குறட்பாக்கள் நோய் ஏற்பட்ட பின்னர் நோயாளிக்குச் செய்ய வேண்டிய

மருத்துவக் குறிப்புகள் பற்றி கூறுகின்றன. இவ்வுலகம் பஞ்சப் பூதங்களால் ஆனதைப்போல மனிதர்களில் உடலிலும் அவை மிகினும், குறையினும் நோய் ஏற்படுகிறது. ஆகவே உடலினைச் சமச்சீரான நிலையில் வைத்தோம் என்றால் எவ்வித நோயினையும் வராமல் தவிர்க்கலாம். என்பதனை,

"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று"[219]

எனும் குறளில் நோய் வருவதற்கான காரணங்களைக் கூறி அலற்றைத் தடிப்பதற்க்கான தீர்வுகளையும் குறிப்பிடுகிறார்.

2.11.13.1 நோயற்ற வாழ்க்கை

அருட்செல்வம், பொருட்செல்வம், கல்விச்செல்வம் போன்றவற்றை எடுத்துரைக்கும் வள்ளுவர், மனித வாழ்க்கைக்கு அடிப்படை நோயற்ற வாழ்க்கையென்பதை எடுத்துரைக்கும் மருத்துவ மேதையாகத் திகழ்கிறார். விலங்குகள், பறவைகள் போன்ற அஃறினை உயிர்கள் உடலுக்குத் தேவையற்ற உணவினைத் தவிர்க்கின்றன. மேலும் பசித்தபின் தான் புசிக்கின்றன. ஆனால் மனிதன் அதற்கு விதிவிலக்காகத் திகழ்வதினால் நோய்வாய்ப்பட நேரிடுகிறது. மருத்துவம் எவ்வாறு செய்ய வேண்டுமென்றால்,

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்ப செயல்"[220]

எனும் குறளில் நோய்யினை அறிந்து தெளிந்தபின் அந்நோய் வந்ததற்கான கரணங்களையும், அவற்றைத் அழிப்பதற்கான வழிமுறைகளையும் பின்பு இனிமேல் வராமல் இருப்பதற்கான தடுப்பு முறைகளையும் பின்பற்ற வேண்டும் எனக்கூறுகிறார். இக்கருத்து நோய்க்கு மட்டுமன்று மனிதனின் வாழ்வில் ஏற்படும் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வாக கூறியுள்ளார்.

2.12.0 தொகுப்புரை

மனிதர்கள் அனைவரும் தங்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் ஒன்றுபட்டுக் கூடி வாழ்வதற்கும் சமுதாயம் அவசியம். சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் ஒருசில கட்டுப்பாடுகளையும் ஒழுங்கமைப்பையும் பின்பற்றி இன்பமாகவாழ தனிமனித முன்னேற்றதின் வாயிலாக குடும்பமும் அதன் மூலம் சமுதாயம்

செழிப்படையத் திருக்குறளின் கருத்துச் செறிவுகள் இவ்வியலில் வெளிக்கொணரப்படுகிறது.

தனிமனித வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சியென்றும் அவற்றின் வாயிலாக பண்பாடு, நாகரிகம் போன்றவை வெளிப்படுகிறது. ஆகவே மக்களின் கலாச்சாரங்கள் வெளிக்கொணரப்படுத்துகிறது.

மனிதனை மாண்புறச் செய்யும் கருவி கல்வி. மேலும் கேள்வியின் துணையால் ஒருவனின் அறிவு விரிவடைய அரிய நூல்களைக் கற்பதுடன் நில்லாது அவற்றைத் தக்க நேரத்தில் வாழ்க்கையில் கடைப்பிடிப்பதே கற்றதன் நோக்கமாகும்.

அறக்கோட்பாடுகளுடன் வாழும் பொழுதுதான் சமுதாயத்தில் மக்களின் நலன் பேணப்படுவதோடு, தனிமனிதன் உயர திடமான நல்லெண்ணங்களை கல்வியினால் பெற்று தொழில் துறைகளில் முன்னேற பலருடன் இணைந்து செயல்பட வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

கல்வி குறிப்பிட்ட காலம் மட்டும் கற்கபடுவதன்று. அது வாழ்நாள் முழுக்கக் கற்கப்பட வேண்டியதாகும். ஒரு பொருளில் உள்ள தீமையை விலக்கி நல்லதை ஏற்றுக்கொள்ளும் வகையில் கல்வியானது நல்ல தெளிவை உண்டாக்க வேண்டும் என்பதை விளம்புகிறது.

பல்வேறு வகையான தொழில்கள் இருந்தாலும் அவரவரின் திறமைக்கேற்ப ஊதியத்தைப் பெற்று வாழ்ந்தனர். நல்ல வழிகளில் அல்லாமல் தீய வழிகளைப் பின்பற்றினால் ஏற்படும் விளைவுகளை அறிவுறுத்துவதோடு, தொழில்துறைப் பெருக்கத்தால் வணிகம் சிறப்புற்று மக்களிடம் அன்பு, பாசம் பெருகி தங்களுக்குள் பண்டமாற்று முறை ஏற்படவும், வணிகத்தில் எத்தகைய வழிமுறைகளை கையாள வேண்டுமென்பதை எடுத்தியம்புகிறது.

மனிதனை மாண்புறச் செய்வதும் நல்வழிப்படுத்துவதும் சமயத்தின் கடமையாகும். ஆனால் சமயத்தின் பெயரால் ஏற்படும் பாதிப்புகள் சமுதாயத்தில் ஏற்படும் எதிர்வினைகளை எவ்வாறு கையாள வேண்டுமென்பதை வள்ளுவரின் வழி ஆராயப்படுகிறது.

அடிகுறிப்பு

1. பக்தவச்சல பாரதி, மானிடவியல் கோட்பாடுகள், ப.12.
2. தினத்தந்தி, மாணவர் ஸ்பெஷல், (27.03.2017) ப.17.
3. பக்தவச்சல பாரதி, மானிடவியல் கோட்பாடுகள், ப.109.
4. தமிழ் லெக்ஸிகன், யூனிட் 3, ப.13.
5. கலைக்களஞ்சியம், ப.225.
6. க.ப அறவாணன், அற இலக்கியக் களஞ்சியம். ப.21.
7. தி.வெ.ராசேந்திரன், திருக்குறள் ஓர் சமூக ஆய்வு, ப.7.
8. கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, புதிய பதிப்பு, ப.544.
9. மு.வரதராசன், இலக்கிய மரபு, ப.105.
10. தி.வெ.ராசேந்திரன், திருக்குறள் ஓர் சமூகப்பார்வை, ப.88.
11. மேலது, ப.10.
12. தொல்.பொருள். நூற்.5.
13. குறள். 972.
14. ஜோசப் கலியப்பெருமாள், பல்துரைக்கட்டுரைகள், ப.60.
15. முதுமொழிக் காஞ்சி, 2; 1.
16. ஞா. தேவநேயன், பழந்தமிழராட்சி, ப.108.
17. திரு.வி.க, மனிதவாழ்க்கையும், காந்தியடிகளும், ப.9.
18. பாஸ்கல், கிஸ்பர்ட், சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள், ப.77.
19. கலைக்களஞ்சியம், தொகுதி, 4, ப.8.
20. குறள்.74.
21. வ.சு.ப மாணிக்கம், வள்ளுவம், ப.202.
22. தி.வெ.ரா, திருக்குறள் ஒரு சமூகப்பார்வை, பக்.99, 100.

23. டாக்டர். ஈ.கோ. பாஸ்கரதாஸ், அகப்பொருள் பாடல்களில் தோழி, ப.60.
24. பாரதியார் கவிதைகள், ப.395.
25. குறள்.1122.
26. மேலது. 1128.
27. தொல். பொருள், ப.155.
28. குறள்.1158.
29. மேலது. 1289.
30. மேலது. 1330.
31. டாக்டர். இரா. அருளப்பா, திருக்குறள் கூறும் சான்றாண்மை, பக்.38, 39.
32. குறள் -44.
33. அ.கிருஷ்ணசாமி நாயுடு, தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம், பக்.93, 94.
34. அபிதான சிந்தமணி, பக்.1518.
35. நாமக்கல் கவிஞர், திருக்குறள் நாமக்கல் உரை, ப.15.
36. திருவாசகம், பாடல்.15.
37. குறள்.11.
38. சிலம்பு, புகார் காண்டம் மங்கல வாழ்த்து, 1, 3.
39. கம்பராமாயணம், ஆற்றுப்படலம், 19.
40. மேகலை, பாத்திரம் பெற்ற காதை, 76,80
41. குறள் -13.
42. குறள் –12.
43. நற்றிணை பா.1:6, 9.
44. புறம், 18 -18.
45. நான்மணிக்கடிகை, பா.58.

46. குறள் -20.

47. குறள்.15.

48. மேலது.1040.

49. மேலது, 1031.

50. சிறுபா.58.

51. நல்வழி.12.

52. வெற்றி.வே.27.

53. க.ப. அறவாணன், அற இலக்கியக் களஞ்சியம், ப.467.

54. புறம்.35.

55. குறள். 1032.

56. மேலது.1035.

57. திரிகடுகம்.59.

58. பாரதியார் கவிதைகள், 3-4:1, 2.

59. குறள்.1038.

60. மேலது.483.

61. மேலது.406.

62. விகரு. இராமநாதன், பாரதியார் கவிதைகள், ப.39

63. குறள்.600.

64. மேலது.619.

65. புறம்.40.

66. மேலது.109.

67. அ.கி கிருஷ்ணசாமி நாயுடு, தொல்காப்பியர் கண்ட தமிழ்ச்சமுதாயம், ப.305.

68. டாக்டர். கே.பழனி, தமிழர் ஆடைகள், ப.229.

69. மேலது, ப.228.

70. புறம். 125.

71. ப.பாலை, 9.
72. அ.கிருஷ்ணசாமிநாயுடு, தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம், பக்.93, 94.
73. திருக்குறள் பரிமேலழகருரை, ப.287.
74. குறள்.1228.
75. மேலது.274.
76. மேலது, 465.
77. மேலது. 888.
78. மேலது. 678.
79. மலைபடுகடாம் பக். 325, 327.
80. பக்தவத்சல பாரதி, மானிடவியல் கோட்பாடுகள், ப.315.
81. தி.முருரத்தனம், குறள் கண்ட பொருள் வாழ்வு, ப.3.
82. குறள்.751.
83. நாலடி, 12:5.
84. குறள்.760.
85. சிறுப, 207.
86. குறள்.478.
87. நல்வழி.25.
88. குறள்.477.
89. ப.பாலை , 44, 45
90. மேலது, 22, 25
91. சிறுபாணாற்றுப்படை, 56,58
92. நாமக்கல் கவிஞர் பாடல்கள், இதயத்தமிழ், ப.1
93. நாலடி – 25:10
94. மேலது29.4
95. குறள். 479

96. குமரகுருபரர், நீதிநெறி விளக்கம், ப.254
97. குறள். 594
98. திரிகடுகம், பா.38
99. குறள்.754
100. அ. தட்சணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.307
101. மதுரைக்காஞ்சி, பா.233
102. புலவர்.சி. அரசப்பனார், தமிழர் பண்பாடு, ப.136
103. முல்லைப்பாட்டு. 59,61
104. பட்டினப்பாலை, பா.29, 30
105. பெரும்பாணாற்றுப்படை, பா. 319, 321
106. அகம்.149;9-10
107. மதுரைக்காஞ்சி.321
108. புலவர், சி.அரசப்பனார், தமிழர் பண்பாடு, ப.139
109. பட்டினப்பாலை, பா. 216,219
110. புறம், 33-1,6
111. குறள். 120
112. திருக்குறள், பரிமேலழகரை, ப.46
113. குறள்.677
114. மேலது, 710
115. மேலது.660
116. மேலது.115
117. பட்டினப்பாலை, பா.207, 212
118. குறள்.118
119. ஏ. மருதகாசி, விவசாயி, வருடம்1967, பா.1,3
120. பாஸ்கல், கிஸ்பர்ட், சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள், ப.77

121. சித்பவானந்தர், கல்வி, ப.1

122. குறள் .410

123. மேலது.402

124. மேலது.393

125. தி.வெ. திருக்குறள் ஒரு சமூகப்பார்வை, ப.177

126. பாஸ்கல், கிஸ்பர்ட், சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள், ப.317,318

127. தி.வெ.ரா. திருக்குறள், ஒரு சமூகப்பார்வை ப.169

128. குறள். 411

129. மேலது.412

130. திருக்குறள் உரைக்கொத்து, திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம், ப.41

131. குறள். 391

132. காமாட்சி, சீனிவாசன், குறள் கூறும் சமுதாயம், ப.223

133. திருப்பனந்தாள் உரைக்கொத்து, பொருட்பால், ப.19

134. குறள். 392

135. ஔவையார், வேற்றி வேட்கை, பா.35.

136. பாரதிதாசன், குடும்பவிளக்கு, முதற்பகுதி, ப.69

137. திருமந்திரம்.1652

138. வாக்குண்டாம்.7

139. நல்வழி, 26

140. குறள். 1041

141. திரிகடுகம், 84

142. குறள். 1042

143. நல்வழி, 34

144. குறள்.1049

145. வெற்றி வேட்கை -15

146. குறள். 1051

147. மேலது. 1062

148. மேலது. 1071

149. பதிற்றுப்பத்து, 2;18

150. குறள். 923

151. திருக்குறள் பரிமேலழகர் உரை, ப. 347

152. குறள் - 932

153. அகம் .9

154. ஈ.கோ. பாஸ்கரதாஸ், சங்கப்பாடல்கள் உணர்த்தும் நிலைபேறுடைய மானிட மதிப்புகள், ப.41

155. மயிலை.சீனி.வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக்கலைகள், ப.2

156. நெடுநல்வாடை, பா. 76,79

157. குறள்.1030

158. திருக்குறள் பரிமேலகழர் உரை, ப.386

159. அகம். 167

160. குறள். 407

161. புறம். 64

162. சிறுபாணாற்றுப்படை.162

163. அகம். 265

164. குறள்.332

165. அகம்.309

166. குறிஞ்சி. 5,7

167. குறள்.18

168. ஐங்கு. 352

169. குறள். 771

170. கா. சுப்ரமணியன், சங்க கால சமுதாயம், ப.77
171. அகம்-86
172. ஐங்கு. பா.251
173. குறள்.259
174. புறம்.27
175. குறள். 234
176. மேலது.565
177. புறம்.238
178. பெரும்.410-411
179. புறம்.166
180. புறம்.55
181. பதிற்று, 90.19
182. நற்றிணை .32
183. புறம்.165
184. இரா. மாணிக்கவாசகம், திருமந்திர ஆராய்ச்சி, ப.17
185. ஏ.வி சுப்பிரமணிய அய்யர், தமிழ் இலக்கியத்தில் அறுவகைச் சமயம், ப.9
186. தி.வெ.ரா. திருக்குறள் ஒரு சமூகப்பார்வை, ப.207
187. தொல். பொருள். நூற். 88
188. நெடுநல்லாடை, 88-90
189. கலித்தொகை, பா.106; 27-29
190. நற்றிணை, ப.21
191. புறம், பா.367
192. மேலது, பா236
193. குறள்.1

194. திருப்பனந்தால் ஸ்ரீ காசிமடம், திருக்குறள், உரைக்கொத்து, அறத்துப்பால், ப.4

195. சோமசுந்தர பாரதி, திருவள்ளுவர், பக்.80-81

196. டாக்டர். எஸ். இராமகிருஷ்ணன், திருக்குறள் ஒரு சமுதாயம் பார்வை, பக்.41-42

197. குறள் -9

198. திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் திருக்குறள் உரைக்கொத்து, அறத்துப்பால். ப.11

199. காமாட்சி சீனிவாசன், குறள் கூறும் சமயம், ப.212

200. மேலது. ப.209

201. மேலது.ப.211

202. குறள் – 8

203. திருப்பனந்தால் ஸ்ரீ காசிமடம் திருக்குறள் உரைக்கொத்து அறத்துப்பால், ப.11

204. காமாட்சி சீனிவாசன், குறள் கூறும் சமயம், ப.199

205. குறள் -1

206. காமாட்சி சீனிவாசன், குறள் கூறும் சமயம், ப.199

207. டாக்டர்.எஸ். இராமகிருஷ்ணன், திருக்குறள் ஒரு சமுதாயப்பார்வை, ப.20,21

208. காமாட்சி சீனிவாசன், குறள் கூறும் சமயம், ப. 203

209. குறள். 3

210. தி.வெ.ரா, திருக்குறள் ஒரு சமூகப்பார்வை, ப.226

211. சோமசுந்தர பாரதி, திருவள்ளுவர், ப.56

212. குறள்.350

213. திருமந்திரம், தந்திரம் 3:724

214. குறள்.339

215. பொற்கோ. அறத்துப்பால் ப.13

216. குறள்.28

217. மேலது.30

218. மேலது.467

219. மேலது. 941

220. மேலது. 948

இயல் - 3

திருக்குறளில் அரசியல் அறங்கள்

3.1.0 முன்னுரை

உலகெல்லாம் இன்புற்று வாழவேண்டும் என்ற நோக்கத்தோடு படைக்கப்பட்ட இலக்கியங்களான சங்க இலக்கியப்பாடல்களும், இளங்கோவடிகளின் சிலப்பதிகாரமும், கம்பரின் இராமாயணமும், ஆழ்வார்களின் பக்திமொழிகளும், நாயன்மார்களின் நல்ல தமிழும், சேக்கிழாரின் செந்தமிழும், பாரதியின் கவிதை மொழியும் தமிழ் இலக்கிய உலகம் நிலைபெற்று வாழ்வதற்குக் காரணமாக அமைகிறது. இவையனைத்தையும் உள்ளடக்கிச் சமுதாயம் மேன்மையடைய எழுதப்பட்ட நூல் திருக்குறளாகும். இவைமட்டுமின்றி அரசியல் தத்துவங்களையும் உலக அறிஞர்களின் சிந்தனைகளையும் உள்ளடக்கியுள்ளது. மேலும் அறக்கருத்துகளையும், நீதிநெறிகளையும், பொருளாதாரச் சிந்தனைகளையும், மேலாண்மையின் சிறப்புகளையும், அரசியல் அறிவையும், உளவியல் கூறுகளையும், கல்வியின் மூலம் நற்பண்புகளைப் பெற்று வாழ்வில் உயர்வடைய வழிவகுக்கிறது. ஒரு நாட்டின் அரசியல் சிறப்பு பெறவும் அவற்றின் மூலமாக நாடு வளம்பெற வேண்டும் என்று உரைப்பதில் திருக்குறள் மற்ற நூல்களைவிட தனித்து நிற்கிறது.

3.2.0 சமூக அமைப்பு

மனிதர்கள் தொடக்கக் காலத்தில் நாடோடிகளாக வாழ்ந்தனர், காலங்கள் செல்லச்செல்ல அவர்களுக்குள் சிறு குழுக்களை ஏற்படுத்திக்கொண்டு தங்களின் தேவைகளுக்காக பிற மனிதர்களிடம் கூடிவாழத் தலைப்பட்டனர். மேலும் பிற உயிரினங்களிடமிருந்து பாதுகாத்துக்கொள்ளத் தங்களுக்குள் இனக்குழுக்களை உருவாக்கிக் கொண்டனர். அதுவே அவர்களுக்குள் ஒருவிதச் சமூகக் கட்டமைப்பையும், பிணைப்பையும் ஏற்படுத்தியது. அது நாளடைவில் பெருகித் தங்களுக்குள் ஓர் ஆளுகைகளையும், கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்த வேண்டுமென்ற உந்துதலை எழவைத்ததோடு மற்ற விலங்குகளிடமிருந்தும், பிற இனக்குழு மனிதர்களிடமிருந்தும் தற்காத்துக்கொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்தியது. அன்று அவர்கள் உருவாக்கிய சமூகக்கட்டமைப்பே இன்று உலகளாவிய கூட்டமைப்பைப் பெற்றுத்தர அடித்தளமிட்டு தங்களுக்குள் சில கட்டுப்பாடுகளும், ஒழுக்கநெறிமுறைகளும் இருக்க வேண்டுமெனவும்

அவற்றைச் செயல்படுத்த அரசுகளும், அரசாங்கங்களும், பிரதிநிதிகளும் தோன்றலாயின. இவற்றை நெறிப்படுத்தவும், நடைமுறைப்படுத்தவும் தங்களுக்குள் ஒருவரை முதன்மைப்படுத்தி அவரின் வழிகாட்டுதலின் கீழ் செயல்பட அரசியல் என்ற அமைப்பு பெரிதும் தேவைப்பட்டது.

3.2.1 அரசியல்

குடிகள், அரசு, அரசாங்கம், அனைத்தையும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி அந்நாட்டில் உள்ள மக்களின் வாழ்க்கை முறைகளையும், பழக்க வழக்கங்களையும், செயல்திட்டங்களையும் இவ்வரசியலின் மூலம் அறிந்து கொள்ளலாம். "அரசியல் என்பது நாகரீகம் அடைந்த ஒரு சமூகத்தில் அரசாங்கம், அடிப்படைச் சட்டம், குடிமக்கள், மக்கள் ஒருவரோடு ஒருவர் கொண்டுள்ள தொடர்புகள், இவற்றை வகுத்துக் காக்கும் நீதிகள், சமூக நிலைகள் அவற்றின் குறிக்கோள்கள் என்பன பற்றிக்கூறும் ஓர் அறிவுத்துறையாகும்"[1] என்கிறார் பாஸ்கர். நாட்டிலுள்ள அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கிய ஒன்றே அரசியல் எனக் கூறலாம்.

எந்தவொரு நாடாக இருந்தாலும் அதற்கான அரசியல் பின்புலமானது இன்றியமையாது தேவைப்படுகிறது. ஏனெனில் இக்காலம் மட்டுமன்றி எக்காலத்திற்கும் தேவைப்படும் காலப்பெட்டகமாக இவற்றை அனைத்து நாடுகளும் போற்றி பாதுகாக்கின்றனர். இதன் மூலமாகத்தான் மக்களின் தேவைகளையும், கடமைகளையும் செயல்படுத்த முடியும்.

அரசியலின் மூலமே மக்களின் சித்தாந்தங்களை மாற்றியமைக்க முடிகிறது என்பதைப் பல அறிஞர்கள் விளக்கிச்சென்றுள்ளனர். அவ்வாறு மக்களின் வாழ்க்கை சூழலுக்குத் தகுந்தார் போன்று அனைவரையும் முன்னேற்றக்கூடிய அரசியலமைப்பைக் கொண்ட நாடுகளே வளர்ச்சிப்பாதைகளில் சென்று கொண்டிருக்கிறது. இதனை உலக அறிஞர்களான, அரிஸ்டாடில், காரல்மார்க்ஸ், பிளிட்டோ போன்றவர்களும், இந்தியாவில் சாணக்கியரும், தமிழக அறிஞர்கள் பலரும் கூறியுள்ளனர். ஏனெனில் இவ்வரசியலானது மக்களை நல்வழிப்படுத்தி வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்ல உதவுகிறது.

3.2.2 அரசியல் ஒரு கல்வி

அரசியல் என்பது ஆட்சி முறைகளைப் பற்றி அறிவுறுத்தக்கூடிய ஒரு கல்விமுறை எனலாம். ஒவ்வொரு குடிமகனும் தன்னுடைய அரசு மற்றும் அரசாங்கங்களைப் பற்றி அறிந்து பிற நாட்டு ஆட்சிமுறைகளையும், அரசியலமைப்பையும் ஒப்பிட்டு அவனது நடைமுறை வாழ்க்கையினைச் சிறப்பாகச் செயல்படுத்துகிறான். "அரசியல் என்பது அரசு இதுவரை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை அரசியல் அறிவியல் கோணங்களிலிருந்து பார்க்கும் ஓர் இயல்"[2] என்று கெட்டல் கூறுகிறார்.

மேலும் அரசியல் என்பது வலிமை வாய்ந்த ஓர் அமைப்பாகும். இன்றைய நிலையில் "ஒரு சமூக நிறுவனம் (social institution) இறுகிவிட்டது. இதனை உடைக்க வேண்டும். மக்கள் தமக்குத்தாமே ஆண்டு கொள்ளும் 'கொம்யும்' முறை வர வேண்டும் எனக் கொள்கை வகுத்த காரல் மார்க்சின் கனவு என்று நிறைவேறும் என்பது தெரியாது. அவர் கனவு நிறைவேறும் நாளில் தனி நிலஉடைமை இராது. தனிப்பொருளுடைமை இராது, பொதுவுடைமை மட்டுமே இருக்கும். இன்றைய அரசு அமைப்புகள் நீடிக்கிற வரை சில தனியுடைமைகளும், ஏற்றத்தாழ்வும் நீடித்தே தீரும்"[3] என்று க.ப. அறவாணன் கூறியுள்ளார். எனவே மக்களின் அனைத்துப் படிமங்களையும் ஆராய்ந்து பார்க்க அரசியல் அறிவானது அனைவருக்கும் தேவைப்படுகிறது.

3.2.3 அரசியல் சொற்பொருள் விளக்கம்

அரசியல் (politics) என்பதற்கு ஆட்சி, அதிகாரம் பற்றிய கோட்பாடுகளையும், மக்களின் வாழ்க்கை நடைமுறைகளின் ஒருங்கமைப்பு எனக்கூறலாம். "பாலிஸ் என்ற கிரேக்கச் சொல்லிற்கு நகரம் என்பது பொருள். அதிலிருந்து பாலிடிக்ஸ் என்ற சொல் தோன்றியது. பாலிடிக்ஸ் என்ற ஆங்கிலச் சொல்லிற்கு இணையாக அரசியல் என்னும் தமிழ்ச்சொல் வழங்கி வருகிறது. அரசியல் என்பது அரசின் இயல்பு, அரசாங்கத்தின் இயல்பு முதலியவற்றின் உண்மையைக் கூறுவதாகும். ஒரு சமுதாயம் நிலைபெறுவது அதன் அரசையும், அரசாங்கத்தையும் பொறுத்திருப்பதால் அரசியலை

முதன்மையான அறிவுப்பகுதி எனக் குறிப்பிடுகிறார்."[4] எனவே மக்களின் வாழ்க்கை முறைகளையும், நாட்டின் இறையாண்மையை இணைத்துப் பார்க்க உதவும். அரசியல் என்பதற்கு "நாடு ஒன்றிணைந்து ஆட்சி புரிந்திடும் முறை, ஆட்சிபுரிவது பற்றிய பல்வேறு கட்சிகளின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் எனவும், அரசாங்கம் என்பதற்கு நாடு ஒன்றிணைந்து நிர்வகிப்பதற்காக அதற்கென்றே அதிகாரங்கள் வரையறுக்கப்பட்ட ஒரு அமைப்பு (government) எனவும், அரசியல் சட்டம் என்பதற்கு அரசாங்கத்தின் அதிகாரம், கடமைகள் ஆகியவற்றோடு குடிமக்களுடைய உரிமைகள்"[5] போன்றவற்றை வரையறை செய்யும் மக்களின் அடிப்படைச்சட்டம் எனலாம்.

3.2.4 அரசியலின் தோற்றம்

அரசியல் என்பது எப்பொழுது தோன்றியது என்று சரியாக வரையறுக்க முடியாது. ஏனென்றால் சமூகத்தில் காணப்படும் பல்வேறு கூறுகளையும், மக்களின் வாழ்க்கை முறைகளையும் நாட்டின் ஆட்சித்துறைகளையும் வெளிப்படுத்தக்கூடியது அரசியல் மட்டுமேயாகும். "கிரேக்க அரசியல் தத்துவ ஞானியான அரிஸ்டாடில் என்பவர் (கி.மு 384-322) அரசியல் என்ற சொல்லை முதன்முதலாகப் பயன்படுத்துகிறார்."[6] அனைத்து மக்களும் சமம் என்கிற நிலை அன்றுமில்லை இன்றுமில்லை. ஆகையால் நாட்டிலுள்ள அனைவருக்கும் அனைத்தும் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே தங்கள் நாட்டிற்கு ஏற்றார் போன்ற அரசியலைப்புகளைத் தோற்றுவித்து அதற்காக ஒருசில அதிகாரங்களையும் ஒவ்வொரு நாடும் உருவாக்கி வருகின்றனர். "அரசியல் அதிகாரம் என்பது வரலாற்று சமூகங்களில் இயல்பாக வர்க்கம் தன்வசம் உள்ள ஒரு பரிசாகும்"[7] என்று மார்ஸ் வீபரின் கூறுகிறார்.

இவ்வரசியலின் மூலம்தான் அதிகாரம், ஆட்சி, உரிமை போன்ற அடிப்படையான தேவைகள் கிடைக்கப்பெறுகிறது. இந்திய அரசியல் அமைப்பானது மிகவும் பரந்து இன்று உலகளவில் மக்களுக்கு அதிகாரம் வழங்கும் ஓர் அமைப்பாக விளங்குகிறது. இவை அனைத்தையும் தெரிந்துகொள்ள அரசியல் அறிவு தேவைப்படுகிறது. இதன்மூலம் ஒரு நாட்டின் எல்லைகள், அரசியலமைப்புகள்,

கோட்பாடுகள், அரசாங்கங்கள், நீதித்துறைகள், அரசியல் கட்சிகள், பன்னாட்டு உறவுகள் போன்றவற்றை விரிவாக அறிந்துகொள்வதோடு, மக்களுக்கான நல்வாழ்க்கை முறையினை ஏற்படுத்தவே அரசுகளும், அரசாங்கங்களும் உருவாக்கப்பட்டது.

3.3.0.0 சமூகவியலும் அரசியலும்

சமூகவியல் என்பது சமுதாயத்தைப் பற்றிய படிப்பாகும். அரசியலும், சமூகவியலும் ஒன்றோடொன்று தொடர்புடையது. இவையிரண்டும் இணைந்தே சமூக மேம்பாட்டிற்குத் துணைபுரிகின்றது. மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஏற்படுகின்ற சமூகச் சிக்கல்களையும், சமமின்மையைக் களையவும், இல்லறத்தில் நிலவும் திருமணம் மற்றும் அதன் பிறகு எழும் பிரச்சனைகளைத் தீர்க்கவும் அரசியலானது சமூகத்திற்குத் தேவைப்படுகிறது. ஏனெனில் எந்தவொரு சிறிய நிகழ்வும் சமூகத்தில் பெரிய பாதிப்பினை ஏற்படுத்தக்கூடியது. எனவே அத்தகைய செயல்கள் நிகழாத வண்ணம், தனி மனிதனின் உரிமைகளைப் பாதுகாக்கச் சமூகத்திற்கு அரசியலின் பங்களிப்பு பெரிதும் தேவைப்படுகிறது.

3.3.0.1 அரசியல் பண்புகள்

ஒரு நாட்டை ஆளும் மன்னவன் தன்நாட்டு மக்களுக்கு முறையான ஆட்சி செய்வதே சிறப்பாகும். மக்களின் மனம் மகிழும் வண்ணம் அவர்களுக்குச் செய்ய வேண்டியக் கடமைகளைச் செவ்வனே செய்தலும், தன்னை நாடி வந்தவர்களுக்கும், இரவலர்களுக்கும் உதவிச் செய்து காத்தலும், அன்பு, அருள், பகைநீக்கும் திறன், அறிவு, நோக்கம், வாக்கு, செயல், எண்ணம், உண்மை, ஒழுக்கம், பணிவு, முயற்சி, மனம், தியானம் ஆகியவற்றைப் பெற்று அற நேர்மையுடன் இருக்கவேண்டும். நாட்டை ஆட்சி செய்பவர் சிறந்த பண்புகளோடு இருந்தால் தான் மக்கள் அவரைப்போற்றுவர். ஆகவே மக்களின் சூழ்நிலையினை மனதில் கொள்ள வேண்டுமென்பதனை,

“காய்நெல் அறுத்துக் கவளங் கொளினே
மாநிறைவு இல்லதும் பன்நாட்கு ஆகும்
யானை புக்க புலம் போலத்
தானும் உண்ணான் உலகமும் கெடுமே”[8]

எனும் புறநானூறு பாடல் வரிகளில் நாட்டின் நிலையினை அறியாமல் மக்களிடம் வரி வசூலித்த பாண்டியன் அறிவுடைநம்பிக்கு பிசிராந்தையார் அறிவுரை கூறுவதாய் அமைந்துள்ளது. அனைத்தையும் ஆராயும் பண்பு கொண்டவர்கள் அரசியலுக்குத் தேவையென்பது இதன்வழி உணரப்படுகிறது.

3.3.0.2 அரசியலும் அரசின் கூறுகளும்

அரசியல் என்பது அரசின் முக்கிய பிரிவாகவும் அங்கு வாழும் மக்களின் சமூக அமைப்புகளில் மிகவும் வலிமை வாய்ந்ததாக விளங்குகிறது. ஒருவன் அரசைச் சார்ந்து வாழவேண்டிய தேவை ஏற்படுகிறது. ஆகவே அவர்களின் தேவைகளை நிறைவு செய்வது அரசின் பணியாகிறது. உட்ரோவில்சன் என்பவர் "அரசு என்பது ஒரு வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பில் சட்டத்திற்காக அமைக்கப்பெறும் மக்கள் கூட்டம்"[9] என்கிறார்.

அரிஸ்டாடில் என்பவர் "அரசு என்பது ஆனந்தமான மற்றும் கௌரவமான வாழ்க்கை அடங்கிய தன்னிறைவான வாழ்க்கைப் பெறுவதற்காக கிராமங்களும், குடும்பங்களும் இணைந்த ஒன்றியமாகும்"[10] எனக் குறிப்பிடுகிறார்.

"அரசு என்பது ஒரு மக்கள் கூட்டம் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பில் வசிப்பதாகும். அவர்கள் வெளிச்சக்திகளுக்குக் கட்டுப்படாமல் ஒரு முறையான அரசாங்கத்தைப்பெற்றுத் தங்களுக்குள் ஏற்பட்ட இயல்பான கீழ்ப்படிதலை அரசிற்குச் செலுத்துகிறார்கள்"[11] என்று கர்னர் விளக்குகிறார். அரசென்பது மக்களைப் பாதுகாக்கும் அமைப்பாகும். மக்களுக்காகத்தான் அரசே அன்றி அரசுக்காக மக்கள் இல்லை. ஆகவே அரசு, அரசியல், அரசாங்கம் போன்ற அனைத்திற்கும் அடிப்படையானவர் மக்கள் என்பதை பல அறிஞர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

3.3.0.3 மக்கள் தொகை

'சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும்' என்ற பழமொழிக்கேற்ப, மக்களே அரசின் உயிர் மூச்சாக விளங்குகின்றனர். மக்கள் அரசை உருவாக்குவதால் மக்கட்தொகையே ஒரு நாட்டிற்கு அத்தியாவசியமாகிறது. அவர்களுக்காக அரசியல், அரசாங்கம்,

அரசியலமைப்பு போன்ற அனைத்தும் தேவைப்படுகிறது. ஆனால் பல்வேறு காரணங்களால் உலகின் ஒருசில பகுதிகளில் மக்கள் அதிகமாகவும், மற்றொரு பகுதியில் குறைவாகவும் காணப்படுகிறது. இவையிரண்டுமே நன்மை பயக்குவதில்லை. மக்கள் தொகை சிராக இருக்கும் நாடுகள் தன்னிறைவைப் பெற்று மேன்மையுறுவதை நம்மால் காணமுடிகிறது.

3.3.2.0 அரசியலமைப்பு

மக்களின் தேவைகளை நிறைவு செய்ய அரசு வேண்டும், அவ்வரசை தேர்ந்தெடுக்க அரசியல் இன்றியமையாது. இவையனைத்தையும் கட்டுப்படுத்த அரசியலமைப்பு அவசியமாகிறது. எந்த ஒரு நாடும் அரசியலமைப்பின்றி ஆட்சி செய்வது இயலாத காரியம். ஒரு சில விதிமுறைகளையும், கட்டுப்பாடுகளையும் வரலாறு மூலம் அறியமுடிகிறது. மக்களாட்சியாக இருந்தாலும், மன்னராட்சியாக இருந்தாலும் அவரவருக்கெனச் சில வரைமுறைகளைக் கையாண்டு வந்தனர். அவற்றில் திசை மாறும்போது அமைதியின்மை ஏற்படுகிறது. மக்களிடையே பிரிவினை ஏற்படாமலிருக்க வலுவான ஒரு அரசியலமைப்பு அனைத்து நாடுகளுக்கும் தேவைப்படுகிறது.

ஒரு நாட்டின் சிறப்பை அதனுடைய அரசியலமைப்பின் வழி தெரிந்துகொள்ளலாம். அதிகாரச் செயல்பாடுகள், குடிமக்களின் உரிமைகள், கடமைகள் போன்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு ஆவணமாக விளங்குகிறது. சர் ஜேம்ஸ் மெக்கின்டோ என்பவர், "குடிமக்களுக்கு இன்றியமையாத சலுகைகளை மற்றும் உயர் அதிகாரிகளுக்குத் தரப்படும் முக்கியமான உரிமைகளை ஒழுங்குபடுத்துகின்ற எழுதப்பட்ட அல்லது எழுதப்படாத சட்டங்களே ஒரு அரசின் அரசியலமைப்புச் சட்டமாகும்"[12] எனக் கூறுகிறார். ஒரு நாட்டின் அரசியலமைப்புச் சட்டம் அந்நாட்டின் அரசாங்கமாக விளங்குவதோடு மட்டுமல்லாமல் மக்களுக்கும், அரசுக்கும் இடையே நல்லுறவினை ஏற்படுத்துகிறது. மக்கள் தங்களின் தேவைகளை நிறைவு செய்து கொள்ளவும், தேவையற்ற கட்டுப்பாடுகளைக் களையவும், சுதந்திரமான சமத்துவ வாழ்வினை ஏற்படுத்துவதாக இருத்தல் வேண்டும். இவை மறுக்கும்போது மக்களிடம் கிளர்ச்சி ஏற்படுகிறது. இவ்வரசியலமைப்பே அத்தகைய சூழ்நிலையில் தான் அமெரிக்காவில்

முதன் முதலில் தோற்றுவிக்கப்பட்டது. 19ஆம் நூற்றாண்டு வரை பெரும்பாலான நாடுகளில் மன்னர் ஆட்சி முறையே நடைபெற்று வந்தது. அவற்றை விடுத்து இன்று உலகம் முழுவதும் ஒரு சில நாடுகளைத்தவிர்த்து மக்களாட்சி நிலவுகிறது. இவ்வாட்சி முறையும் நிலையில்லாமல் எதிர்காலத்திற்குத் தகுந்தார்போல் மாற்றத்தினை பெறுவதே அரசியலமைப்பு ஆகும்.

3.3.1.1 மன்னராட்சி

பழங்காலங்களில் உலகம் முழுமைக்கும் மன்னர் ஆட்சியே நடைபெற்றது. இன்றும் உலகில் இங்கிலாந்து, அரபு நாடுகளிளும் மன்னர் ஆட்சி நடைபெறுவதைக் காணமுடிகிறது. அந்நாட்டின் அனைத்து அதிகாரங்களும் அரசனிடம் இருக்கும், அவரின் ஆணைப்படியே அனைத்துச் செயல்களும் நடைபெறுகிறது. அவ்வாட்சியில் நிறைவு பெறாத மக்கள் தங்களைத் தாங்களாகவே ஆண்டு கொள்ளத் விரும்பியதனால் இன்று பல்வேறு நாடுகளில் மக்களாட்சி மலர்ந்துள்ளது. இரண்டாம் உலகப்போர் முடிவில் உலகில் பெரும்பகுதி மக்களாட்சியின் கீழ்வரத் தொடங்கியதன் விளைவாக இன்றுவரை பல புதியநாடுகள் உதயமாகிக் கொண்டே இருக்கின்றது.

3.3.1.2 மக்களாட்சி

மக்களால் மக்களுக்காக மக்களே தேர்ந்தெடுக்கும் ஆட்சி மக்களாட்சியாகும். ஒரு நாட்டினை உருவாக்க ஒவ்வொரு குடிமகனும் கடமைப்பட்டுள்ளனர். தங்களுக்கு இருக்கும் ஜனநாயகக் கடமையை வாக்குரிமைகளைப் பயன்படுத்தித் தம்மை ஆளும் அரசினைத் தாங்களே தீர்மானிக்கின்றனர். தனிமனிதன், கட்சிகள், அமைப்புகளின் செயல்பாடுகளைப் பொருத்து தேர்ந்தெடுக்கின்றனர். உலகில் ரஷ்யா, சீனா, போன்ற நாடுகளில் ஒருகட்சி ஆட்சிமுறையும், அமெரிக்காவில் இருகட்சி ஆட்சிமுறையும் இந்தியாவில் பலகட்சி ஆட்சிமுறையும் நடைமுறையில் உள்ளது. ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுப்பது மக்களாக இருந்தாலும், நாட்டைச் சிறப்பாக வழிநடுத்துவது ஆட்சியாளர்களின் திறமையில்தான் இருக்கிறது. அவ்வாட்சியாளர்கள் மக்கள், அரசு, அரசாங்கத்தின் செயல்பாடுகளையும், மக்களின் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்றவற்றை தேவையின்றி கட்டுப்படுத்தாததாக இருத்தல் வேண்டும். மக்களாட்சி, மன்னராட்சி

எதுவாக இருந்தாலும் சிறப்பானது என்று இன்றைய சூழ்நிலையில் அறுதியிட்டுக் கூறமுடியவில்லை. ஏனெனில் இன்றும் இவ்வாட்சியின் ஏதேர்ச்சதிகாரத்தினால் பச்சிளங்குழந்தைகள் இறப்பதைக் கேட்கவும், பார்க்கவும் முடிகிறது. இவர்களைக் கட்டுப்படுத்த அனைத்து நாடுகளுக்கும் அரசியல் அதிகாரமைப்புத் தேவைப்படுகிறது.

3.3.2.0 அரசியலமைப்பின் தேவை

அரசியலமைப்பு என்பது மக்களுடைய வாழ்வின் அடித்தளம் எனக் கூறலாம். அனைத்து நாடுகளும் இதன் அவசியத்தை "கி.பி 1776 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் புரட்சி ஏற்பட்ட பிறகு இதனை உணர்ந்தனர். அரசமைப்பு மிகவும் அவசியம் சர்வாதிகார ஆட்சியாக இருந்தாலும் கொடுங்கோல் ஆட்சியாக இருப்பினும் அரசமைப்பு தேவைதான். மேலும் அரசமைப்பு இல்லாத அரசு ஒரு குழப்பமான ஆட்சியை அமைத்துவிடும்"[13] என்கிறார் ஜெல்லினிக்.

அரசியலமைப்பு என்பது ஒரு கடிவாளம் போன்றது, இதன் மூலம் தனிமனிதனின் உரிமைகளைப் பாதுகாக்கவும், நிர்வாகத்தினை மேம்படுத்தவும், இறையாண்மையினைப் போற்றவும், சிறப்பாக ஆட்சி செய்யவும், மேலும் அரசு தான்செய்ய வேண்டிய அனைத்துச் செயல்களையும் இவ்வரசியலமைப்பின் மூலமே சரிவரசெய்ய முடியும்.

3.3.2.1 இந்திய அரசியலமைப்பு

உலகில் உள்ள அரசியலமைப்பில் இந்திய அரசியலமைப்பு சிறப்பு வாய்ந்தது. நம் நாட்டிற்குத் தகுந்தார் போன்று அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, கனடா, தென்னாப்பிரிக்கா, ஜெர்மனி போன்ற பல்வேறு நாடுகளில் உள்ள அரசியலமைப்பின் சிறப்புக்கூறுகளை நம்நாட்டு மக்களுக்கு பயன்படக்கூடிய வகையில் இறுக்கமாகவும் அதே சமயத்தில் நெகிழ்வுறும் தன்மையில் அமைக்கப்பட்டுள்ளது. ஆயிரம் குற்றவாளிகள் தப்பித்தாலும் ஒரு நிரபராதிகூடத் தண்டிக்கப்படக் கூடாது என்ற நோக்கத்தோடு உருவாக்கப்பட்டது. "இந்திய அரசியலமைப்பு 441 உறுப்புகளையும், 12 அட்டவணைகளையும் நமது அரசமைப்பு பெற்றுப் பருமனாக உள்ளது. இந்தியா ஒரு பரந்த நாடு அவற்றில் பல்வேறு இனங்களும், வகுப்புகளும் கலந்துள்ளன. இவர்கள் அனைவரின் உரிமைகளைப் பாதுகாக்கவும் உறுதிசெய்யவும் பல சட்ட வாசகங்கள் இடம்பெற

வேண்டிய நிலை இருக்கிறது. அதுமட்டுமல்லாது அரசிற்கும், குடிமக்களுக்கும் வழிகாட்டு நெறிமுறைகளும், அடிப்படைக் கடமைகளும் அரசியலமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றுள்ளன"[14] என்று பேர.ஆ.சந்திரசேகரன் கூறுகிறார்.

3.3.2.2 அரசியலமைப்பும் பாதுகாப்பும்

உலகில் உள்ள அனைத்து உயிர்களும் பாதுகாப்போடு வாழ்வதற்கு அந்நாட்டின் அடிப்படை சித்தாந்தத்தை உணர்ந்து செயல்பட வேண்டும். தன் நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் தங்களின் எண்ணங்களையும், செயல்பாடுகளையும் செவ்வனே செயல்படுத்த அரசியலமைப்பு அவசியமாகிறது. உலகில் எங்கும் போர் நடைபெறக்கூடாது என்பதற்காகவே பல்வேறு அமைப்புகள் உருவாக்கப்பட்டிருப்பினும் ஒரு சில நாடுகளில் தொடர்ந்து தகாத செயல்கள் நடைபெறுவதைக்காணும் போது நமக்கு சிறந்த பாதுகாப்பை நம் அரசு வழங்கியுள்ளதை அறியமுடிகிறது.

3.3.2.3 தமிழ் இலக்கியங்களும் அரசியலும்

தமிழ் புலவர்கள் தங்களுடைய கருத்துகளை மன்னர்களிடம் எடுத்துரைப்பதிலும், ஆட்சியில் நிலவும் சீர்கேடுகளைத் தெளிவுபடுத்துவதிலும், அரசர்களின் கொள்கைகளை மக்களிடம் பரப்புவதற்கும் இலக்கியங்களைத் துணைக் கொண்டனர். வாள் முனையை விடப் பேனா முனைக்கே மகத்துவம் அதிகம் என நிருபித்தவர்கள் தமிழ் இலக்கியவாதிகள். இன்றைய ஆட்சியாளர்களையும் ஆட்சிக்கட்டிலில் அமர்த்தியது இலக்கிய அறிவு. இதனை மறுக்க இயலாது. தமிழும் அரசியலும் இரண்டறக் கலந்து நிற்கிறது. தமிழ் இலக்கிய வரலாற்றை நோக்குகையில் "கி.பி. 6ஆம் நூற்றாண்டு தொடங்கி 9 ஆம் நூற்றாண்டு வரை பக்தி இலக்கியங்களின் அடிப்படையில் பக்தி இலக்கியங்கள் தோற்றம் பெற்றதையும், 19, 20ஆம் நூற்றாண்டுகளில் (தேசியம், பகுத்தறிவு, பொதுவுடைமை, திராவிடம்) இயக்கங்களில் அடிப்படையில் இலக்கியங்கள் தோற்றம் பெற்றதையும் காண முடிகிறது. கி.பி 12ஆம் நூற்றாண்டுத் தொடங்கி 19ஆம் நூற்றாண்டுகள் வரை கால மாற்றத்திற்கேற்ப நிகழ்ந்த கருத்துமாற்றம் காரணமாகவும் ஒவ்வொரு குழுவினரும் தங்கள் கருத்தினை வெளிப்படுத்தினர்"[15] என்று அரங்க.

இராமலிங்கம் குறிப்பிட்டுள்ளார். சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியங்கள் வரை பல அறிஞர்கள் தம்மறிவினையும், அரசியல் நுணுக்கங்களையும் புற இலக்கியங்களோடு, அக இலக்கியங்களிலும் காணமுடிகின்றது. அரசியலில் ஒரு நாட்டையாளும் அரசனின் பல்துறை ஆளுமையினைச் சுட்டுகிறது. தமிழரின் அரசியல் கருத்துகளை தொகுத்துக்கூறும் கலைக்களஞ்சியமாகப் புறநானூறு திகழ்கின்றது. மேலும் காப்பியங்களின் வாயிலாக மன்னர்களின் சிறப்புகளையும் அவர்கள் செய்த குறைகளையும் படைப்பாளர்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

நாட்டினுடைய உயர்வு, வளம், வாழ்க்கை, அமைதி, பெருமிதம் எல்லாமே ஆட்சி செய்யும் முறையைச் சார்ந்ததாகும். பண்டைய தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர்களும், குறுநில மன்னர்களும் ஆண்டு வந்தனர். மன்னர்களைப் பாடுவதைவிட மக்களின் நன்மைகளை முதன்மையாகக் கருதினர். "சங்கப்பாடல்களில் அரசு, அரசன் பற்றி பாடுகிற போது அரசனின் வீரம், போர்த்திறம், பரம்பரை, வெற்றி, முறையான ஆட்சி, நடுநிலைமை, தண்டம் செய்தல், முறையாகப் பாகம் பெறுதல், ஈகைபுரிதல், தாய் போலக் குடிகாத்தல், பொருள் ஈட்டல், வேளாண்மை பேணுதல், சான்றோர் சொல் கேட்டல் ஆகிய கருத்துகள் திரும்பத் திரும்பக் கூறப்படுகின்றன"[16] என்று ராஜ் கௌதமன் கூறுகிறார். ஆகத் தமிழ் இலக்கியமானது மக்களைக் காக்கவும் அரசை வழிநடத்தவும் துணையாக இருந்து வருகிறது என்பதை உணரமுடிகிறது.

3.3.2.4 திருக்குறளும் அரசியலும்

உலக அரசியல் அறிஞர்களாப் போற்றப்படும் அரிஸ்டாடில், கார்ல்மார்க்ஸ், கான்புசியஸ்சும், இந்தியாவின் சாணக்கியர் போன்றவர்களும் தங்கள் தத்துவார்த்தக் கருத்துகளைச் செம்மையாக தம் நூல்களில் வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால் அவர்களுடைய அனைத்துக் கருத்துகளையும் ஒன்றாகக் கையாண்டவர் திருவள்ளுவர். அவர்கள் அனைவரும் நற்புலமைவாதிகள், இருப்பினும் ஏதோ ஒரு துறைகளில் தம் கருத்துகளை விரிவாக வெளிப்படுத்தியுள்ளனர். நம் வள்ளுரோ எவ்விதப் பேதமுமின்றி அனைத்து துறைகளுக்குமான

உலகப் பொதுமறையைத் தந்துள்ளார். மனிதன் தன் வாழ்நாள் முழுமையும் செய்கின்ற அனைத்துச் செயல்களையும் மிக நுட்பமாக ஆராய்ந்துள்ளார். அவற்றில் அரசியல் சார்ந்தக் கருத்துக்கள் இன்றைய மக்களாட்சியிலும் மாறாத் தன்மையோடு விளங்குவது வியப்பிற்குரிய செயலாகிறது. இன்று நமக்குத்தேவைப்படும் அடிப்படைத்தேவைகள் முதல் அனைத்தையும் ஆழமாக அன்றே இயம்பியுள்ளார். நாட்டை ஆட்சிசெய்யும் மன்னர்களின் தகுதி, அவனுடைய பண்பு நலன்கள், ஆட்சிமுறை, துணைக் கொள்ளுதல், நாட்டின் கூறுகள், மக்களின் தேவை, நிர்வாகம், படை, அரண் என்று அனைத்துக் கூறுகளையும் தெளிந்த நீரோடை போன்று விளக்கிச் சென்றுள்ளார்.

3.3.2.5 திருக்குறளும் இன்றைய அரசியல் தாக்கங்களும்

திருக்குறள் 21ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் இரண்டு அரசியல் இயக்கங்களால் கையிலெடுத்துக் கொள்ளப்பட்டு மக்களிடம் செல்வாக்கு பெற்றுள்ளது. அவற்றுள், ஒன்று ஈ.வெ.ராவால் தோற்றுவிக்கப்பட்ட திராவிட இயக்கத்திலிருந்து உதயமாகி அறிஞர் அண்ணாவினால் உருவாக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகமும், இவ்வியக்கத்தில் இருந்து பிரிந்து எம்.ஜி.ஆர் உருவாக்கப்பட்ட அ.இ.அ.தி.மு.க ஆகவும் மேலும் இன்று காணப்படும் பல சிறிய கட்சிகளும், இயக்கங்களும் திருக்குறளைக் கையிலெடுத்துக் கொண்டு அதற்குப் பல உரைகளும், ஆய்வு நூல்களும் பெருகிவருவதைக் காணமுடிகிறது.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய ஒரு இலக்கியத்திற்கு இக்காலச் சூழ்நிலைக்கு அரசியல் தாக்கங்கள் இடம்பெறுவது சரியான அணுகுமுறையாக இருக்குமா என்ற ஐயம் நமக்குள் எழுகிறது. ஆம் "காலந்தோறும் மொழியும் தனிமனிதர் ஒவ்வொருவரின் மொழித்திறனும் வேறுபட்டன. பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட நூல்களுக்கு உரை எழுதப்புகுந்த உரைகாரர்கள் தாம் வாழும் காலத்து மொழிச்சூழலில் இருந்து விடுபட்டு உரைக்காண முற்படுவது சாத்தியமில்லை. உரையாசிரியர் காலத்து மொழியமைப்பு அவர்தம் உரைகளில் இடம்பெறுவது இயல்பு. இதைப் போலவே ஒவ்வொரு உரையாசிரியரும் ஒரு குறிப்பிட்ட கொள்கை பின்னணி கூட

உரைகளில் இடம்பெறுவது இயல்பே”[17] இதிலிருந்து ஒரு நூலுக்கு உரை எழுதும் உரையாளர் தாம் சார்ந்துள்ள சமயம், கொள்கைத் தொடர்பான தாக்கங்களை உரைகளில் வெளிப்படுத்துகின்றனர்.

3.3.2.6 அரசியலும் மக்களின் வாழ்வும்

நாட்டில் உள்ள மக்களை வளப்படுத்துவதே அரசியலில் முக்கிய நோக்கமாகும். அவ்வாறு ஆட்சி செய்யும் மன்னர்களைத்தான் ஆன்றோர் எனப்போற்றுவர் இதனை,

“திறவோர் செய்வினை அறவே தாகும்”[18]

எனும் குறுந்தொகை வரியில் அனைவராலும் ஆட்சி செய்ய முடியாது அவ்வாறு பொதுவாழ்வில் ஈடுபட்டு மக்களுக்கு நன்மை செய்பவர்களைக் காலங்கள் கடந்தாலும் அவர்களின் புகழ் நிலைத்து நிற்கும். ஆக தீர்க்கமாக ஆராய்ந்து ஆட்சி செய்ய வேண்டுமென்பதை,

அல்லது கடிந்து அறம்புரி செங்கோல்”[19]

என்று பெரும்பாணாற்றுப் பாடல் வரியில் ஆட்சியாளர்கள் தீயவற்றைக்கடிந்து நல்லவற்றைப் போற்றினால் மக்களின் வாழ்க்கை முறைகள் சிறப்படையும் என்பதை எடுத்தியம்புகிறது. அரசியல் சிறப்படைந்தால் தான் மக்களின் வாழ்க்கை முன்னேறும். இல்லையே, ‘கடலில் கரைத்த பெருங்காயம் போல’ மக்களின் வாழ்க்கையில் பயனற்றுப்போகும்.

3.4.0 வள்ளுவர் கண்ட நாடு

ஒரு எல்லைக்குள் மக்கள் விரும்பி வாழும், தலைமைச் சிறப்புடன் குறிக்கோள்களைக் கொண்டு ஆட்சிசெய்யும் நாட்டினையே வள்ளுவர் காண விரும்புகிறார். அதற்காக ஒரு அதிகாரம் முழுமையும் இயற்றியுள்ளார். அவற்றில் நாட்டின் சிறப்புகளை ஆறு குறள்களிலும், உறுப்புகள் பற்றி ஒரு குறளிலும், அழகு பற்றி ஒரு குறளிலும், அதன் குற்றங்கள் பற்றி இரண்டு குறள்களிலும் எடுத்தியம்பியுள்ளார். நாடு என்பது மக்கள் நாடி செல்வதால் அதனை நாடு என்கிறோம். அந்நாட்டில் அடிப்படை வசதிகளான உணவு, உடை, இருப்பிடம் போன்றவைகளும், அறிவு, பண்பு, செல்வம், போன்ற பண்புகளோடு பசி, பிணி, வறுமையற்றதாகவும் விளங்க வேண்டும். மக்கள் வாழ்வதற்கேற்ப அனைத்து வகையானச் சிறப்புகளையும் பெற்றுத்

திகழ வேண்டும். "நாடு என்ற சொல்லுக்குப் பக்கம், இடம், இடப்பரப்பு, நிலம்"[20] என்று தமிழ்ப்பேரகராதி பொருள் கூறுகிறது. நாடு என்பது நிலப்பரப்பை மட்டும் குறிப்பதன்று, அங்கு மக்கள் வாழ்ந்தால் மட்டுமே அது நாடாகிறது. "அரசு, நாடு எனக் கூறவேண்டுமாயின் மக்கள் வேண்டும். குடி மக்கள் இல்லாத நாடு நாடாகாது. வள்ளுவர் கருதிய அரசுக்குக் குடிமக்களும், நிலப்பரப்பும் உண்டு. ஆதலால், மக்கள் வாழும் நாட்டையே அவர் நாடென மதிக்கிறார்." [21]

"மக்களின்றேல் நாடு என்பதில்லை. மக்கள் செயற்பாட்டின் விளைவே நாடு, மனிதச் சமுதாயத்தின் பண்பாடு வளரும் இடமே நாடு எனப்படுகிறது. நிலத்தை நாடக்குபவர் மக்களே; நிலமும், மக்களும் இணையுங்கால், நாடென வழங்கப்படுகிறது. நிலமே ஒன்று நாடாகுக; ஒன்று காடாகுக; ஒன்று பள்ளமாகுக; ஒன்று மேடாகுக; எப்படியிருப்பினும் அது பொருட்டன்று. உன்னிடம் வாழும் மக்கள் எந்த அளவு நல்லவரோ அந்தளவு நீயும் நலமுடையாய்"[22] என்று முனைவர் பா.ஆரோக்கிய தாஸ் கூறுகிறார். இவ்வாறே மக்களின் பண்பினைப் பொருத்தே நாட்டின் சிறப்பு அமையும் என்பதை,

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றே மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே" [23]

என்று புறநானூற்றில் ஔவையார் பாடல் நாட்டின் சிறப்பை எடுத்துரைத்துக்கிறது.

3.4.1.0 நாட்டிற்கு அணி

நாட்டிற்கு அணியாக பசியின்மை, நோயின்மை, கல்வி, விஞ்ஞானம், பொன், பொருள் போன்ற செல்வங்களும் உற்பத்தி மிகுதியும் பெற்று நேரிய தலைமையின் கீழ் இன்பமாக வாழ்வதையே அந்நாட்டிற்குச் சிறப்பென்று,

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து" [24]

எனும் குறளில் வள்ளுவர் நாட்டின் அழகினைச் செப்பியுள்ளார். நாட்டிற்கு நோயினை உண்டாக்காத தூய்மையான சுற்றுப்புறச்

சூழ்நிலைகளும், நீர்வளங்களும், இயற்கை வளங்களும், தம்முடைய உழைப்பால் நேர்மையாகக் கிடைக்கின்ற பொருட்களைக் கொண்டு இன்பமடைதலும், அந்நியர்களிடம் இருந்து தீங்கு நேராமல் பாதுகாப்பதே நாட்டிற்குச் அணியெனலாம். வள்ளுவர் கண்ட நாடானது, குறைவில்லாத விளைபொருளும், அதனை எல்லோருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கக்கூடிய தக்கோர்களும், ஏற்றத்தாழ்வற்ற செல்வ நிலையும் உடைய நாடகத் திகழ வேண்டுமென்பதை அறிய முடிகிறது. எனவே தான் பண்டைய பெரும் புலவர்கள் தாம் பாடும் பாடல்களில் நாட்டுவளம் பற்றிப்பாடுவதையே மையப்பொருளாக கொண்டுள்ளனர் என்பதனை,

"விசிபிணி முழவின் குட்டுவன் காப்பப்
பசிஎன அறியாப் பனைபையில் இருக்கைத்
தட மருப் பெருமை தாமரை முனையின்
முட முதிர் பலவின் கொழுநிழல் வதியும்
குட நாடு" [25]

எனும் அகநானூற்று பாடல்வரிகள் விளக்கம் தருகிறது. ஒரு நாட்டில் உடல் உழைப்பினால் பசியிருக்கலாம். ஆனால் வறுமையினால் ஏற்படும் பசியானது மிகவும் கொடுமையானதாகும். இதனைப் போக்குவதே ஒரு அரசின் தலையாய கடமையாகும்.

3.4.1.1 வறுமையும் பசியும்

பசியின் கொடுமை அன்று முதல் இன்று வரை சமூகத்தில் தீராச் சாபமாகத் தொடர்ந்து கொண்டே வருகிறது. இக்கொடுமையின் அவலம் வள்ளுவருக்கு முன் இருந்தே காணப்பட்டுள்ளது. இதற்குச் சான்றாகச் சங்க இலக்கியத்தில்,

"கோல்கா லாகக் குறும்பல் வொதுங்கி
நூல்விரித் தன்ன கதுப்பினள் கண்டுயின்று
முன்றிற் போகா முதிர்வினள் யாயும்
பசந்த மேனியோடு படரட வருந்தி
மருங்கிற் கொண்ட பல்குறு மாக்கள்
பிசைந்துதினி வாடிய முலையன் பெரிதமிந்து
குப்பைக்கீரை கொய்கண் ணனகத்த
முற்றா விளந்தளிர் கொய்து கொண் டுப்பின்று
நீருலையாக வேற்றி போரின்

றவிழ்ப்பத மறந்து பாசடகு மிசைந்து
மாசொடு குறைந்த அடுக்கைய ளறம்பழியதாத்
துவ்வா ளாகிய வென்வெய் யோளும்” [26]

எனும் புறநானூற்று வரிகளில் புலவர் வறுமையுற்றிருந்த நிலையினைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. சங்கக் காலத்தில் கற்றறிந்த புலவர்களிடையேயும் இத்தகு வறுமையைக் காணமுடிகிறதென்றால், எளிய மக்கள் எத்தகைய வறுமை நிலையினை எய்தியிருந்திருப்பர் என்பது நம்மால் உணரமுடிகிறது. ஔவையும் இளமையில் ஏற்படுகிற வறுமை மிகக்கொடுமையானது எனச்சுட்டிக் காட்டியுள்ளார். பத்துப்பாட்டில் சிறுபாணாற்றுப்படை,

“திறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பால்முலை கவர்தல் நோனாது
புனிற்று நாய் குரைக்கும் புல்லென அட்டில்
.....
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும்
அழி பசி வருத்தம் வீட” [27]

இவ்வரிகளில் வறுமையின் கொடுமையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. மேலும் பாரதி ஒருபடி மேற் சென்று தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இச்சகத்தினை அழித்திடுவோம் என்று உணர்ச்சிப் பூர்வமாகப் கூறியுள்ளார்.

3.4.1.2 நாடும் வளமும்

அரசியல் சிந்தனையாளர்கள் நாட்டில் இருக்க வேண்டிய இயற்கை வளங்கள் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடுகின்றனர். இதனை,

“வார் சான்ற கூந்தல்! வரம்பு உயர, வைகலும்
நீர்ச்சான்ற உயரவே நெல் உயரும், சீரசான்ற
தாவாக் குடி உயர, தாங்கு அருஞ்சீர்க் கோ உயர்தல்
ஓவாது உரைக்கும் உலகு” [28]

என்று சிறுபஞ்சமூலப் பாடலில் வரப்பு உயர நீர் உயரும், அதன் மூலம் நெல் உயரும் இதற்கேற்ப அந்நாட்டு அரசனும் உயர்வான் என்பதை கூறுகிறது. ஏனெனின் வளமில்லாத நாடுகளில் வாழத் தகுதியற்றது. ஆக ஒரு நாட்டில் குடியிருக்க உண்டி, உடை, உறைவிடம் போன்றவற்றோடு இயற்கை வளங்களான வற்றாத ஆறுகள், குறையாத

குளங்கள், ஏரிகள், நீரூற்றுகள், கடல் வளங்கள், எடுக்க எளிமையான இரும்பு போன்ற கனிம வளங்களும் அந்நாட்டில் அமைய வேண்டும் என்பதனை,

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு"[29]

என்று இக்குறளின் மூலம் வள்ளுவர் எடுத்துக்காட்டுகிறார். ஒரு நாட்டிற்கு வருவாய் என்பது இன்றியமையாத கேணி, ஏரி, அருவி, ஆறு முதலான ஆதாரங்களை வள்ளுவர் இங்குக் குறிப்பிடுகிறார். அதைப்போன்றே ஒரு நாட்டிற்கு வேண்டிய வளங்களில் மலைவளம் குறிப்பிடத்தக்கது. கடலிலே பொன்னும், பவளமும் கிடைக்கும் என்பதைப் பண்டைய தமிழ் இலக்கியம் மூலம் அறிகிறோம். மலைகளில் இருக்கும் காடுகளில் விலையுயர்ந்த பொருட்களும் கிடைப்பதால்தான் வள்ளுவர் 'வாய்ந்த மலை' எனக் குறிப்பிடுகிறார். மேலும் நிலவளமும், நீர்வளமும் தேவையென்பதனை,

"உணவெனப்படுவது நிலத்தோடு நீரே" [30]

என்னும் புறநானூற்று வரி மெய்ப்பிக்கிறது.

3.4.1.3 இயற்கைச் செல்வம்

ஒரு நாட்டிலுள்ள அனைத்துச் செல்வங்களைக் காட்டிலும் சிறப்பாக அமையப் பெறவேண்டியது மக்கட் செல்வம். இச்செல்வம் இருந்தால்தான் மற்ற அனைத்தும் சிறப்புறும். ஆனாலும் செல்வம் எனத் தனியே பிரித்துப் பேசுவதற்கேற்ப பொன், பொருள் போன்ற வளங்களுடன் கடல் தரும் அரும்பொருள்கள் ஒரு நாட்டிற்கு அணிசெய்வனவாக அமைகிறது. வள்ளுவர் கண்ட நாடு பொதுவாகச் செல்வமுடையதாக இருந்தால் மட்டும் போதாது குறிப்பாக அனைத்து வகையான இயற்கை வளங்களைப் பெற்றுத் தன்னிறைவு அடைய வேண்டும். இவ்வளங்களை வள்ளுவர் இரண்டொரு தொடர்களில் சுருங்கச் சொல்லி விளங்க வைக்க 'வளம் குன்றா நாடு', 'நாடா வளம்' என்பது அவர் கையாளும் சொற்களாகும். நாடு என்னும் அதிகாரத்தில் இருபுனலும், வருபுனலும் என்று கூறியதோடு அல்லாமல் வான் சிறப்பிலும் மழை வளத்தைப் போற்றுகிறார். அவ்வதிகாரத்தில் மழை உணவாதல், உணவினை உண்டாக்குதல், உழவுத் தொழிலுக்குப் பயன்படுதல், தாவர இனங்கள் வாழத் துணைசெய்தல், கடல்

வளங்களைப் பெருதல் போன்ற அனைத்திற்கும் மேலாக வாணிபம் செய்வதற்கும் பாதுகாப்பிற்கும் சிறந்த அரணாக விளங்குகிறது. இவ்வளங்கள் அனைத்தையும் பெற்றுத் தன்னிறைவு கொண்ட நாடே சிறப்படையும் என்பதனை,

"வகைத்தாய் வளனொடும் வைக்கின்ற வெவ்வேல்

நகைத்தாரன் தான்விரும்பு நாடு" [31]

என்று வெண்பாமாலை விளக்குகிறது. மேலும்,

"கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா

நாடுடென்ப நாட்டின் தலை" [32]

என்ற குறளில் வள்ளுவர் பகைவரால் தன்னுடைய வளம் குன்றாமல் விளங்கக்கூடிய நாடு சிறப்புடையது.

3.4.1.4 சேராது இயல்வது நாடு

இயற்கை வளங்களையும், மக்களையும் கொண்டது நாடு என்றாலும், நாடாளும் மன்னவன் குடிமக்களின் பசி, பிணி, பகை இம் மூன்றிலிருந்தும் காக்க வேண்டும் என்பதனை,

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்

சேரா தியல்வது நாடு" [33]

என்ற குறளில் வள்ளுவர் நாட்டில் எந்தவிதக் கேடுகளும் இருத்தல் கூடாது என்கிறார். "நாடு அமைந்த முறையாலும், வகையாலும் காற்றும், குளிரும், வெப்பமும் நல்ல அல்லது தீய விளைவைக் கொடுக்கின்றன. நாடு மாண்புறும் வகையில் அமையுமானால் பசியும், பிணியும் பிறவாது. இத்தகைய நாட்டையே வள்ளுவர் விரும்புகிறார் என்பது 'சேராது இயல்வது நாடு' என்னும் தொடரால் விளங்குகிறது" [34] என்று தி.வெ.ரா குறிப்பிடுகிறார்.

3.4.1.5 சான்றோர் வளங்கள்

ஒரு நாட்டில் துன்பம் நெருங்காதிருக்க குறையாத வளங்களுடன் சான்றோர்கள் பலரும் அந்நாட்டினை வழிநடத்த வேண்டும். அரசன், நாட்டு நிர்வாகத்தைக் கவனிக்கக் கூடியவன், நிகழ் காலத்தில் ஏற்படும் துன்பத்தினைக் களைய வல்லவன். ஆனால் அறிஞர்கள் இறந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் அடுத்த தலைமுறைக்கான

எதிர்காலத்தையும் சிந்தித்து நாட்டில் ஏற்படுகின்ற சிக்கல்களைத் தீர்ப்பதில் அக்கறையுள்ளவர்கள். அதனால் தான் வள்ளுவரும்,

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்

செல்வருஞ் சேர்வது நாடு"[35]

என்ற குறளின் மூலம் வள்ளுவர் சான்றோர் என்பவரைப் பொருளாதார வளமுடையவராகக் குறிக்காமல், மனசீர்மையுடைய மனிதரைச் சுட்டுகிறார்.

3.4.1.6 பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும்

ஒரு நாட்டில் இயற்கை வளங்களுடன் தகுதியுடைய சான்றோர்கள் வாழ்ந்தாலும், அந்நாட்டுக்குக் கேடு விளைவிக்கும் தீங்கு செய்பவர்களைக் கண்டறிந்துகளைய வேண்டும். உட்பகை என்பது எல்லா நாடுகளிலும் உண்டு. கடலில் வாழும் திமிங்கலம் கப்பலைக் கவிழ்ப்பதைப் போல நாட்டின் உட்பகை அந்நாட்டையே சீர்குலைத்து விடுவார்கள். என்பதனை,

"பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்

கொல்குறும்பும் இல்லது நாடு"[36]

இக்குறளில் விளக்கியுள்ளார். ஒரு நாடு பசி, பிணி, பகை இவற்றைத் தவிர்த்ததாகவும், இயற்கை வளம், மனவலிமை மிக்க மனிதர்கள் கொண்டதாகவும், அதற்குத் தகுந்தாற் போன்ற பாதுகாப்போடு திகழவேண்டும்.

3.4.2.0 படை

ஒரு நாட்டிற்கு அழிவு வருகின்றபொழுது முதற்கண் தன்னுயிரையும் தர சித்தமாயிருப்பவர் அந்நாட்டிலுள்ள படைவீரர்கள். எத்தகைய எதிர்ப்பு வந்தாலும் கலங்காது நோக்குகின்ற சிறந்த வீரமும், ஆண்மையும் உள்ள வீரர்களின் செயல் போற்றுதலுக்குரியது என்பதை,

"உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்

வெறுக்கையுள் எல்லாம் தலை" [37]

என்னும் குறளில் வள்ளுவர் குறிப்பிடுகிறார். சேரன் செங்குட்டுவன் ஆரிய மன்னருடைய படைகளை எதிர்த்துப் போரிடும் திறனைச் சிலப்பதிகாரத்தில்,

“இறைதேர் வேட்டத் தெழுந்த வரிமாக்
கரிமாப் பெருநிறை கண்டுளஞ் சிறந்து
பாய்ந்த பண்பிற் பல்வேன் மன்னர்
காஞ்சித் தானையொடு காவலன் மலைப்ப”[38]

என்ற வரிகள் மூலம் இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். இதுபோன்ற உன்னதமான படைப்பிரிவு கொண்ட வீரர்களைத்தவிர அரசனுக்கு வேறு ஏதும் சிறப்பு இல்லை என்பதனை வள்ளுவர்,

“உலைவிடத் தூறஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக் கல்லால் அரிது”[39]

என்று இக்குறள் மூலம் பெருமிதத்தோடு கூறுகிறார். மேலும் சுக்கரநீதியானது, “தலைவன் பொருட்டுப் போர்க்களத்தில் புறமுதுகு காட்டாது வீரமுடன் போராடும் வீரன் அழிவில்லாத சொர்க்கத்தை அடைகிறான்.”[40] எனக் குறிப்பிடுகிறது. இது போன்ற படைப்பிரிவுகளே ஒரு நாட்டின் சிறந்த அரணாக விளங்குகின்றது. படைப்பிரிவுகளும் பாதுகாப்பும் ஒருங்கே அமையும் பட்சத்தில் நாட்டின் எல்லைகளும் மக்களும் சிறப்புற்றுக் காணப்படுவர்.

3.4.3.0 எல்லை வரையறை

எல்லா நாடுகளும் தங்களுக்குள் எல்லைகளை வரையறுத்துக் கொள்வதிலும், அவற்றைப் பாதுகாத்துக்கொள்வதிலும் இன்றியமையாதாகிறது. “வேறு நாட்டிலிருந்து மக்களைக்கொண்டு வந்தும், தனது நாட்டில் மிகுதியான மக்களை வேறிடத்திற்குச் செலுத்தியும் நாட்டினை அமைத்தல் வேண்டும். அப்போதுதான் நாட்டை அதிகப்படுத்த முடியும். பாதுகாப்பு நிறைந்த வகையிலே கிராமத்தை அமைத்தல் வேண்டும். கிராம எல்லைகளில் ஆறு, மலை, காடு, பள்ளம், அணைக்கட்டு மற்றும் இலந்தை, வன்னி, இலவம், பால் மரங்கள் போன்றவைகளும் அமைத்தல் வேண்டும்.”[41] என்று கௌடில்யர் கூறுகிறார். தமிழகத்தின் எல்லைகளாக வடக்கில் இமயமும், தெற்கில் தென்குமரியும், கிழக்கும் மேற்கும் கடலை எல்லைகளாகக் கொண்டு விளங்கியது என்பதனை,

“வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅ துருகெழு குமரியின் தெற்கும்

குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்”[42]

மேலும்,

“தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலா வெல்லை”[43]

எனப் புறநானூற்றுப் புலவர்களாகிய காரிக்கிழாரும், குறுங்கோழியூர்க் கிழாரும் குறிப்பிடுகின்றனர். இக்கருத்தினையே,

“வடவேங்கடந் தென்குமரி
ஆயிழைத்
தமிழ்கூறும் நல்லுலகத்து”[44]

எனும் தொல்காப்பியச் சிறப்புப்பாயிரம் விளக்குகிறது. ஒவ்வொரு நாட்டிற்கும் எல்லையானது தேவைப்படுகிறது. இன்றும் இந்திய அரசாங்கம் தனது திட்டவரைவில் பெரும்பான்மையான நிதியினை எல்லைப் பாதுகாப்பிற்காகத் தான் செலவு செய்கிறது. உலக நாடுகள் தங்களுக்குள் எல்லைகளை நிர்ணயித்துக் கொள்வதிலும் பாதுகாத்துக் கொள்வதிலும் தான் பகைமை வளர்கிறது. அது நாடுகளுக்கு மட்டுமின்றி மனிதர்களுக்கும் இது பொருந்தும். ஆகவே மற்றவர்களிடம் இருந்து நம் எல்லையைப் பாதுகாக்க அரண் அமைக்கப்பட வேண்டும்.

3.4.3.1 அரண்

“அரண் என்னும் சொல் அருமை என்னும் தமிழ்ச் சொல்லிலிருந்து தோன்றிப் போரில் அருமைப்பாடு உடையது என்னும் கருத்தில் வழங்கப்படுகிறது.”[45] பழங்காலத்தில் மதில், கோட்டை, அகழி என்பவை அரண்களாக விளங்கியது. “திருக்குறளில் அரண் அதிகாரத்தில் கோட்டை, மதில், கோட்டம், அருப்பம், அகழி, புரி, புரிசை, கிடங்கு, மிளை, எயில், குறும்பு ஆகிய எந்தச் சொல்லும் இடம்பெறவில்லை. உரையாசிரியர்கள் கருத்துகளில் இப்பொருட்கள் காணப்படினும், அவர்களிடையேயும், ஒன்றுபட்ட நோக்கு இல்லை. எனவே, வள்ளுவர் இது பற்றிக் கருதியாகத் தெரியவில்லை.”[46] என்று தி. முருகரத்தினம் கூறுகிறார்.

3.4.3.2 அரணின் நோக்கம்

அரண் அமைக்கப்படுவதற்கான நோக்கம் தங்கள் நாட்டின் எல்லைகளை உறுதிப்படுத்துவதற்கும் அன்னியர்களிடமிருந்து பாதுகாத்துக்கொள்ளவும், பகைவரது படையெடுப்பால் நாட்டில் அழிவு ஏற்படாமல் புறத்தேயிருந்து காப்பதற்காக அரண் அமைக்கப்படுகிறது. இது போன்ற அரண் நாடுகளுக்கு மட்டுமின்றித் தனிமனிதனின் சொல், செயல், அனைத்தையும் கட்டுப்பாட்டுக்குள் அமைத்துக்கொள்ள வேண்டும். மேலும் அரணுடைய சிறப்புகளைப் பற்றி,

"வான வரம்பன் அடல்முனைக் கலங்கிய
உடைமதில் ஓரரண் போல
அஞ்சவரு நோயொரு தஞ்சா தேனே" [47]

என்று அகநானூற்று பாடல்வரிகள் விளக்குகிறது. பழங்காலத்தில் நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண் போன்ற நான்கு வகையான அரண்கள் அமைத்திருந்தன என்பதனை,

"மணீநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடைய தரண்"[48]

இக்குறள் மூலம் வள்ளுவர் தெளிவாக்குகிறார். அரணைப் பற்றிக் கூறும்போது "நடுவே தீயையும் சூழ்ந்திருக்கும் பள்ளங்களையும் கொண்ட நீரரணும், மலைக்கற்களையும், குகைகளையும் கொண்ட மலையரணும், புல்லும் நீருமற்ற களர் நிலமாகிய நிலவரணும், சேற்றுநீரைக் கொண்ட காடும், செடிகொடிகளும் கொண்ட காட்டரணும்"[49] எனக் கதிரேசன் செட்டியார் கூறுகிறார்.

3.4.3.3 அரணின் அமைப்பும் பயனும்

அரண் என்பது தான் சார்ந்த நாட்டை அரவணைத்து எச்சூழ்நிலையிலும் தன்னிலை மாறாமல் பகைவர்களிடமிருந்து மக்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், கலை நுட்பங்களைக் கொண்ட பல தந்திரங்களால் அந்நாட்டின் சிறப்புகளை வெளிக்கொணரும் வகையில் அமைந்திருக்கும். அதன் அமைப்பு மதிலைத் தாக்க வந்த பகைவர்களைக் கெடுத்தும், காக்க வேண்டியவர்களைக் காத்தும் மற்ற நாட்டைவிட சிறப்பு வாய்ந்ததாக அமைய வேண்டும் என்பதை,

"உயர்வகலந் திண்மை அருமையந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல்" [50]

என்று தம் குறளில் வள்ளுவர் சுட்டிக்காட்டுகிறார். எனவே உயர்வு, அகலம், திண்மை, அருமை இந்நான்கு உடையதாகவும் அரசு, அரசாங்கம், மன்னர், மக்கள் ஆகியோரின் வாழ்விற்கு அடிப்படையாக அமைகிறது. பல்வகையான அரண்கள் நகரைச் சூழ்ந்து காவலாக இருந்தன. காடுகளும், விண்ணுயரக் கோட்டைகளும், அவற்றைச் சுற்றி முதலைகள் நீந்திக் கொண்டிருந்த ஆழமான அகழிகளும், அயலார் அகழியைக் கடக்க முடியாத அளவு கோட்டைகளை மிகவும் வலிமையாகக் கட்டினார்கள் என்பதனை,

"கரா அம் கலித்த குண்டு கண் அகழி
இடம் கருங் குட்டத்து உடன் தொக்கு ஓடி
யாமம் கொள்பவர் சுழர் நிழல் கதூஉம்
கடு முரண் முதலைய நெடுநீர் இலஞ்சி" [51]

என்றப் புறநானூற்றுப்பாடல் வரிகள் காவல் உடைய அரணைப்பற்றிச் செப்பியுள்ளது.

3.5.0 அரசு

அரசு என்பது மனிதச் சமுதாயத்தின் வாழ்விற்கும், வசதிக்கும் ஏற்படுத்தப்பட்ட ஒரு இன்றியமையாத அமைப்பாகும். அவ்வரசு மக்களின் தேவைக்காகத் தோற்றுவிக்கப்பட்டது. "அரசு என்ற சொல்லுக்கு அரசியல், அரசன், நாடு, அரசமரம், திருநாவுக்கரசு நாயனார்"[52] என்று தமிழ் அகராதி குறிப்பிடுகிறது. அரசு எளியோரை வலியோரிடமிருந்து காப்பாற்றும் பொருட்டு, மனிதச் சமுதாயத்தின் ஆசாபாசங்களை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கடைபிடிக்கும் ஓர் அமைப்பு எனலாம். லாஸ்கி என்னும் அறிஞர், "அரசு என்பது சமூகம் என்ற தோரண வாயிலின் முக்கிய கல் எனக் குறிப்பிடுகிறார்."[53] எனவே அரசு என்பது இல்லையெனில் உலகில் சண்டைச்சச்சரவும், குழப்பங்களும் ஏற்பட்டு அமைதியற்றுக் காணப்படும். அரசு எனப்படுவது தலையெனக் கொண்டால் அதனுடைய மற்ற உறுப்புகளாக அரசாங்கத்தின் பல்துறைகளைக் குறிப்பிடலாம். "அரசு, அரசியல், அமைச்சு, நட்பு, பொருள், நாடு, மதில், படை, என்னும் ஏழு உறுப்புக்களையுடையது, அவற்றுள் அரசு என்பது தலையாய மதிக்கப்படுவதாகும்."[54] என சுக்கிர நீதி சுட்டுகிறது. "கூட்டு வாழ்க்கையில் பயன்படுத்துகின்ற அதிகாரத்தன்மை அதிகார அளவு

ஆகியவற்றைச் சீராக்கி ஒழுங்குபடுத்தும் அதிகாரத்தை, ஏதாவதொரு துறையிடத்தில் கொடுக்க வேண்டும். இத்துறையே அரசு எனப்படும்."[55] என்று தி.வெ.ரா கூறுகிறார். மக்களை ஒழுக்கத்துடன் இயங்கச் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு பொது நலஞ்சார்ந்த அமைப்பாக அரசு செயல்படுகிறது. "மனிதனுடைய சமூக இயல்பினாலும், பொதுச் செயலினால் வரும் நல்வாழ்க்கைக்கான நன்மைகளைக் கருதியும், ஒரு சிறந்த நிறுவனம் ஏற்படுத்த வேண்டும். சமூகத்திலிருந்து அரசு உருவாயிற்று"[56] என்று ஜெ. நாராயணன் குறிப்பிடுகிறார்.

அரசு என்பது சட்டத்திலும் அரசியலமைப்பிலும் பிறருடைய ஆதிக்கம் இல்லாமல், மக்கள் அமைதியாக அரசுக்குக் கீழ்ப்படிந்து அரசாங்கத்தோடு இணைந்து மகிழ்வோடு வாழ்வதைக் கூறலாம். இங்குத் தனிமனிதனின் உரிமைகள் மீறப்படும்போது பல்வேறு சிக்கல்கள் எழும். ஆகவே அவர்களின் உணர்வுகள் சிதையாவண்ணம் சுதந்திரமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்வதற்கு அரசு தேவைப்படுகிறது.

3.5.1 பொதுநலன் காக்கவே அரசு

ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழுகின்ற மக்களைக் கட்டுப்பாட்டுடனும், பகைவரிடமிருந்து பாதுகாக்கவும், பொருளாதாரம், நிர்வாகம் போன்றவற்றை எவ்விதப் பாகுபாடுமின்றி நிர்வகிக்கும் பொதுவான அமைப்பாக அரசு செயல்படுகிறது. இவற்றை முறையாகச் செயல்படுத்துபவர் அரசன் என்றும் அவர்களுக்கு வேண்டிய துணைகளாக,

"படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசரு ளேறு"[57]

என இக்குறளில் படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் போன்றவை ஒரு நாட்டை ஆள்பவர்க்கு வாய்க்கப்பெறவேண்டும் என்று எடுத்துரைக்கின்றார். "அரசு மக்களைப் பெருவாரியான அளவில் சமூக நலனைப் பற்றி உணர வைக்கும். ஒரே மாதிரியான நடப்பினைக் கொண்டு வருவதுடன் அதனுடைய வேலை முடிகிறது. அதைக் கட்டுப்படுத்த என்னும் பரப்பு அனுபவத்திற்குத் தகுந்தார்போல் குறைவாகவோ அதிகமாகவோ இருக்கும். அரசுக்குப் பணிகள் பல இருப்பதால் அதிகாரமுடையதாக இருக்கிறது"[58] என்கிறார் லாஸ்கி. ஒரு

மனிதன் இயல்பாகவே சுயநல உணர்வோடு பிறரது வளர்ச்சியைக் கண்டு பொறாமை கொள்பவனாக இருக்கிறான். ஆகவே அவன் அனைவருடன் இணைந்து வாழும் சூழ்நிலையினை அரசு உருவாக்கித்தர வேண்டும். இந்திய அரசும் தன் நாட்டு குடிமக்களின் பாதுகாப்பிற்கு சிறந்த பாதுகாப்பை உருவாக்கியுள்ளதை நம்மால் அறிய முடிகிறது.

3.5.2 மக்கள் நல அரசு

ஒரு நல்ல அரசானது நிலையானதாகவும் உறுதியாகச் செயல்படக் கூடியதோடு அந்நாட்டில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினையும், அடிப்படைத் தேவைகளையும் நிறைவேற்றித்தரும் வகையில் புதிய சட்டங்களை உருவாக்கி தரவேண்டும். "அதிகமான செல்வமோ, வறுமையோ தங்கள் ராஜ்யத்திற்குள் வரவொட்டாதபடி அரசர்கள் பாதுகாக்க வேண்டும். அதிகச் செல்வத்தினால் ஆடம்பரத் தன்மையும், சோம்பேறித்தனமும் உண்டாகும். அதிக வறுமையினால் புரட்சியும், இழிதகைமையும், துரோகமும் ஏற்படும்"[59] என்கிறார் சாக்ரடீஸ்.

ஹாப்மென் என்பவர், "மக்கள் நல அரசை, கம்யூனிசத்திற்கும், தனிமனிதத் தத்துவத்திற்கிடையே ஏற்படுத்தப்பட்ட மத்தியஸ்த அமைப்பாகக் கருதுகிறார். தனியார் துறைக்கு மானியம் வழங்கும் அதே சமயம் மனிதச் சமூகத்திற்குக் குறைந்த உதவிகளைச் செய்வது மக்கள் நல அரசு தருகின்ற உத்தரவாதம்"[60] எனக் குறிப்பிடுகிறார். இதனையே வள்ளுவரும்,

"குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு"[61]

எனும் குறளில் குடிமக்களின் அன்பைப் பெற்று ஆட்சி செய்யும் மன்னர்களை என்றும் மக்கள் பணிந்து வாழ்வார்கள் என்கிறார். அந்நாட்டின் குடிமக்களுக்குத் தேவையான அனைத்து வளங்கள் இருந்தும் நல்லாட்சி நடைபெறவில்லை எனில் அது பயனற்றது என்பதனை,

"ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு"[62]

இக்குறளின் மூலம் சாடுகிறார். ஆகவே அரசிற்கு அச்சாணி போன்று விளங்குபவர்கள் குடி மக்களே அவர்களின் தேவைகளை அரசு உருவாக்கிதர வேண்டும்.

3.5.3 குடிமக்களும் அவர்களுக்கு வேண்டிய தகுதிகளும்

ஓர் அரசு நிலைபெற்று வாழ அங்கு குடிமக்கள் வேண்டும் என்று வள்ளுவனார் இயம்பியுள்ளார். குடிமக்கள் இல்லாவிடில் அரசும் இல்லை, நாடும் இல்லை. ஆக அரசை இயக்கும் சக்தியானது மக்களிடம் தான் இருக்கிறது. "மக்கள் அரசாங்கங்களைச் சார்ந்தவர்கள் என்பதைக் காட்டிலும், அரசாங்கங்கள் மக்களைச் சார்ந்தவை என்பது பொருந்தும்"[63] என்று வில்லியம் பென் என்னும் அறிஞர் கூறியுள்ளார். நல்ல குடியில் பிறந்த ஒருவன்தான் நற்செயல்களில் ஈடுபடமுடியும் என்பதனை,

"குடிநன் குடையான் கூடுநர்ப் பிரியல
னெடுநா மொழியன் அன்பின் எனநீ" [64]

என்று அகநானூறு விளக்குகிறது. ஆனால் வள்ளுவரோ நற்குடிமகன் என்பவன் அவனின் செயல்களின் மூலம் வெளிப்படுகிறது என்கிறார். ஏனெனில், அரசரும், அமைச்சரும், படைவீரர்களும், குடிமக்களின் கூட்டத்திலிருந்து உருவாவதால் அவர்களிடம் இருக்கும் ஒழுக்கம் அல்லது ஒழுக்கமின்மை அரசியலைப் பெரிதும் பாதிக்கிறது. ஒரு நாட்டில் அறம் தழைப்பதற்கும், அறங்கெடுவதற்கும் அந்நாட்டில் வாழ்கின்ற மக்களே முதன்மையாவார்கள். ஒழுக்கம், பணிவு, இன்சொல், வாய்மை ஆகிய உயர் பண்புநலன்கள் குடிமக்களிடம் இருக்க வேண்டும் என்பதை, கீழ்வரும் குறளில்,

"நகையீகை இன்சொல் இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மை குடிக்கு"[65]

என்றுரைக்கிறார் வள்ளுவர். எனவே நல்லரசை ஆதரிக்கவும், தீயவற்றை இனங்கண்டு ஒதுக்குவதற்கும் துணிவுடைய குடிமக்களாக விளங்க வேண்டும் இல்லையேல் அரசு சிறப்புறாது.

3.5.4 நன் மக்களின் இயல்பும் நல்லறிவும்

குடிமக்களுக்கு இருக்க வேண்டிய இயல்பு பற்றி ஒழிப்பியலில் தெளிவாக விளக்கியுள்ளார். உயர்குடி மக்களென்பவர் பாரம்பரிய

அடிப்படையில் வருபவர்களல்லர், பண்பு நலன்களின் அடிப்படையில் திகழ்பவர்கள், தான்மட்டுமன்றி பிறரையும் நல்வழிபடுத்த அளவில்லா முயற்சியும், நிரம்பிய அறிவுமே தேவை. இவை இரண்டும் ஒருங்கிணைந்து செயல்படும் போதுதான் ஆக்கப் பணிகள் நிறைவுறுமென்பதனை,

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனவிரண்டின்
நீள்வினையான் நீளும் குடி"[66]

இக்குறளின் மூலம் வள்ளுவர் நல்ல செயலும் ஆழ்ந்த அறி வாழ்ந்தால் சிறப்பை ஏற்படுத்தும் என்றுரைக்கிறார்.

3.5.5 மக்களும் அரசும்

மக்களை முன்னேற்ற பல நலத்திட்டங்களை ஏற்படுத்தி நாட்டு மக்களை உழைக்கவும், உயர்த்துவதற்குமான வழிமுறைகளை உருவாக்கித் தரவேண்டும். அவற்றைவிடுத்து அவர்களுக்கு தேவையற்ற இலவசங்கள், பயனற்ற மானியங்கள் போன்றவற்றைத் தவிர்த்துக் கல்வி, சுகாதாரம், விவசாயம், வேலைவாய்ப்புகளை உருவாக்கி உழைக்கத்தூண்ட வேண்டும். 'மீன்களை இலவசமாகக் கொடுப்பதைக் காட்டிலும் மீன் பிடிக்கக் கற்றுக் கொடுப்பது சிறப்பாகும்'. எனவே மக்களிடம் முன்னேறும் எண்ணத்தை உருவாக்குவதே மக்கள் நல அரசின் கடமையாகும்.

"மக்கள் கூட்டமாக வாழவேண்டும் என்ற விருப்பமுள்ளவர்கள், முதலில் குடும்பத்தையும் பின்னர்ச் சமுதாயத்தையும் ஏற்படுத்திக் கொண்டனர். சட்டத்திற்குட்பட்டுக் கட்டுப்பாடான வாழ்க்கை வாழ விரும்பினர். இத்தகைய ஆவலே 'அரசு' உருவாகத் தூண்டுகோலாக அமைந்துள்ளது"[67] என்று இராசகோபால் கூறுகிறார். அரசானது குடிமக்களின் பொருள் தேவைகளை நிறைவேற்றுவதோடு அறம் சார்ந்த வாழ்வை உருவாக்குவதாக அமைய வேண்டும். இக்கருத்தினை,

"அறனழுக்கா நல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் முடைய தரசு" [68]

என்ற குறளில் எடுத்தாள்கிறார். இக்கால அரசுகள் மக்கள் நலனைவிடுத்து தங்களின் வருவாயைப் பெருக்குவதற்கும், தன்னை வளர்த்துக் கொல்லவும் அரசைப் பயன்படுத்துகின்றனர் என்பதை

நிகழ்கால அரசியல் செயல்கள் மெய்ப்பிக்கின்றன. இதுபோன்ற செயல்களால் மக்களுக்குத் தேவையான பல திட்டங்கள் கிடப்பில் போடப்படுகின்றது.

3.5.6 அரசு ஒரு இயல்பான நிறுவனம்

மக்களுக்குத் தேவையான துறைகளை நிர்வகிக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும். "அரசியல் எனும் சொல்லைச் சமுதாயச் சிக்கல்களைத் தீர்க்கவும் மேற்பார்வையிடவும் ஓர் ஆணைக்குழு என வழங்குகிறார்கள். இவ்வாணைக் குழுவினையே நாம் அரசு என அழைக்கிறோம்"[69] என டி. செல்லப்பா அவர்கள் மொழிந்துள்ளார். ஒரு நாட்டினை இழந்த மனிதன் அந்த நாட்டை மீண்டும் பெற வேண்டுமென்பதில் மிகுந்த மனவலிமையோடு போராடுகிறான். ஆகவே மனிதனின் மிகப்பெரிய தேவை அரசென்றால் மிகையாகாது. "அரசு சட்டங்களை இயற்றி, இயற்றியச்சட்டங்களால் மனிதர்களைப் பணியவைப்பதும், மக்களின் இயல்புக்கேற்ப ஒழுங்கையும், ஒழுக்கத்தையும் நிறுவியது. சட்டப்படியான மாறுதல்கள் மற்றும் புரட்சியின் மூலம் மிரட்டுதல் போன்றவற்றுக்கு அசைந்து கொடுப்பதும், அரசாங்கத்தை ஏற்படுத்துவதும், மாற்றியமைப்பதும் அரசே"[70] என்கிறார் இராசகோபால். ஆனால் இன்றைய ஆட்சியாளர்கள் அவற்றைச் சரிவர மேற்கொள்ளாமல் உலக வங்கியில் வாங்கிய கடனுக்கான வட்டியைக் கட்டுகிறார்களே ஒழிய அதனைத் செலுத்த எந்த வழிகளையும் மேற்கொள்ளவில்லை. ஆகவே இனிவரும் அரசுகளாலது தனது சரியான திட்டமிடலோடு எதிர்காலத்தை வழி நடத்தவேண்டும்.

3.5.7 அரசின் கருவி – அரசாங்கம்

அரசானது குடிமக்களின் நலன் கருதிப் பல திட்டங்களை உருவாக்கி செயல்படுத்த அரசுக்கு ஒரு கருவியாக அமைந்ததே அரசாங்கம். இவற்றைத் தவிர்த்து அரசானது செயல்பட முடியாது எனலாம். ஏனெனில், இவ்வரசின் அனைத்துச் செயல்களும் அரசாங்கத்தின் மூலமே மக்களைச் சென்றடைய அவற்றைச் சரிவரச் செயல்படுத்துவது அரசின் தேவையாகும். "மக்கள் ஒன்றாக வாழ்க்கை நடத்தும் சமுதாயத்தில் அவர்களது செயல்களைக் கட்டுப்படுத்தவும், ஒழுங்குபடுத்தவும், மக்களைச் சட்டதிட்டங்களின் கீழ்கொண்டு வரவும்

ஒரு செயற்கருவி தேவை. அக்கருவியே அரசாங்கம் எனலாம்."[71] அரசின் செயல்பாடுகள் அனைத்தையும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை வைத்தே அறிந்து கொள்ளலாம். மனிதனுக்குக் கண் எவ்வாறு முக்கியமோ அதைப் போன்று அரசாங்கமானது ஓர் அரசுக்கு இன்றியமையாது. மன்னர்களும், ஆட்சியாளர்களும் இவற்றில் பெரும் ஈடுபாட்டோடும் கவனத்தோடு செயல்பட்டு இங்குள்ள வளங்களைப் பெருக்கியும், பாதுகாத்தும் மக்களுக்குப் பகிர்ந்தளிக்க அரசாங்கம் ஒரு கருவியாகப் பயன்படுகிறது.

3.5.8 அரசு – அரசாங்கம் வேறுபாடு

அரசுக்கும், அரசாங்கத்திற்கும் இடையே சில வேறுபாடுகள் உண்டு. அரசென்பது தனிநபரால் செயல்படுவது, அரசின்கீழ் இயங்குவது அரசாங்கம். இவ்வரசாங்கம் அதிகாரிகள், பணியாளர்களின் மூலம் செயல்படுகிறது. ஆணைகளைப் பிறப்பிக்கவும், சட்டங்களை உருவாக்கவும் அதிகாரம் படைத்தது அரசு. மக்கள் தங்களின் தேவைகளுக்காக அரசாங்கத்தை நேரடியாக அணுகலாம். அரசு எவற்றையும் தன்னிச்சையாக முடிவு செய்ய இயலாது. அனைத்தையும் முறைப்படி அரசாங்கத்தின் உதவியுடன் தான் செய்யமுடியும். அரசாங்கமானது கீழ்நிலையிருந்து மேல்நிலை வரை பல்வேறு படிநிலைகளைக் கொண்டு அரசின் கட்டுப்பாட்டில் தான் இயங்குகிறது. இவற்றின் அனைத்து அதிகாரங்களையும் கொண்டவராக அக்காலத்தில் அரசனும் இக்காலத்தில் ஆட்சியாளர்களும் திகழ்கின்றனர். ஆட்சி மாறும் ஆனால் அரசாங்கம் தொடர்ந்து செயல்படக்கூடியது. ஆகவே இவையிரண்டும் இணைந்து செயல்பட்டால்தான் நாடு சிறப்படையும்.

3.5.9 அரசின் சிறப்பு

ஒரு நாட்டின் வளர்ச்சி அந்நாட்டின் ஆட்சித்திறனிலும், மக்களைக் காக்கும் முறை, ஆட்சி செய்யும் முறை போன்றவற்றை கையாள்வதில் அரசனின் பாங்கு வெளிப்படும். ஒரு நாட்டினுடைய ஆட்சியாளன் சிறந்தவனாக அமைந்தால் மட்டுமே அந்நாடு மேன்மையுரும். "அரசியலை எவரும் அசட்டை செய்துவிட முடியாது. அதை மறந்து விடவும் முடியாது. நாட்டின் உயிர் ஆட்சிதான். நாட்டுக்கு

நலம் புரியும் திறமுள்ள அரசியல் வேண்டும். ஒழுங்கான ஆட்சியுள்ள நாடு தான் உயர்ந்து நிற்கும். நல்ல ஆட்சியற்ற நாட்டிலே எந்த நன்மையும் நிலவாது"[72] என்று சாமி.சிதம்பரனார் கூறுகிறார். "பண்டைய தமிழகத்தை ஆண்ட 15 பாண்டிய மன்னர்களையும், 18 சோழ வேந்தர்களையும், 18 சேர அரசர்களையும் சிறப்பித்துப் புறநானூறு போற்றுகிறது. இமயவரம்பன், சேரன் செங்குட்டுவன், பாண்டியன் நெடுஞ்செழியன், சோழன் கரிகாலன் ஆகியோர் பண்டு வாழ்ந்த பெருமை மிக்க பேரரசர்களாவர். மேலும், பழனி மலையை ஆண்ட அதியமான், கொல்லி மலையை ஆண்ட குறுநில மன்னர்களின் வீரத்தையும், வெற்றிப் பெருமிதத்தையும் விளக்கிப் பேசுகிறது"[73] என்று அடைக்கலசாமி புறநானூற்றில் அரசனின் சிறப்பைக் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்து சங்கக் கால மன்னர்களின் அரசியல் திறத்தையும், ஆட்சி செலுத்திய முறைகளையும், வீரத்தையும், வரலாற்றையும், வீழ்ந்தவர்களின் மான உணர்வுகளையும் நமக்குணர்த்துகிறது.

3.6.0 அரசன் பெயர்க்காரணம்

வேந்தர், மன்னர், அரசன் என்பன ஒரு பொருள் தரும் சொற்களாக இன்று வழங்கப்படுகிறது. ஆனால் சங்க இலக்கியங்களை நுணுகி ஆராயும்போது இம்மூன்றுக்கும் இடையே வேறுபாடுகள் காணப்படுகிறது. பெருநில வேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்களை வேந்தர் என்றழைக்கும் வழக்கும், குறுநிலத்தையாண்ட வேந்தர்களை மன்னன் என்றும், அரசர் என்பது வேந்தர்கள், மன்னர்கள் ஆகிய இருவரையும் குறிக்கும் பொதுச்சொல்லாக சங்க காலத்திலிருந்து நிலவிவருகிறது. பெரும்பாலும் அவர்கள் எளியவர்க்கும், இரவலர்க்கும் இரங்கும் மனப்பான்மை உடையவர்களாக விளங்கினார்கள் என்பதனை,

"பொருநர்க்கு ஆயினும் புலவர்க்கு ஆயினும்
அருமறை நாவின் அந்தணர்க்கு ஆயினும்
கடவுள் மால்வரை கண் விடு த்தன்ன
அடையா வாயில் அவன்"[74]

எனும் சிறுபஞ்சமூலம் செய்யுளில் பொருநர், புலவர், அந்தணர், சான்றோர் போன்றவர்கள் வருவதற்காகவே நல்லியக்கோடனின்

அரண்மனை வாயில் திறக்கப்பட்டிருக்கும். ஆனால் பகைவர்கள் உள்ளே வர இயலாத வகையில் கடுமையான காவல் உடையதாக இருக்கும் எனக் கூறுகிறார். நல்ல அரசனானவன் தன்னுடைய இன்பத்தைப் பெரிதாக எண்ணாமல் தன்னைச் சார்ந்தவருக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்பதை,

"நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்"[75]

எனும் நெடுநல்வாடை பாடல் வரிகள், மக்களைக் காக்கும் பாண்டிய மன்னன் போர்க்களப் பாசறையில் இரவில் தூங்காமல் தம்முடைய வீரர்களுக்கு ஆறுதல் கூறவந்ததாகவும், மறுநாள் நடைபெறும் போருக்கானத் திட்டத்தை வகுப்பதாகவும் அவனது பண்பட்ட ஆளுமைத் தன்மையை வெளிக்காட்டுகிறது. ஆகவே அரசனானவன் சூரியனைப் போன்று விளங்குபவன் என்பதை,

"ஞாயிறு அன்ன அவன்வசை இல் சிறப்பு"[76]

எனும் மலைபடுகடாம் பாடல் வரியில் சூரியனைப் போன்று சிறப்பு வாய்ந்தவன் என்றுரைக்கிறது. மிகச் சிறந்த அரசனானவன் தனது நாட்டை முன்னேற்றுவதிலேயே முழுக்கவனத்தையும் செலுத்துவான். அம்முன்னேற்ற முயற்சிகள் குறுகிய வழிகளில் செல்லாது மக்களையும் சமூகத்தையும் உயர்த்தி அழைத்துச்செல்ல வேண்டுமென்பதை,

"காடு கொன்று நாடு ஆக்கி
குளம்தொட்டு வளம் பெருக்கி
பிறங்கு நிலை மாடத்து உறந்தை போக்கி
கோயிலொடு புழை அமைத்து
ஞாயில் தொறும் புதை நிறீஇ"[77]

என்ற பட்டினப்பாலை பாடல் வரிகள் மூலம் கரிகாலன் காடுகளை அழித்து நாடாக்கி, நிலத்தினைத் திருத்தி வளப்படுத்தி, குளங்களை வெட்டிப் பாசன வசதிகள் செய்து, கோவில்களைக்கட்டி மக்கள் நிறைந்த ஊர்களை உருவாக்கினான் என்று உருத்திரங்கண்ணனார் விவரிப்பதன் மூலம் அறியமுடிகிறது. அரசனின் ஆட்சி சிறப்பைப் பொறுத்தே அவனது புகழ் நிலைக்கும். அவன் செய்யும் அறங்களே அரசாட்சி சிறக்க வழிவகுக்கும். மேலும் அரசியலில் உள்ளவர்கள் தவறு செய்யக்கூடாது எனவும் அறநெறி தவறாமல் முன்னோர் வகுத்தப்பாதையிலிருந்து வழுவாமல் ஆட்சி செய்தால் பிறைநிலவு

போல வளம் பெருகும். இல்லையேல் தேய்பிறையாய்க் குலங்கெட்டு அழிய நேரிடும். இக்கருத்தை,

"அரசியல் பிழையாது அறநெறிகாட்டி
பெரியோர் சென்ற அறவழி பிழையாது
குடமுதல் தோன்றிய தொன்று தொழப் பிறையின்
வழிவழிச் சிறக்க நின்வலம் படுகொற்றம்"[78]

என்ற மதுரைக்காஞ்சி பாடல் வரிகள் மூலம் மாங்குடி மருதனார் போற்றிச் சிறப்பித்துக் கூறுகிறார். நாட்டு மக்களின் உயிரைக்காப்பது அந்நாட்டை ஆளும் மன்னன் தான். அவனே மக்களுக்கு அனைத்துமான இறைவன் போன்றவன் என்பதனை,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்"[79]

இக்குறளில் விளக்கியுள்ளார். ஆகவே குழந்தையின் பசியறிந்து பாலூட்டும் அன்னையைப் போல மக்களை முறையான தேவைகளை உணர்ந்து அவற்றைச் செய்து தரும் அரசனே மக்களுக்கு இறையெனக் கருதப்படுகிறான். மேலும் வேற்று நாட்டு பகைவர்களிடம் இருந்து மக்களைப் போற்றி காக்க வேண்டும் என்பதனை,

"சிறுசொல் சொல்லிச் சினங்கெழு வேந்துரை
அருஞ்சமஞ் சிதையாத் தாக்கி முரசமொடு
ஒருங்கு அகப் படேஎன் ஆயின் பொருந்திய
என் நிழல் வாழ்நர் சென்னிழல் காணாது
கொடியன்எம் இறைஎனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக"[80]

என்னும் இவ்வரிகள் தெளிவாக்குகிறது. நாடு சிறக்கவும் முறைப்படி அனைத்துச் செயல்கள் நடைபெற அரசன் மிகவும் தேவை, அதற்காக பல்வேறு சிறப்புகளைப் பெற்று திகழ வேண்டியது அவசியமாகிறது.

3.6.1 அரசனுக்குத் தேவை ஆன்ற அறிவு

குடிமக்களை ஆளுகின்ற மேலாண்மைத் தகுதியும், அஞ்சாத தன்மையும், பொருளியல் சிந்தனையும், நம்பிக்கைக்குரிய அமைச்சர்களையும், சிறந்த நண்பர்களையும், கொடைப்பண்புகளையும், உறுதிதளராமையும், அனைத்திற்கும் மேல் சாதுரியமாக அனைத்தையும் ஆராயும் திறன் பெற்ற அரசனை வள்ளுவர் காணவிரும்பினார். பழந்தமிழர்கள் சேர, சோழ, பாண்டியர்கள் சிறந்த ஆட்சி செய்தமையை

நம்மால் அறியமுடிகிறது. மேலும் சிறுவயதிலேயே தீர்ப்பு வழங்கிய கரிகால சோழனின் ஞானம் இன்றைய ஆட்சியாளர்களிடம் காணப்பட வேண்டும். இதனை,

"அறனிமுக்கா நல்லவை நீக்கி மறனிழுக்கா

மானம் முடைய தரசு"[81]

என்னும் குறளில் நல்லது, கெட்டது ஆராய்ந்து செயல்படும் திறன் பெற்றிருத்தல் சிறப்பு என்றுரைக்கிறார். ஆகவே ஒரு நாடு வாழ்வதும் தாழ்வதும் அந்நாட்டு அரசனின் செயல்பாட்டிலே நிகழ்கிறது. ஆகையால் அரசனானவன் ஆன்ற அறிவோடு விளங்க வேண்டும் என்றும் இன்றைய ஆட்சியாளர்கள் எதிர்காலத்தை எண்ணாது தம் அறியச் சுயலாபத்திற்காகப் பலதிட்டங்களை உருவாக்குவதினாலும் வளர்ச்சிக் காணமுடியவில்லை.

3.6.2 மன்னன் குடிமக்களைக் காத்தல்

தன்னைச் சார்ந்து வாழும் நாட்டு மக்களைக் காப்பது மன்னனின் தலையாய கடமையாகும். "நாடு எத்துணை வளங்கொழிப்பினும் மக்கள் எவ்வளவு பொருளீட்டினும் அரசன் பாதுகாப்பு இல்லாவிடின் அனைத்தும் கொள்ளையர்க்கும் பலியாகும். கணவன், மனைவி கூடி வாழ்தலும் இயலாது. அரசின் பாதுகாப்பு இருக்கும் வரை நல்லவராயிருப்போர், பாதுகாப்பு இல்லாவிடின் தீயவராவர். எனவே, அரசன் காவலன் என்றும் புரவலன் என்றும் அழைக்கப்பட்டான்"[82] என்று தேவநேயப்பாவணார் கூறுகிறார். நாட்டினில் நல்ல விளைவுகள் குடிமக்களைச் சென்று சேர்க்கின்றதா என்று ஆய்ந்தறிவதே மன்னனின் சிறந்த குடியோம்பல். இதனை,

"புலிபுறங் காக்கும் குருளை போல

மெலிவில் செங்கோல் நீபுறங் காப்ப"[83]

எனும் புறநானூற்று அடிகளில் புலி தனது குட்டிகளைக் காப்பது போன்று நீ நாட்டு மக்களைக் காத்து வருகிறாய் என்று கிள்ளிவளவனை இடைக்காடனார் பாராட்டுகின்றார். ஆகவே பகைவர்களாலோ, கொள்ளையர்களாலோ மக்கள் ஈட்டும் பணம் பறிபோய்விடாமல் இருக்கத் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசன் அவ்வப்போது கண்காணித்து வரவேண்டும். மன்னனின் இன்றியமையாக் கடமை மக்களுக்குப் பாதுகாப்பும், உரிய நீதியும்

கிடைக்கச் செய்வதே. ஆகவே அரசனானவன் குடிமக்களுக்கு உரிய வழிமுறைகளைச் செய்யாமல் போனால் நாட்டில் பல்வேறு தீயவிளைவுகள் தோன்றி நாடு சீரழியும் என்பதனை,

"நாடொறும் நாடி முறைசெய்ய மன்னவன்
நாடொறும் நாடு கெடும்"[84]

என்று வள்ளுவர் தம் குறள்வழி உரைக்கிறார். ஆக மன்னவன் குடிமக்களைக் காத்து மக்களுக்குத் தேவையானவற்றை செய்தால் நாட்டில் வளம் கொழிக்கும். இன்றைய ஆட்சியாளர்கள் மக்களை விடுத்துப் பெரும் முதலாளிகளுக்குத் துணைபோகும் சூழல் உள்ளது. அவற்றை தவிர்த்து மக்களை முறையாகக் காப்பது அரசனின் பணியென்பதனை உணரவேண்டும்.

3.6.3 அரசின் வினையும் பொருளும்

இவ்வுலகில் நிலைத்து வாழப் பொருள் இன்றியமையாதது என்பதை வள்ளுவர் தெளிவாகப் பல இடங்களில் உணர்த்துகிறார். ஒரு நாட்டினை ஆட்சி செய்யும் வேந்தனுக்குரிய அறிவுரையாக பொருட்கள் வரும் வழிகளைப் பெருக்குதல், கிடைத்த பொருட்களைச் சேமித்தல், சேமித்தவற்றை யாரும் களவாடாமல் பாதுகாத்தல், காத்தப்பொருளை நல்ல வழிகளில் செலவுசெய்தல் வேண்டும் என்பதை,

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"[85]

இக்குறளின் மூலம் தெளிவுபடுத்துகிறார். நாடு செழிப்பாக விளங்கவும், நீதிநிலை சீராகவிருக்க வேண்டும். குடிமக்களிடையே அன்பும் நற்பண்புகளும் தழைத்தோங்க 'அரசன் எவ்வழியோ மக்களும் அவ்வழி' என்ற முதுமொழியை உணரவேண்டும். சுக்கிர நீதி "அரசனது தொழில்களாக முறையே - தீயோரைத் தண்டித்தல், கொடை, குடிக்காத்தல், வேள்வி செய்தல், பகைவரை வெல்லுதல், நிலப்பகுதியை விரிவாக்குதல் என எண்வகை நிதிகளைக் கூறுகிறது."[86] எனவே ஆட்சியாளர்கள் சரியானக்காலத்தில் செய்ய வேண்டியவைகளைத் தவிர்ப்பதால் பெரும் தீங்கு நேரும் என்பதனை உணரவேண்டும். எனவே அறமற்ற செயல்களைச் செய்வதும், அதனால் கிடைத்த பொருட்களை அனுபவிப்பதும் குற்றமுடைய செயல் என்பதை,

“பொல்லாத சொல்லி மறைத்தொழுகும் போதைகள்
சொல்லாலே தன்னைத் துயர்படுக்கும் நல்லாய்
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணும் தன் வாயால் கெடும்”[87]

என்று பழமொழி உரைக்கிறது. ஆனால் இன்று பலவகைகளில் தீமைகள் எனத்தெரிந்தும் அதை மட்டுமே நம்பி ஆட்சிசெய்கின்றனர். சுற்றத்தார் மனம் வருந்துமாறும், பிறர் பழிக்காமல் வினை, காலம், இடம் அறிந்து ஓர் அரசன் எவ்வாறு செயல்பட வேண்டுமென்பதை,

“வினைவலியுந் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியுந் தூக்கிச் செயல்” [88]

என்றுரைக்கிறார். “அரசனானவன் அறிவும், ஆண்மையும், அஞ்சாமையும் கொண்டிருக்க வேண்டியது இன்றியமையாததாகிறது. அவனது செயல்களில் நேர்மையும், நற்சிந்தனையுமே அவனது வெற்றியைத் தேடித்தரும். உரியக் காலத்தையும், உரிய இடத்தையும், பகை வலியும், தன் வலியையும் ஆராய்ந்து, அதன்பின் சாமப் பேத முதலிய உபாயங்களையும், சந்தி விக்கிரக முதலிய அறுவகைக் குணங்களையும் சூழ்ச்சிகளையும் அறிந்து செயல்பட வேண்டும்.”[89] எனக் கதிரேச்செட்டியார் குறிப்பிடுகிறார். இன்றைய ஆட்சியாளர்கள் நல்வழிகளைப் பின்பற்றினால் ஆட்சி சிறப்படையும் என்றுரைக்கிறார்.

3.7.0 ஆட்சி முறை

மக்களின் தேவைகளை நிறைவு செய்வதிலும், அதன் மூலம் நாட்டை முன்னேற்றுவதிலும் தான் அந்நாட்டின் ஆட்சித்திறன் மிளிர்ந்தோங்குகிறது. “பெரும்பாலும் வரி பெறவும், அமைதி காக்கவுமே நாடு முழுமையும் தொடர்பு கொள்ள வேண்டியிருந்தது. மற்ற நேரங்களில் அந்தந்தப் பகுதி மக்கள் தம்மிடையேயிருந்த சான்றோர்களின் உதவியுடன் தமக்குரிய பணிகளைத் தாமே செய்து கொண்டு வாழ்ந்தனர். இந்த அமைப்புகளே பின்னாளில் சிறந்த ஊராட்சி மன்றங்கள் உருவாகக் காரணமாக இருந்தன”[90] என்கிறார் தட்சணாமூர்த்தி. ஆட்சி செய்வதற்கு ஏற்ற வகையில் பண்டைய காலம் முதல் இக்காலம் வரை பல்வேறு உட்பிரிவுகளையும், பிரதிநிதிகளையும் நியமிக்கப்பட்டனர். இன்றைய இந்திய நாடும் பல மாநிலங்களையும்

அதன் கடைக்கோடியில் சிறிய கிராமங்கள் உள்ளது. இவையனைத்தையும் ஒருங்கே ஆட்சி செய்வதே அதன் தலையாயப் பணியாகும். இந்தியாவின் முதுகெலும்பாகக் கிராமங்களே திகழ்கின்றது. சங்கக் கால மன்னர்களும் பல பிரிவுகள் இருந்தமையை இலக்கியங்கள் சான்றளிக்கின்றது. "நச்சினார்க்கினியர் சேர, சோழ, பாண்டியத் தொண்டை மண்டலங்களைப் பற்றிக் கூறுகிறார். மண்டலங்கட்கு அல்லது நாடு, கூற்றம் என்ற பிரிவுகளும் பெரிய நகரங்களில் கடைத்தெரு, அங்காடிகள், மாளிகைகள் காணப்பட்டன. பெரிய நகர்களில் வஞ்சி, மதுரை, புகார், கொற்கை அடங்கும். பெரிய நகரங்களை நெடுஞ்சாலைகள் இணைத்தன."[91] இவ்வாறு பலப்பிரிவுகள் மன்னரின் ஆட்சியின் கீழ் அமைந்திருந்தது. மேலும் எண்பேராயிரம், ஐம்பெருங் குழுக்களும் ஆன்றோர், சான்றோர், ஒற்றர், தூதுவர் என்ற அனைவரோடும் நட்பு பாராட்டிப் பகைவர்களை நெருப்பு போன்று வஞ்சித்தும் தம் குடிமக்களை மழை போன்று அன்பு பாராட்டியும் நல்லாட்சி செய்யும் அரசர்கள் நீண்ட காலம் வாழவேண்டுமென்பதை,

"அறநனி சிறக்க வல்லது கெடுக
அரசுமுறை செய்கக் களவில் லாகுக
நன்று பெரிது சிறக்கத் தீதில் லாகுக"[92]

எனும் ஐங்குறுநூறு பாடல் உணர்த்துகின்றது. அவ்வாறு ஆட்சி செய்ய மன்னர்கள் செங்கோன்மையும் வெண்கொற்றக் குடையும் கொண்டு ஆட்சி செய்தனர் என்பதனை இலக்கியங்கள் நமக்குப் பகர்கின்றன.

3.7.1 செங்கோன்மை

"செங்கோன்மையாவது, செம்மையான கோலின் தன்மை. அதாவது தீமைக்கு இடமில்லாமல் செவ்வியகோல் போல முறைசெய்து ஆளுகின்ற தன்மை. எக்காரணம் கொண்டும் தம் நெறியிலிருந்து வளைந்துவிடாமல் ஆட்சி செலுத்துகின்ற தன்மையினைச் செங்கோன்மை"[93] என்று பொற்கோ கூறுகிறார். ஒரு மன்னன் ஆட்சி செய்யும் திறத்தையும் முறையறிந்து நீதி வழங்குவதும், காலமறிந்து அறம் செய்தலும், நாட்டைக் காத்தலும், மக்களைப் பேணுவதற்கு அரசனிடம் நடுவுநிலை தவறாமல் இருக்க வேண்டும். அரசனின் செயலே நாட்டை நன்மையடையுவும், துன்பமடையவும் செய்யும்

என்பதனை இளங்கோவடிகள் பாண்டிய அரசனின் மூலம் ஆட்சியாளர்களுக்கு அறிவுறுத்துகிறார். இக்கருத்தினை,

"அறம் புரிந்தன்ன செங்கோல் நாட்டத்து

முறைவேண்டு பொழுதின் பதன் எளியோர்"[94]

என்னும் புறநானூற்று பாடல்வரிகளின் மூலம் அறியலாம். மன்னவன் எந்நிலையிலும் தான் கொண்ட கொள்கையில் உறுதியாக இருக்க வேண்டுமென்பதை,

"பொன்காண் கட்டளை"[95]

என்னும் பெரும்பாணாற்றுப்படை வரியின் மூலம் அறியலாம். நாட்டில் வேந்தர் நல்லோரை வாழ வைக்கவும் தீயோரை அழிக்கவும் செங்கோல் மூலம் சரிசெய்தல் வேண்டும். இதனை,

"அல்லது கடிந்து அறம்புரி செங்கோல்

பல் வேல் திரையன்"[96]

என்றுரைக்கிறார். நெறித்தவராமல் ஆட்சி செலுத்தும் மன்னவனை குடிமக்கள் கதியென்று வாழ்வார்கள். மேலும் தவறு செய்பவர்களைக் கண்டிக்க வேண்டுமெனவும், அவ்வாறு கொடியோரிடமிருந்து மக்களை காக்க முடியும். எந்த வன்மத்தினையும் செய்யத் துணிந்தவரை விடுத்தல் நாட்டில் அநீதி பெருகும் என்பதால் தகுந்த தண்டனை அவர்கள்ளுக்கு தரவேண்டும் என்பதை,

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்

களைகட் டதனொடு நேர்"[97]

இக்குறள் மூலம் எடுத்துரைக்கிறார். அரசன் தீயோரைத் தண்டிக்காமல் விட்டால் நல்லோர் துன்பமுற்று ஆட்சியானது கொடுங்கோலன் பின்னே கெட்டழியும். ஆகவே பொருள்தரும் வழிகளை பெருக்கினால் அதன்மூலம் குற்றங்கள் குறைந்து ஆட்சியானது சிறப்புறும்.

3.7.2 வேந்தனுக்குப் பொருள் வரும் வழிகள்

நாட்டைச் செம்மையாக வழிநடத்த செல்வம் தேவை. ஆகவே பொருள் வரும் வழிகளை பெருக்கினால்தான் அந்நாட்டினை வளமாக்க முடியும். அரசன் எவற்றைப் பொருளாகக் கொள்ள வேண்டுமெனில்,

"உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்

தெறுபொருளும் வேந்தன் பொருள்"[98]

எனும் குறளில், அரசுரிமையினால் அரண்மனையில் உள்ளச் செல்வமும், குடிமக்களிடம் வரி வசூலிப்பதன் மூலமும், குற்றம் செய்பவர்களிடம் தண்டம் பெறுதலும், அரசுக்குப் பொருள் வரும் வழிகளாகும். மேலும் பொருள் வரும் வழிகளைப் பெருக்கிக் கொண்டும் தேவையானவற்றிற்கு செலவு செய்தலும், மக்களுக்கு சரியான முறைகளில் பகிர்ந்தளிப்பதில் தான் அந்நாட்டின் வளர்ச்சி அடங்கியுள்ளது. அவ்வாறு ஆட்சி செய்யவில்லையெனில் மக்கள் செல்வமுடையவனாக இருப்பதைவிட ஏழையாக இருப்பதே சிறந்தது என்கிறார். இவ்வாறாக ஆட்சியாளர்களை எவ்வாறு தண்டிக்க வேண்டுமெனில்,

"முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்"[99]

இக்குறள் மூலம் தெளிவுபடுத்துகிறார் வள்ளுவர். பசியை விரட்ட உணவு உற்பத்தியும், பகைமையை அழிக்கப் பொருட்களைப் பெருக்க வேண்டுமெனவும் அவற்றையும் தகுந்த கட்டுப்பாட்டுடன் வழிநடத்த சான்றோர்களின் துணைதேவைபடும்.

3.7.3 சான்றோர் வளம்

சான்றோர் எனப்படுபவர் ஒப்புரவறிதல், பழியஞ்சல், சூழ்நிலைக்கேற்ப ஆராய்ந்து பேசவேண்டுமென்பதை,

"நயனும் நண்பும் நாணும் நன்கு உடைமையும்
பயனும் பண்பும் பாடு அறிந்து ஒழுகலும்"[100]

என்று நற்றிணைச் செய்யுளும், நன்மை செய்யும் செயல்களை மட்டுமே விரும்பி ஏற்பார்கள். என்பதனை,

"திறவோர் செய்வினை அறவ தாகுமே"[101]

எனும் குறுந்தொகை பாடல் வரியும் தெளிவுபடுத்துகிறது. சான்றோர்கள் பிறர்படும் துன்பத்தினைத் தான் படும் துன்பம் போன்று எண்ணுவார் இதனை,

"பிறர்நோயும் தம்நோயும் போல் போற்றி அறன் அறிதல்
சான்றவர்க்கு எல்லாம் கடன்"[102]

என்று கலித்தொகை மூலம் அறியமுடிகிறது. அவர்கள் நல்ல வழிகளில் பொருள் வருதலையே விரும்புவர், ஏனெனில் அதன் மூலம்தான்

இன்பம் வரும், பிற வழிகளில் துன்பத்தைத் தான் துணையாகக் கொள்ள முடியும். இதனை,

கழியாக் காதல ராயினுஞ் சான்றோர்
பழியோடு வருஉம் இன்பம் வெஃகர்"[103]

என்று அகநானூற்றுப்பாடல் சான்றளிக்கிறது. இத்தகைய சிறப்புகள் வாய்ந்த சான்றோர்களின் அறிவுரைகளைக் கேட்டு ஆட்சி செய்பவன் நாட்டினை வளப்படுத்துவான். அவ்வாறு சான்றோர் இல்லாத நாடு எப்படியிருக்கும் என்றால்,

"இடிப்பரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்"[104]

எனும் குறள் மூலம் வள்ளுவர் விளக்கியுரைத்துள்ளார். ஏனெனில் சான்றோர் கூறும் அறிவுரைகளை ஏற்காத மன்னவன் கெட்டழிவான் என்பதைத் துரியோதனன் மூலம் மகாபாரதமும், இராவணன் அழிந்ததைக் கம்பராமாயணமும் விளக்குகிறது. ஆகவே சான்றோர்களின் அறிவுரையைக் கேட்ட பாண்டவர்கள் மேன்மையுற்றதைப் போல ஆட்சியாளர்கள் சான்றோர்களின் துணையினைப் போற்றிப் பாதுகாத்தால் ஆட்சி சால்புரும். மேலும் தகுந்த அமைச்சர்களை நியமனம் செய்து தமக்கு துணையாக கொள்ளவேண்டும்.

3.7.4 அமைச்சரின் பணி

நாட்டையாளும் வேந்தன் மட்டும் நல்ல ஆளுமையோடு இருந்தால் போதாது. அவனின் ஆணையினை ஏற்றுச் செயல்படுத்தும் திறமை வாய்ந்த அமைச்சர்கள் இருந்தால்தான் தன்னுடைய திட்டங்கள் அனைத்தும் மக்களை விரைவாகச் சென்றடைய முடியும். ஒரு நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பும், எதிர்காலத்தில் நடைபெறப்போகும் செயல்களை முன்னே யூகித்து அதற்கேற்ப மன்னனை அறிவுறுத்துவதும் அவனின் தலையாயப் பணியென்பதை,

"நடுவிகந்து ஓர்இ நயன்இல்லான் வினைவாங்கச்
கொடிது ஓர்த்த மன்னவன் கோல்போல, ஞாயிறு
கடுகுபு கதிர் மூட்டிக்காய்சினம் தெறுதலின்"[105]

எனும் கலித்தொகை பாடல் செப்புகிறது. மன்னவனின் குறிப்பறிந்து செயல்படுபவனே சிறந்த அமைச்சன். இதனை,

“கருவியும் காலமும் செய்கையும் செய்யும்

அருவினையும் மாண்ட தமைச்சு”[106]

என்று வள்ளுவர் விளக்குகிறார். மேலும் அமைச்சரிடம் பிரித்தாளும் சூழ்ச்சியும், பகைவர்க்குத் துணையானவரை பிரித்தல், தமக்குரியோர்களைச் விலகாமல் சேர்த்துக் கொள்ளுதல் முன்பு பிரிந்தோரையும் காலநேரச் சூழ்நிலைக்குத் தக்கவாறு இணைத்துக் கொள்ளுதல் அமைச்சரின் தலையாய பண்புகளாகும். இதனை,

“பிரித்தாலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்

பொருத்தலும் வல்ல தமைச்சு”[107]

இக்குறளில் வள்ளுவர் எடுத்தியம்புகிறார். பிரித்தாளும் சூழ்ச்சி என்பது அரசியலில் மிகவும் முக்கியமானது. இதன் மூலம் தான் ஒரு அரசு வல்லரசாக வலம் வருவதோடு, தனக்கு ஏற்படும் துன்பத்தை மற்றவர்களின் துணையோடு எதிர்த்துத் தம் சக்தியைப் பெருக்கி பல நாடுகளையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்கின்றனர். இவற்றை ஆராய்ந்து பார்த்துச் செயல்படுத்துவது அமைச்சரின் கடமையாகும். இக்கருத்தினை,

“செயற்கை அறிந்த கடைத்து முலகத்து

தியற்கை அறிந்து செயல்”[108]

எனும் குறளில் அமைச்சரின் செயல்பாடுகள் உலக அரசியலோடு தொடர்பு கொள்ளவேண்டும். இவர்களைப் போன்று மன்னர்களுக்குத் துணையானவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் காவிதிமாக்கள் என்பதை,

“ஆவுதி மண்ணி அவர்துகில் முடித்து
மா விசும்பு வழங்கும் பெரியோர் போல
நன்றும் தீதும் கண்டு ஆயந்து அடக்கி
அன்பும் அறனும் ஒழியாது காத்து,
பழி ஒர்இ உயர்ந்த பாய்புகழ் நிறைந்த
செம்மை சான்ற காவிதி மாக்களும்”[109]

எனும் மதுரைக்காஞ்சி பாடலில் அரசர்களின் செயல்களை மனத்தால் உணர்ந்து நல்வழிப்படுத்தும் இயல்புடையவர்கள் இவர்கள் அமைச்சர் நிலையில் போற்றி பாதுகாத்தனர் என்பதனை இச்செய்யுளின் மூலம் அறிய முடிகிறது. இவர்களைப் போன்று பலரை அணுகி நட்பு கொண்டு துணையாக்கிக் கொள்ள வேண்டியது ஆட்சியாளர்களின் சிறந்த பண்புகளாகும்.

3.7.5.0 நட்பு

மனித வாழ்வில் என்றும் மாறாத குணம் கொண்டது நட்பு. இது அனைத்து உயிர்களிடமும் பல்கிப் பெருகியிருப்பதனை இன்றும் காணமுடிகிறது. "நட்பு என்ற சொல்லுக்கு அரசுறுப்பு என்றும் நண்பர் எனவும் பொருள் உண்டு. நட்பு என்ற சொல்லின் பொதுவான பொருள் உறவு. நன் எனும் வினைப்பகுதியிலிருந்து நட்பு என்னும் சொல் அமைந்தது. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி நள்ளுதல் எனும் வினைச்சொல்லில் இருந்து அமைந்தது தான் நட்டோர் என்னும் சொல் இதற்கு நண்பர் என்பது பொருள்."[110] என்பர் அறிஞர்.

3.7.5.1 உள்ளுணர்வு சார்ந்த நட்பு

வள்ளுவர் நட்பு பற்றிப் பதினேழு அதிகாரங்களில் எடுத்து ஆள்கிறார். மனித மனம் விரிவடையத் துணை நிற்க அன்று முதல் இன்று வரை உயிர்ப்புடன் விளங்குவது நட்பு. "உறவால் – பால் உணர்வால் தம்முள் தொடர்பற்ற, ஒத்த உணர்ச்சியுடைய உயர்ந்த உள்ளங்களை ஒருங்கிணைக்கும் நல் உறவு - நல்உரிமைப் பாலம் நட்பு"[111] என்று முனைவர். பா.ஆரோக்கியதாஸ் கூறுகிறார். ஒருவருக்கு அழிவு வந்தவுடன் வலியச் சென்று உதவுதல் சிறந்த நட்பாகும். பெயரளவில் நட்பு கொண்டிருப்பதைக் காட்டிலும் உள்ளுணர்வு சார்ந்த நட்பே நிலைக்கும். எத்தனை நாட்கள் பழகினோம் என்பதைக் காட்டிலும், அவர் எத்தகைய பண்பாளர் என்பதை அவரின் உள்ளம் வெளிப்படுத்தும் நட்பினை,

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"[112]

என்றுணர்த்துகிறார் வள்ளுவர். இன்று ஒருவரின் உணர்வைப் பார்ப்பதைவிட அவரிடம் உள்ள பொருள் சார்ந்த செல்வத்தினை எண்ணுபவர்கள் ஏராளம். அதனால் தான் வள்ளுவர் இத்தனை அதிகாரங்களில் அறிவுறுத்துகிறார். செய்தற்கரிய ஒன்று நட்பு அதைச் சரியான நபர்களைத் தெரிவு செய்வது இன்றியமையாதது. அவ்வாறான நட்பினை,

முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்"[113]

இச்செய்யுளில் நஞ்சைக் கொடுத்தாலும் உண்ணும் பண்பு முன்பு இருந்தமையை நற்றிணை குறிப்பிடுகிறது. அதே சமயம் நட்பென்பது கொடுத்துப் பெறும் வணிகமல்ல என்பதை,

"தசைபெரி துடையர் நல்கலு நல்குவர்"[114]

எனக் குறுந்தொகை உணர்த்துகிறது.

3.7.5.2 ஆராய்ந்தறியும் நட்பு

தனிமனிதனுக்கு மட்டுமின்றி மற்ற உயிர்களுடனும் நாடுகளுடனும் நட்பு கொள்வது இன்றியமையாதது. அவ்வாறு நட்பு கொள்வதற்குமுன் அவர்களின் இயல்புகளை நன்கு ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாவிடின் பெரும் துன்பத்தினைத் தரும். இதனை,

"நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு"[115]

என்ற குறளில் வள்ளுவர் விளம்புகிறார். இதனை,

"அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயங்இ கொள்பவரோடு ஒன்றாது காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி"[116]

எனும் புறநானூற்று பாடல்வரிகளில் நல்லவர்களோடு கொண்ட நட்பு நன்மையும், தீயவர்களோடு நட்புகொண்டால் துன்புறுவோம். ஆகவே நண்பர்களின் பண்புநலன்களை முன்னமே ஆராய வேண்டுமென்றும் நட்பு கொண்டபின் ஆராய்தல் அறமன்று என்பதனை,

"குற்றமும் ஏனை குணமும் ஒருவனை
நட்டபின் நாடித் திரிவேனேல்"[117]

என்று நாலடியாரும் வலியுறுத்துகிறது. நெடுஞ்செழியன் நட்பு கொண்டமையை,

"தொல்லணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவி னெடியோன் போல
வியப்புஞ் சால்புஞ் செம்மை சான்றோர்
பலர் வா புகரறு சிறப்பிற் றோன்றி"[118]

என மாங்குடி மருதனார் சுட்டுகிறார். நாம் செய்யும் செயல் நண்பர்களையும் அவர்களின் செயல் நம்மையும் ஒத்திருப்பதால்

மக்களானாலும், அரசனானாலும் ஆராய்ந்த பின் நட்பு கொண்டால் மேன்மேலும் வளர்ந்து கொண்டே செல்லும். அர்ச்சுனன் கிருஷ்ணரிடம் நட்பு கொண்டதால் சிறப்பும், கர்ணன் துரியோதணன் நட்பால் துன்பம் அடைந்ததையும் புராணங்களின் மூலம் நம்மால் அறிய முடிகிறது.

3.7.5.3 நட்பும் அரசும்

எண்ணமும், செயலும் ஒன்றுபட்டிருப்பது உயர்ந்த நட்புக்குச் சான்றாகும். அவ்வாறு ஒத்த நபர்களை கண்டறிந்து நட்பு பாராட்ட வேண்டும். நட்பின்மூலம் தன் பகைமையைத் தடுக்கவும், நாடுகளுக்கிடையே சகோதரத்துவத்தைப் பேணி பாதுகாக்க முடியும். நல்ல நட்பினைப் பகைவர்களும் போற்றுவார்கள் என்பதை,

"செறுநர் விழையாச் செறிந்தங் கேண்மை"[119]

என்றுரைக்கிறது பரிபாடல். நட்பின் மூலம் தான் தனது தேவையைப் பிறநாட்டுக்கும் மற்றவர்களின் உதவியினைத் தானும் பெற்றுத் தக்க சமயத்தில் உதவிட முடியும். இதனை,

"கூற்றம் வரினும் தொலையான் தன் நட்டார்க்குத்
தோற்றலை நாணா தோன்"[120]

என்று கலித்தொகை பாடல் பகர்கிறது. துன்பத்திற்கு மட்டுமின்றிப் போரிலே சிறந்த வீரனாக யாரும் நெருங்காதவனையும் நட்பானது இளகிய மனதினை வெளிப்படுத்துமென்று,

"உலந்துழி உலக்கும் நெஞ்சறி துணையே"[121]

எனும் புறநானூற்று வரி மெய்ப்பிக்கிறது. கர்ணன் தன் சகோதரர்கள் என்று அறிந்தும் தன் நண்பன் துரியோதனனுக்காக உயிரையே தியாகம் செய்ததைப் மகாபாரதம் உணர்த்துகிறது. இன்று உலகின் பல்வேறு நாடுகளுக்குள் ஒன்றுபட்ட பல கூட்டமைப்புகளை உருவாக்கிக் கொண்டு இருப்பதை அறிய முடிகிறது. அரசன் நட்பு பாராட்ட வேண்டியது மிகவும் அவசியம், இல்லையே உலக நாடுகளை விட்டுத் தனித்துத் தனது சாம்ராஜ்யத்தை இழக்க நேரிடும். ஆதலால் நட்பென்பது எல்லோருக்கும் இன்றியமையாததும், தேவையானதும், இவற்றின் மூலம் அன்பும், அருளும், பொருளும், இன்பம் அனைத்தும் கிடைக்கும் கொடையே நட்பு எனலாம்.

3.7.6.0 கொடைத்திறம்

தன்னை நாடி வந்தவர்களையும், புலவர்களையும் நல்ல மனதோடு பொருட்களைக் கொடுத்து வறுமையை நீக்கும் உயர்ந்த மனம் படைத்த அரசர்கள் பழங்காலத்தில் வாழ்ந்தனர். பொருட்கள் மட்டுமின்றி உடல் உறுப்புகளையும் கொடுத்துதவினர் என்பதனைச் சங்கப் பாடல்களின் மூலம் அறியலாம். மன்னர்கள் தனக்கென வாழாமல் பிறருக்கென வாழும் தகைமைசாலர்கள் என்பதை,

"இனியவை பெறினே தனிதனி நுகர்கேம்
தருகென விழையாத் தாவி னெஞ்சத்துப்
பகுத்தூண் டொகுத்த வாண்மைப்
பிறர்க்கென வாழ்த்தி நீ யாகன் மாறே"[122]

என்று பதிற்றுப்பத்து பாடல்வரிகள் உணர்த்துகிறது. தம்மிடம் இருக்கின்ற செல்வத்தினையும் கொடுப்பதற்கென மனம் இருந்தால் மட்டுமே கொடுக்க முடியும். இதனை,

"நிரப்பாது கொடுக்கும் செல்வம் இலனே
இல்லென மறுக்கும் சிறுமையும் இலனே"[123]

என்றும் இப்புறநானூற்றுப் பாடல் மூலம் மதுரைக்குமரனார் விளக்குகிறார். நாடி வந்தவர்களுக்கு முகக்குறிப்பை அறிந்தே வாரி வழங்கும் வள்ளல் குணம் பெற்றவர்கள் என்பதை,

"இல்லது நோக்கு இளிவரவு கூறாமுன்
நல்லது வெஃகி வினை செய்வர்"[124]

என்ற பரிபாடல் நமக்கு எடுத்துரைக்கிறது. இதே கருத்தினை அகநானூறு,

"இரப்போர் ஏந்துகை நிறையப் புரப்போர்
புலம்பில் உள்ளமொடு புதுவதந் துவக்கும்
பெரும் பொருள்"[125]

என எடுத்து இயம்புகிறது. வேந்தர்கள் தன்னை நாடி வந்தவர்களுக்கு எல்லாப் பொருட்களையும் கொடுக்கும் பண்புடையவர்கள். உலகமே வறுமையில் உழன்றாலும், நாடே வரண்டு போனாலும் தன்னை நாடி வந்தவர் மனம் கலங்காது வழியனுப்பும் வள்ளல் குணம் கொண்ட மன்னர்கள் வாழ்ந்ததைப் புறநானூறு எடுத்தியம்புகிறது. தன்னைத்

தேடி வந்தவர்களை அலைக்கழிப்பதும், அவர்களின் மனம் வருந்துமாறு செய்வதும் பாவம் என எண்ணினார். இதனை,

"நல்லவை தீயவும் அல்ல குவி இணர்ப்
புல்லிகை எருக்கம் ஆயினும் உடையவை
கடவுள் பேணேம் என்னா ஆங்கு
மடவர் மெல்லியர் சொல்லினும்
கடவன் பாரி கைவள் மையே"[126]

இப்பாடலில் மழைக்கு நிகரானவன் பாரி எனவும் மனிதர்களுக்கு மட்டுமல்லாது பறவைகளுக்கும், தாவரங்களுக்கும் கூடப் பாரியின் கொடைக்கரங்கள் நீண்டுள்ளதைச் சிறுபாணாற்றுப்படை செய்யுள் மூலம் அறிய முடிகிறது. கொடையின் சிறப்பே நாட்டை வறுமையில் இருந்து போக்குவதற்காக அளிக்கப்படுவது. இன்றும் இலவசங்கள், மானியங்கள், முதலீடுகள் போன்றவை அரசுகளால் ஏற்படுத்தப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றது. ஆனால் அவையனைத்தும் சரியான வழிகளில் சென்றடைகின்றதா, தகுந்த நபர்கள் அதனால் பயனடைகின்றனரா? என்பதே பெரும் ஐயமாக இருக்கிறது. ஆக கொடையும் ஒரு வரன்முறையில் இருக்க வேண்டும். இல்லாமையை அகற்றப் பயன்படும் கொடையானது இன்று இருப்பவர்கள் மேன்மேலும் உயர்வதற்குப் பயன்படுகிறது. பல கோடிகளைப் பெற்ற முதலாளிகள் சலுகைப்பெறுவதும், சில ஆயிரங்கள் பெற்றவர்கள் திருப்பி செலுத்த முடியாமல் மரணமடைவதும் நிகழ்ந்து கொண்டே தான் இருக்கிறது. இதற்கு அரசின் அலட்சியப்போக்கும், அதிகார வர்க்கத்தின் ஆணவப்போக்கும் வளர்ந்து கொண்டே செல்கிறது. ஒரு நல்லரசானது அனைவரின் தேவையறிந்து கொடுத்தால் மிகச் சிறந்த வளர்ச்சி அடையாளம் என்பதனைக் கியுபா, சிங்கப்பூர், ஜப்பான் போன்ற நாடுகளின் வளர்ச்சியின் மூலம் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு கொடுக்கும் மனம் இல்லையேல்,

"கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉ மின்றி கெடும்"[127]

என்ற குறளில் கொடுப்பதைத் தடுக்கும் மனம் உடையவர்கள் அழிவார்கள் என்பதை உணர்த்துகிறார். கொடையின் மூலமே நாட்டில்

உள்ள பிணிகளை அகற்ற முடியும். மன்னன் மக்களை மரத்தின் நிழல் போலக் காப்பவன் என்பதை,

"கடனறி மன்னர் குடைநிழல் போல"[128]

என்று நற்றிணைப்பாடல் விளக்குகிறது. மக்கள் கடன் பெற்றால் நாட்டில் பல்வேறு சிக்கல்களுக்கு ஆளாவார்கள். ஆகவே மக்கள் மேன்புறவும் நாட்டை வளப்படுத்தவும் குற்றங்கள் குறையவும் கொடைப் பண்பைப் பெருக்கவும் மன்னன் தனது வீரத்தின் மூலமும், படைவீரர்களின் உதவியுடன் நாட்டைக் கட்டுக்கோப்போடு வளமாக்க வேண்டியது அவசியமாகிறது.

3.8.0 வீரம்

பழங்கால மக்கள் தம் வீர உணர்வை வாழ்வோடும் வாழ்வியலோடும் ஒன்றாகக் கருதினர் என்பதைச் சங்கப்பாடல்கள் மூலம் அறியமுடிகிறது. ஒவ்வொருவரும் தமது வீர உணர்வினை அருஞ்செல்வமாகப் போற்றினர். பச்சிளங்குழந்தைகளையும் வீரப்புண்படுத்தியே புதைக்கும் வழக்கம் பழங்காலங்களில் இருந்தது. தங்களுக்குள் சண்டையிடுவதையும் வரைமுறை செய்து கொண்டனர். "அக்காலப் போர்க்களங்கள், வீரர்கள் ஒழுங்கின்றி எதிர்த்துப்போரிடும் களங்களாக இருக்கவில்லை. போரினை நடத்துவதில் ஒரு நெறிமுறை இருந்தது. பசுக்கள், மகளிர், குழந்தைகள் ஆகியோர் முற்றுகையின் போதும், போரிடும் போதும் புண்படாமல் பாதுகாக்கப்பட்டனர்."[129] என்று தட்சணாமூர்த்தி போர்முறைகளைப் பற்றிக் கூறியுள்ளார்.

"சங்கக் காலத்தில் வீரம் முதன்மையாகப் போற்றப்பட்டது, வீரம் மிக்கவர்களே சிறப்புக்குரியவர்களாகக் கருதப்பட்டனர். தம் தொழில் முயற்சியிலும், விளையாட்டிலும், பழக்க வழக்கங்களிலும், இயற்கைப் பண்பிலும் தமிழர் போர்க்குணம் படைத்தவர்களாக விளங்கினர். இரவு பகல் என்று வரையறையில்லாமல், கடல் நடுவில் சென்று மீன் வேட்டையாடுதலும், காடுகளிலும் மலையுச்சியிலும் கொடிய வழிகளில் சென்று விலங்குகளை வேட்டையாடுதலும், அவருடைய பழமையான தொழில்கள். காட்டு நிலத்தில் வாழ்ந்த தமிழர், சீறித்துள்ளிக் கொம்புகளாற் குத்திக் கொள்ளுகின்ற போர்க்காலங்களைத் தழுவிப் பிடித்து எவனொருவன் அடக்குகிறானோ, அவனையே, மணமகனாகத்

தேர்ந்து தம் மகளிரை மணஞ்செய்து கொடுப்பர்."[130] இவ்வாறு இளமையில் இருந்தே இளைஞர்களுக்கு வீரத்தினை வளர்த்து வந்தனர்.

3.8.1 போர் அறம்

பழங்காலங்களில் மன்னர்களால் நல்வாழ்வு அமைந்த போதிலும் பொன், பொருள், நிலம், புகழ் போன்றவற்றிற்காகப் போர்கள் நடைபெற்றுக் கொண்டே இருந்தது. கொடை வழங்குதல், மக்களைக் காத்தல், போரிடுதல் போன்றவற்றை மன்னர்கள் பெருமையாகக் கருதினர். இதனையே,

"அரசவை பணிய வறம்புரிந்து வயங்கிய
மறம்புரி கொள்கை"[131]

பதிற்றுப்பத்து பாடல் உரைக்கிறது. போரின் மூலம் வீரத்தினை மெய்ப்பிக்கவும், போரில் இறந்தால் சொர்க்கம் செல்வார்கள் என்ற நம்பிக்கையும் இருந்தமையை,

"முன்சமத் தெழுதரும் வன்க ணாடவர்
தொலையாத் தும்பை தெவ்வழி விளங்க
உயர்நிலை யுலக மெய்தினர் பலர்பட
நல்லமர்க் கடந்தநின் செல்லுறம் தடக்கை"[132]

என்ற பாடல் பகர்கிறது. "அரசன் தொழிலாவது நாடு, காவல், போர் வினையும் நாடு காவலுக்கு உட்பட்டதே. அதனால் அக்காலத்து அரசர் பெரும்பாலும் தன் வினைகளிலெல்லாம் அறத்தைக் கடைபிடித்தனர்"[133] என்கிறார் அறிஞர். அக்காலங்களில் தன்னையொத்தவனோடு, கருவிகள் உடையவனோடும் போரிடுவதையே அறமாகவும் வீரமாகவும் கருதினர். இதனை,

"வண்பரிப் புரவி பண்புபா ராட்டி
எல்லிடைப் படர்தந் தோனே கல்லென
வேந்தூர் யானைக்கு அல்லது
ஏந்துவன் போலன்தன் இலங்கிலை வேலே"[134]

இப்பாடலில் ஆவூர் மூலங்கிழார் என் அரசன் சமமானஆற்றல் அற்றவரோடு போர்புரிய மாட்டார் என்றுரைக்கிறார். அதுமட்டுமன்று பழந்தமிழர் தம் பழக்க வழக்கங்கள், தொழில்கள், விளையாட்டுகள் போன்றவற்றிலும் பண்பாட்டு கூறுகளிலும் அறத்தைப் பின்பற்றினர்.

போரில் விழுப்புண் படாத நாட்களைத் தம் வாழ்வில் வீணாக்கிவிட்டதாக கருதினர் என்பதை,

"விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்

வைக்குந்தன் நாளை எடுத்து"[135]

என்று வள்ளுவர் சிறப்பினைக் குறிப்பிடுகின்றார்.

3.8.2 போருக்கான காரணங்கள்

ஆநிரைகளைக் கவர்தல் முற்காலத்தில் போருக்கான முதன்மைக் காரணமாக இருந்தாலும், இந்நிலை மாறி நில எல்லைக்காகவும், ஆட்சித் தலைமைக்காகவும், மன உணர்வுக்காகவும், பெண்ணுக்காகவும், தாம் கொண்ட கொள்கைக்காகவும், இனமானங் கருதியும் இன்னும் பலத்தேவைகளுக்காக தொடர்கிறது. மண்ணாசை கொண்ட துரியோதனனைப் பற்றி மகாபாரதமும், பெண்ணாசையோடு இராவணன் அழிந்தமையை இராமாயணமும், பேராசை கொண்ட அசுரனை வதம் செய்தமையைக் கந்தபுராணமும் விளக்குகின்றது. ஆகவே போர் என்பது தவிர்க்க முடியாததாகிறது. தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவும் தன் புகழை நிலைநாட்டவும் தொடர்ந்து கொண்டே வருகிறது. சிக்மண்ட் பிராய்டு (Sigmund freud) போன்ற உளவியலாளர் "தன்னைத்தானே காத்துக் கொள்ள வேண்டும் என்ற மன இயல்பே போருக்குக் காரணம்"[136] எனக் கூறுவர். போரானது பெரும் ஆபத்தை விளைவிக்கக் கூடியது. அதனால் பெரும் இழப்பு ஏற்படுத்துவதால் போரினைப் பல்வேறு புலவர்கள் தவிர்த்தமையை இலக்கியங்களின் மூலம் அறிகிறோம். போருக்கான காரணம் ஆசை மட்டுமே, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இருக்குமேயானால் இவற்றைத் தவிர்க்கலாம்.

3.8.3 போர் செய்வதற்கான காலமும் இடமும்

எந்தவொரு செயலைச் செய்வதாயினும் அதற்கு முன்பு நன்கு ஆராய்ந்தபின் தான் அவற்றைச் செய்ய வேண்டுமென்பதை அறிந்தனர். போர் செய்வதர்க்கு முன்பு விரிச்சிக் கேட்கும் மரபு இருந்தமையே,

"நென்னீ ரெறிந்தத விரிச்சி யோர்க்கும்

செம்முது பெண்டின் சொல்"[137]

என்ற புறப்பாடல் சுட்டுகிறது. இதைப்போன்று நிமித்தங்கள் பார்க்கும் வழக்கமும் இருந்தது. உன்ன மரம் போர் வீரர்கள் வெற்றி கிட்டுமாயின் தழைத்தும், தோல்வியெய்துவதாயின் கரிந்தும் காணப்படும். எனவே போருக்கான காலம், இடம், சூழ்நிலைகளை நன்கு தெளிந்த பின் தான் போரினை மேற்கொள்ள வேண்டுமென்பதனை,

"பகல்வெல்லுங் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது"[138]

என்ற குறளில் வள்ளுவர் பகைவரின் வலிமையினை நன்கு அறிந்து தக்க சமயத்தில் போர் செய்தல் வெற்றியடையலாம் என்கிறார்.

3.8.4 படைப்பிரிவுகள்

நாட்டைப் பாதுகாக்கவும் போர் செய்வதற்கும், படைப்பிரிவுகள் மிகவும் வேந்தனுக்குத் தேவைப்பட்டது. அவனுக்கு இருக்கக்கூடிய அனைத்துச் செல்வங்களிலும் சிறந்தது படைப்பிரிவு என்பதை,

"உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை"[139]

இக்குறளில் வள்ளுவர் எவ்வித அச்சமின்றி போரிடும் படைவீரர்களைப் பெற்றிருக்க வேண்டும் என்கிறார். படைப்பிரிவுகளைப் பொருத்தே அந்நாட்டின் வலிமை வெளிக்கொணரப்படுகிறது. தமிழ் அரசர்களும் தங்களுக்கெனப் பல்வேறு படைப்பிரிவுகளை வைத்திருந்தனர். "மூலப்படை, வேளக்காரப்படை, கூலிப்படை, துணைப்படை, சமயப்படை, வன்படை, பயிற்சிப்படை, பயிற்சியில் படை, குழுப்படை, தனிப்படை, கருவிபெறுபடை, தற்கருவிப்படை, ஊர்திப்படை, தன் ஊர்திப்படை, காணப்படை, பகைவிடுபடை"[140] எனப் பதினாறு வகைப் படைகளைக் கொண்டிருந்ததாகத் தமிழ்ப்பேழை குறிப்பிடுகிறது. காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை என்ற நான்கு வகைகளை வேந்தர்கள் பயன்படுத்தினர். இன்றைய படைப்பிரிவுகளில் தரைப்படை, கடற்படை, வான்படை என்ற மூன்று வகைகள் அமைந்துள்ளன. மேலும் இன்று நவீனப்போர் பயிற்சிகளும், இராணுவத் தளவாடங்களுடன் ஏவுகணைகள், இரசாயனக் குண்டுகள், அணுகுண்டுகள் என உலகையே அழிக்கும் பேராபத்து கருவிகளை ஒவ்வொரு நாடும் தங்கள் பாதுகாப்பிற்காக வைத்துள்ளனர். "பழந்தமிழ்

வேந்தரிடம் நிலப்படை, கடற்படை ஆகிய இருவகைப் படைகள் இருந்தன. தமிழர் வானகப் போரையும் நடத்தியிருக்கலாம்”[141] என்று கா. அப்பாதுரை கூறுகிறார். கௌடிலீயம் “மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, துணைப்படை, பகைப்படை, காட்டுப்படை என்று ஆறுவகைப் படைகளைக் கூறுகிறது. அந்தணர்படை, அரசர்படை, வணிகர்படை, சூத்திரப்படை”[142] போன்றவை இருந்தமையைக் கூறுகிறது. இதுபோன்ற படைப் பிரிவுகளே போரின் வெற்றித் தோல்வியினைத் தீர்மானிக்கிறது.

3.8.5 போரும் அதன் சிறப்புகளும்

“உலகச் சமுதாயங்கள் அனைத்திலும் போரே தலைமையும் முதன்மையும் எய்தி இருந்தது. தொல்காப்பியர் காலச் சமுதாயம் அதற்கு விலக்கன்று. போர்வயிற் பிரிவும், மறக்காதலனைத் தடுப்பது போல, இலக்கியச் சான்றோர் இலக்கணக்குறிப்போ ஒன்றுகூட இல்லாமை உன்னத் தக்கது. தொல்காப்பியப் புறத்திணை, அகத்திணையிலும் தலைமை உடையது. அகமா புறமா எனில் புறமே முதல் என்பது அற்றைநாட் கருத்து”[143] என்று க.ப. அறவாணன் உரைக்கிறார். போரின் மூலம் தன்நாட்டை விரிவுப்படுத்தவும் மற்ற நாடுகளுடன் தொடர்பை ஏற்படுத்தி அதன் மூலம் பாதுகாப்பைப் பெருக்கவும் முடிகிறது. எந்த அரசர் வெற்றிபெற்றார் என்பதைவிட, போரினால் நாடுகள் அழிந்ததையும், மக்கள்பட்ட துன்பங்களையும் அவ்வப்போது புலவர்கள் எடுத்துரைக்கின்றனர். எவ்வாறு இருப்பினும் ஒரு சில நேரங்களில் போரானது தவிர்க்க முடியாமல் போகிறது. இந்திய அரசும் 1999 ம் ஆண்டு கார்கில் போரில் பாகிஸ்தானைத் துரத்தியது. ஆகத் தன் மண்ணைக் காக்க கட்டாயம் தேவைப்படுகிறது. அப்போரில் பல வீரர்கள் தம் இன்னுயிரை ஈந்து வெற்றிபெற்றுத் தந்தனர். இதனை,

“புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காட
டிரந்துகோட் டக்க துடைத்து”[144]

என்ற குறளில் மூலம் வீரனின் இறப்பைச் சிறப்பிக்கிறார். எத்துணைச் சிறப்பைப் போர் கொடுத்தாலும் பல ஆண்டுகள் நடைபெற்ற தேவர் அசுரர்களுக்கிடையேயான போராக இருந்தாலும், மகாபாரதப் போரானாலும், இராமாயணப் போரானாலும் கார்கில் போரானாலும்

இழப்பு என்பது இருபக்கமும் தான் அதில் ஆக்கத்தைவிட அழிவே அதிகம் என்பதை உணர்த்துகிறது. இருப்பினும் உண்மை வெற்றிபெற ஒருசில நேரங்களில் போரானது தேவைப்படுகிறது.

3.8.6 போரும் அழிவும்

நாட்டில் போர் ஏற்படுகிறது என்றால் மக்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகள் போதுமானளவு கையிருப்பை வைத்துக் கொண்டு தான் மன்னர்கள் போரிட்டனர். போரில் வெற்றி பெற்றவர்களை விடத் தோற்றவர்கள் நிலை மிகவும் வேதனையாக இருந்தது. மன்னர்களும், படைவீரர்களும், பெண்களும் இழிவாக நடத்தப்பட்டனர். பாண்டவர்கள் தோல்வியுற்றதற்குச் சபைதனில் பாஞ்சாலியை அவமானப்படுத்தியதை மகாபாரதத்தின் மூலம் அறிய முடிகிறது. எனவே போரில் தோற்று உயிர் வாழ்வதைவிட இறப்பதே சிறந்தது என்று எண்ணினர். தமிழக வேந்தர்களிடையே நடைபெற்ற போர்களில் தலையாலங்கானம், வெண்ணிறப்பந்தலை, தகடூர், கழுமலம், திருப்போர்ப்புறம் ஆகிய இடங்களில் நடந்த போர்கள் குறிப்பிடத்தக்கன. மேலும் கலிங்கப்போரின் போர்க்களச் செய்திகளைச் செயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணி பாடல் மூலம் அறிய முடிகிறது. போரில் தோற்ற பகை வேந்தர்களின் நாடுகள் எரியூட்டப்பட்டமையை,

"கடுங்கா லொற்றலிற் சுடர்சிறந் துருத்துப்"[145]

பதிற்றுப்பத்திலும்,

"கைலென்ன கடிதுராஅய்
நாடுகெட வெரிபரப்பி
யாலங்கானத் தஞ்சுவரவிறுத்
தரசுபட வமருழக்கி"[146]

என மதுரைக்காஞ்சியில் நெடுஞ்செழியனைப் பகைத்தவர் நாடுகள் பாழாகும் நிலையினை மதுரைக்காஞ்சி எடுத்துரைக்கிறது. போரில் தோற்ற பகைவரின் அரண்களைப் பாழாக்குதல், அவர்களின் வாழுமிடங்களில் கழுதை கொண்டு உழுது எள்ளையும், வரகையும் விதைக்கும் மரபிருந்தமையை,

"வெள்வாய்க் கழுதை புல்லினம் பூட்டி
வெள்ளை வரகுங் கொள்ளும் வித்தும்"[147]

என ஔவையார் கூறுகிறார். அந்நாட்டின் செல்வங்களைக் கொள்ளையடிப்பதும், விளைநிலங்களையும், நீர்நிலைகளையும், வளமற்றதாகச் செய்யும் இழிநிலை காணப்பட்டது. அதுமட்டுமின்றிப் பிற்காலத்தில் ஆட்சி செய்த ஹிட்லர், முசோலினி போன்ற பாசி கொள்கை வெறியாளர்களால் உலகமே சிதறுண்டு போயின. இரண்டாம் உலகப்போரில் சப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி என்ற இரண்டு இடங்களில் அமெரிக்க இராணுவம் அணுகுண்டு போட்டதன் விளைவாக இன்றும் அங்கு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு உள்ளது. இனியொரு உலகப்போர் மூண்டால் இத்தரணியில் புல், புழு பூச்சிக்கூட மிஞ்சாதளவு இரசாயன மற்றும் அணு ஆயுதங்களை அனைத்து நாடுகளும் பயன்படுத்தும்.

வடகொரியா தன் அண்டைநாடான தென்கொரியாவுடனும், இந்தியா பாகிஸ்தானுடனும், மேலும் சீனா, ரஷ்யா, அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளும் இன்றும் போர் பதற்றத்துடன் காணப்படுகிறது. இஸ்ரேல், சிரியா, சோமாலியா, ஆப்கானிஸ்தான் ஆகிய சிறிய நாடுகளில் பிரிவினை வாதங்களும் தலைதூக்கிக் கொண்டுதான் இருக்கின்றது. போரின் மூலம் அழிக்க முடியுமே தவிர, ஆக்க முடியாது. மேலும் இது போன்று போர் நடைபெறக் கூடாது என்பதற்காகத் தான் உலக நாடுகள் தங்களுக்குள் பல்வேறு கூட்டமைப்புகளை உருவாக்கிக் கொண்டுள்ளன இருப்பினும் நிரந்தரத்தீர்வற்று எப்பொழுதும் போர் ஏற்படும் சூழ்நிலை காணப்படுகிறது.

3.9.0 பன்னாட்டு கழகமும் உலக அமைதியும்

உலக நாடுகளுக்குகிடையே ஏற்படும் பூசல்களைக் களையவும், மனிதச் சமூகம் சண்டையின்றிச் சகோதரத் துவக்கத்துடன் வாழ்வதற்காக ரூஸ்வெல்ட் அவர்களால் முதல் உலகப் போர் முடிவில் உலக நாடுகள் சபை ஏற்படுத்தப்பட்டது. இருப்பினும் இரண்டாம் உலகப்போரின் முடிவில் சில திருத்தங்களுடன் வலிமையுடையதாய் உருவாக்கப்பட்டது தான் உலக நாடுகள் கழகம். “1945 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ஆம் நாள் ஐக்கிய நாடுகள் கழகம் அதிகாரப்பூர்வமாகச் செயல்பாட்டுக்கு வந்தது. ஐக்கிய நாடுகள் கழகப் பேரவை 1948 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ம் தேதியன்று உலக மனித

உரிமைகள் பிரகடனத்தை அறிவித்தது. உலக அமைதி, உலக நாடுகளில் பாதுகாப்பு முக்கியமான நோக்கங்களுக்காகச் செயல்படுகிறது".[148] இவ்வமைப்பின் மூலமே உலகம் ஒரு குடையின் கீழ்க்கொண்டுவரப்பட்டது. எங்கு நீதி தவறினாலும் தலையிட்டு மக்களைப் பாதுகாக்கும் சக்தி வாய்ந்த அமைப்பாகச் செயல்படுகிறது.

3.10.0 நீதி

சங்கக் கால அரசர்கள் நீதியைப் பெரிதும் மதித்தனர். பல்வேறு வகையான படைப்பிரிவுகள் இருப்பினும், அறத்தையே தனது உயிர் மூச்சாகக் கருதினர். பருவமழை பொய்த்தாலும், இயற்கையில் ஏதேனும் மாறுதல் ஏற்பட்டாலும் மக்கள் இன்னலுற்றாலும் மன்னனையே சாரும்மென்பதை,

"மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையிற் றோன்றினும்
காவலர் பழிக்குமிக் கண்ணகன் ஞாலம்"[149]

எனும் புறநானூற்றுப்பாடல் வரிகளின் மூலம் அறியலாம். கரிகால சோழனின் வழக்குரைத்த இரு முதியவர்களுக்கு நீதி வழங்கிய முறையினையும், பாண்டியன் நெடுஞ்செழியன் தன்னிடம் நீதிக்கேட்டு வழக்குரைத்த கண்ணகிக்குத் தவறான தீர்ப்பு வழங்கியதால் தன்னுயிர் நீத்தமையினை,

"தாழ்ந்த குடையின் றளர்ந்தசெங் கோலன்
பொன்செய் கொல்லன் நன்சொற் கேட்ட
யானோ வரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் னாயுளென
மன்னவன் மயங்கிவீழ்ந் தன்னே தென்னவன்."[150]

என்று சிலப்பதிகாரம் கூறுவதைக் காணமுடிகிறது. பண்டைய காலம் தொட்டே சமுதாயத்தில் நீதி தவறாது வாழ்ந்தமையும் அவைகளே பின்னாளில் சமூக வழக்காறுகளாகவும் சட்டங்களாகவும் விளங்கியுள்ளன. அத்தகைய சமூக வழக்காறுகளே நீதி நூல்களாக வளர்ச்சியுற்று மன்னன் அம்மரபுகளைக் கட்டி காப்பவனாக விளங்கினான். அறிவறிந்த சான்றோர்கள் மன்னனுக்கு உதவிப் புரிந்தனர். ஊர் பொது மன்றங்களே அம்மக்களின் நீதிமன்றங்களாக விளங்கின. மக்களின் குறைகளைக் கண்டறிபவனாகவும், மக்களும்

அம்மன்னனை எளிதில் அணுகித் தங்கள் குறைகளைச் சரிசெய்து கொண்டனர் என்பதனை,

"அறம்புரிந் தன்ன செங்கோல் நாட்டத்து
முறைவேண்டு பொழுதிற் பதனெறியோ ரீண்டு
உறை வேண்டு பொழுதில் பெயர்பெற் றோரே"[151]

என்றும், அதனை ஒத்தே வள்ளுவரும்,

"காட்சி கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்"[152]

என்னும் குறட்பாவில் விளக்கியுள்ளார். மன்னர்கள் நீதிபதிகளை அறநெறியாளர்களை நியமிப்பதோடு அல்லாமல், அவர்கள் கூறும் அனைத்துக் கருத்துகளையும் ஆராய்ந்தறியும் பண்பாளர்களாக விளங்க வேண்டும் என்பதை,

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்
கோடாமை சான்றோர் கணி"[153]

இக்குறளில் வள்ளுவர் விளக்குகிறார். ஆனால் நீதி முறைகளில் இன்று நடைமுறையில் உள்ளமையைக் கண்டால் நாம் ஐயுற வேண்டியுள்ளது. இன்று நீதிபதி ஒருவர் அளிக்கும் தீர்ப்பை மற்றொரு நீதிபதி தவறென்கிறார். பல ஆண்டுகள் கடக்கும் வழக்குகள் சாமானியனின் உயிரைப் பறிக்கிறது. பணமும், அதிகாரமும் உள்ளவர்கள் சுதந்திரமாக உளவுவதைப் பல வழக்குகளில் இன்று காண முடிகிறது. இந்திய அரசின் நான்கு தூண்களுள் ஒன்றாக விளங்கும் நீதித்துறையில் ஒருசில நிகழ்வுகளால் நாம் நம்பிக்கை இழக்க நேரிடுகிறது. அனைவருக்கும் அனைத்தும் கிடைக்கச்செய்யவும் நீதியை நிலை நாட்டவும் தேர்ந்தெடுக்கப்படும் நீதிபதி நியமனத்திலே ஊழல் என்ற செய்தி மனதை வேதனை கொள்ளச்செய்கிறது. இத்தகைய எதிர்ப்பையும் மீறிச் சரியான தீர்ப்புகளை வழங்கும் உத்தமர்களும் இருப்பதால் தான் இன்றும் நமக்கு நீதிமன்றங்களின் மீது நம்பிக்கை துளிர்விடுகிறது. அக்காலத்திலும் பொய்சாட்சி கூறுபவர்கள் இருந்துள்ளனர். அவ்வாறு பொய் கூறாதவரை தான் ஆன்றோர் என கூறியமையை,

"அறியாக் கரி பொய்த்தல் ஆன்றோர்க்கில்லை"[154]

என்ற கலித்தொகை பாடல் உரைக்கிறது. தமிழருக்கெனத் தனிச்சட்டங்கள் அன்று தொகுக்கப்படவில்லை. இருப்பினும்,

வாழ்க்கை நடைமுறைகளுக்கு ஒவ்வாச் செயல்களைத் தவிர்த்தனர். திருக்குறள் மற்றும் தமிழ் இலக்கியங்களில் சட்டம் பற்றிய சாராம்சங்கள் பரவியுள்ளன. சட்டதிட்டங்களைக் கடந்து தமிழர்கள் பெரிதும் மதிப்பது மனசாட்சியே. தம் உயிர் நீற்பினும் பிறர்க்குத் தீங்கு நினையா மனதோடு வாழ்ந்தமைதான் இதற்குச்சான்று. அவ்வாறு மீறும் பட்சத்தில் தவறைத் திருத்திக்கொள்ளத் தண்டனைகள் வழங்கப்பட்டமையையும் இலக்கியங்களில் மூலம் அறிய முடிகிறது.

3.10.1 குற்றமும் தண்டனையும்

